நாவலர் நெடுஞ்செழியன்

பொன்விழா மலர்

11-7-1970

தொகுப்பாசிரியர்: கே.பி.சுந்தரம் ஆசிரியர்: [illegible]

THE MADRAS DISTRICT CO-OPERATIVE CENTRAL BANK LIMITED

13/14, Mukkur Nallamuthu Chetty Street, Madras-1

Estd: 1930 **Telephone: 21784 27888**

BRANCHES

1.	WASHERMANPET	483, T. H. Road, Madras-21	52503
2.	PERAMBUR	78, Madhavaram High Road. Madras-11	61448
3.	THEAGARAYANAGAR	10, Usman Road, Madras-17	444957
4.	MYLAPORE	27, North Mada Street, Madras-4	73321

Authorised Capital Rs. 100 lakhs
Working Capital Exceeds Rs. 4 crores

ALL KINDS OF DEPOSITS ACCEPTED

Rate of Interest

Current Deposits 1/2%
Savings Deposits 4%

FIXED DEPOSITS

For 91 days	and above but below	6 months	4¾%
6 months	-do-	1 year	5¼%
1 year	-do-	2 years	6%
2 years	-do-	3 years	6½%
3 & 4 years	-do-	5 years	7%
5 years	-do-	6 years	7¼%
6 years and above		...	7½%

RECURING DEPOSITS

	MONTHS						
	12	24	36	48	60	72	84
	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.
Rs. 10/- per month	124	256	397	546	710	884	1070

Further particulars can be had from the Secretary

Dr. P. NATESAN, M.B., B.S., *President.*

P. THANGARAJU, M.A., *Secretary.*



11—7—1970

தொகுப்பு ஆசிரியர், வெளியிடுவோர்:

கே. பி. சுந்தரம்

ஆசிரியர்: "தையற்கலை"

132, புரசை நெடுஞ்சாலை, சென்னை - 7.

கைம்மாறு கருதாக் காணிக்கை

போராட்ட அரசியலைப் போல் தூய்மையானதும் இல்லை; போட்டி அதிகார அரசியலைப் போல் தீமையானதும் இல்லை. இந்த உண்மையை எத்தனையோ தொண்டர்களைப் போல என் வாழ்வும் கண்டு வருகிறது!

பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் 'நல்லவர் வல்லவராய் இருப்பதில்லை; வல்லவர் நல்லவராய் இருப்பதில்லை' என்ற கருத்தை அழுத்தமாக அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள். சரிதான்!

பணத்திற்கு இருக்கும் ஆற்றல் பல நேரங்களில் பண்புக்கு இல்லை! மறுக்க முடியவில்லை! தந்நலம் என்று வரும்போது பெரியவர்கள் – சிறியவர்கள் எல்லோரும் ஒருமாதிரியாகத் தான் இருக்கிறார்கள்! ஆம்! வணிகனைப் போல் வல்லவன் யாரும் இல்லை; கொள்கை வாதியையும் அவன் குழிதோண்டிப் புதைப்பான் – உயிரோடு! உண்மைதான்! எளியவனுக்கு – உண்மையானவனுக்கு–இரங்குவதே இரக்கம்! இது தெரிந்தவரும் மறந்திடும் திருநெறி! 'ஆசைக்கு ஓர் அளவில்லை – அகிலமெலாம் கட்டி ஆளினும்' – துறவியின் புலம்பல்! 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' 'அகப்பட்ட வரை ஆதாயம்'–இன்றைய போட்டி வாழ்வின் அடிப்படை. 'விளக்கெண்ணெயைத் தடவிக் கொண்டு வீதியில் புரண்டாலும் ஒட்டுகிறதே ஒட்டும் – இது என்போன்ற தொண்டர்களின் 'வேதாந்தம்'.

வணிகர்களின் செல்வச் செருக்கும், எதிலும் தம் நலனே பெரிது எனக் கருதும் ஒரு சில பதிப்பகத்தாரின் போட்டி மனப்பான்மையும், அதிகாரத்தின் மகிமையில் திளைத்துப் போனவர்களின் தடைகளும் ஓரளவு எனது முயற்சிக்கு ஊக்கமும் துடிப்பும் தந்தன. இத்தகையவர்களின் ஆதரவு தட்டாமல் கிடைக்கும் என்ற எண்ணத்தில் துவக்கப்பட்டதில்லை இம் மலர் வேலை.

உண்மையான தொண்டர்களின் உழைப்பை மட்டுமே நம்பித் துவக்கப்பட்டது இம் மலர் வெளியிடும் முயற்சி. ஏழை எளியவர்கள் ஒத்துழைப்பால் உருவாக்கப்பட்டதே இம் மலர் – பக்கத்திற்குப் பக்கம் வண்ண விளம்பரப் புதையல்கள் ஒளி வீசா! ஆனால் பக்கத்திற்குப் பக்கம் தூய்மையான தொண்டின் சிறப்புகள் ஒளி வீசும்.

நல்லவர் என்றே இன்றும் நானும் – நாடும் – நம்பும் நாவலர்க்கு அவர்தம் பொன் விழாவைப் போற்றி அருமை அண்ணாவின் பெயரால் தையற் கலையான் தரும் கைம்மாறு கருதாக் காணிக்கை இம் மலர். உள்ளன்பு ஒன்றே காரணமாக ஊன் உறக்கம் ஒழித்து, இரவு பகலாய் ஓடி ஓடி, வெந்த புண்ணில் வேல் தாங்கி, உழைத்த உழைப்பின் பயன் இது. தூண்டில் அன்று இம்மலர்; தூண்டா விளக்கு!

இக்காணிக்கை இவ்வடிவம்பெற நல்லுணர்வோடு உதவிய எல்லாருக்கும் ஊசி முனையில் நின்று உளங்கனிந்த நன்றி சொல்லி வாழ்த்துகிறேன்; வணங்குகிறேன்.

உங்களோடு சேர்ந்து நானும் உண்மை உணர்வோடும் ஊழிய நினைவோடும் வாழ்த்துகிறேன்; நல்லவர் நாவலர் வல்லவராயும் வாழ்க – நீடு வாழ்க! வெல்க!

கே.பி.அந்தரம்

"நமது தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் 51வது பிறந்த தின விழாவை முன்னிட்டு திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்கு சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்கு லிட்.

எண். 46. திண்டிவனம்

(தோற்றம் 1907)

சர்க்கார் மேற்பார்வை, தணிக்கை, சிறந்த நிருவாகம் முதலியவை ஒருங்கே அமையப்பெற்ற தமிழ் நாட்டிலுள்ள சிறந்த வங்கிகளில் ஒன்று.

31-3-1970ல் உள்ளபடி

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 200000/–
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	ரூ. 160188/–
சேமநிதி	ரூ. 152717/–
டெபாஸிட்டுகள்	ரூ. 877521/–
கடன் நிலுவை	ரூ. 1113585/–
அலுவல் நிதி	ரூ. 1190424/–
இதர நிதிகள்	ரூ. 103486/–

அடியிற்கண்ட விகிதத்தில் டெபாஸிட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. நிறந்தரவைப்பு:

ஆறு மாதம்	6 %	ஒரு வருடம்	6½%
2 வருடம்	6 %	3 வருடம்	7 %
4 வருடம்	7½%	5 வருடம்	7½%

ரூ. 50,000மும் அதற்கு மேற்கொண்டுள்ள தொகைகளுக்கு மேற்கண்ட வட்டி விகிதத்துடன் ½% வட்டி அதிகமாக வழங்கப்படும்.

2. கரண்ட் டெபாஸிட் 1%
3. சேமிப்பு டெபாஸிட் 4%
4. அக்மிலேட்வ் டெபாஸிட் 5%
5. ரெக்கரிங்டெபாஸிட் 6% முதல் 6½% வரை

மேலும் விவரங்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

நிருவாகசபை உறுப்பினர்கள்:

திரு. வே. கமலக்கண்ணன்	தலைவர்
திரு. டி. எம். பழனிசாமி முதலியார்	உப தலைவர்.
திரு. ஏ. டி. விட்டோபா செட்டியார்	பொருளாளர்.
திரு. டி. ஆர். சக்கரபாணி செட்டியார்	நிருவாகசபை உறுப்பினர்.
திரு. எஸ். சுப்பிரமணிய செட்டியார்	,,
திரு. பி. சின்னப்பா முதலியார்	,,
திரு. ஏ. பெருமாள் பிள்ளை	,,
திரு. ஏ. நடேசன்	,,
திரு. வெ. கோவிந்தராஜுலு	,,
திரு. கோ. தாமோதர முதலியார்	,,
திரு. மா. இராமமூர்த்தி	,,

வே. கமலக்கண்ணன்.
தலைவர்

ம. இராஜமாணிக்கம், B. A.,
காரியதரிசி.

அமரர் அண்ணா

“அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டுத் தலைவரான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வழிமொழிகையில், தம்பிவா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லாரும் அடங்கி நடப்போம்! தலைமை ஏற்று நடத்த வா! என்று வழிமொழிந்தபோது, மாநாட்டிற்கு வந்திருந்த இலட்சக்கணக்கான மக்களின் உள்ளம் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தது! ‘நாவலர் வாழ்க! காவலர் வாழ்க! பொதுச் செயலாளர் வாழ்க! நெடுஞ்செழியன் வாழ்க!’ என்பன போன்ற வாழ்த்தொலிகள் விண்ணை அதிரச்செய்தன எனின் மிகையாகாது.”

இவ்வாறு திருச்சியில் 1956 மே 17, 18, 19, 20-ஆம் நாள்களில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை வெளியிட்ட ‘நம்நாடு’ 19-5-56-ஆம் தேதி இதழ் கூறுகிறது.

திருச்சி மண்ணில் நின்று அந்த அறிஞர் பெருமகனார் ஓடவிட்ட தேனாறு......அள்ளிப் பருகுங்கள்......

தம்பி வா!

தலைமை ஏற்று நடத்த வா!

நமது பொதுச் செயலாளரைத் "தம்பி வா! தலைமை தாங்க வா! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன், வா!" என்று கூறியது வெறும் அலங்காரத்திற்காக அன்று! அந்த நிலை நமது கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. அது மேலும் வளர வேண்டும் என்பதுதான் எல்லாருடைய உண்மையான நம்பிக்கை. அப்படி வளர்ந்தால் தான் நம்முடைய கழகம் நல்ல ஜனநாயகப் பண்போடு திகழ முடியும்.

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் நம் கழகத்திற்குப் பொதுச்செயலாளராகக் கிடைத் திருக்கிறார். அவர் இடுகின்ற ஆணைகளை எல்லாம் ஏற்று நடத்துவதில், நான் பெருமை கொள்ளுகிறேன். நமது தோழர்களும் பெருமை கொள்ள வேண்டும்.

அப்படி ஏற்று, கடமைகளைச் செய்வதில், கட்சிக்கு ஊறு ஏற்படும் என்று யாருக்காவது கிலி இருந்தால்—பயமிருந்தால்—தாராளமாக அவரிடம் வந்து விவாதிக்கலாம்; எடுத்துக் காட்டலாம்; ஆனால், அந்த வீண் பயத்தைச் சாக்காகக் கொண்டு, 'ஜனநாயகத்தை நாங்கள் நிலை நாட்டுகின்றோம்' என்று யாராவது விவாதங்களில் ஈடுபடுவார்களேயானால், அவர்களுக்கும், பொதுச் செயலாளருக்கும், கழகத் தோழர்களுக்கும் கூறுகிறேன்—'கடைசி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மக்களிடத்தில் அந்த விவாதத்திற்குரிய விவகாரங்களைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய ஜனநாயகக் கட்டம் ஏற்படும். அதற்கெல்லாம் வழி வைத்துக்கொள்ளாமல், அவருடைய பதவிக் காலத்தில், ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு அவரோடு கலந்து பேசி, நல்ல திட்டங்களை அவருக்கு எடுத்துச் சொல்லி, அவர் தருகின்ற திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு கழகத்தை மேலும் வளர்த்து, பொதுத் தேர்தலிலேயும் நாம் மகத்தான வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, நம்முடைய நல்லாற்றலைப் பயன் படுத்துவதற்கும் நாம் எல்லாம் இந்த மாநில மாநாட்டில் உறுதி பெற்றுக்கொள்வோமாக! சூளுரைத்துக்கொண்டு! மாநில மாநாட்டி லிருந்து கலைந்து செல்வோமாக!

"நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே! என் தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகப் பொதுச் செயலாளராக ஆக்கப்பட்டிருப்பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக்கிறேன்!" என்பதை எடுத்துச் சொல்வதின் மூலம், மற்ற அத்தனைபேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறுகிறேன்.

நாமெல்லாரும் மனமார ஒன்றுபட்டு, நமது மாநில மாநாட்டிற்குத் தலைவராகவும் கழகப் பொதுச் செயலாளராகவும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நம் நண்பர்கள் பலரும், நெடுஞ்செழியன் அவர்களைப் பல படப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் கூறிய அத்தனை உண்மைகளையும் நானும் ஏற்றுக் கொண்டேன் என்பதை, நான் அவர்கள் பேசும்போது மகிழ்ந்திருந்ததைக் கண்டவர்கள் அறிந்திருக்கலாம்.

நான் இத்தனைக்கும் பிறகு கழகத் தோழர்களை ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்வேன். என்னைவிட நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் அதிகமான அளவுக்கு அடக்க சுபாவமுடையவர். எனக்காவது திடீர் திடீரெனக் கோபம் வரும்! ஒரு சமயம் அந்தக் கோபத்திற்குப் பலியாகக் கூடியவர்களும் இருக்கலாம். சில பேர் அதைப் பரிகாசமாகக் கருதலாம்! சில பேர், "அண்ணாவுக்கு வேறு யார் பேரிலேயோ, ஆசை வந்துவிட்டது! அதனால்தான் நம்மீது கோபமாக இருக்கிறார்!" என்று எண்ணத் தோன்றலாம்! நான் சில பேரிடத்தில் கோபப்படுகிறேன் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அதனால் நல்வழிக்கு வருவார்கள் என்று எண்ணுகின்ற எண்ணத்தினால்தான்! ஆனால், அந்த அளவுக்குக் கூடக் கோபித்துக் கொள்வது கிடையாது நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள்.

என்னிடத்தில் உள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டு, புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை இன்றைய தினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச் செயலாளராகப் பெற்றிருக்கிறோம்.

வருகின்ற கடிதங்களுக்கு நான் பதில் போடுவதில்லை—குறைதான்! ஆனால், அந்தக் குறை வெகுகாலமாக என்னைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது—அதனால்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன்! நண்பர் நெடுஞ்செழியனிடத்தில் அந்தக் குறை கிடையாது.

குறித்த காலத்தில் கூட்டங்களுக்கு நான் வருவதில்லை. ஆனால் நெடுஞ்செழியனோ, குறித்த காலத்தில் கூட்டம் கூட்டாவிட்டால், கூட்டம் கூட்டுவதாகக் கூறியவர்களுக்குக் 'கொறடா' எடுப்பார். இப்படி என்னிடத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்ட புடம் போட்ட தங்கம் நெடுஞ்செழியன்.

நான் ஏழெட்டு ஆண்டு காலமாக, கண்ணும் கருத்துமாகப் பார்த்து, எண்ணி எண்ணிச் சிந்தித்து, ஏக்கத்தோடு பார்த்துப் பார்த்து, இருபத்து நான்குமணி நேரமும் உடனிருந்து—"காரியங்கள் இப்படி இப்படி நடந்தால்தான் நல்லது!" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, இந்த விதைகள் எல்லாம் வளரக்கூடிய நல்லதோர் கழனி அந்த உள்ளத்தில் இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பைத் தோழர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைத்தேன்.

"ஏன், இதற்குள்ளாகக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலக வேண்டும்?—என்று நண்பர்கள் சிலர் கேட்ட நேரத்தில், "இல்லை, கழகம் மிக உயரமாக வளர வேண்டும். நானோ 4 அடி 6 அங்குலம்! உயரமான ஆளிடத்தில் கழகத்தை ஒப்புவிக்கிறேன்!" என்று எடுத்துச் சொன்னேன்.

நம் நம்பிக்கை எல்லாம் ஈடேறத்தக்க வகையில் பணியாற்றுவதற்கு அவருக்கு ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றல் வளர வேண்டுமானால், கழகத் தோழர்கள் அவருக்குத் தருகிற தொல்லைகள் குறைவாகவும், ஏற்படுத்திக் கொள்ளுகிற தோழமை அதிகமாகவும் இருக்கவேண்டும்.

ஏன், தொல்லைகள் குறைவாக இருக்க வேண்டும் என்றால், இப்போது நான், நமது கட்சிக்குள் இருக்க வேண்டிய ஜனநாயகம்பற்றிச் சிறிது கூறவிரும்புகிறேன்.

நமது நீங்காக் கடமையாகும்!

தம்பி! கழகத்தின் மாட்சி கண்டு மாற்றார் மருட்சி கொள்கின்றனர் அதனால் ஏதேதோ புலம்பித் திரிகின்றனர்.

எந்த எந்தக் காரணங்களால் வளர்ந்தோங்கி நின்ற காங்கிரசு வீழ்ச்சியுற்றதோ, அப்படிப்பட்ட காரணங்கள் எவையும் கழகத்தையும், கழகத் தோழர்களையும் தீண்டா வண்ணம் நம்மை நாமே கட்டிக் காத்துக் கொள்ள வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்!

'ஆடுவோமே பள்ளு பாடுவோமே, கழகத்தின் ஆட்சியில் மாட்சியில் கூடுவோமே!' என்று நாம் என்றென்றும் பள்ளு பாடும் நிலை ஏற்பட வேண்டும். —நாவலர்.

ஜனநாயகம் என்ற தத்துவத்தை நாம் தாம் விரும்பி, அமுல் செய்து வருகிறோம். எவரும் ஜனநாயகத்தை நம்மிடத்தில் திணிக்க வில்லை. ஜனநாயகம் யாராலாவது திணிக்கப் பட்டிருந்தால், "அது சரியாக நடக்கிறதா, இல்லையா?" என்று கண்களில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு பார்க்கலாம். கண் பார்வை மங்கியிருப்பவர்களுக்குக்கூட உரிமை இருக் கலாம்—அப்படிப் பார்ப்பதற்கு! ஆனால், ஜன நாயகத்தை வளர்த்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, அதன் அருமை பெருமைகளும், அதை எப்படிக் கட்டிக் காப்பாற்ற வேணடும் என் பதிலே இருக்கிற பொறுப்பு உணர்ச்சியும் நிச்சயமாக நமக்கு உண்டு. ஆனல், ஜன நாயகம் என்றால், பொதுப்படையான தத்து வங்களை ஆராய்வதற்கும், கொள்கை கோட் பாடுகளை நிர்ணயிப்பதற்கும் தாராளமாக விவாதிக்கலாம்.

விவாதிக்கத் தெரிந்தவர்கள் மட்டும்தான் என்பது அல்ல; விவாதிக்க முடியாதவர்கள் எல்லாம்கூட விவாதிக்கலாம். ஆனால், விவா தித்து முடிவு கட்டியானபிறகு, நடைமுறை வேலைகளில் பொதுச் செயலாளர் ஈடுபடும் போது, அங்கு போய் ஜனநாயகம் பேசுவது கூடாது. உதாரணத்திற்கு நான் கூறுவேன் — திருச்சியில் மாநாடு நடத்தலாமா வேண்டாமா? இது, அடிப்படைக் கொள்கை. தாராள மாக விவாதிக்கலாம்—"வேண்டாம்" என்று ஒருவர், "மதுரையில் நடத்தலாம்!" என்று இன்னொருவர்—இப்படி விவாதிக்கலாம்! ஆனால், திருச்சியில் நடத்துவது என்று முடிவு செய்து, இங்குவந்து பந்தல்போட ஆரம் பித்தான பிறகு, இந்தக் கழியை எத்தனை அடி ஆழத்திற்கு இறக்குவது என்பதற்குக்கூட ஜனநாயகம் பேசினால் ஜனநாயகம் மிச்ச மாகும்; கழி தங்காது! ஆகையால் அந்த மாதிரித் தொல்லைகளை அவருக்குத் தரவேண் டாம் என்று கூறினேன்.

எனக்குத் தந்தார்கள்—அவைகளை நான் தாங்கிக்கொண்டேன்—இரண்டு முறைகளில்!

ஒன்று—நான், சொல்லப்படும் எல்லா விவகாரங்களையும், கேட்டுக்கொண்டதைப் போன்று பாவனை காட்டுவேன்! பலவற்றைக் கேட்டுக்கொண்டது இல்லை. சில விஷயங் களைப் பற்றிச் சிந்திப்பேன்! அவைகளில் மறக்க வேண்டியவற்றை மறந்து விடுவேன்— செயலாற்ற வேண்டியதை மட்டும்தான் செய லாற்றுவேன்! நண்பர் நெடுஞ்செழியன் அப்படி அல்ல! அவர் கல்லூரியிற் படித்த காலம் முதற் கொண்டு, ஓர் ஒழுங்குமுறை தவறாத மாணவ ராக இருந்து வந்தவர். ஆகையால், தோழர் கள் நிரம்பத் தொல்லைகள் தந்தால், அவற் றைத் தாங்கித் தாங்கி வளைந்து, "இவ்வளவு தொல்லை இருக்கிறதா?" என்று சங்கடப்பட நேரிட்டால், அவரிடத்திலிருந்து நாம் பெறக் கூடிய அறிவாற்றலை முழு அளவுக்கு நம்மாலே பெற முடியாது.

நாடக மேடையில்கூட நல்ல பாட்டுப் பாடிக்கொண்டிருக்கையில், இரண்டாவது முறை 'ஒன்ஸ்மோர்' கேட்கிறபோது, பாடு கிறவர்களுக்கு எவ்வளவு சங்கடமிருக்கிறது என்று கருதுகிறீர்கள்? சாதாரண நாடக மேடையிலேயே அப்படி இருக்கிறது என்றால் ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவருக்கு எத் தனை கஷ்டங்கள் இருக்கும் என்று நம்மாலே எண்ணிப்பார்க்க முடியாதா!

தோழர் நெடுஞ்செழியன் எனக் குத் தம்பிதான்—வயதில்! உண்மை யில் அவரைத் தம்பி என்று அழைப் பதில் பெருமைப் படுகிறேன்!

என்னை அண்ணனாகக் கொண்டிருப்பதில், அவரும் பெருமைப்பட்டிருக்கின்றார்! ஆனால், அவர் பொதுச் செயலாளர் பதவியில் இருக்கிற நேரத்தில், அவர் இடுகின்ற ஆணைகள் அத்தனையையும் நான், ஒரு தலைவன் இடுகின்ற ஆணையாக ஏற்று அந்தக் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடப்பேன் என்பதை இந்த மாநில மாநாட்டில் நான் உறுதி கூற விரும்புகிறேன்.

அதில் யாருக்காவது, "அப்படியா? நடப்பாரா? நடக்குமா?"— என்று சந்தேகம் இருந்தால், பெரியார் இராமசாமியைக் கேட்டுப் பாருங்கள்—"இதுவரையும், இனிமேலும் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் என்னை விட வேறு யாரும் உண்டா?"—என்று!

உதாரணத்திற்கு நான் ஒன்று கூறுவேன். வடநாட்டில் நான் அவரோடு சுற்றுப்பயணம் செய்தேன். லக்னோ பல்கலைக் கழகத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் தமிழில் பேசினார். நான் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான பிறகு, அந்த மாணவர் கூட்டத்தின் தலைவராக இருந்தவர் நான் ஒரு எம். ஏ. படித்தவன் என்பதை அறிந்து என்னையும் சிறிது நேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினார்.

நான், பெரியார் இராமசாமியைத் திரும்பிப் பார்த்தேன். "பேசாதே!" என்றார்! "பேசவில்லை!" என்றேன்! மறுபடியும் அவர்கள் வற்புறுத்தினார்கள்—இவரைக் கேட்டேன்—"இல்லை! பேசாதே!" என்றார்! மூன்றாம் முறையாக வலியுறுத்தினார்கள்! மூன்றாம் முறை பெரியார் என்னிடம் சொன்னார்—"நான் பேசுவதற்கு வரவில்லை! பெரியாரின் பேச்சை மொழி பெயர்க்கத்தான் வந்தேன் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லு!"—என்றார்! நான் எடுத்துச் சொன்னேன்! எதனால்? அவ்வளவு அடக்க ஒடுக்கமாகப் பெரியாரிடம் நடந்து கொண்டேன்! நான்தான் கடைசி ஆள்—அவ்வளவு அடக்க ஒடுக்கமானவன்—அவருக்குக் கிடைத்தவன்!

இங்கே நீங்கள் கொண்டுள்ள உணர்ச்சியையும், பெற்ற நல்ல உற்சாகத்தையும், அடைந்துள்ள நல்ல ஆர்வத்தையும் தேங்க விடாமல்—நன்கு வளர்ச்சியுறச் செய்து—நாடெங்கும் இவை வளரச் செய்து—நாம் எல்லாம், நமது பொதுச் செயலாளர் காட்டும் வழி நடக்க வேண்டும்.

நமது புதிய பொதுச் செயலாளர்

"நாவலர் நெடுஞ்செழியன் இப்பொழுது நமக்குப் பொதுச் செயலாளர்"

"தோழர் நெடுஞ்செழியன் இந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று இரண்டாண்டு காலமாகவே என் உள்ளத்திலே வளர்ந்த வண்ணம் இருந்தது எண்ணம்"

"இந்த எண்ணம் எனக்குத் தோன்றிய நாள் தொட்டு, நான் தோழர் நெடுஞ்செழியனை இந்தப் பொறுப்புக்குப் பக்குவப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு அவருடைய இல்லத்தை என் இருப்பிடமாகக் கொண்டேன்".

(பல பிரச்சினைகளில) "என் கருத்து யாது என்பது பற்றி உரையாடி எடுத்துக்காட்ட முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அவர் வீட்டுச் 'சைவ'த்தைத் தாங்கிக் கொண்டிருந்தேன்".

"நமது கழகத்தை அதன் கண்ணியம் கெடாத வகையில் மட்டுமல்ல, வளரும் வகையில் நமது புதிய பொதுச் செயலாளர் நடத்திச் செல்வார் என்ற உறுதியை என்னால் நிச்சயமாக அனைவருக்கும் அளிக்க முடியும்".

"நண்பரின் திறம் இருக்கிறதே; அது கண்டு நான் வியப்புறுகிறேன்."

"என்னிடம் இல்லாத, நான் விரும்பாததால் அல்ல. இயலாததால் ஓர் அருங்குணம் அவரிடம் உண்டு; கண்டிருப்பீர்கள்."

"ஓயாது உழைப்பது! எப்பொழுதும், எங்கேயும், எதையாவது, எப்படியாவது செய்து கொண்டே இருப்பது"

"என்னாலே இதைக் கண்டு ரசிக்க முடியும்—ஆனால் என்னை அந்த நிலைக்கு மாற்றிக் கொள்ள இயலவில்லை...பொதுப் பிரச்சினைகளைப் பற்றி தோழர் நெடுஞ்செழியன் எப்பொழுதும் காரிய மாற்றிக் கொண்டே இருக்கும் இயல்பினர்"

"நேரம் வீணாகி விட்டது என்று கூறத்தக்க போக்கிலே அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை"

"சிறையில் மூன்று திங்கள் ஒரே அறையில் தங்கி இருந்தோம் ... பல பல கனவுகள்—விழித்தபடி—நான் கண்டு கொண்டிருப்பேன். அவர்? வேலை! வேலை! வேலை! ஏதாவது செய்தபடி இருப்பார்"

"இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கழகத்தை மேன்மையுறச் செய்து கொள்ள வேண்டும்."

'தோழர் நெடுஞ்செழியனை, பெரியார் தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார்—அவரால் யார் மீதும் குற்றம் காண முடியும்—ஆனால் தோழர் நெடுஞ்செழியனிடம் அவராலும் ஒரு குறையைக் கூடக் கண்டறிந்து கூற இயலவில்லை."

"அத்தகைய பணியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்."

— அமரர் அண்ணா

நாவலர் போற்றும் நாவலர்!

நாவலர் போற்றும் நாவல! பண்டைக்
காவலன் பாண்டியன் நெடுஞ்செழி யன்தன்
பெயரினை விளக்கிடும் பெற்றியோய்! தமிழகப்
பெருமையைக் காக்கும் பெட்புறு காவல!
கல்வியின் நலத்தினில் கருத்துடை அமைச்ச!
பல்வகைத் திறனும் நல்வகை அமைந்தோய்!
அந்நாள்,
அண்ணா மலையின் பல்கலைக் கழகம்
நண்ணிய இளைஞர் பல்லோ ருள்ளும்
அறிஞரன் பழகனின் அருந்தோ ழமையுடன்
புகழ்மிக் கோங்கிப் பொலிவுற நின்றோய்!
மணிக்கணக் காக மாண்பொருள் பகர்ந்தே
அணிநலம் பொதுளும் அழகிய பேச்சினில்
அடுக்கடுக் காகச் சொல்லடை பெருக்கி
மிடுக்குறு நடையினை மீக்கொள நல்கிக்
கருத்தினுக் கேற்ற உவமைகள் அமைத்தே
உணர்ச்சிக் கேற்ப உடலினை இயக்கி
விரலின் அசைவுகள் விளக்கம் பலதரக்
குரலின் ஒலிகள் கோள்சுவை ஈந்திட
எடுக்கும் இடத்தே எடுத்தும் மெல்லப்
படுத்தொலி இடத்துப் படுத்தொலி ஆக்கியும்
நலியும் நுட்பச் சுவையினில் குரலை
நலிய ஒலித்தும் சொற்பொழி வாற்றிப்
பாவலர் போற்றிடப் பலரும் வியந்திட
நாவலர் என்றே நற்பெயர் தாங்கினை;
கருத்த ரங்குகள் கணக்கில் கண்டனை;
கல்லூரி மேடையில் கவர்ந்தனை பலருளம்;

தேர்தல் களங்களில் தெளிவுகள் நல்கினை ;
மொழிப்போர் அவைகளில் முழங்கினை அதிர்ந்திட ;
புரட்சிக் கவிஞரின் பொன்மொழிக் கவிதையை
விருப்புடன் பலரும் வியந்திட அவையினில்
கேட்டவர் மகிழக் கேளலார் மருளப்
பாடிப் பாடிக் காட்டினை பெருமையை ;
எழுச்சியை அளித்தனை ; விழிப்பினை ஆக்கினை ;
அன்றியும்,
எழுதுகோல் ஏந்தி ஏற்றமும் தந்தனை ;
மன்றம் என்னும் மாண்புறம் எட்டினை
என்றும் யாவரும் ஏற்புற கருத்தொடு
நன்றும் அறிவொளி திகழ்ந்திட நடத்தினை ;
பற்பல கட்டுரை பற்பல கருத்துரை
பொற்பமை ஆய்வுரை இதழ்களுக் களித்தனை ;
அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா
விரும்பிய பணிகளை விழைவுடன் ஆற்றினை ;
தம்பி என்னும் தகவினை முதன்மையில்
நம்பி உன்னும் வகையினில் நாட்டினை ;
நடமாடு பல்கலைக் கழகம் என்றே
திடமுறப் புகழ்ந்திடத் திகழ்ந்தனை நாவல ;
தமிழகப் பற்றும் தமிழ்மொழிப் பற்றும்
தம்பியர் நெஞ்சினில் தழைத்திடச் செய்தனை ;
இருவகைப் பற்றும் ஒருமையில் விளங்குறச்
செயல்வகை ஆற்றிடும் வாய்ப்பினில் செழித்தனை ;
அமைச்சகப் பொறுப்பினை அமைவுற ஏற்றனை ;
ஏற்றதற் கியைய ஏற்றமும் உற்றனை ;
பதவிகள் உயர்ந்திடப் பண்பிலும் உயர்ந்தனை ;
அறிஞர்தம் அறிஞனாய்த் தொண்டர்தம் தொண்டனாய்
அன்பர்தம் அன்பனாய் நண்பர்தம் நண்பனாய்த்
தமிழகம் தழைத்திட வாழிய !
எமதுளம் களித்திட வாழிபல் லாண்டே !

டாக்டர் மு.வ.

இளந்தாடி

மாண்புமிகு மேலவைத் தலைவர்
சிந்தனைச்சிற்பி சி.பி.சிற்றரசு.

இந்தத் தோற்றத்தில்தான் லால்குடி திராவிடர் கழக மாநாட்டில் தோன்றினர் நாவலர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நமக்குத் தந்த செல்வங்களில் நாவலர், மதி, பேராசிரியர் போன்றவர்கள் கழகத்தின் மாணவர் படையிலே முன் வைத்து எண்ணப் படுவார்கள்.

இன்று நம் கழகத்திலும் சரி, நமது தாய்க் கழகமான திராவிடர் கழகத்திலும் சரி, அதன் முன்னோடியான சுய மரியாதை இயக்கத்திலாயினும் சரி, இவற்றுக்கிடையே பாலம் போலமைந்த தென் இந்திய நல உரிமைச் சங்கமாயினும் சரி (S. I. L. F,) South Indion Liberal Federation) இவற்றிலெல்லாம் அங்கம் வகித்தவர்கள் சிறுக சிறுகக் குறைந்தும் பிறகு காட்டுத் தீயெனக் கொள்கை பரவிய நேரம் ஏராளமானவர்கள் வந்தவண்ணமிருந்தனர்.

தென் இந்திய நல உரிமைச் சங்கம் பெரிய பெரிய பணக்காரர்களால் நடத்தப்பட்டது என்ற பழியைத் தவிர மற்ற இயக்கங்களின் மேல் அந்தப் பழி படரவேஇல்லை. காரணம் ஏழைகளே அதை இயக்கினர்கள். பெரியாரும் ஒரு பணக்காரர்தாமே என்ற கேள்வி எழவே இல்லை. ஏனெனில் அவர் கையாண்ட சிக்கனம் அவரை ஒரு பணக்காரராக நாடு ஏற்றுக் கொள்ளவில்லை. அதிகப்படியான சிக்கனத்தைக் கையாண்டார். ஆடம்பரமில்லாமல் வாழ்ந்தார். மற்றவர்களையும் அப்படி இருக்க வேண்டும்; நடக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அந்த நிலையில் பெரியார் தலைவராகவும், அறிஞர் அண்ணா அவர்கள் தளபதியாகவும், நாமெல்லாம் தொண்டர்களாகவும் இருந்து மெத்த எதிர்ப்புக்களுக்கிடையே திராவிடர் கழகத்தை நடத்திக் கொண்டிருந்தபோது அந்தக் கடினமான காலத்தில் காலடி எடுத்து வைத்தவர் நமது நாவலர். இளந் தாடியோடு தோன்றினர் மேடையில். அந்த லால்குடி மாநாட்டிலேதான் அவரை முதன் முதலில் சந்தித்தேன். அப்போதெல்லாம் நாங்கள் பெரியாரால் கட்டுப்படுத்தப் பட்ட பேச்சாளர்கள். நாவலர் பேச எழுந்தார். கடலால் கொள்ளப்பட்ட முதற் சங்கம் மூழ்கி எழுந்து வந்ததோ – அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட கபாடபுரம் புத்துயிர் பெற்று வந்ததோ–மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் இட்ட ஏடு கரையேறி வந்துவிட்டதுவோ என்றெல்லாம் எண்ணத் தோன்றிற்று. தமிழாய்ந்த பெரும் புலவர்கள் நாவலரின் நாவில் நர்த்தனமாடினர். சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி, மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது என்ற எண்ணற்ற தமிழ் இலக்கியங்களைச் சுவைபட எடுத்துரைத்தார். மிகப் பழைய தமிழ்ப் பண்டிதர்களுக்கு இருந்த குறையே தாம் கற்றதை அவையில் உள்ள பாமரரும் உணரும் வண்ணம் எடுத்தோதும் ஆற்றலற்றவராயுள்ளனரே என்பதுதான். அந்தக் குறையைப் போக்கியவர் நாவலர் நெடுஞ்செழியன் தாம். நோக்காது குற்றம் செய்து தீராப்பழி தேடிக் கொண்ட அந்தக் கூடல் மாநகர நெடுஞ்செழியன் அல்லர் இவர்.

சொற்களை அளந்து பேசித் தனக்கொரு பாதுகாப்போடு தமிழைக் கசடறக் கற்று நடமாடும் பல்கலைக் கழகமென நாவுள்ளோர் அனைவராலும் பாராட்டப் பெற்றவர் நமது நாவலர்.

தம்பி வா! தலைமை ஏற்க வா!! என்று அண்ணா அவர்களால் பாசமாக அழைக்கப் பட்டுத் தலைமை ஏற்ற நாவலர் இன்றும் அந்தப் பதவியிலேயே அவரை நீடிக்கச் செய்த கலைஞரையும் இந்த நேரத்தில் நினைவுகூர்வது நல்லது. கழகத்தைச் செம்மையாக நடத்திச் செல்லும் ஆற்றலும் அனுபவமும் ஆட்சியில் தாம் பெற்றிருக்கும் பங்கினையும் சேர்த்துப் புகழ் பரப்பி அவர், அவர் குடும்பம் நல் வாழ்வும், நீண்ட ஆயுளும் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.



இன்புற்று வாழ்வாராக!

எம். முகமது இஸ்மாயில், எம். பி.

மாண்புமிக்க அமைச்சர் உயர்திரு நாவலர் V. R. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் 51ஆவது வயதடையும் இத்தருணத்தில் அவரது பிறப்புப் பொன்விழாவில் நானும் மகிழ்வுடன் கலந்துகொண்டு அவர் இன்னும் பன்னெடுங்காலம் சுகத்துடன் வாழ வேண்டுமென்றும், அவரது சீரும், சிறப்பும், மேன்மையும் இன்னும் வளர்ந்தோங்க வேண்டுமென்றும் மனக் கனிவுடன் வாழ்த்துகின்றேன்.

நமது நாவலர் அவர்கள் இன்று கல்வியறிவில் சிறப்பெய்தி, மக்களின் அன்புத் தலைவராகவும், வழிகாட்டியாகவும், ஆட்சித் திறன் அதிகம் படைத்தவராகவும் விளங்கி நிற்கின்றார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியுமென்றதை வாழ்க்கையில் மெய்ப்பித்தவர் நாவலர். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று பழந்தமிழ்த் தொன்மொழி கூறும் உண்மைக்கு மாறாக மக்களிடையே மனிதத் தன்மையில் வித்தியாசம் கற்பிப்பது கொடுமையென்பதும், அவ்வித்தியாசம் அறிவுக்கோளாறினால் உண்டாகிறதென்பதும் நம் நாவலர் உள்ளத்தில் அவரது இளமைப் பருவத்திலேயே பட்டிருக்கின்றது. அதனால் அவர் அப்பொழுதே சமுதாய சீர்திருத்தவாதியாகச் சமைந்தார். அப்பணியை இன்றுவரை திறம்பட ஆற்றி வருகின்றார்.

பொலிவும் வலிவும் பெற்ற எழுத்தின் வாயிலாகவும், வன்மையும் இனிய அழகும் படைத்த சொற்பொழிவின் திறனும் இச்சீரிய சேவையைச் செய்து வரும் பெருமை நாவலர் அவர்களுக்குண்டு.

இனிமையும் அழகும் வலிமையும் கருத்தும் உயிரோட்டமும் குவிந்து ததும்பும் நாவலரது சொற்பொழிவின் தனித்தன்மையை வருணிப்பது எளிதன்று.

ஒளிரும் மணிமொழிகளை அடுக்கடுக்காய் வைத்து நாவலர் பேசும்போது இது வசனமா, செய்யுளா, செய்யுள் வசனமா, அல்லது வசனச் செய்யுளாவென்று கேட்பவர் ஐயமுற்றுத் திகைப்பர்.

அவர் குறளைக் கலந்து சொற்பொழிவாற்றுவதைக் குனிந்து கேட்டுக் கொண்டிருப்போர் பலருக்குத் திருவள்ளுவர் வந்து பேசுகிறாரோ என்ற பிரமை ஏற்படுவதுமுண்டு.

நாவலர் நண்பர்களுடன் உரையாடுவதையும், அவருடைய மேடைப் பிரசங்கத்தையும் கேட்பவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நாவலர் நடமாடும் பல்கலைக் கழகம்' என்று கூறிப் போந்தாரே அது மெய்தான் என்று ஒப்புக்கொள்வர்.

நாவலர் அவர்கள் மேன்மேலும் மக்கள் தொண்டில் சிறப்படைந்து வெகு நீண்டகாலம் இன்புற்று வாழ்வாராக!

*

நாடு போற்றும் காவலர்

பேராசிரியர்
க. அன்பழகன் எம்.ஏ., எம்பி.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் இயக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், மாண்புமிகு கல்வி அமைச்சருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின், ஐம்பத்தோராம் ஆண்டு பிறந்த நாள் மங்கலம் கொண்டாடப்படுவது அறிந்து மகிழ்கிறேன். அரை நூற்றாண்டு நிறையும் பேறு பெற்ற நாவலர் முழு நூற்றாண்டும் காண வேண்டும்! முதுபெரும் தலைவராக நாடு போற்றத் திகழ வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றேன்.

என் கெழுதகை நண்பரும், ஒருசாலை மாணாக்கருமாக விளங்கி, ஒரே இயக்கத்தில் அடியெடுத்து வைத்து, கடந்த இருபத்தைந்து ஆண்டுகட்கும் மேலாகவே ஒரே வகையான பீடுநடை போட்டு வரும் நாவலர் அவர்கள் ஐம்பது ஆண்டு நிரம்பப் பெற்றார் என்று எண்ணும்போது, ஆண்டுகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு திங்களாகவே ஓடிவிட்டது போல் தோன்றுகிறது! வாழ்க்கை தான் எவ்வளவு விரைந்து படக்காட்சி போல் ஓடுகிறது! ஒவ்வொரு நாளும் விடியும்போது நம்மோடு உளதாவது போலத் தோன்றிக் கடக்கும்போது 'கனவு' போல் மறைகின்றதன்றோ! 'காலம்' நிலைப்பதோ? நிலையாததோ? என்று காலமெல்லாம் எண்ணினும் தெளிவேது? ஆனாலும் காலம் கழிவது உணர்ந்து கடமையை ஆற்றுவோர் அந்தக் 'காலம்' அளவில் அதனை நிலை பெறச் செய்தவரேயாவர். நாவலர் அவர்கள்–கடமை மறவாது அதனை முறைப்பட ஆற்றிச் செயற்பட்ட தன்மையாலே—அவர் வாழ்ந்துள்ள ஆண்டுகள் யாவும் — நிலைத்த ஆண்டுகளேயாயின என்பது தவறாகாது.

பள்ளிப் பருவத்திலேயே சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைக் கேட்டுச் சிந்திக்கும் இயல்பு பெற்று, கல்லூரிப் பருவத்தில்—தமிழ் மொழியின் இலக்கியச் செல்வம் யாவும் மாந்திப் புலமை பெற்று, திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் படையில் இடம்பெற்று, நாடு நகரெல்லாம் வலம் வந்து தொண்டாற்றும் திறன்பெற்று, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாகத் தகுதிபெற்று—நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நாவலராய், நடமாடும் பல்கலைக் கழகமாய், கழகக் காவலராய் உயர்ந்தவர் நெடுஞ்செழியன்.

அறிஞர் அண்ணா அவர்களை அடுத்து, பொதுச் செயலாளராய் நாவலர் அவர்கள் பொறுப்பேற்ற பொது மாநாட்டில், பேரறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய உரை நாவலரின் பெருமைக்குச் சான்றாகும். "தம்பி வா! தலைமை ஏற்க வா! உன் ஆணையை ஏற்று நடக்க உறுதி கூறுகிறேன்" என்று தயங்கி நின்ற தம்பிக்கு ஆர்வமூட்டினார் அண்ணா!

நாவலர் அவர்கள், பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று கழகக் கொள்கைகளைப் பரப்பியது மட்டுமேயன்றி, எத்தனையோ—எதிர்ப்புகளையும், இடையூறுகளையும்—தொல்லைகளையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டவர். பல்வேறு நிலைமைகளிலும்—பொறுமை காட்டிச் செயல்பட்டவர். 'தேனி' கொட்டியபோதும், திடுக்கிடும் நிலைகள் வாட்டியபோதும்—உறுதி குலையாது—கொள்கையுடன் நின்ற பெருமை அவரைச் சாரும்.

கழகத்தில் தமக்குக் கிடைக்கும் செல்வாக்கை மட்டுமே கணக்கிட்டு, கழகத்தால் மக்களுக்குக் கிடைக்கும் மகத்தான

பயனைக் கணக்கிடாது, கழகத்திற்குத் தோற்றமும் உருவும் அளித்த அறிஞர் அண்ணாவிடமே—தமது வலிமையை எடைபோட்டுப் பார்த்தவர்களும், எட்டி நின்று விட்டுப் பேசியவர்களும், உறவாடியே உட்பூசல் வளர்த்தவர்களும், பகைமூட்டிப் பிளவு உண்டாக்கியவர்களும் ஆகப் பலர்—தொல்லை விளைவித்த காலத்திலெல்லாம் நாவலர் அவர்கள்—கழக மாளிகையைத் தாங்கும் கருங்கல் பாறையாக விளங்கினார்கள்.

விடா முயற்சி, அயராத உழைப்பு, தணியாத ஆர்வம்—ஓயாத தொண்டு, மாறுபாடு தோன்றுமிடத்தும் அதனை வெளியிடாத பொறுமை, 'எண்ணித் துணிக கருமம்' என்பதிலே பயிற்சி—இவைகளே நாவலர் பெற்றுள்ள நன் மதிப்புக்குக் காரணமாகும். அது மட்டுமேயன்றி, மாற்றாரின் கருத்துக்களையும்—கொள்கைகளையும்—தாம் முற்றும் மாறுபட்டவிடத்தும் மதிக்கத் தவறுவதில்லை. ஒரு கொள்கையை ஆராயாது ஏற்க இசையாத நாவலரால், ஒரு கொள்கையை எளிதில் மாற்றிக் கொள்ளவோ, மறைத்துப் பேசவோ இயலாது. ஒரே கொள்கையை மக்கள் ஏற்றுக் கொள்ளும் திறத்திற்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப—அண்ணா அவர்கள் அதனை வகை வகையாக—பல்வேறு வண்ணமாக விளக்குவார்கள். ஆனால் நாவலர் அவர்கள் ஒரு கொள்கையை ஒரே வடிவத்தில் சொன்னாலும், அதைப் பகுதி பகுதியாகப் பிரித்து—பல்வேறு சான்றுகளை அடுக்கி எளிதாகப் புரிந்து கொள்ளச் செய்வார்கள்.

அந்த ஆற்றல் அறியாமை மிகுந்த மக்களிடையே தெளிவை ஏற்படுத்தப் பெரிதும் பயன்பட்டதெனலாம்.

நாவலரின் எழுத்தும் பேச்சும் நற்றமிழ்க் கொண்டலாய்ச் செந்தமிழ்ப் பயிரை வளர்த்தன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின்—பாடல்கள் பல—அவர் வாய்மொழியாகவே தமிழகமெங்கும் எதிரொலித்தன என்பதும் நாடறியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தம் தம்பியர்க்கு அறிவுறுத்திய—கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு நாவலர்க்கு இயல்பாகும்.

தமிழகத்தின் மாண்புமிகு கல்வி அமைச்சராக அவர் விளங்கும் இந்நாள்—அவர் மூலம் தமிழ்ப் பண்பாடு ஏற்றம் பெறுகிறது என்பதை எண்ணி எவரும் பெருமிதம் கொள்வர். வாழ்க நாவலர்! வளர்க அவர்தம் நற்றொண்டு!

மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில் நெடுஞ்செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்
எழுது புலமை முழுதுளார் ஆதலின்!
அன்னார் கருத்தை அமுதாகக் கொள்ளுதும்;
பன் மொழிப் புலமை படைத்தாராதலின்!
மன்றம் நன்று வாழ்க!
என்றும் நெடுஞ்செழியனார் இனிது வாழ்கவே!

—பாவேந்தர் பாரதிதாசன்

தி.மு.க.வுக்கு ஒரு தருமபுத்திரர்

முன்னாள் முதல்வர் **மீ.பக்தவத்சலம்**

நாவலர் அவர்கள் 50 ஆண்டுகள் வாழ்ந்து 51ஆவது வயதைத் துவக்குகின்றார்கள். இந்த ஐம்பது வயதுக்குள்ளேயே அவர் பெற்ற 'நாவலர்' என்ற புகழுக்கு ஏற்றவாறு தலை சிறந்த பேச்சாளராக விளங்குவதோடு அரசியல் துறையில் ஒரு முக்கிய இடம் பெற்றிருக்கின்றார்.

திரு. நெடுஞ்செழியன் அவர்களைப் போன்றவர்கள் மாணவப் பருவத்திலிருந்தே புதிய கருத்துகளால் கவரப்பட்டுப் புதிய வழியில் பணியாற்ற முற்பட்டிருக்கிறார்கள். இளம் வயதுதான் நவீன கருத்துகள் மனதில் படிவதற்குப் பக்குவமான நிலையாக இருக்கிறது. அப்பொழுது திரு. நெடுஞ்செழியன் அவர்கள் பெரியார் அவர்களுடைய இயக்கத்தினால் கவரப்பட்டு அதில் ஈடுபடத் தொடங்கினார். அந்த இயக்கம் புரட்சிகரமான கருத்துகளைக் கொண்ட சமூக இயக்கம்தான். ஆனால் திராவிடக் கழகத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப் பட்டபோது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு உறுதுணையாக நாவலர் விளங்கினார். நாவலர் அவர்களின் பேச்சுத் திறனோடு அவருடைய அடக்கமும் எளிய தன்மையும் அவரை மக்களால் போற்றப்பட்ட தலைவராக ஆக்கியது. படிப்படியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் துறையில் ஈடுபடத் தொடங்கியபோது நாவலர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் நம்பிக்கையை முற்றிலும் பெற்ற தலைசிறந்த துணைவராகவே விளங்கினார். திராவிட முன்னேற்றக் கழகமே எவ்வாறு அரசியலுக்குப் புதியது என்றாலும், அந்தத் துறையில் நன்கு விளங்கக்கூடிய சிறந்த அரசியல் கட்சியாக மாறியதோ அவ்வாறே நாவலர் அவர்களும் வெகு சுலபமாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சிறந்த அரசியல் வாதியாக மாறினார். அரசியல் துறையில் ஈடுபடுகின்ற பேச்சாளர் யாரும் கடுஞ்சொல்லைத் தவிர்க்க முடியாது தான். நாவலர் அவர்களும் அதற்கு விலக்கு இல்லாமல் கடுஞ்சொல்லில் ஈடுபடத் தவறியதில்லை என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனினும், அவர் சட்ட மன்றத் தேர்தலில் இரண்டாவது முறை வெற்றி பெற்று 50 பேர் கொண்ட தி. மு. கழகத்தைச் சேர்ந்த எதிர்க் கட்சித் தலைவராக விளங்கியபோது என்னைக் கவர்ந்தது அவருடைய சுமுகமான தன்மையே. அமைச்சராக இருப்பதைவிட எதிர்க்கட்சித் தலைவராய் இருப்பதில்தான் அதிக உழைப்புத் தேவை என்பது என்னுடைய கருத்து. அவ்வகையில் நாவலர் அவர்கள் அளவுக்குமேல் கூடக கடுமையாக உழைத்துப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு தம் கட்சியின் போக்கிற்கு ஏற்றவாறு அரசின்மீது குற்றஞ்சாட்டுவதையோ விமரிசனம் செய்வதையோ மேற்கொண்டார். இதில் நாவலர் கையாண்ட முறை எப்போதும் என் கவனத்தைக் கவர்ந்தது. தம் கட்சியின் கொள்கைக்குச்

சிறிதும்முரண்பாடு இல்லாமல், ஆனால், கடுஞ் சொல்லைத் தவிர்த்து இன்பகரமாகவே நடந்து கொள்வது ஓர் அபூர்வமான—ஆனால்—விரும்பத் தக்க தன்மை. சட்ட மன்றத்தில் நாவலர் பணியாற்றியபோது இதை நான் பன்முறை கண்டிருக்கிறேன். வேகமாகப் போகக்கூடிய ஒரு சில சகாக்களை ஓரளவு சமாதானமாகவே அடக்கப் பார்த்ததையும் நான் கவனித்திருக் கிறேன்.

பொதுவாகவே தம் கட்சியைச் சார்ந் தவர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் 'நாவலர் நல்லவர்' என்று சொல்லுவது மகிழ்ச் சியும் திருப்தியும் தரக்கூடியதுதான். ஆனால், இதுவே வேறு சிலரிடத்தில் அதிருப்தியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடும் என்பதை யும் நாம் பார்த்திருக்கிறோம். மகாபாரதத்தில் தருமபுத்திரருக்கு விரோதியே இல்லை என்று சொல்வதுகூட முற்றிலும் சரியாகாது என்பதை அப் பாரதத்தைப் படிக்கும்போது அறிகிறோம். எனவே, நாவலர் அவர்களைப் பற்றிக் கட்சி யிலே ஒரு சிலர் நல்லவர் என்று சொல்வதும் மற்றவர்கள் அல்லர் என்று சொல்வதும் இயற்கை. உண்மையிலேயே நல்லவராக இருந்தால்கூட ஒரு சிலருக்குப் பொல்லாதவ ராகத்தான் தோன்றும்.

சென்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் நாவலர் அவர்கள் நல்ல அமைச்சர் என்றுதான் பலராலும் போற்றப்பட்டு வருகிறார்.

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி நான் கூறுவதுண்டு: 'ஒரு தவறுதலும் அநீதியும் நடைபெறக் கூடாதே என்ற கவலை அவருக்கு எப்போதும் உண்டு' என்று. அதே கவலை மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கட்கும் உண்டு. ஆனால் கவலையோடு நிற்காமல் தவறுதலைத் தவிர்ப்பதற்குத் துணிவும் வேண்டி யிருக்கிறது. ஆனால் அந்தத் துணிவு தம்மைச் சார்ந்தவர்களுடைய வெறுப்பிற்கும் இடம் கொடுக்கும். அரசியல் துறையில் ஈடுபடுகின்ற வர்களுக்கு இவ்வாறு பல சங்கடங்கள் உண்டு. இவைகளைச் சமாளித்து நீந்திச் செல்வதுதான் அரசியல். இதில் ஈடுபட்டு இருக்கின்ற நாவலர் அவர்கட்கு என் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்செழியனுக்கு எதிராகப் பலத்த கண்டனம் கிளம்பிற்று

ஈ வெ. கி. சம்பத்

எனக்கு நன்கு நினைவிருக்கிறது; சுமார் 23 ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடியில் பெரியார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக மாநில மாநாடு நடைபெற்றது.

திரு நெடுஞ்செழியன் தமது 'மன்றம்' பத்திரிகையில், கழகத்தில் ஜனநாயக முறை களைப் பெரியார் அனுமதிக்காது, சர்வாதி காரப் போக்கில் செல்கிறார்' எனக் கண்டித்து எழுதினார். அடிக்கடி அண்ணா அவர்களோடு உட்கார்ந்து நாங்கள் பேசியவற்றின் உணர்ச் சியை அவர் எழுதிக் காட்டி விட்டார்.

அப்பொழுது திராவிடர் கழகத்தில் பெரியாரை எல்லோரும் பின் பற்றினார்கள் எனபதைவிட வழிபட்டு வந்தனர் என்று கூறுவதே பொருத்தமாகும். எனவே, நெடுஞ் செழியனுக்கு எதிராகப் பலத்த கண்டணம் கிளம்பிற்று.

அந்த நேரத்தில்தான் தூத்துக்குடி மாநாடும் வாய்த்தது. மாநாட்டுக்கு நெடுஞ்செழியன் வந்தால் விரசமான சம்பவங்கள் நிகழக்கூடும் என்ற நிலையிருந்தது. அண்ணா அவர்கள் 'அம் மாநாட்டுக்குச் செல்ல வேண்டாம்' என நெடுஞ்செழியனுக்குக் கூறிவிட்டார்.

தூத்துக்குடி மாநாட்டுக்குச் சில நாட்கள் முன்கூட்டியே திருச்சிக்கு அண்ணா வந்தார். நானும் சென்றேன்.

திருச்சியில் அப்போது எங்கள் இனிய நண்பர் சாம்பு அவர்களின் வீட்டில்தான் தங்குவது வழக்கம். பெரியார் முகாம், வேதாசலம் வீட்டில்; எங்கள் முகாம், சாம்பு வின் வீட்டில். "ஒன்று, நெடுஞ்செழியனையும் மாநாட்டுக்கு வரச் செய்து, அவருக்கு ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் ஏற்க வேண்டும். அல்லது 'நாம்' அனைவருமே (கூடிப் பேசிய வர்கள்) தூத்துக்குடிக்குச் செல்லக் கூடாது" என்று நான் பிடிவாதம் பிடித்தேன். காரணம், எழுதியது அவர் என்றாலும், கருத்து நம் அனைவரின் பொதுக் கருத்து; அதற்கான பொறுப்புக்கள் அனைத்தையும் நாம் ஏற்க வேண்டும்" என்பது என் வாதம்.

—ஆ. வி.

நாகரிக அரசியலுக்கு அவர் சொந்தக்காரர்

கி. மனோகரன், M.A., M.P.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களது பிறந்த தினம் இன்று, நீடு வாழ்கவென வாழ்த்துகின்றேன்!

கழகக் காவலர்களில் மிக முக்கியமானவர் நாவலர்! ஆற்றல் மிக்கவர்-பண்பாடு மிக்கவர் -அண்ணா அவர்களால், "நடமாடும் பல்கலைக் கழகம்" எனப் பாராட்டப்பட்டவர்!

இளமைத் துடிப்பின் இசையரங்காக, "இளந்தாடி நெடுஞ்செழியன்" என அவர் வருணிக்கப்பட்ட அந்த நாள். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அவர் பேசிய பேச்சினால் இயக்கத்திற்கு இழுக்கப்பட்டவன் நான் அப்போது வயது எனக்கு பன்னிரண்டு!

நாவலர் மிகவும் கண்டிப்பானவர். அந்த அனுபவம் எனக்கே உண்டு! ஆனால் அந்தக் கண்டிப்பிற்குப் பின்னால் இழைந்தோடும் கனிவைச் சுவைக்கும் வாய்ப்பையும் சேர்த்துப் பெற நான் தவறியதில்லை!

கட்டுப்பாடு - அதன் மறு உருவம் அவர். தன்னளவில் பயன்படும் கட்டுப்பாடுணர்ச்சி, அனைவரிடமும் வரவேண்டும் என்பதில் கட்டாயம் காட்டுபவர்!

எந்த விஷயத்திலும் அவசரம் காட்ட மாட்டார்! "பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்ற வாதம், பிடிவாதத்தின் உடன்பிறப்பு; அதுவே காலப் போக்கில் திமிர்வாதத்தின் செல்லப்பிள்ளை ஆகிவிடும் என்ற கருத்துப் படைத்தவர் நாவலர்!

பிரச்சினைகளை அணுகுவதில் தனி வழியைப் பின்பற்றுபவர்! உள்நோக்கங்களில் ஊடுருவிப் பழக்கமில்லாதவர்!

திட்டங்கள் தீட்டி, காரியங்களைத் தேடிக் கொள்வதில்லை! திறந்த மனமே, அவருக்கு எல்லாம் எனும் நிலைபடைத்தவர்!

பட்டங்கள் அவரைப் பாதை மாற்றியதில்லை! பகட்டான வாழ்விற்குப் பாதை அமைத்ததுமில்லை அவர்.

இலட்சியக் குன்றத்தின் உச்சியிலே அவர்! இயக்கத்தோடு இணைபிரியாத வாழ்வை மேற்கொண்டவர்!

அனுபவத்திலிருந்து பாடங் கற்றுக் கொள்வதில் முன்னணியில் நிற்பவர்! கடந்த காலத்தைப் பற்றிய பூரணமான "ரசனை" எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும் என நம்புபவர்!

தவறுகளிலிருந்து பெறுகின்ற படிப்பினைகள், தவறுகளாகாது! பெறத் தவறிடும்போது தான் மகத்தான தவறுகளின் மங்களகரமான ஆரம்பம் உருவாகிவிடுகிறது!

மாற்றாரும் போற்றிடும் நாகரிக அரசியலுக்கு அவர் சொந்தக்காரர்! மனம் நோகப் பேசத் தெரியாதவர்.

சுத்தமான ஜனநாயகவாதி! ஜனநாயக உணர்வுகளின் உறையுள்! அவரது கருத்துப் படையல்கள் அனைத்திலும் குன்றாத ஜனநாயகச் சுவை கிடைக்கும்.

இன்றைய ஆட்சிக் காட்சியாக மலர்ந்துள்ள தி. மு. க.வின் தெளிவான வளர்ச்சிக்கு அவரது காணிக்கை, கணக்கிலடங்காதது!

இலக்கியமாகிவிட்ட, இதயங் கவர்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் பல்கலைக் கழகத்தின் தகுதி மிக்க மாணவர்; உலைக் களத்தின் கூர்மை மிக்க ஆயுதம்; படிப்பகத்தின் பயன்மிக்க சுவடி; பூங்காவின் மணம் வீசும் மலர்!

வாழ்க நாவலர்!

வெல்க அவர்தொண்டு.

நாவலர் நம் தலைவர்

நாவலருக்கு மலர் சூட்டுகிறார் நண்பர் — பண்பாளர் — எல்லாருக்கும் இனியவர் — கே. பி. சுந்தரம்.

வாடாமலருக்கு 'மலர்' ஏனோ! — என்று நினைத்தேன். பெருமைகளை மணக்கச் செய்யாவிடில், காலப்புழுதி அமுக்கி ஆழ்த்தி இடம் தெரியாமல் செய்துவிடுமன்றோ? எழுத்து மலர்கள் என்றும் மணப்பவை! ஒருமுறை அச்சாகிகிட்டால், அதனை, அழிக்க யாராலும் இயலாது. அதனால்தான் வீசிய வார்த்தை — எய்த அம்பு — இறந்த காலம் — அச்சேறிய எழுத்து, மறுபடியும் 'திரும்பப்' பெற இயலாது என்பார்கள்!!

* * *

நாவலர் நமது தலைவர்; ஆனால், அவரை எல்லாரும் பாராட்டுகிறார்கள். கட்சி, மதம், சாதி, வகுப்பு — எல்லாவற்றையும் தாண்டி, அவரை, எல்லாரும் பாராட்டுகிறார்கள். என்ன காரணம்? எல்லாரையும் வெல்லும்படியாக அவரிடமுள்ள அரிய குணம் என்ன? புண்படாமல் பண்போடு நினைப்பதும்—பழகுவதும் — பேசுவதும்தாம் என்பேன். மேடைகளிலே மட்டுமல்ல; தனிப்பட்ட முறையிலும்,

இராம அரங்கண்ணல், M.L.A.

அவருடைய புகழ்மணக்கக் காரணமாக உள்ளது, அவருடைய ஒழுக்கமாகும்! ஒழுங்கோடு நினைப்பது — பேசுவது — பழகுவது — தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதில், நாவலருக்கு ஈடு நாவலர்தாம். இதனால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், "நெடுஞ்செழியன் சாப்பிடும்போது பாருங்கள். எதெதை எப்படியெப்படி வைக்க வேண்டுமோ அப்படி வைத்து, எப்படியெப்படிச் சாப்பிடவேண்டுமோ அப்படிச் சாப்பிடுவதை!", என்று. சாப்பிடும்போது மட்டுமல்ல, எந்த வேலையைக் கொடுத்தாலும், கொடுத்த வேலையை அப்பழுக்கின்றிச் செய்யவேண்டும் என்று ஆழ்ந்து விடுவார் நாவலர்! ஒரு அரசியல்வாதி அப்படியிருக்கலாமா?—என்பது விவாதிக்க வேண்டிய பிரச்சினை. ஆனால், நாவலரால் மாற்றிக்கொள்ள முடியாமலிருந்து வருகிற ஒரு குணம், தாம் ஏற்றுக்கொண்ட பணியை — அது அமைச்சுப் பொறுப்பானாலும் சரி, பிரசாரச் செயலாளர் பொறுப்பானாலும் சரி, 'நம் நாடு' ஆசிரியப் பணியானாலும் சரி — குற்றங்குறையில்லாமல், 'சம்பளம் வாங்கும் குமாஸ்தாவைப் போலச் செய்வது, அவருடைய தொட்டிற் பழக்கமாகும். இத்தகைய —பொதுப்பணியினைச் செய்யும்போது தயை தாட்சணியம் காட்டாமல் 'கண்டிப்போடு' விளங்குவார் அவர்! இந்தக் கண்டிப்பு அரசியல்வாதிக்குக் கூட்டத்தைச் சேர்த்துக் கொடுக்குமா? தேவைதானா? — என்பதும் விவாதத்துக்குரிய விஷயமே. ஆனால், அந்தக் கண்டிப்பின் முன், கழகத்தார், குடும்பத்தார், நண்பர்கள் யாரும் தபபமுடியாது. உதாரணம் நாவலரின் 'பசு'த்தன்மையை 'அப்பாவி'க் குணம் என்றெண்ணி அவருக்கு வேண்டிய — தேர்தலில் பாடுபட்ட — ஒரு கழகத் தோழர் — மருத்துவக் கல்லூரி இடத்துக்காக ரூ. 5000 இலஞ்சம் கொடுக்க முயன்று, அவராலேயே போலீசில் பிடித்துக்கொடுக்கப்பட்ட சம்பவம்!!

* * *

வளைந்து கொடுப்போரே வாழ்வார்! — என்பதும் உண்டு. அரசியலில் 'நாணல்'கள் ஏராளம். ஆனால், நாவலர், கம்பீரமாக நிற்கும் 'ஆலமரமாகும்'. வேகமான புயலுக்குமுன் ஆலமரம் என்னவாகும்? என்று கேட்கலாம். விடை காணவேண்டிய கேள்விதான்! என்றாலும், ஆலமரம், ஆலமரம் தானே? சகோதரர் கருணாநிதி அவர்கள் கழகத்துக்குக் கிடைத்த சாணக்கியர் என்றால் நாவலரைத் 'திருக்குறள்' எனலாம்! கலைஞருடைய ஒரு கண் திருக்குறள் என்பதை நாம் அறிவோம். முன்னேற்றக் கழகம் பீடுநடைபோட மூளையும் வேண்டும் — இருதயமும் வேண்டும்! இரண்டையும் பெற்றவர்களாகத் தலைவர்கள் இருப்பதாலேயே, அகில இந்தியாவிலும் இன்று, கழகம், புகழ்க் கொடி நாட்டுகிறது.

* * *

நாவலர் புகழ் நம் புகழ்! அவரிடம் உள்ள 'குறைகள்' அகன்றால், அவர் நாவலராக மாட்டார். முல்லையும் ரோஜாவும் இருவாட்சியும் சண்பகமும் நிறைந்திருப்பதற்குப் பெயர்தான் நந்தவனம்! கண்டிக்க ஒருவரும் கைகொடுத்து அணைக்க இன்னொருவரும் இருப்பதுதான் நல்ல குடும்பத்துக்கு அடையாளம்! திராவிட முன்னேற்றக் கழகம் எனும் குடும்பம் மணக்க நாம் பெற்ற வாடாமலர் நம் நாவலர்!!

நமது நாவலர்!

வழக்கறிஞர். கே. ஏ. கிருஷ்ணசாமி M.A.,B.L.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் இலக்கியத்துக்கு இலக்கணமாய் அமைந்து நிற்பவர் நமது நாவலர்!

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' என்னும் குறளுக்குச் சுடராய் நிற்பவர் நமது நாவலர்!

பிறந்த ஊராம் பட்டுக்கோட்டைக்குப் புதிய பெருமையினை ஊட்டியவர் நமது நாவலர்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எவ்வளவோ ஆற்றலாளர்களை அறிவு இயக்கத்திற்கு அளித்துள்ளது.

அந்த அணியில் தலைமாணவர் நமது நாவலர்!

கல்லூரியில் பயிலும்போதே பகுத்தறிவு மார்க்கத்திற்கு இழுத்துவரப்பட்டவர் நமது நாவலர்!

மாணவராய் இருக்கும்போதே சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைப் பரப்ப அவர் எடுத்த முயற்சிகள் ஏராளம்!

முத்தமிழில் கரைகண்டவர் நமது நாவலர்!

பைந்தமிழ்த் தேர்ப்பாகன் — சித்துக்குத் தந்தை புதுவைக்குயில் பாரதிதாசன்!

புதுவைக்குயிலின் உணர்வுகளைப் பொதுக் குரலாக்கி — அவர்தம் உணர்ச்சிகளைத் தமது வெண்கலக் குரலால் தமிழ்க் குலத்திற்கு உணர்த்திய பெருமை நாவலரையே சாரும்!

கவிதை என்றாலே காததூரம் சென்று கொண்டிருந்த நிலையைப் போக்கிய பெருமை நாவலருக்கு உண்டு!

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!" — என்ற சங்கநாதம் நூற்றுக்கணக்கான தமிழ் வாலிபர்களை எழுச்சி கொள்ளச் செய்தது!

'தமிழுக்கு அமுதென்று பேர்!' என்று நாவலர் குரலுயர்த்திச் சொன்ன பாங்கால் தமிழ்ச் சுவையினைப் பருகாத தமிழ் மாந்தர் எவர்?

"இருட்டறையில் உள்ளதடா உலகம் — சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!" என்று அழுத்தமாய் நாவலர் மேடைகளில் கூறியபோது சனாதனிகள் பட்ட அவதியை, தமிழகம் அவ்வளவு எளிதாய் மறந்து விடவில்லை!

"தீங்குள்ள இந்தியை நாமெதிர்ப்போம் — உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை! மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" — என்ற உணர்ச்சிக் கவிதை வரிகளை நாவலர் கூறிய போது, வெள்ளம்போல் தமிழர்கள் அணி வகுத்தனர்!

புதுமைக் கவிதை வளர — அதன் வழி புரட்சிக் கருத்துக்கள் மிளிர இரவைப் பகலாக்கி உழைத்தவர் நாவலர்!

பெரியாரோடும் — அண்ணாவோடும் நிழல் போல நின்று அரசியலில் பயிற்சி பெற்றவர்!

பெரியாரிடமிருந்து அண்ணா பிரிந்து தனி அமைப்புக் கண்டபோது, கழகம் அமைக்க உறுதுணைபுரிந்த மூத்த தலைவர்களில் நாவலரும் ஒருவர்!

அன்று முதல் இன்று வரை அண்ணாவின் அறவழியில் நடைபோடும் செயல் வீரர் நமது நாவலர்!

அண்ணாவின் மறைவுக்குப் பின் கழகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளைப் பாங்காகத் தவிர்த்து —அண்ணா அமைத்த கழகத்தைப் பொதுச் செயலாளர் பொறுப்பேற்றுச் சீராகக் கட்டிக் காத்து வருகின்றார்கள்.

பொன் விழாக் காணும் நாவலர் அவர்களின் சீரிய நல்இயல்புகள் நமக்கெல்லாம் வழிகாட்டும் உணர்வுகளாக அமையட்டும்!

தமிழ் கூறும் நல்லுலகம் விழா எடுத்துத் தனது தலைமகனுக்கு வாழ்த்துக் கூறுகிறது!

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நாளில் எனது அன்பு வாழ்த்துக்களை உரித்தாக்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்!





நிறை தமிழ்ப் பெட்டகம்

மாண்புமிகு அமைச்சர்

எஸ்.ஜே.சாதிக்பாட்சா

நெற் களஞ்சியமாம் தஞ்சை தந்த அறிவுக் களஞ்சியம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழருக்குக் கிடைத்த நன்முத்து! தமிழகத்துக்குக் கிடைத்தற்கரிய சொத்து.

இலக்கியப் பேழை என்றும், பாவலர் போற்றிடும் பண்பாளர் என்றும் சிறப்பித்துக் கூறப்படும் நம் நாவலர் அவர்கள் தஞ்சையின் நன்னிலம் வட்டத்தில் திருக் கன்னபுரத்தில் பிறந்து, பட்டுக் கோட்டைப் பள்ளியிலும், அண்ணாமலைக் கழகத்திலும் பயின்றுதேறி, பகுத்தறிவுக் கோட்டையிலே பணியேற்று, நாட்டுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நற்றொண்டர்—தாழ்வுற்ற தமிழகத்தைத் தட்டியெழுப்பிய அறிஞர் அண்ணாவின் முதல் தம்பி!

இளந்தாடி வேந்தராக இருந்தபோதே இலட்சோப இலட்ச இளைஞர்களின் இதயங்களைத் தொட்டவர்—இளம் தோள்களில் துடிப்பேற்றியவர்! அவர் அடியெடுத்து வைத்த இடங்களில் எல்லாம் தமிழ் மணம் கமழ்ந்தது! அவர் பேச்சைக் கேட்டவர்களெல்லாம் பகுத்தறிவுப் பாசறையின் பக்கம் வந்தனர்! வாழ்வும் வளமும் மங்காத சங்கே என முழங்கி அவர் அடியெடுத்து வைத்த இடங்களை எல்லாம் இயக்க வீரர் கோட்டங்களாக மாற்றியவர்! சீறிவந்த எதிர்ப்புகளை — துள்ளிவந்த கணைகளைச் சிங்க ஏறென எதிர்த்து நின்றவர்! அஞ்சாநெஞ்சங் கொண்டவர்! ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அயராதவர்! வெஞ்சமர் பல கண்டு வெற்றி கண்ட வீரர்!

பன்னெடுங் காலமாக நமது சமுதாயத்தைச் செல்லரித்து வரும் சீர்கேடுகளைப் போக்கிட, ஏற்றத் தாழ்வுகளைத் தூள்தூளாக்க, வறுமையை ஒழித்து வளம் கொழிக்கச் செய்ய, அறியாமை, இல்லாமை, போதாமை ஆகியவற்றைப் பூண்டோடு ஒழிக்க வந்த தமிழர் தளபதி!

குளிர் தமிழ் சேர் குறள் நெறி பரப்பிவரும் நெறியாளர்! குளிர் முகிலின் துளிகளைப்போலச் சொல் மாரி பொழியும் சொற்கோ! முத்தமிழின் சுவை பிழிந்து தரும் வித்தகர்! அருங் கொள்கைகளின் இருப்பிடமாம் நடமாடும் நூலகம்! நிறைதமிழின் பெட்டகம்! தாய்த் தமிழுக்கு ஆபத்து வந்தபோது தோள் தட்டி அறப் போர்க்களத்தில் குதித்து—சிறை வாழ்வைப் பலமுறை ஏற்ற — தமிழவேள்! பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமைக்குரிய அரிய தம்பி— ஆசை இளவல்! மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சி அணியில் ஓர் அரிய மணி!

சீர்மையும் நேர்மையும், திண்மையும் வன்மையும், வாய்மையும் தூய்மையும் அணி பெற வாய்ந்த இப் பெருந்தகையை—பொதுத் தொண்டின் ஒளி விளக்காகத் திகழும் புரட்சி வேந்தரை—நல்லோர் கொண்டாடும் நாடு புகழும் நாவலரை—அவரது பிறந்த திருநாளில் காவிரியாற்றுமணலினும் அதிக காலம் வாழ்க —வளமெலாம் பெற்று வளர்க என உள்ளங் குளிர வாழ்த்துக்களைக் குவிக்கிறேன்.

*

நற்றமிழ் வல்ல நாவலர்

"விளையும் பயிர் முளையிலே" என்று ஒரு பழமொழி உண்டு. நன்றாகச் செழித்து வளர்ந்து பலன் தரக்கூடிய பயிர் முளையிலேயே தெரிந்துவிடும் என்பதை நம் முன்னோர்கள் எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள். இது பயிருக்கு மட்டும் சொல்லும் இலக்கணமன்று; மனிதர்களுக்கும் ஒப்பிட்டுக் காட்டத் தக்க ஒன்றாகும்.

அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று பாராமல், ஏன்? எதற்காக? என்ற வினாக்களைத் தொடுத்துக் கொள்கைகட்குத் தெளிவு கண்டு அவற்றை ஏற்பவனே பகுத்தறிவு வாதி என்று கிரேக்கத்துப் பெரியார் சாக்கரடீசு சொன்னார் என்பது வரலாறு.

தமிழகத்திலும் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அது போன்றதொரு நிகழ்ச்சி நடைபெற்றது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில். "ஆற்றோரம்" எனும் அரிய தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அமுத மழையை ஆவலோடு பருகி நின்ற பல மாணவர்களில் இருவர் மட்டும் தங்கள் சிந்தனைக்கு விருந்தளித்துச் செவி மடுத்து அவர் வழியைப் பின்பற்றக் காத்து நின்றனர். சொற்பொழிவு முடிந்த பின்னர் அவ்விருவரும் அண்ணாவைத் தனிமையில் சந்தித்துத் தங்கள் பாராட்டைத் தெரிவித்து ஓர் ஐயப்பாட்டையும் எழுப்பினர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டிருந்த காலம் அது. ஆகவே, அவ்விரு மாணவர்களும் அண்ணாவைப் பார்த்து "உங்கள் சொற்பொழிவில் சமதர்மம் காணப்படுகிறது. ஆனால், நீங்கள் ஏன் பதவி வேட்டையாடும் பிற்போக்குப் பணக்காரக் கட்சியாகிய நீதிக் கட்சியில் இருக்க வேண்டும்?" என்று கேட்டனர்.

"நான் ஏன் இருக்கிறேன் என்றால் அந்தப் பணக்காரக் கட்சியைச் சனநாயக, சமதர்மக் கட்சியாக மாற்ற வேண்டும் என்பதற்காகத் தான். அதற்கு உங்களைப் போன்ற இளைஞர்கள் முன்வரவேண்டும்" அண்ணா தந்த அருமையான விளக்கம் இது.

அவருடைய பேச்சினால் கவரப்பெற்று, நீண்ட விளக்கங்களால் தெளிவு பெற்று, அண்ணாவைப் பின் பற்றிய அந்த இரு மாணவர்கள் தாம் நாவலர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோராவர்.

ஓர் இயக்கத்தில் சேரும் முன்பு பலமுறை யோசித்துச் சேர வேண்டும். சேர்ந்த பின்பு தாம் ஏற்றுக் கொண்ட தலைவன் காட்டும் சுட்டு விரல் நோக்கும் பாதையில் பயணம் கடுமையாக இருந்தாலும் தொடர வேண்டிய மனப் பக்குவம் வேண்டும். நாவலர் அவர்கள் அறிஞர் அண்ணாபால் கொண்ட பற்றால், அவர்தம் பேச்சால், கொள்கைப் பிடிப்பால் அவர் காட்டிய இயக்கப் பாதையில் அழுத்தம் திருத்தமாக நடைபோட்டார். கடைசி வரை அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய பாதையினின்று பிறழவும் இல்லை; அந்தத் தலைவன் இட்ட கட்டளைகளை இன்முகத்துடன் ஏற்றுச் செயல்படுத்தத் தயங்கியதுமில்லை.

"உழைப்பவனைத் தேடிப் பிடித்துச் சேர்த்தால் ஒரு கட்சிக்கு உன்னதமான கட்டுக்கோப்பு இருக்கும். கிடைப்பவனைக் கொண்டு நடத்திச் செல்லும் கட்சிக்கு அத்தகைய கட்டுக்கோப்பு இராது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சிக்கு இலக்கணம் கூறுவார்கள். அப்படி அவர் தேடிப்பிடித்துக் கட்சியில் சேர்த்தவர் நம் நாவலர் ஆவார்கள்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரங்களை நமக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அளித்தபோது, அவற்றைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்பும் தூய தொண்டராகப் பணியாற்றி அவற்றைத் தம் வாழ்விலும் கடைப் பிடித்துக் காட்டியவர் நாவலர்.

மாண்புமிகு அமைச்சர் பாவலர் மா. முத்துசாமி

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலருக்குப் பின் முதன் முதலில் தமிழகத்தில் நாவலர் என்னும் பட்டம் பெற்றவர், நாவலர் சோம சுந்தர பாரதியாராவார்கள். அவருக்குப் பின் தமிழ் மீதுள்ள பற்றால் தம்முடைய வீறு மிகுந்த சொற்பொழிவால் ''நாவலர்'' என்ற பட்டத்தைப் பெற்றவர் நம் பொதுச் செயலாளர் அவர்கள் தாம்.

நாவலர் அவர்களின் நாவன்மையைப் போற்றிப் பாராட்டாதார் இல்லை. அறிஞர் அண்ணா அவர்களே வியந்து பாராட்டும் அளவுக்குப் பல மணி நேரம் சிந்தனையைத் தூண்டவல்ல கருத்து வளம் மிக்க சொற்பொழிவுகள் ஆற்றவல்லவர். இலக்கியக் காட்சிகளை இனிமையாக எடுத்து வைப்பதிலும், புறநானூற்று வரிகளைப் போர் முரசம் அறைவது போல் முழங்குவதிலும், அகக் காட்சிகளை அழகு பட வருணிப்பதிலும், பாரதிதாசன் பாடல்களுக்குப் புத்துணர்ச்சி கொடுப்பதிலும் இவருக்கு நிகர் இவரேதாம் என்பதில் ஐயம் இல்லை.

''ஆரியப் படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடத்தியவனின் பெருமை, சாவகம், யவனம், சிங்களமெனும் பல நாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சா நெஞ்சம், பரணி பாடித் தரணி ஆண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்ட மாட்சி, இவை தமை முகபடாம் போர்த்த யானை மீது அமர்ந்து, முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன் கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன் போலவும், தமிழழகும், இலக்கியச் செறிவும், தெளிவும் மிளிர இனிமை துள்ளிட, ஏறு நடையில் பேசவேண்டும் என எண்ணிடும் வேளையில் நம் நாவலர் நினைவு வருமல்லவா'' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே பாராட்டியது நம் நினைவுக்கு வருகின்றது. இதன் காரணமாகவே இவருக்கு ''நடமாடும் பல்கலைக் கழகம்'' என்ற நற்பெயரை நானிலம் வழங்கி மகிழ்ந்தது.

பெரியாரின் பாசறையில் வளர்ந்த நாவலர், அறிஞர் அண்ணா அவர்களுடன் சேர்ந்து தி. மு. கழகத்தை நிறுவிய தலைவர்களில் ஒருவராவர். அண்ணாவிற்குப் பின் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை இருமுறை ஏற்று மிகத் திறம்பட நடத்தி வருபவர் நம் நாவலர் அவர்கள்.

இதனை நன்குணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1956-ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக மாநில மாநாட்டில் ''தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்!'' என்று நாவலரை வரலாற்றுச் சிறப்பு மிக்க வரிகளால் அழைத்துத் தலைமைப் பொறுப்பை ஏற்கச் செய்தார்கள். அந்த நம்பிக்கை வீண் போகா வண்ணம் நாவலர் அவர்கள் திறம்பட நடந்து காட்டி நம்மை எல்லாம் வழி நடத்திச் செல்கிறார்கள்.

கழகத்தின் கொள்கை விளக்கங்களில் ''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்ற வீர வரிகள் அவர் பேச்சினூடே எப்போதும் இழையோடும். ஒரு முறை தேனியில் இப்படிப்பட்ட புரட்சி முழக்கம் செய்து கொண்டிருந்த நாவலர் மீது மாற்றார்கள் பெரிய பாறை ஒன்றை உருட்டிக் கொலை செய்ய முயன்றனர். ஆனால் இலக்குத் தவறவே அவர்கள் முயற்சி பலனளிக்காது, நாவலர் அவர்கள் உயிர் தப்பினார்கள். பேச்சில் வரிக்கு வரி பாரதிதாசனின் புரட்சிக் கனலைத்

உண்மையான உறுதி

பகையை மூட்டிக் கட்சிக்கு உறுதியாக இருப்பதைத் தெரிவித்துக் கொள்வது என்பது இயற்கையாக நரம்பு தளர்ந்து போன பிறகு தாதுபுஷ்டி லேகியம் சாப்பிடுவதற்கு ஒப்பானது. எவ்வளவு விரைவில் அந்த மருந்தினால் நரம்பு முறுக்கேறுகிறதோ அதைவிட வேகமாகத் தளர்ந்துவிடும். ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாமல் இருக்கிற உறுதிதான் உண்மையான உறுதி. காற்றடித்தால் சாய்கிற உறுதி உண்மையான உறுதியல்ல. கதிர் இருக்கும் போது வரும் காட்டுக் குருவிகள், பழம் பழுத்த போது வரும் பறவைகள் போன்றவர்கள் காரியம் முடிந்ததும் போய்விடும் தன்மையுள்ளவர்கள்.

—அமரர் அண்ணா.

நாவலர்
வாழ்க பல்லாண்டு!

நாவலர் கழகக் காவலர். நடமாடும் பல்கலைக் கழகம். படித்தவர், பாமரர் இருவர் உள்ளத்திலும் ஒருசேர இடம் பிடித்துவிட்ட உன்னதத் தலைவர். ஒழுக்கத்தை ஓம்பி வாழும் தலைவர். அறிஞர் அண்ணாவின் அடிச் சுவட்டினைப் பின்பற்றி வரும் தம்பி. அறிஞர் அண்ணாவின் உலைக்கூடத்தில் உருவாக்கப்பட்ட தங்கக் கம்பிகளுள் ஒருவர். உன்னத லட்சியங்களின் இருப்பிடமாகத் திகழுபவர். மேலை நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்து வந்த உலக அனுபவமிக்கவர். தமிழ் நாட்டின் தன்னேரில்லாத இயக்கமான தி மு. க. வின் பொதுச் செயலாளர். தமிழக அரசின் கல்வி, சுகாதார அமைச்சர். சிறந்த நாவன்மை மிக்கவர், சிறந்த எழுத்தாளர். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். அத்தகைய அன்பும், அடக்கமும், ஆற்றலும் பெற்ற நாவலர் வாழ்க பல்லாண்டு என வாழ்த்துவோம்!

அன்பன்,

தோப்பூர் திருவேங்கடம்

தெளிக்கும் நாவலர் அவர்கள் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற கருத்துக்கேற்ப இன்முகத்துடன் சிறைத் தண்டனைகளை அனுபவித்துள்ளார்.

"மழை பொழிவதைப் பார்த்துக் குயில் மௌனம் சாதிக்கிறது. தவளைகளோ கத்துகின்றன. அறிஞர்கள் தங்களுக்கு அனுகூலமான நிலைமை உருவாகும் வரை ஒதுங்கியே இருப்பார்கள்" என்பது ஓர் அறிஞர் வாக்கு. 1957-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாவலர் தோல்வியுற்றாலும் தோல்வியைக் கண்டு துவளாமல் வெற்றிக்காகக் காத்திருந்தார். 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவராக மிகச் சிறந்த முறையில் பணியாற்றியதை நாடு அறியும்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று கல்விக்கு இலக்கணம் வகுத்தான் அன்று ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். இன்று நாவலர் நெடுஞ்செழியன் அமைச்சரானாலும் கல்வித் துறைக்குப் பொறுப்பேற்று, "தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு" என்ற வள்ளுவர் வாய் மொழிப்படி மக்கட்குக் கல்வி எனும் நீரோடையைப் பாய்ச்சும் பொறுப்பை மேற்கொண்டு மக்கள் மகிழத்தக்க திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றார். நெடுஞ்செழியன் என்ற பெயருக்கும், கல்விக்கும் அன்று முதல் இன்று வரை நெருங்கிய தொடர்பு உண்டு போலும்!

இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்களைக் கொண்டுள்ள நாவலர் நல்ல தமிழ்க் காவலர், நடமாடும் பல்கலைக் கழகம், குற்றால அருவி போல் தமிழ் அமுதைப் பொழியும் தகைமையாளர், குணக்குன்று, கொள்கைக் கோமான், கழகப் பொதுச் செயலாளர், கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டின் இலக்கணம், அஞ்சா நெஞ்சினர், ஆற்றல் மிகு மறவர், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனைப் போல் நீதி வழுவா அமைச்சர், தமிழகத்து முதல்வர் கலைஞரோடு இணைந்து நின்று கழகத்தையும், நாட்டையும் காத்து நிற்கும் தூயவர், இத்தனைக்கும் மேலாக நம் இதயங்களில் குடிகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமந்த தம்பிமாரில் ஒருவராகிய நாவலர் அவர்கட்கு ஐம்பது ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பொன்விழாக் கொண்டாட விருப்பதறிந்து நாட்டு மக்களைப் போல் நானும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறேன்.

ஐம்பதாண்டு நிறைந்தாலும், கடும் பணிகளை மேற்கொண்டாலும், இன்னும் இளமைத் துடிப்பும், தியாகப் பண்பும், கொள்கைப் பிடிப்பும், தாய்மொழிப் பற்றும் கொண்டு விளங்கும் நாவலர் மேலும் பன்னெடுங்காலம் நம்மையும் நாட்டையும் வழி நடத்திச் செல்லத் தக்க தலைவர்களில் ஒருவராகச் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

வாழ்க நாவலர்!

வெல்க அவர் தொண்டு!!

வாழ்க நம் சொல்லேருழவர்!

மாண்புமிகு அமைச்சர் என்.வி.நடராசன்

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னால், தங்கசாலைத் தெருவில் உள்ள ஒரு பள்ளிக் கூடத்தில் இந்தி எதிர்ப்பு மறியல் நடை பெற்றுக்கொண்டிருந்தது.

நூற்றுக்கணக்கான இயக்கத் தோழர்கள் குழுமியிருந்த அந்த இடத்தில்தான் நாவலருக் கும் எனக்கும் முதல் சந்திப்பு ஏற்பட்டது.

அன்று "இளந்தாடி இரா. நெடுஞ்செழி யன்" என்று அழைக்கப்பட்ட நாவலர், கறுத்த தாடியுடன், உரத்த குரலில் தமிழக மெங்கும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி வந்தார்.

கல்விக் கடலில் இருந்து தாம், பல ஒளி முத்துக்களைக் கண்டெடுத்ததாக அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி பெருமையோடு கூறுவார்கள். அந்த முத்துக்களிலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் முக்கியமானவ ராவார்.

கல்லடியும் சொல்லடியும் பட்டு, மாற்றாரின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் தாங்கிக் கொண்டு கழகத்தை வளர்த்த தலைவர்களில் நாவலரும் ஒருவர்.

அகிலமே தம்மை அறிஞர் என்று புகழ்ந்த போதும் கூடத் தம்முடைய கொள்கைக்காக வும், தாம் சார்ந்து நின்ற கட்சியின் வளர்ச்சிக் காகவும், இறுதி வரை பாடுபட்டவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இளமை முதற் கொண்டு தமது வாழ்க் கையைக் கட்சிக்கே அர்ப்பணித்துக் கொண்டு கடுமையான போராட்டங்களையும் களங் களையும் சந்தித்தவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள்!

அதே போல் கல்லூரியில் இருந்து பொது வாழ்வில் காலடி எடுத்து வைத்ததும், வாழ்க் கையைச் சுகமாக அனுபவிக்க விரும்பாமல், நாட்டு மக்கள் சுகமாக வாழ்வதற்காகத் தமிழ கத்தின் கரடுமுரடான பாதையைச் செப்ப னிடும் வாழ்க்கையை மேற்கொண்டுவிட்டவர் நாவலர் அவர்கள்!

திராவிடர் இயக்கமும், அதன் முன்னணி வீரர்களும், இயக்கத்தின் தொடக்க காலத்தில் சந்தித்த அடக்கு முறைகள் சொல்ல முடியா தவை!

கழகத்தின் வளர்ச்சியைப் பற்றி நாவலர் அடிக்கடி குறிப்பிடுவார் :

"அறுக்க அறுக்க ஒளிவிடும் வைரத்தைப் போல், அரைக்க அரைக்க மணக்கின்ற சந்த னத்தைப் போல், அடிக்க அடிக்க உந்துகின்ற பந்தைப் போல், அடக்க அடக்க வளர்கிறது தி. மு. கழகம்" என்று.

கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று நாவலர் சொன்னது, நாட்டு மக்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டது!

தந்தை பெரியார் அவர்களிடத்தில் பணி யாற்றிய நாவலர் அவர்கள், சொற்பொழிவுத் துறையில் தமக்கென ஒரு பாணியைத் தமிழ கத்தில் ஏற்படுத்தினார்.

1949-இல் கழகம் தொடங்கப்பட்டபோது, அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாள ராகப் பொறுப்பேற்றார். நாவலர் பிரசாரக் குழுச் செயலாளராகவும், நான் அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றினோம்.

பிறகு 1955 முதல் 1960 வரை நாவலர் கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப் பேற்றார். நான் அப்போது துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றினேன்.

மீண்டும் 1960-இல் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராகவும், கலைஞர் அவர்கள் பொருளாளராகவும், நாவலர் கொள்கை பரப்புஞ் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அப்போது அமைப்புச் செயலாள ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் சென்ற ஆண்டு நடைபெற்ற கழகப் பொதுத் தேர்தல் வரை கலைஞர் நாவலர் உள்ளிட்ட மற்றத் தலைவர்களுடன் இயக்கப் பணி புரியும் நல் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

இவைகளை எடுத்துக் கூறுவதற்குக் கார ணம், இயக்கப் பொறுப்பேற்றிருந்த காலங் களில் நாவலர் கழகத்தின் சட்டதிட்டங் களையே முக்கியமாகக் கருதுவார்! சிக்கனத் துக்கு மிகவும் பெயர் போனவர்!

ஒரு முறை தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்கள் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய ஏற்பாடாகியிருந்தது. அவர் சுற்றுப்பயணம் செய்துவரக் கார் கிடைக்கவில்லை. அண்ணா அவர்கள் கழக முன்னணி வீரர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கும்போது இதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பொதுச்செயலாளர் அவர்கள் மனம் வைத்து ஒரு கார் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று வேடிக்கையாகக் கேட்டார்கள். அதற்கு நாவலர் அவர்கள் அண்ணா அவர்களைப் பார்த்து "நீங்கள் கார் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமானால் நாங்கள் தலைமைக் கழகத்தின் சார்பில் அனுமதி அளிக்கிறோம்—பணம் கொடுப்பது பற்றி எங்களுக்குத் தெரியாது" என்றார்.

உடனே அண்ணா அவர்கள் நாவலரையும் என்னையும் பார்த்து, "நன்றாக வந்து சேர்ந்தீர்கள் ஐயா, இருவரும்! பொதுச் செயலாளர் ஒரு கஞ்சன்! துணைப் பொதுச் செயலாளர் ஒரு பஞ்சன்" என்று குறிப்பிட்டதும், கூடியிருந்த அனைவரும் 'கொல்' எனச் சிரித்தனர்.

அவ்வளவு சிக்கனமானவர் நாவலர் அவர்கள்!

கழகத் தோழர்களைப் பற்றிப் "பஞ்சைகள்-பராரிகள்" என்று மாற்றார் ஏசும்போது, நாவலர் கூறுவார் "ஆமாம் நாங்கள் அன்னக் காவடிகள் தாம் – நீங்கள் எல்லாம் சொர்ணக் காவடிகளாக இருங்களேன்" என்பார்.

நம்முடைய கொள்கை மிகச் சிறந்தது என்பதற்கு நாவலர் "நாங்கள் சாமானியமானவர்கள்; எங்கள் கொள்கை வலிமைமிக்கது. செட்டியார் மிடுக்கா, சரக்கு மிடுக்கா என்றால் எங்களிடம் சரக்கு மிடுக்கு! மற்றவர்களிடம் செட்டியார் மிடுக்கு – சரக்கு சொத்தை" என்பார்.

இதைப் போல எளிமையான வாதங்களைக் கூறி மாற்றார் பிரசாரத்தைத் தவிடுபொடியாக்கியவர் நாவலர் அவர்கள்.

ஒரு முறை காங்கிரஸ் அரசாங்கம் அதிக வரி போட்டுவிட்டது என்பதற்காக, நாவலர் தலைமையில் முன்னாள் இந்திய நிதி அமைச்சர் டி. டி. கே. அவர்கள் வீட்டுக்கு விண்ணப்பம் கொடுக்க ஓர் ஊர்வலம் சென்றது. அப்போது டி. டி. கே. "நீங்கள் காங்கிரசுக்கா ஓட்டு போட்டீர்கள் எங்களிடம் ஏன் விண்ணப்பம் தருகிறீர்கள்" என்று நாவலரிடம் கேட்டாராம்!

அதற்கு நாவலர் அவர்கள், "நீங்கள் போடுகின்ற வரி, காங்கிரசுக்கு மட்டும் போட்டால், உங்களிடம் நாங்கள் வந்திருக்க மாட்டோம். ஆனால், எங்களுக்கும் வரி போட்டிருக்கிறீர்கள்; ஆகவே தான் வந்தோம்" என்றாராம்!

அடக்கு முறைக்கு அஞ்சாதவர் நாவலர்!

ஒரு முறை தேனியில் அவரது தலையில் பாறுங்கல்லைப் போட்டு, கொன்றுவிட மாற்றார் முனைந்தபோது, தற்செயலாக நாவலர் உயிர் தப்பினார்!

நாவலர் தூய தமிழ்ப் பேச்சாளர்!

சிறந்த எழுத்தாளர்!

நாடக நடிகர்!

'கல் சுமந்த கசடர்' என்ற அறிஞர் அண்ணாவின் நாடகத்தில் சேரன் செங்குட்டுவனாக நடித்து அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்!

சிறந்த பத்திரிகாசிரியர்! கழகத்தின் முன்னணி வீரர்!

எளிமையான வாழ்வைத் தொடங்கி ஏற்றம் பெற்றிருக்கும் நாவலர் அவர்கள் இன்று கழகத்தின் பொதுச் செயலாளராக இருக்கிறார்!

கழகத்தின் தலைவராக இருக்கும் கலைஞர் அவர்கள் எப்போதும் நாவலரிடத்தில் தனி மதிப்பு வைத்திருப்பவர். "என் இளைய அண்ணன் நாவலர்" என்று கலைஞர் கூறுவார். "என்னுடைய நண்பர் கலைஞர்" என்று நாவலர் அழைப்பார்!

காந்தியடிகளுக்குப் பிறகு நேரு பணியாற்றியதைப் போல், அறிஞர் அண்ணாவுக்குக் கலைஞர் கருணாநிதி கிடைத்தார் என்று நாவலர் அடிக்கடி கூறுவார்.

"நாவலர் நம் கழகக் காவலர்" என்று அண்ணா அவர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர் நாவலர்!

அறிஞர் அண்ணா – கலைஞர் கருணாநிதி ஆகியோரின் அன்புக்கு உரியவரான நாவலர் இன்று 51-ஆவது வயதில் அடி எடுத்து வைக்கிறார்.

எளிமைக்கும், சிக்கனத்திற்கும், ஏற்றத்திற்கும், ஆற்றலுக்கும் சிறந்து விளங்கும் நாவலர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன்.

கழகம் என்ற குடும்பத்தின் முக்கிய தலைவராக விளங்கும் நாவலர் அவர்கள், நாட்டின் கல்வி, பொது நல அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நாவலர் அவர்கள், மேலும் சிறந்த பணிகள் புரிந்து பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்!!

பொன் விழாத் திருமகன்

புலவர் நாகசண்முகம்

பகல் மறைந்தால் இரவு வரும் இயற்கை
பகற் பொழுதே இரவு வந்ததிந்த நாட்டில்
களர் நிலத்தில் பயன் தோன்ருது இயற்கை
காவிரியின் கரை யதனில் தரிசு என்ருல் விந்தையன்ரே ?
தேன் பொதிகை மலைமீது
தேன்றல் எனும் பொன் அரங்கில்
அன்னைத் தமிழரசி ஆட்சி செய்தாள்
அவள் மக்கள் மூவேந்தர் ஏவல் செய்தார்
முத்தமிழாம் முரசொலிக்க—மூவேந்தர் படை ஒலிக்க,
கயற் கண்ணுர் சிலம்பொலிக்க,
காதல் இசை உடன் ஒலிக்க,
கத்து கடல் புகழ் ஒலிக்க,
கவின் மன்றம் எதிரொலிக்க
எத்திசையும் புகழ் பெற்ற இந்த நாட்டில்
பெருமை யெலாம் சிறுமை யாகி
அடிமையது உரிமை, மடமையது இனிமை
அடுத்தவர்தம் மொழியே புதுமை
என்ற நிலை, இழிந்த நிலை ஏற்பட்டபோது
ஈரோட்டார், போராட்டச் சிங்கம்
புதுமைக்கு வித்திட்ட புரட்சித் தந்தை
மடமை என்னும் களை அதனை அகற்றி நின்ருர்
மக்க ளெல்லாம் புதுமை மிகு பயிராணுர்கள்
உதயத்துச் சூரியனுய், உத்தமனுய்
உருவத்தில் அகத் தியனுய்
உற்ற பெரும் அறிவில் இமயமாய்
பெரியாரின் பெரும் படைக்குத் தளபதியாய்
பேரறிஞர் அண்ணு வந்தார்
அண்ணுவின் பெரும் படையில்
அருமைத் தம்பி ! அம்மட்டோ தலைமைத் தம்பி !

வெற்றிமிகு தோளாளன் வீரமிகு தோற்றத்தான்
புருவத்தை உயர்த்தி, புதுமைதனைப் புகுத்தி
இடை இடையே புன் சிரிப்பைத் தூது விட்டு
கடல் போல் முழக்க மிட்டு,
கருத்து மழை பொழியும் போது
பகை உடையார் உள்ளத்துக் கோதிப் பகலும்
பாசமுள்ளார் உளம் எல்லாம் மிகக் குளிரும்
முன்னாள் பாண்டியர் திருநாட்டில்
முத்தாய்ப் பிறந்த நெடுஞ்செழியன்
பின்னாள் இந்நாள் பொன்னாளில்
பெருமைசேர் சோழன் திருநாட்டில்
பிறந்து விட்டான் என்று சொல்லும் வண்ணம்
பிறந்து வந்த பெருமன்னன் இவனே ஆவான்
மக்களெல்லாம் மன்னராம் இந்த நாட்டில்
மன்னருக்கு மன்னனும் நெடுஞ்செழியன்
பொன் விழாத் திருமகனாய் விளங்குகின்றான்
புதுப் புனலாய்க் காவிரியாக் காணுகின்றான்
பக்குவமாய் நாடாளும் நல் அமைச்சன்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க நன்றே!

அறிஞர் அண்ணா

பொதுச்செயலாளர்
நாவலர் நெடுஞ்செழியன்

பேரறிஞர் அண்ணா அவர்கள் அழுது கொண்டே குழந்தையாகப் பிறந்தபோது, அவர் வீட்டிலுள்ளவர்களெல்லாரும் சிரித்துக் கொண்டே வாரி யணைத்து வரவேற்றனர்; அவர் சிரித்துக் கொண்டே மறையும் போது, நாட்டிலுள்ளவர்களெல்லாம் தேம்பித் தேம்பி அழுது கொண்டே வாரிக் கொடுத்து விடை பெற்றனர்.

பொதுவாக இந்தியாவின், குறிப்பாகத் தமிழகத்தின் கோடானுகோடி மக்களின் உள்ளங்களைத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் வலிமையினாலும், பண்பாட்டுச் செறிவினாலும், செயல் நுட்பத்தினாலும் கொள்ளை கொண்டு, எல்லாருடைய இதயங்களிலும் நீங்காத, நிறைந்த ஓர் இடத்தைப் பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

வசதி, வாய்ப்பு, அதிகாரம், ஆதிக்கம், பட்டம், பதவி, தோட்டம், துரவு, காடு, மேடு, மாட மாளிகை, கூடகோபுரம், கோட்டை கொத்தளம், பணம் பகட்டு போன்றவற்றை எவரும் எங்கும் எளிதிலோ, அன்று சிறு பெரு முயற்சியிலோ பெற்றுவிட முடிகிறது.

அவற்றை நேர்வழியிலும் பெறுகிறார்கள்; குறுக்கு வழியிலும் பெறுகிறார்கள்; கோணல் வழியிலும் பெறுகிறார்கள். ஆனால், ஒருவர் அவ்வளவு எளிதில் பெற முடியாத விலை மதிக்க முடியாத பொருள் பிறருடைய இதயமேயாகும்.

வசதி படைத்த பெரும் பணக்காரர் ஒருவர் எட்டு அடுக்கு மாளிகையில், உயரத்திலே உள்ள நிலா முற்றத்தில், பஞ்சணை பொருத்திய மலர்ப் படுக்கையில், பக்கத்தில் இருவர் வெண்சாமரம் வீச, மூவர் கால் பிடிக்க, நால்வர் கை பிடிக்கப் படுத்திருந்தாலும் அவரைச் சுற்றிலும் நின்று பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் என்ன எண்ணிக் கொண்டு பணியாற்றுவார்கள்? 'இவன் எப்போது ஒழிவானோ, நாம் எப்போது மன அமைதி பெறுவோமோ!' என்று எண்ணிக்கொண்டுதான் அடிமை வேலை செய்வார்கள்.

எவ்வளவு மிக்க வசதியுடையவராகவும், எவ்வளவு பெரிய பணக்காரராகவும் இருந்தாலும், பக்கத்திலிருந்து ஓயாது ஒழியாது பணியாற்றுபவர்கள் இதயத்திலே கூடக் கடுகளவும் இடம் பெற முடியாமல் வாழ்க்கையைக் கடத்திக் கொண்டு போகிறவர்கள் எத்தனை எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்!

தம் கீழே வேலை செய்பவர்களின் இதயத்தில் இடம் பெற முடியாத அதிகாரிகள், பக்கத்து வீட்டார் இதயத்தில் இடம் பெற முடியாத குடும்பத்தினர், தந்தை இதயத்தில் இடம் பெற முடியாத தனயன், தனயன் இதயத்தில் இடம் கிடைக்காத தந்தை என்றவாறு, பிறர் இதயத்தில் இடம் பெறாமலும், பெற முடியாமலும் தவிப்பவர்கள் உலகில் கோடானுகோடி மக்கள் இருக்கிறார்கள்.

உடைமையை, ஆளை, வேலையை, அதிகாரத்தை, பட்டத்தை, பதவியை, வாக்குச் சீட்டைக் கூட விலை கொடுத்து வாங்கிவிட முடிகிறது பலரால்; ஆனால் பிறருடைய இதயத்தை எவராலும் விலை கொடுத்து வாங்கிவிட முடிவதில்லை. ஓர் இலட்ச ரூபாயை நீட்டி, "உன் இதய அன்பை என்னிடம் என்றென்றும் வை" என்று ஒருவர் கேட்டாலும், தொகையைப் பெற்றுக் கொண்டவன், தொகை கொடுத்தவரை வாயார வாழ்த்தினாலும், 'ஓர் இலட்சம் ரூபாய்தானே தந்துள்ளான்; கஞ்சப் பயல். இவன் கொள்ளையடித்து வைத்துள்ள கோடிக் கணக்கான ரூபாய்களிலே இன்னும் நான்கைந்து இலட்சம் தரக் கூடாதா?' என்று இதயத்தால் எண்ணவே செய்வான்.

*

என்றாலும் எளிதில் பெற்றுவிட முடியாத இதயங்களை, பேரறிஞர் அண்ணா அவர்கள் எளிதாகவும் பெற்றார்கள்; ஏராளமாகக் கோடிக் கணக்கிலும் பெற்றார்கள். அதனால் தான் அவர் 'செயற்கரிய செய்த பெரியார்' என்று எல்லாராலும் பாராட்டப் பெறுகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையும், புகழையும், அருமையையும், பெருமையையும், பண்பையும், போக்கையும் அறியாதவர்களும் தெரியாதவர்களும் நாட்டில் எங்கணும் இல்லை. அவரை நினைத்து நினைத்து நெக்குருகாத உள்ளம் இல்லை; அவருடைய புகழையும், பெருமையையும் பற்றிப் பேசாத நா இல்லை. நாட்டின் நல்லவர்களெல்லாம் தொழுதேத்தும் ஒளியாக அவர் திகழ்கிறார்.

கோடானுகோடி மக்கள் இதயத்தில் இடம் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பு இதயத்தில் இடம் பெற்றிருந்த தம்பிமார்களில் தக்க ஓர் இடத்தை நான் பெற்றிருந்தேன் என்பதை எண்ணுந்தோறும், பூரிப்போடும், பெருமித உணர்வோடும் பேரின்பம் பெறுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாரிடத்திலும் அன்பு காட்டுவார்; பற்று வைத்திருப்பார்; மதிப்புச் செலுத்துவார்; ஆனால், ஒரு சிலரோடு மட்டுந்தான் பழகுவார். 'நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும்

பண்புடையாளர் தொடர்பு' என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் இலக்கணத்தில் காணும் பண்புடையாளர் தொடர்பினால் ஏற்படும் நயத்தை, பேரறிஞர் அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகினவர்கள்தாம் நன்கு அறிவார்கள்.

தம்மோடு நெருங்கிப் பழகும் தம்பிமார்களுக்கு ஊக்கம் தந்து, ஆக்கம் பயந்து, அவர்களையெல்லாம் உரிய துறைகளில் ஆளாக்கிவிடும் பாங்கு அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் அமைந்திருந்தது.

1937-ஆம் ஆண்டில் நான் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டைக் கழக உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதுதான், அவருடைய சொல்வன்மையைப் பிறர் சொல்லக் கேட்டுப் பூரித்துப் போனேன்.

1938-இல்தான் முதன் முதல் அவர் எழுத்தாற்றலை 'விடுதலை' தலையங்கங்களின் மூலம் கண்டு வியப்படைந்தேன்.

1938-இல் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியபோதுதான் அவரை முதன் முதலாகக் கண்ணாரக் கண்டேன்; அவரது இனிய பேச்சைக் காதாரக் கேட்டேன்.

1943-ஆம் ஆண்டில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் பட்டுக்கோட்டையில் பேசிய கூட்டத்தில், அவர் பேசுவதற்கு முன்னால் மாணவன் என்ற முறையில் பேசினேன்.

1943-இல் அறிஞர் அண்ணா அவர்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வரவழைத்து அவரை ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசவைக்க முயன்றவர்களில் நானும் முக்கியமான ஒருவனாக இருந்தேன். அப்பொழுதுதான் பல்கலைக் கழக விருந்தினர் விடுதியில் அவரை மூன்று நாட்கள் தங்கவைத்து அவரோடு உரையாடி மகிழும் வாய்ப்பும், தெளிவு பெறும் வாய்ப்பும் எனக்கும், தோழர் அன்பழகன், செழியன் போன்றவர்களுக்கும் ஏற்பட்டன.

1944-ஆம் ஆண்டு மேத் திங்களில் ஈரோட்டில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்களின் அழைப்பை ஏற்றுச் சென்றேன். அந்த மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள். நான் கொடியேற்றும் பணியினை ஆற்றினேன்.

1944-ஆம் ஆண்டிலிருந்து 1955-ஆம் ஆண்டுவரையில் நானும், என் இளவல் செழியனும் தங்கியிருந்த செம்புதாசுத் தெரு, கார்னர் எஸ்டேட் சி-30ஆ-ம் எண் அறையிலும் அடுத்தடுத்து மாறிய வீடுகளிலும் சென்னைக்கு வரும்போதெல்லாம் வந்து எங்களுடன் நாட்கணக்கில் தங்கியிருந்து, பல்வேறு பொருள்கள் பற்றி உரையாடுவார்.

அவரது உரையாடல்கள் எங்களுக்கு மிகுந்த தெளிவையும், இனிமையையும் ஊட்டும். அவரது உரையாடல்களில் அறிவின் செறிவும், பொருள் தெளிவும், நகைச்சுவையும், கேலி, கிண்டல் குறிப்புக்களும் நிறைந்து காணப்படும்.

1949-இல் தி. மு. கழகம் கண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளர் ஆனவுடன், என்னைக் கொள்கை பரப்புக்கான துணைச் செயலாளராக ஆக்கினார்கள். 1955-இல் கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புக் கட்டளையிட்டார்கள். 1961-இல் கழகத்தின் அவைத் தலைவர் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு பணித்தார்கள்.

1962-இல் சட்ட மன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது என்னை எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பினைத் தாங்கும்படியாகக் கூறினார்கள். 1967-இல் அவரது அன்புக் கட்டளையை ஏற்று அவரது அமைச்சரவையில் இடம் பெற்றேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பெற வேண்டும்; முன்பு போல் நாட்டிற்குப் பணியாற்ற வேண்டும் என்ற பேரவாவோடு மருத்துவமனையில் நானும், ஏனைய நண்பர்களும் இரவு பகலாக ஏக்கத்தோடு நல்ல நிலையை எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் தம் கடமையைச் செய்து விட்ட களிப்புத் தேங்கிய முகத்தோடு, மீளா விடை பெற்று, சென்னைக் கடற்கரையில் மீளாத் துயில் கொள்ளத் தொடங்கிவிட்டார்!

எந்தப் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னைப் போன்றவர்களையெல்லாம் ஆளாக்கி விட்டார்களோ, அந்த அறிஞர் அண்ணா வகித்து வந்த முதலமைச்சர் பொறுப்பிலிருந்து கொண்டு, அவரது இறுதிப் பயணத்தை நடத்தி, பிப்பிரவரி 3-ஆம் நாளிலிருந்து, பிப்பிரவரி 9-ஆம் நாள் வரையில் துக்க நாள் கொண்டாட வேண்டிய நிலைக்கு ஆளானேனே என்பதை எண்ணி எண்ணி என் உள்ளம் ஆற்றொணாத்துக்கத்திலும், துயரத்திலும் ஆழ்ந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களோடு சென்ற இருபத்தைந்து வருட காலம் நெருங்கிப் பழகி, அவரது அன்பையும், ஆதரவையும், அரவணைப்பையும் பெற்ற நான், அவரது அன்பு இதயத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தேன் என்பதுதான், என் வாழ்நாள் முழுவதும் எனக்குப் பூரிப்பையும், பெருமையையும், பெருமிதத்தையும் தருவதாகும்.

என்னைக் கழகப் பொதுச் செயலாளராக 1955-இல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆக்கிய பொழுது, 'திராவிட நாடு' இதழில் அவர் என்னைப் பற்றி எழுதிய எழுத்துக்களிலிருந்து, அவரது அன்பு இதயத்தில் என்னை எப்படிப்பட்ட இடத்தில் வைத்திருந்தார் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

எல்லாருடைய இதயத்திலும் இடம் பெற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்களின் அன்பு இதயத்தில் நானும் தக்க ஓர் இடத்தைப் பெற்றிருந்தேன் என்பதே அவர் அறிவுறுத்திய கடமை – கண்ணியம் – கட்டுப்பாட்டின் வழி, என்னை அழைத்துச் செல்ல அடிப்படையாக அமைகிறது. வாழ்க அறிஞர் அண்ணாவின் புகழ்!

நாவலர் நமது காவலர்

நமது நாவலருக்கு வயது 51 என்று எனது அருமை நண்பர் தையற்கலை சுந்தரம் எனக்கு நினைவூட்டுகிறார். என்னால் ஆச்சரியத்தை வெளியே காட்டாமல் இருக்க முடியவில்லை.

நாவலரின் வாழ்க்கைப் பாதையில் ஐம்பது ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டனவா .... நம்பவே முடியவில்லை, என்னால்!

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னால் நான் சந்தித்த தோழர் நெடுஞ்செழியனுக்கும், இன்று உள்ள நாவலர் நெடுஞ்செழியனுக்கும் வித்தியாசம் தெரியவில்லை, எனக்கு! நான் சந்தித்தபோது தாடியோடு காட்சி தந்தார்! இன்று தாடி இல்லை. அன்று கருகருவென்ற முடி. இன்று சற்று நரையோடிய முடி. நரையும் அனுபவத்தால் ஏற்பட்டதாக இருக்கலாம் அல்லவா? உடலமைப்பில் அன்றுபோலத்தான் இன்றும் இருக்கிறார். அவர் ஐம்பதாண்டுகளை விழுங்கிவிட்டார் என்பதை என்னால் நம்பக்கூட முடியவில்லை!

முல்லை சக்தி

நான் முதன் முதலாக அவரைச் சந்தித்தகாட்சி இன்னும் என் கண் முன்னால் தெரிகிறது நானும், அவரும் சேர்ந்து சுற்றுப்பயணம் செய்த நிகழ்ச்சிகள் இன்னும் என் மனத்தில் பசுமையாக இருக்கின்றன. அவர் எனது கிராமமாகிய முல்லையில் நாட்கணக்கில் - ஏன் - வாரக்கணக்கில் தங்கியதும் அவர் ஊர் திரும்பியதும் எழுதிய நன்றிக் கடிதங்களின் வாசகங்களும் இன்னும என் மனத்திரையிலிருந்து அழியவில்லை. முல்லைக்கு வந்ததும், எனது இல்லத்து வேலையாட்களை அவர் பெயரிட்டு விளிப்பதும் என் காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. முல்லைக்கு வரும்போதெல்லாம் அருகிலுள்ள ஜவ்வாது மலைக்குச் சென்று, அங்கு சலசலவென்று சிந்து பாடி ஓடும் அருவிக்கரையில் அமர்ந்து, கம்ப ராமாயணத்துப் பாடல்களையும், சிலப்பதிகாரக் காதையையும் அவர் பாடியது இன்னமும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது! நாமெல்லாம் திராவிடக் கழகத்தில் இருந்த காலத்தில், பெரியாரின் 'கொடுமையை' தாங்க இயலாமல், என் சகோதரர் முல்லை வடிவேலுவிடம் வந்து 'உன் மாமனரிடம் ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக்கொடு. நான் விருது நகர் கல்லூரியில் தமிழ் வாத்தியாராகப் போய் விடுகிறேன்' என்று அவர் கூறியதும், நாங்கள் அவரை அரசியலை விட்டுப் போகக்கூடாதென்று வாதாடி வென்றதும் இன்னும் என் மனத்திரையில் காட்சியாக ஓடிக்கொண்டிருக்கிறது. அவருக்குப் பெண் பார்க்க (திருமதி விசாலாட்சி அம்மையாரை) நானும் அவரும் சேர்ந்து செய்த பயணமும், அம்மையாரை அவர் சந்தித்த காட்சியும் இன்னும் என் கண்முன்னலிருந்து மறையவில்லை. இப்படிப் பலப்பல நிகழ்ச்சிகள் என் நினைவுகளிலிருந்து மறையவில்லை; அழியவில்லை. அப்படியிருக்க அவருக்கு எப்படி ஐம்பதாண்டுகள் முடிந்திருக்கும்?

ஆனால், நண்பர் சுந்தரம் அறுதியிட்டுக் கூறுகிறார் 50 ஆண்டுகள் நிறைவு பெற்று 51ஆம் ஆண்டில் நாவலர் காலெடுத்து வைக்கிறாரென்று!

நம்பித்தான் ஆகவேண்டும்!!

50 ஆண்டுகள்!

இந்த 50 ஆண்டுகளில் அவர் சாதித்தது என்ன? அவர் இன்று இந்நாட்டின் அமைச்சர்களில் ஒருவர்!

தி. மு. கவின் பொதுச் செயலாளர்!

இந்த இரண்டு பெரும் பொறுப்புகளை இன்று அவர் வகிக்கிறார். இந்த இரண்டு பொறுப்புகளும் இந்நாட்டின் தலைவிதியை

மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பதவி களாகும்!

இப்பதவிகள் அவருக்குக் கிடைத்தது, அவரது உழைப்பின் பிரதிபலிப்பாகும். உழைப்புக்குக் கிடைத்த வெற்றிகளாகும்!

இந்தப் பதவிகள் பெறுவதற்கு அவர் நடந்து வந்த பாதை – கடந்து வந்த இடையூறுகள் எத்தனை, எத்தனை? சிந்திய இரத்தம் எவ்வளவு? அடைந்த வேதனைகள் எத்தனை?

இன்றைய தினம் அவர் பேசுவதைக் கேட்க நாடே காத்துக் கொண்டிருக்கிறது. சட்டமன்றத்தில் அவர் பேசத் துவங்கினால், 'அவர் என்ன பேசுகிறார்? என்ன கூறுகிறார்' என்று மற்றவர்கள் தங்கள் காதுகளை அவர் பக்கம் திருப்புகின்றனர்.

ஆனால் ஆரம்ப நாள்களில் - கல்லூரி மேடைகளில் பேச ஆரம்பித்த நாள்களில் அவர் பெற்ற கேலியும், கிண்டலும் ஏராளம்! ஏராளம்!

மாணவன் நெடுஞ்செழியன் மேடை ஏறிப் பேச வேண்டுமென்று விரும்பினார். அப்போது அவர் தாடி வளர்த்துக் கொண்டிருந்தார்.

கல்லூரித் தமிழ் பேரவைக் கூட்டத்தில் பேச மேடையும் ஏறிவிட்டார்! பேசவும் ஆரம்பித்தார்! 'தாடி ஆடாதே, தாடி ஆடாதே என்ற குரல் எழுந்தது கூட்டத்தினரிடையே! அதற்குக் காரணம் அவர் உடலை வளைத்து, தோளை உயர்த்தி பேசியதுதான்! அதுவோ அவருக்கு கன்னிக் கூட்டம். மாணவர்களின் கலாட்டா கட்டுக்கடங்காமலிருந்தது. என்ன செய்வார்? பேசாமல் மேடையிலிருந்து இறங்கிவிட்டார்!

இந்தத் தோல்வி அவரைத் துவளச் செய்யவில்லை. டெமஸ்தெனிஸ் போல நாள்தோறும் பயிற்சி செய்தார்!

எந்த மாணவர்கள் அவரை மேடையை விட்டு இறக்கினார்களோ, அதே மாணவர்கள் அடைமழை போல் அவர் பேசுவதைக் கண்டு மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்! தமிழகப் பேரவையின் செயலாளராகவும் ஆக்கினர்! அது மாத்திரமன்று; கல்லூரிப் பேச்சுப்போட்டிகளில் பல பரிசுகளை தட்டிச் சென்றார்! இதனை நான் கூறுவதற்கே காரணம் நாவலரின் உழைப்பும்-விடாமுயற்சியும் எத்தன்மையது- எத்தகையது என்பதனை விளக்கிடத்தான்!

கல்லூரியில் படிக்கும் காலம் தொட்டே அவர் பெரியாரின் பல்கலைக் கழகத்திலும், அறிஞர் அண்ணாவின் அறிவுக் கூடத்திலும் நிரந்தர மாணவனாக இருந்தார்!

பெரியாரிடம் அவர் இருந்த நாள்களில் அவர் பெற்ற அனுபவம்தான் இன்றும் அவரைப் பொறுமைக் கடலாக இருக்கச் செய்கிறதென்பதில் ஐயமில்லை!

பெரியாருடன் அவர் சுற்றுப் பயணம் செய்த நாள்களில் அவர் பெரியாரின் சீடராக மட்டுமன்று, பணியாளனாகவும் தான் உடன் சென்றார்! பெரியாருக்குத் தேவையான பணிவிடை செய்வதிலிருந்து பெரியாருக்கு முன் மேடையில் பேசுவது வரை அவர்தம் நித்திய பணிகளாகும்! அவ்வளவு வேலைகளையும்- தொல்லைகளையும் அவர் பொறுமையுடன் ஏற்றதற்கு அவர் தமது இதயத்தில் ஏற்றுக் கொண்டிருந்த கொள்கையும்-இலட்சியமுமே காரணமாகும்!

ஒரு முறை நெடுஞ்செழியனும், பெரியாரும் பயணம் செய்து கொண்டிருந்த புகைவண்டி ஓர் நிலையத்தில் நின்றது. பெரியார், நெடுஞ்செழியனிடம் எட்டு அணாவைக் கொடுத்து இரண்டு சாத்துக்குடி வாங்கிவரச் சொன்னார்.

அவரும் விலை பேசினார். பழக்காரன் கூறினான், 'இரண்டு பழம் ஆறணா—மூன்று பழம் எடுத்துக் கொள்ளுங்கள் எட்டணாவுக்குத் தருகிறேன்' என்று! நெடுஞ்செழியன் யோசித்தார். எட்டணாவுக்கு மூன்று பழம் கிடைக்கிறது. இரண்டு பழம் வாங்கினால் நட்டம். ஆகவே, மூன்று பழம் வாங்கிக் கொள்ளலாம் பெரியாரும் மகிழ்வார் என்று எண்ணிக் கொண்டு பழத்தை வாங்கிப் பெரியாரிடம் கொடுத்து, விவரத்தையும் கூறினார். வந்து விட்டது கோபம் பெரியாருக்கு! 'எனக்கு வேண்டியது இரண்டு பழங்கள்தாம். அதன் விலை ஆறணாதான்; நீங்கள் மூன்று பழம் வாங்கி எனக்கு இரண்டணா நட்டம் உண்டாக்கி விட்டீர்களென்று! அயர்ந்து போனார் நாவலர்!

இத்தகைய அனுபவங்களை நாள்தோறும் அவர் பெற்றுவந்த போதிலும், அவர் பெரியாரை விட்டுப் பிரியாததற்குக் காரணம், அவரிடம் நெடுஞ்செழியன் கொண்டிருந்த பக்தியேதான்! பெரியாரின் சலியாத உழைப்பும்-காலந்தவறின்மையும் - கட்டுப்பாடும்தாம் அவரை ஆட்கொண்டவைகள். 'பெரியாரிடத்தில் பெற்ற பாடங்கள்-அனுபவங்கள்தாம் என்னை மிகவும் பொறுமைசாலியாக்கியவை' என்று நாவலர் கூறுவார்.

இப்படிப் பெரியாரிடம் பக்திக் கொண்டிருந்த நாவலர் 1947 ஆம் ஆண்டு நாடு விடுதலைப் பெற்ற நேரத்தில்-பெரியார் இந்நாள் ஓர் துக்கநாள் என்று அறிக்கைவிட்ட நேரத்தில், அவரிடமிருந்து பிரிந்து அண்ணாவின் அணியில் முன்னணியில் நின்றார். அன்றிலிருந்து இன்று வரை அவர் அண்ணாவின் அடிச்சுவட்டைத் தவறாது பின்பற்றி வருகிறார்.

1955 ஆம் ஆண்டு அவர் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் "தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லாரும் அடங்கி நடப்போம்! தலைமை ஏற்க வா!" என்று குறிப்பிட்டார்கள்! இந்தப் பெருமை கழகத்தில் நாவலரைத் தவிர வேறு யாருக்கும் கிட்டவில்லை! தற்போது நாவலர் அவர்கள் இரண்டாம் முறையாகப் பொது செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந் நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால் 1955 ஆம் ஆண்டு குறிப்பிட்ட அதே வாசகங்களைத்தான் குறிப்பிட்டிருப்பார்கள், என்பதில் எனக்கு ஐயமில்லை!

அறிஞர் அண்ணா அவர்கள் ஓர்முறை குறிப்பிட்டார்கள் "நாவலர் — நாட்டின் காவலர்" என்று!

அந்த வார்த்தைகளுக்கு வடிவமாக நாவலர் இன்று பவனி வருகிறார். நாட்டு மக்களின் இதயத்தில் அவருக்கு ஓர் நிரந்தரமான இடம் உண்டு. அந்த இடத்தை யாரும் அபகரித்துக்கொள்ள முடியாது!

நாவலர் கண்டிப்பானவர். அந்தக் குணம் சிலருக்குக் கசப்பாக இருக்கலாம். நாவலர் கட்டுப்பாடு மிக்கவர். இது பலருக்கு வேம்பாக இருக்கலாம். நாவலர் கடமை உணர்வு மிக்கவர்; இது பலரின் உள்ளங்களை உலுக்கலாம். என்றாலும், அவைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அவர் அறிஞர் அண்ணாவின் கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தைத் தமது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறார்.

ஏற்படுகின்ற எதிர்ப்புகளும் — பேசப்படுகின்ற இழிமொழிகளும், அவரைத் தமது குறிக்கோளிலிருந்து தளரச் செய்யவில்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' — என்பதே அவரின் இலட்சியமாகும்!

அந்த இலட்சியபுரிப் பயணத்தில் நாவலர் ஐம்பதாவது மைல்கல்லைக் கடந்துவிட்டார்! அந்தப் பாதை ரோசா மலர்கள் தூவியது அன்று! கற்களும், முட்களும் நிரம்பியவை! கண்ணீரும், செந்நீரும் சிந்தித்தான் நாவலர் அந்த பாதையைக் கடந்து வந்து இருக்கிறார். இனி நடக்கப்போகும் பாதை......! முல்லை மலர்கள் தூவப்படாவிட்டாலும், சிவப்புப் பட்டாடை விரிக்கப்பட்டதாகும்! அந்தப் பாதையிலும் அவர் வெற்றி பெறுவார் என்பதில் ஐயமில்லை! அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் அவர் எப்படிப் பணியாற்றி வந்தாரோ, அதே போல் கலைஞரின் அமைச்சரவையிலும் பணியாற்றி வருகிறார்!

கலைஞருக்கும், நாவலருக்கும் கருத்து வேறுபாடு எழலாம்! ஒரு சனநாயக அமைப்பில் கருத்து வேறுபாடு எழுவது தவறன்று. அது தவிர்க்க முடியாததும்கூட! ஆனால், அவர்களுக்கிடையே கொள்கை வேறுபாடோ— மன வேறுபாடோ என்றும் எழாது!

அவர்களுக்கிடையே மனவேறுபாடு எழ யாராவது குள்ளநரித்தனம் செய்வார்களே யானால் அவர்கள் நிச்சயம் தோல்வியைத் தழுவுவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை! அவர்களுக்கிடையே பேதம் கற்பிக்க விரும்புகிறவர்கள், அவர்கள் இருவரையுமே சரிவரப் புரிந்து கொள்வில்லை என்றுதான் நான் திட்டவட்டமாகக் கூறுவேன்!

கலைஞரும்-நாவலரும் மக்களின் இரண்டு கண்கள்! தமிழகம் அவர்களிடம் முழு நம்பிக்கையை வைத்திருக்கிறது. தமிழக மக்கள் தங்களது எதிர்காலத்தை அவர்கள் கரங்களில் ஒப்படைத்திருக்கிறது! அந்த நம்பிக்கை ஒளியில்தான் மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்! அந்த ஒளி என்றும் அணையாமலிருக்கட்டும்! அந்த ஒளி - தமிழகத்துக்கு – தமிழக மக்களுக்கு நல்ல பாதையைக் காட்டட்டும்! அந்த ஒளி மக்களின் வாழ்வைப் பொன் மயமாக்கட்டும்! அதுதான் எனக்கும் - என்னைப் போன்ற ஆயிரம், ஆயிரம் கழகத் தோழர்களுக்கும் ஆசையாகும்!

அந்த ஆசை நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதுதான், நாவலரின் 51 ஆம் பிறந்த நாளின்போது, எனது வேண்டுகோளாகும்!

அவர் இன்றுபோல் என்றும் வாழட்டும்! காவிரிபோல்-கங்கையைப்போல் வாழட்டும்!!

அண்ணல் அமைச்சர் எம் நாவலர்

புலவர் அறிவுடை நம்பி, M.L.C

தெளிவின் விளக்கம்! அறம் உண்டு அவர் பால். செட்டுசேர் சொல்வல்லர். திறன்மிகு மறவர். வருமுன்னர்க் காப்பார். வந்தால் தளரா அறிஞர். புகழை மதிக்கும் பொதிகைத் தென்றல். மனம் இனிக்கப் பழகும் மாமேதை. பகையை நட்பாகக் கொண்டொழுகிய பேரறிவாளர்க்குப் பெரிய தம்பி! நாவலர் கோமான்; நல்லிசைப் புலவர். அவருக்குப் பொன்விழா. பல்லாண்டு கூறும் தமிழ்கூறும் நல்லுலகம்!

அண்ணல் அமைச்சர் எம் நாவலர், 'வாழ்க' என வாழ்த்துங்காலே; அவர் மேவிய நெறி, நாட்டில் செழிக்க வேண்டும் எனும் ஆசை இதயதளத்தில் எழுகின்றது.

பகையும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க நிற்பதே 'நாடு' என இலக்கியங்கள் கூறும்.

வள்ளுவர் உறுபசி – தீர்க்க முடியாத பசி; ஓவாப் பிணி – நீக்க முடியாத நோய்; செறுபகை – அழிக்க முடியாத பகை; நிறைந்திருப்பது நாடல்ல – பசி, பிணி, பகை இருக்கும்; ஆனால் அவை அழிக்கப்படக் கூடியன எனும் வகையில் இருப்பதே நாடென்பார்.

உறுபசி நாட்டைக் குலைக்கும் நாசகாலன். அதனோடு செறுகளம் அமைத்துப் போராட வேண்டியது நாடாள்வோர் கடன்.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்" என்றார்

பாரதி. இது இக்காலம்!

இடைக்காலம்; முதாட்டி ஔவையிடம் முகிழ்த்திட்ட கவிதை ஒன்று.

ஒருவேளை உணவு ஒருவனுக்கு இல்லையாம். அந்நிலையை ஔவையால் ஏற்க முடியவில்லை. இதயம் பாரமாகிவிடுகிறது. தாங்க முடியாத தவிப்பு வருகின்றது.

"என்னால் அதைக் கண்டுப் பொறுத்திருக்க ஒல்லாது." என்னும் ஔவையின் தவிப்புத் தமிழாகியுள்ளது.

அது இது:

"..................ஒருநாள்
ஒருபொழுது ஒருவன் ஊணொழியப் பார்க்கும்
நேர் நிறை நில்லாது என்னு மென்மனனே
நேர் நிறை நில்லாது என்னு மென்மனனே"

சங்க காலத்தில் ஒருநாள். சோழனுக்கு உள்ளடங்கிய தலைவன் அவன். ஈர்ந்தூர் எனும் குறுநிலத்துக்கு மன்னன். அவனை எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவர் பாடியுள்ளார்.

ஈர்ந்தூர்கிழான் தோயன் மாயன் என்பது நாடாளும் அந் நல்லவன் பெயர். தன் வேந்தனுக்காக (சோழனுக்காக) செறுகளம் சென்றவன், போரிட்டவன். படைக்கலன்கள் சுவைத்திட்ட புண்களால் விழுப்புண் பெற்ற விளங்கு மேனியன். பட்டை பெயர்க்கப்பட்ட மருந்து மரத்தின் புறம்போலும் அவன் உடலம் திகழ்கின்றது. பல போர்களாற்றித் தன் நாடு காத்த ஆற்றலே அன்னவன் திறம். தறுகண்மையோடு ஈத்துவக்கும் இசையும் அவனிடம் அடைக்கலம் புகுந்துள்ளது.

பாணர்களை வருத்தும் பசிக்குப் பகைவன். ஒரு நாள் புலவர் ஒருவர் பசியால் வாடி களைப்பால் மெலிந்து வேறொரு புலவரைக் கண்டார்.

இவரோ ஈர்ந்தூரானின் ஈகைச் சிறப்பை வாழ்வில் கண்டவர். எனவே, பசியால்வாடும்

பாவலரிடம் "பசிப்பிணி மருத்துவன் ஒருவன் உண்டு. அவன் 'பாண்பசிப்பகைஞன்; ஈர்ந்தை என்ற ஊரினன்; ஒருநாள் நாமும் உமைப்போல் பசியால் வாடி வலிவிழந்து, மெலிந்து அவன்பால் சென்றனம். எம் ஒட்டிய வயிற்றினைக் கண்டான். பெட்டகத்திலோ பொருளில்லை. சமுதாயத்தில் செல்வத்தால் ஏற்றம் பெற்றார் சிலர். இரப்பினும் கொடுக்கும் கொடை உள்ளம் இல்லாதவர். அவர் பால் உள்ள பொருள்களைச் சமுதாயம் பெற்றால் அன்றிச் சமத்துவம் நிலைக்காது. நம்போன்றார் வறுமை தீராது எனக் கண்டு; தன் ஊர் கரிய கையை உடைய கொல்லனை "கொல்லனே எனக்குத் திருந்து இலை நெடுவேல் ஒன்று வடித்துத் தா. அதனைக் கொண்டு பகுத் துண்ணாத பணம் படைத்தார் செல்வத்தைப் பறிப்பேன். இவர் பசிபோக்குவேன்" என்றான். அன்னவனிடம் நீயும் செல்க" என ஆற்றுப்படுத்துகின்றார் புலவர்.

பாடல் புறம் 180. அது இது :

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்(து)
இரும்புசுவைக் கொண்ட விழுப்புணோய்
தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்
கொடையெதிர்ந்(து)
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

சங்க காலம் தமிழ் நிலத்தின் பொற்காலம். அக்காலம் மீண்டும் உதயமாகின்றது. எழு ஞாயிற்றின் ஒளிக்கற்றையால் இருள் அரக்கன் ஒழிகின்றான். பேரறிஞர் அண்ணாவின் பெரும் படையால் இல்லாமை–அறியாமை–கல்லாமை எனும் ஆமைகள் ஒடுக்கப்பட்டு, எல்லார்க்கும் எல்லாம் எனும் புதிய தமிழ் உலகம் எழுகின்றது. அவ்வுலகம் உருவாக உழைக்கும் படைப்பாளிகள் கலைஞரும் நாவலரும்.

நாவலர் அவர்கட்கு எடுக்கப்படும் பொன் விழாவின்போது

"புதியதோர் உலகம் செய்யப்
புறப்பட்டோம்–புறநானூற்றுப்
புகழ்மறவர் தோன்றல் நாம்"

எனச் சூளுரைத்து, சுடர்முகம் தூக்குவோமாக! வாழ்க அண்ணல் அமைச்சர் நாவலர்!

The Tiruchirappalli District Cooperative Spinning Mills Limited, No. M.M. 301, Karur.

Telegram: "COOPSMILL" — Telephone: 351, 370

Thiru. A. P. DHARMALINGAM, Chairman.

Thiru. M. PARAMASIVAM, M.A., Managing Director.

Installed Capacity:	12,000 Spindles, 4 Doubling Frames, One Doubler Winder and One Cone Winding.
Production:	20s, 20s Export, 30s, 32s, 32s Export Cones, 2/17NF, 31s and 34s Cone Yarn.
Authorised Share Capital:	Rs. 60.00 Lakhs.
Issued Share Capital:	Rs. 30.00 ,,
Subscribed Share Capital.	Rs. 23.68 ,,
State Contribution to the Share Capital:	Rs. 11.86 ,,

Shares are available for allotment to individuals and institutions at Rs. 100/- per share with an entrance fee for Rs. 2/- per share.

For business enquiries and allotment of shares please contact the Managing Director.

MANAGING DIRECTOR.



பெரியாரின் ஆசை!

அன்புள்ள அய்யா, வணக்கம்.

தங்களின் கடிதம் கிடைக்கப் பெற்றது. மிக்க மகிழ்ச்சி.

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பொன் விழா மலர் ஒன்று தாங்கள் வெளியிட இருப்பது அறிய மிக்க மகிழ்ச்சி. நாவலரவர்களின் தொண்டின் சிறப்பினையும், அவர் சார்ந்துள்ள தி. மு. கழகத்தின் பகுத்தறிவுக் கொள்கைகளையும் பரப்புகின்ற வகையில் மலர் சிறப்புடன் அமைய வேண்டுமென்று ஆசைப் படுகின்றேன்.

ஈ. வே. ராமசாமி

*

நெறி பிறழாதவர்

பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார்.

அண்ணா மலைப்பல் கலைக்கழகத் தருந்தமிழிற் புலமை பெற்ற
கண்ணார் மனையனையர் கல்விநலத் துறையமைச்சர் கடமை தன்னை
நண்ணாரும் போற்றிடவே நன்குபுரி நெடுஞ்செழியர் நாடு போற்றும்
அண்ணாவாம் பெருந்தலைவர் வழிவளர்ந்தோர் அவர்புகழும் அருமை கொண்டோர்.

அமைச்சராய் நாடாளும் திருவுடைமைக்கு அறிகுறியாய் அமைந்த தேபோல்
நமைக்கவர்ந்த பாண்டியனும் நெடுஞ்செழியன் பெயர்கொண்டோர் நடுவர் போல
இமைப்பொழுதும் நெறிபிறழாது எஞ்ஞான்றும் இனியனவே எண்ணும் தூயர்
தமைப்பெற்ற தமிழ்நாடு தழைத்தோங்கத் தமையீந்த தகைமை யாளர்.

பல்வேறு துறைகளிலே தலைவராய்ப் பணிபுரியும் பண்பு மிக்கோர்
எல்லாரும் நாவூற நாவலரென்று எடுத்துரைக்கும் ஏற்றம் பெற்றோர்
நல்லோர்கள் வாழ்த்துரைக்கப் பொன்விழாக் கொள்கின்றார் நாடு காத்தே
வல்லோராய்க் குலந்தழைக்க நலம்வளரப் பல்லூழி வாழ்க வாழ்க.

நமது நாவலர்!

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஐம்பதாம் ஆண்டு பிறந்ததின விழாவிற்கு எனது இனிய நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவருக்கு பிறந்ததின விழா எடுப்பதும், அதனைத் தொடர்ந்து மலர் வெளியிடுவதும், மிகப் பொருத்தமான காரியமாகும்!

நாவலர் அவர்கள் கடந்த கால் நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழிக்கும், தமிழர் சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும் அரும் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள்.

புலவர்களின் ஏகபோக உரிமையாக இருந்த பழம் பெரும் காப்பியங்களை, பாமரரும் உணர்ந்து, இரசிக்குமளவிற்கு எளிய இனிய நடையில் தமது பேச்சாலும், எழுத்தாலும் நாடெங்கும் பரப்பியவர்களில் முதலிடம் வகிப்பவர் நமது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே!

அவரது அழகுத் தமிழைக் கேட்காத ஊரே தமிழகத்தில் இல்லை எனலாம். பள்ளிப் பருவம் முதற்கொண்டு பல் கலைக்கழக மாணவராகத் தொடர்ந்து, அறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பிமார்களில் ஒருவராகவும் இன்றைய தினம் தமிழக அமைச்சராகப் பவனிவரும் காலத்திலும் அவர் தமிழுக்கும், தமிழகத்திற்கும் ஆற்றிவரும் பணி மகத்தானது!

மாண்புமிகு அமைச்சர்
K.A. மதியழகன்

சின்னஞ்சிறு வயது முதற்கொண்டே திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக அவர் கடந்த கால் நூற்றாண்டு காலமாக மக்களுக்கு ஆற்றிவரும் பணியை நாடறியும்.

அறிஞர் அண்ணாவின் தம்பிமார்களில் ஒருவராகத் தி. மு. கவின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இயக்கம் தொடர்ந்த போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச்சாலையின் கொடுமைகளையும், அனுபவித்தவர் நமது நாவலர்! மற்றைய தி. மு. க. தலைவர்களைப் போலவே அவரும் தியாகத் தழும்புகளைப் பெற்றவர்.

இருபதாண்டுகளுக்குள் கழகம் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றி நாட்டில் ஒரு பெரும் புரட்சி உண்டாக்கி இருக்கிறது. அந்தக் கழகத்தின் மிகப் பெரிய பல பொறுப்புகளை நாவலர் அவர்கள் ஏற்று அரிய பெரிய காரியங்களை ஆற்றியுள்ளதை நாமெல்லாம் அறிவோம். இன்றும் அவர் கழகத்தின் பொதுச் செயலாளர் பதவியை இரண்டாம் முறையாக ஏற்றுப் பணியாற்றி வருகின்றார்கள்!

மக்களுக்கு நாவலராக அவர் விளங்கி வருவதைப் போலவே இன்றைய தினம் என் அருமைச் சகோதரர் கலைஞர் கருணாநிதி அவர்களின் அமைச்சர் அவையில் பங்கேற்று நாட்டுக்குக் காவலராகப் பணியாற்றி வருகின்றார்கள்!

நாவலர் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் தொடர்ந்து பணியாற்ற என் நெஞ்சத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழினம் கண்ட புதையல்!

மாண்புமிகு அமைச்சர்
கா. வேழவேந்தன்

சிங்காரத் தமிழ் நடையால்
சிந்தை யுருக்கும் கருத்துக்களால்
சீரிய எழுத் தாற்றலால்
செம்மை மிக்க நற்பண்பால்
திடமான இலட்சியத்தால்
செயலாற்றும் பேராற்றலால்

தமிழர்களின் நெஞ்சங் கவர்ந்த தலைவராகத் திகழ்பவர் மாண்புமிகு நாவலர் அவர்கள்.

படிக்கும் பருவம் முதல் எடுப்பான தொடரெடுத்துச் சொல்லேர் உழவராகத் தமிழகமெங்கும் சுற்றி வந்தவர் நம் நாவலர்.

'இராமகிருஷ்ண பரம ஹம்ச'ருக்கு ஒரு 'விவேகானந்த'ரைப்போல், மேதை 'ஜான்சு'னுக்கு ஒரு 'பாஸ்வெல்'லைப்போல், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நாவலர் அவர்கள் கிடைத்தார்கள். முன்னேற்றக் கழகத்தைக் கட்டி வளர்த்தவர்களில் நாவலர் பெற்ற பங்கு சிறப்பான ஒன்றாகும்.

இலக்கியமானாலும், எடுப்பான அரசியலானாலும் எண்ணற்ற புள்ளி விவரங்களுடன் எழிலுடன் எடுத்துவைத்து எதிரிகளின் இதயங்களையும் ஈர்க்கும் பேராற்றல் நாவலருக்கே சொந்தமானதால் நாடே அவரை 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று அழைக்கிறது.

'கலித்தொகைக் காதற் காட்சிக'ளையும், கிரேக்க நாட்டின் பெருமைகளையும், தமிழிலக்கியத் தேன் துளிகளையும் சுவை சொட்டச் சொட்ட எழுதிக் காட்டிய ஆற்றல் நாவலரின் பேனாவுக்கு உரியதாகும்.

பட்டம் பெற்றிருந்தாலும் படாடோபம் இல்லாத பண்பு, பதவிகள் குவிந்தாலும் பதறிடா நிறைகுடத் தன்மை, எவரிடமும் இதமாகப் பேசி இனிமையாகப் பழகும் பண்புள்ளம், என்றென்றும் பணிபுரிவதே என் இலட்சியம் என்ற தொண்டுள்ளம் இவை நாவலரின் புகழ் முடியிலே மின்னுகின்ற வைர மணிகளாகும்.

நாவலர் மேடை ஏறினால் நாற்புறமும் கூடியிருக்கும் மக்கட்கூட்டம் தலையசைத்து ஒப்புக்கொள்ளுகின்ற வரை, தான் சொல்ல வந்த வாதங்களை அடுக்கடுக்காக எடுத்து வைத்துக்கொண்டே யிருப்பார்.

நாவலர் பேனா எடுத்தால், நளினமாக இலக்கியம் தோய்ந்த மேற்கோள்களுடன் கருத்துக்கள் வந்து விழுந்துகொண்டே யிருக்கும்.

"சாகில் தமிழ்படித்துச் சாகவேண்டும்
—என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்"

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளை நாவலர் மேடைகளிலே வலியுறுத்தி வலியுறுத்திக் கூறியதால் தமிழ் உணர்வு பெற்ற இளைஞர் பட்டாளம் ஏராளம் உண்டு.

காவியத் தலைவராய் வாழ்ந்து காலத்தோடு கலந்துவிட்ட அறிஞர் அண்ணாவின் புகழோவியத்தைத் தீட்டிக் காட்டும் தலைசிறந்த மாணவராய் விளங்குபவர் நாவலர் அவர்கள்.

கழகத்தைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கும் பொதுச் செயலாளராகப் பதவி ஏற்றாலும் சரி, தமிழகத்தை ஆளும் அமைச்சர் பொறுப்பை ஏற்றாலும் சரி, என்றென்றும் கடமைவழி நின்று, கண்ணியம் காத்து, கட்டுப்பாட்டுடன் பணியாற்றும் பேராற்றல் படைத்தவர் நாவலர் அவர்கள்.

நாவலர் தமிழினம் கண்டெடுத்த நல்லதோர் புதையல் ஆவார்.

அவர் புகழ் ஓங்குக, ஓங்குக!
அவர் பணி வெல்க, வெல்க!

பொன்மனச் செம்மலே நின் பொன் விழா வாழ்க!

மாண்புமிகு அமைச்சர்:

கே.வி. சுப்பையா

கண்ணீரும், செந்நீரும் வளர்த்த கழகத்துக் கண்மணியின் பொன்விழா மலர், நம் இதயத் தடாகத்திலிருந்து பறிக்கப்பட்டதேயாகும்.

கால ஓட்டத்தில் தேராகின்ற நல்லறிஞர் குழாத்தில் நாவலர்க்கோர் இடமுண்டு. இன்னாத நீக்கி இன்சொல் பயக்கும் உரை நிகழ்த்தும் புலவர் குழுவில் அவர் நடமாடுவார். கொள்கைப் போர், கொஞ்சு தமிழ் மேடை, பத்திரிகை, சட்டமன்றம், கழகப் பொறுப்பு இப்படி எத்தனையோ கணுக்கள் உள்ள கரும்பு அவர்.

ஆண்டிருந்த பாண்டிய மன்னர் மீண்டு வந்த தோற்றத்தோடு, செங்கோல் முறை காக்க ஆருயிர் நீத்த மன்னன் பெயர்க்குள்ள சிறு களங்கமதனையும் துடைத்திடும் பெற்றியில் அப்பேரேற்றுப் பேரோடு வளர்ந்து, இன்று நந்தமிழ் நாட்டுக் கல்வியமைச்சராய் ஓங்கு புகழ் பெற்ற நாவலர் ஒரு பேசும் நூல் நிலையம். நட்சத்திர வானின் மாலை மயக்கம் போன்ற அமைதி, திருக்குறள் வரிகள் போன்ற தன்னடக்கம், இவற்றைச் சொத்தாகப் பெற்றவர்.

கால இருளோட்டிய கதிரவனும் அண்ணாவின் அன்புத் தம்பி.

பொது வாழ்வு எனும் பாலைவனத்தில் நேர்மை எனும் பசுஞ்சோலையைக் கண்டவர். “தம்பி வா! தலைமை தாங்க வா!” எனும் அண்ணனின் அன்பழைப்பைப் பெற்றவர்.

மாணவப் பருவத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சுயமரியாதைக் கருத்துக்களை அண்ணாவின் சொற்பொழிவுகள் மூலம் பரப்பியவர்.

இயக்கத் தொண்டில் ஈடுபட்டுக் கிராமங்களை நாவால் கவர்ந்தவர், நல்லிதயத்தால் வென்றவர்!

அத்தகு நாவலரின் 50ஆவது பிறந்த நாள் விழாவைச் சிறப்போடு கொண்டாடும் தோழர்களைப் பாராட்டுகிறேன். “பொன்மனச் செம்மலே! நின் பொன் விழா வாழ்க!! என நாவலரை நாம் அனைவரும் அன்பினால் வாழ்த்துவோம்.

முரசொலி
ஆசிரியர்: மாறன் எம்.ஏ., எம்.பி

இளைய அண்ணன் நாவலரின் 49-ஆவது பிறந்தநாள்

கழகத் தலைவர்களாலும் தொண்டர்களாலும் இளைய அண்ணன் என அன்போடு கருதப்படுபவரும் கழகத்தின் இரண்டாவது பொதுச் செயலாளராகப் பணியாற்றிக் கழகத்தின் இன்றைய பெரும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரும், தமிழக அரசின் கல்வி—தொழில் அமைச்சராக இருந்து திறம்பட நிர்வகித்து வருபவரும் நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கிவருபவருமான நமது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு இன்று 49-வது பிறந்த நாள் விழா!

இன்றைய கழகத்தின் வளர்ச்சிக்கு நாவலர் ஆற்றிய தொண்டும்-ஏற்றுக்கொண்ட இன்னல்களும் ஏராளம்! ஏராளம்!

எதிரிகளையும் ஈர்க்கும் சொல்லாற்றலும்—இலக்கிய நயமும் பதிந்த நாவன்மையும்—பேச்சிலே ஆணித்தரமாகத் தரப்படும் அரசியல் விளக்கப் புள்ளி விவர சேகரிப்புகளும்—நாவலருக்கே உரிய தனித் தன்மைகளாகும்.

“நாவலருடைய தனித்தமிழ் நடை அழகு நமக்குக் கிடைத்திருக்காது போயிருக்குமானல் தமிழ் மொழியினிடத்திலே நமக்கு இந்த அளவு பற்றுதல் ஏற்பட்டிருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியது.”

—என அறிஞர் அண்ணு பாராட்டியுள்ளது நாவலர் தமிழுக்கும்—தமிழகத்துக்கும் ஆற்றிய தொண்டின் சிறப்பை விளக்கும்.

நல்ல தமிழ்ச் சொல்லால்-நயமிகு எழுத்தால்-நனி சிறப்புத் தொண்டால் நாட்டினரின் நெஞ்செல்லாம் நிறைந்து விட்ட நமது இளைய அண்ணன் நாவலரை நாமும் நாட்டாரோடு சேர்ந்து வாழ்த்துகிறேம்.

“நாவலரே வாழ்க
நற்றமிழ் போல் வாழ்க! வாழ்க” என்று!

முரசொலி 11-7-1968

என்றேனும் மதிக்கப் பெறும்

கவிஞர் கண்ணதாசன்

நல்லதை மதிக்கத் தெரியாதவன் அயோக்கியன்.
தவறைச் சுட்டிக்காட்டத் தெரியாதவன் பேடி.

ஆகவே, சுயேச்சையான கருத்துடையவன் பல நேரங்களில் வெற்றி பெற முடியாமல் போனலும், அவனுடைய கருத்துக்கள் என்றேனும் மதிக்கப்பெறும்.

கல்விக் காவலர்

சை. வே. சிட்டிபாபு.

பள்ளிக் கல்வி இயக்குநர்

சொல்லின் செல்வர், சுவை குன்ருச்சொல்லாளர், பாவலர் போற்றும் நாவலர் என்று பாரெங்கும் புகழஞ்சலி பெற்றுத் திகழும் நம் மாண்புமிகு கல்வி - பொதுநலத்துறை அமைச்சர் தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றிலே ஒரு பொற்காலத்தையே இயற்றி வருகிருர். காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல்லைக் கனவிலும் சொல்லாத்தகைமை, ஆழ்ந்த சிந்தனைத் தெளிவு, எண்ணியதைத் திண்ணியராக முடிக்கும் மனத்திட்பம், பொறுமையாக அதே சமயம் உறுதியாகச் செயல்படுத்தும் செம்மை ஆகியவற்றின் கூட்டுத் தொகுப்பே நம் சீர்சால் நாவலர் அவர்கள். இத்தனிச் சிறப்பே நம் கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் பல நல்ல மாறுதல்களுக்கும், ஏற்றமிகு வளர்ச்சிக்கும் ஓர் ஒளிவிளக்காக அமைந்து வருகிறது. ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்னும் இலக்கணத்திற்கு ஏற்பத் தம் கல்வித் திட்டங்களைத் தீட்டி, அவற்றை அவருக்கே உரிய செந்தமிழ்த் தேன் நடையில் கேட்போரைப் பிணிக்கும் முறையில் விளக்கிக் கூறி, ஆசிரியர், பெற்ருேர், மாணவர் ஆகிய எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலே பணியாற்றி வருகிருர்.

நம் தகைமைசால் கல்வி அமைச்சர்

> ‘‘வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல்
> பயன்கோடல்
> மாட்சியின் மாசற்ருர் கோள்’’

என்ற குறட்பாவிற்கு மகத்தானதொரு எடுத்துக்காட்டாகத் தாம் சொல்லியதோடு மற்றவர் சொல்லும் கருத்துக்களையும் கேட்டு அதன் பயனையும் ஆராய்ந்து கொள்ளும் கொள்கையில் உயர்ந்து விளங்குகிருர் என்று கூறினுல் அது மிகையாகாது.

இன்று நம் மாநிலம் இந்தியாவிலேயே மிகச்சிறந்த ஒரு மாநிலமாகத் திகழும் பெருமையினைத் தேடித்தந்துள்ள துறைகளில் நம் கல்வித்துறையும் முக்கியமானதொன்ருகும். அப்பெருமைக்குக் காரணமாக இருக்கும் நாவலர் அவர்கள் ஆசிரியர் நலன்களுக்காகச் செய்துள்ள தொண்டு அளப்பரியது. அது போன்றே மாணவச் செம்மல்கள் தங்கள் திறன்களையும் நாட்டங்களையும் சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்குப் பல வாய்ப்புக்களை பள்ளிகளிலே ஏற்படுத்தித் தரக் கட்டடங்களையும், தளவாடங்களையும், ஆய்வுக்கூடங்களையும் மேலும்மேலும் பெற ஆண்டுக்காண்டு நிதி வசதி செய்து தந்துள்ள பாங்கினைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். பஞ்சபூதத்தின் நுட்பங்கள் கூறும் மேன்மைக் கலைகள் மேலை நாடுகளுடன் நின்றுவிடாமல் அவற்றைக் கொணர்ந்து இங்கு சேர்க்கவும், அழகுத் தமிழில் அள்ளி வழங்கவும் வழிவகை செய்து வருபவர் நம் கல்வி அமைச்சர்.

பழகுதமிழ் நூல்போல் பழகுவதற்குப் பண்பொழுகும் நல்மனத்தவர். ஆற்றல் மிக்க பணியாளர். பேரறிஞர் அண்ணுவின் பிரதிபிம்பமாகக் கல்வித்துறையிலே ஈடு இணையற்ற ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து பன்னருங் கலைகளுக்கு ஓர் காவல் தெய்வமாக மிளிர்ந்துவரும் நம் நாவலர் அவர்களுக்கு இன்று ஐம்பது ஆண்டுகள் முடிந்து, ஐம்பத்தோராம் ஆண்டு பிறக்கும் இப்பொன்னுளினை நான் எண்ணிப் பூரித்து மகிழ்ந்து போற்றுகிறேன். ஒப்புயர்வற்ற இவரை நம் தாயகத்திற்கு ஈன்று தந்த தமிழ் அன்னையை வாழ்த்துகிறேன். இவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பொன்ருச் சிறப்புகள் எல்லாவற்றையும் எய்தி எத்திசையும் புகழ் மணக்க வாழ்த்துகிறேன்.

நாவலரே வாழ்க

மின்வீச்சுப் பெற்றுல்தான் தாழம் பூக்கள்
மேதினியில் இதழ்விரிக்கும்! அருவி போன்ற
உன்பேச்சைக் கேட்டால்தான் தோழருக்கு
உள்ளமெல்லாம் சிலிர்சிலிர்க்கும்! வேம்பைப் போன்று
புன்பேச்சுப் பேசுபவர் வாழும் நாட்டில்
பொன்பேச்சு உன்பேச்சு! செந்தேன் பேச்சு!
உன்பேச்சைக் கேட்கையிலே மாற்றுர்கூட
உன்பேச்சின் பண்பறிந்து நாணு வார்கள்!

எத்தனையோ பேர் கல்வி அமைச்ச ரென்று
இந்நாட்டில் இருந்தார்கள்! இருந்தும் என்ன?
அத்தனைபே ருமா உன்போல் புகழைப் பெற்று
அருந்தமிழில் 'நாவலராய்' ஆய்விட்டார்கள்?
இத்தரைக்குள் அழுந்தியுள்ள பொருள்கள் யாவும்
எழில் வீசும் வைரமென ஆவ துண்டோ?
தித்திக்கும் பழங்களிலே பலாப்பழம் போல்
தித்திக்க வாழையினுல் முடிவ துண்டோ?

மலருக்கு நிறம்அழகு! கற்புவாய்ந்த
மங்கைக்கு முகம்அழகு! வானிலாடும்
நிலவுக்கு ஒளியழகு! உங்கள் பேச்சு
நேர்மைக்கு மிகஅழகு! வில்வளைவைப்
புலியைப்போல் பகைவரிடம் காட்டுகின்ற
புகழ்பூத்த அண்ணுவின் நெஞ்சக் கூண்டில்
உலவுகின்ற வீரா, நீ வாழ்க! வாழ்க!
உம் தொண்டு என்றென்றும் வெல்க! வெல்க!

- முத்துலிங்கம்

பண்பாட்டின் உறைவிடம்

பேராசிரிர் அ.மு. பரமசிவானந்தம்

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை நாடு நன்கு அறியும். இளமை முதற் கொண்டே அன்னைத் தமிழுக்கும் அருமைத் தமிழகத்துக்கும் தம்மை உரிமை யாக்கிய நல்லவர் நாவலர். அத்துடன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடிப்படை உண்மை உணர்ந்த சமதர்மச் செம்மலும் ஆவர். அவர்தம் பேச்சுத் திறனும் தமக்கே உரித்தான தனிமுறை விளக்கமும் தமிழக மக்கள் அனைவர் உள்ளத்தையும்- சிறப்பாக மாணவர் தம் உள்ளத்தையும் கொள்ளை கொண்டன. அவர்தம் பேச்சுத் தேனில் மயங்கிவீழ்ந்த வண்டுகளென மாணவர் வாழ்ந்ததை வாழ்வதை நான் கண்டு கண்டு மகிழ்ந் திருக்கிறேன். அவர் தம் தமிழ்ப் பணி சிறப்பதாக என வாழ்த்துகின்றேன்.

அவர்தம் தொண்டே அவர் வாழ்வை உயர்த்திற்று. இன்று ஆட்சியில் அமர்ந்து கல்வி, நலத்துறை இரண்டினையும் போற்றிக் காக்கும் பணியினை நாவலர் மேற்கொண்டுள்ளார்கள். கட்சிக் கொள் கைகளை மதித்து- அதே வேளையில் மற்ற வர்தம் கொள்கைகளுக்கும் பெருமை தந்து, ஆய்ந்து உணர்ந்து அறமறிந்து செயலாற்றும் செம்மலாக நாவலர் விளங்கி வருகிறார்கள். செய்வன திருந்தச் செய்யும் இச் செம்மலின் செயலால் நாடு பயன் பெறுகின்றது - நல்லவர் மகிழ்கின்றனர்.

'நாடு வாழ்ந்தால் நாம் வாழ்வோம்- மொழி வாழ்ந்தால் நம் பண்பு வாழும்' என்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்ட நாவலர், நாடும் மொழியும் நலிவுறுமோ என அஞ்சிய காலங்களி லெல்லாம் முன்னின்று அறப்போர் ஆற்றிச் சிறைக் கோட்டம் புக்கு, அறம் காட்டி வீரம் விளைத்து வெற்றிபெற்ற வீர ராவர்.

இவைகளுக்கெல்லாம் மேலாக நாவ லர் நல்ல மனிதர் - பண்பாட்டின் உறை விடம் - பகுத்தறிவாளர்-இனிய வுளவாக இன்னாத கூறாத நல்ல தலைவர். கடிதோச்சி மெல்ல எறியும் காவலர். நாட்டின் நற் பண்புக்கு உறை விடம். இன்னார் இனியார் என்னாது எல்லோரையும் அன்பால் ஏற்று ஆதரிக்கும் பண்பாளர். ஆம்! இத் தகைய அருஞ் செம்மலார் 'ஐம்பதின்' எல்லையில் நிற்கின்றார் என எண்ணி மகிழ் கின்றேன். வருங்காலத் தமிழகம் வளமான தாக விளங்க நாவலர்தம் நற்றொண்டுகள் பயன்படும் என்பது உறுதி. நாடு வாழத் தாம் வாழும் நல்லவர் இன்னும் பல் லாண்டு பாரில் சிறக்க வாழ்ந்து செம்மைப் பணிபுரிந்து வையத்தை வாழ்விப்பாராக!

வாழ்க நாவலர் நற்றொண்டுகள்!
வளர்க அவர்தம் வளமார்
வாழ்நாள்கள்!

நாவலர் அவர்களை முதன் முதலாகப் பார்த்தது 1962ம் ஆண்டு சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக. ஐந்து ஆண்டுகள் தமிழக சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும், பொதுத் தணிக்கைக் குழுவின் தலைவராக இருந்த போதும் பலமுறை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்திருக்கிறேன்.

சுமுகமான பழக்கங்களும், அமைதியான சுபாவமும் உடையவர். முழு நேரமும் தனது இயக்கத்திற்கென்று காலத்தை நெடு நாட்களாக செலவிட்டு வருகின்ற அரசியல் வாதி. கல்லூரி மாணவர்கள் மத்தியில் நாவலர் என்றாலே ஒரு தனி ஈடுபாடு உண்டு என்பதைப் பார்த்திருக்கிறேன். அதற்கு முக்கிய காரணம் அவருடைய சிறந்த தமிழ்ப் பேச்சுவன்மை. இலக்கிய ஆழத்துடனும், ஹாஸ்யமாகவும் பொருட்செறிவுடனும் பேசக் கூடியவர். இம்மாதிரியான திறமைசாலிகளைக் கண்டபின்னரும் கல்லூரி மாணவர்கள் முழு நேரம் தமிழ்த்துறை முன்னேற்றத்திற்கென்று ஆழ்ந்து ஈடுபடுவதைக் காண்பது சிரமமாயுள்ளது.

அரசியல் கலை, இலக்கியம், சமயம், எத்துறையை எடுத்துக் கொண்டாலும் இன்று முதலிடம் வகிக்கும் பல பெரியவர்கள் முழு நேரத்தையும் வேறு துறைகளில் ஈடுபாடு இல்லாமல் செயல் பட்டது காரணமாக வளர்த்திருக்கின்றார்கள் என்பதைக் கண்டுள்ளேன். எனது அனுபவத்தில் தொழிலும் அரசியலும் எனது கவனத்திற்கு போட்டியிட்டதின் பயனாக சில சிரமங்கள் வந்ததையும் அனுபவத்தில் கண்டுள்ளேன்.

நா. மகாலிங்கம் பி.எஸ்ஸி, எம்.ஐ.இ.

வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும் என்ற இளம் நண்பர்கள் நாவலருடைய முழு நேர அரசியல்துறை ஈடுபாட்டை முன் உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சி கள்தான் பலன் கொடுக்கின்றன

சட்ட மன்றத்தில் 1963ல் விலைவாசி உயர்வுப்போராட்டம் தொடங்கிய போது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஒரு குழு நியமித்து விலைவாசி உயர்வை பரிசீலனை செய்ய நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டார். அன்றைய முதலமைச்சர் திரு காமராஜும் சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் திரு பக்தவத்சலமும் மறுத்து விட்டனர் விலைவாசிப் போராட்டம் மூண்டது.

பின்னர் 1965ல் இந்தி ஆட்சி மொழியாக வரும் சூழ்நிலை ஏற்பட்ட போது தி. மு. க. சார்பாக திரு நெடுஞ்செழியன் சட்ட மன்றத்தில் ஒருமித்த தீர்மானம் செய்து டெல்லிக்குதமிழகத்தின்மறுப்பைத் தெரிவிக்க வேண்டினர். அன்றைய முதலமைச்சரும் அவருக்குப் பின் துணையாக நின்ற திரு காமராஜும் இணங்காதது மட்டுமல்லாமல் அடக்கு முறையின் மூலம் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை அழிக்க முயன்றனர். ஜனநாயக நாட்டில் மக்கள் எழுச்சியை சிந்தனைகள் மூலம் கருத்துப் போராட்டம் மூலம்தான் குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் என்ன நேரும் என்ற பாடத்தை காங்கிரஸ் இயக்கம் தமிழகத்தில் தெரிந்து கொண்டது.

1967 இந்திய அரசியல் வானில் பெரிய மாற்றங்கள். பல இடங்களில் குழப்ப நிலை. தமிழகத்தில் பரிபூரண இட மாற்றம். ஆட்சிபீடத்தில் அமர்ந்துதி. மு. க. கட்சி அறிஞர் அண்ணாவை தலைவராகப் பெற்றது. அந்த அமைச்சரவையில் நாவலர் அவர்கள் கல்வி, தொழில், மின்சாரம் போன்ற பல பெரும் பொறுப்புக்களை ஏற்று நிர்வகித்தார்.

தமிழகத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா எதிர்பாராத சூழ்நிலையில் மறைந்தபோது பின்னர் யார் என்ற கேள்வி. நாவலர் குழப்பத்திற்கு இடம் கொடாமல் ஒதுங்கி இருந்தார். ஆயின் அவர் ஒதுங்கினலும் தி. மு. க. இயக்கம் மறுபடியும் அவரையும் கலைஞர் கருணாநிதியையும் இணைத்து செயலபட எடுத்த முயற்சிகள் வெற்றி கண்டது.

இன்று தமிழகம் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியனிடம் ஒரு நிரந்தரமான நலல சீர்திருத்தத்தை எதிர்பார்க்கின்றது. 1946ல் திரு அவனுசிலிங்கம் தமிழுக்கு உயர்நிலைப்பள்ளிகளில் இடமளிததது போன்று நாவலர் கல்லூரிகளில் தமிழுக்கு நிரந்தர இடம் கொடுப்பார் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் உள்ளது.

50 ஆண்டுகள் நிறைவு காணும் இந்த வல்லவர் மேலும் பல ஆண்டுகள் சிறப்பாகச் செயல்பட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த தமிழ்ப் பேச்சு!

ஏந்தவர்களை நினைந்து வணங்கினேன்

1945ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். மிகப் புகழோடு இருந்த ஒரு நாளேட்டின் பேராசிரியராக காலஞ்சென்ற டி. எஸ். சொக்கலிங்கம் விளங்கினார். அவருக்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன். இருவரும் எழுத்தாளர் மகாநாட்டிற்காக கோவை சென்று திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் விடுதியில் தங்கியிருந்தோம். மாநாட்டின் செயலாளன் என்ற முறையில் எனக்கும் தலைவரான டி. எஸ். சொக்கலிங்கத்திற்கும் பிரமாதமான வரவேற்பு. அப்போது நாங்கள் தீவிர காங்கிரஸ் வாதிகள். அதே விடுதியில் இளந் தாடியுடனும் கம்பீரமான தோற்றத்துடனும் உள்ள ஒருவரைச் சந்தித்தேன். இருவருக்கும் அறிமுகமில்லை.

அன்று மாலை, ஆர். எஸ். புரத்தில் ஒரு கூட்டம். அதற்காகச் சென்ற நாங்கள் ரயில்வே கேட் மூடப்பட்டிருந்த காரணத்தால் வழியில் நின்றுவிட்டோம். எங்கள் காருக்கு அருகில் ஒரு சிறு கூட்டம். பெட்ரோமாக்ஸ் விளக்கு ஒன்று கூட்டத்தின் சிறப்பு. அதற்கு அருகில் அந்த இளந் தாடிக்காரர் பேசிக் கொண்டிருந்தார். முதலில் அடையாளம் தெரியவில்லை. ஆனால் கூட்டத்தினர் பர பரவெனக் கை தட்டியதனாலும், கல கலவெனச் சிரித்ததனாலும் நாங்கள் உற்றுப் பார்க்கிறோம். திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் விடுதியில் பார்த்த அவரே தான் என்பது எங்களுக்குத் தெரியவந்தது. கருத்து எங்களுக்குஉடன்பாடாக இல்லை என்றாலும், அவர் கையாண்ட தூய தமிழ்ச் சொற்களும் பாணியும் எங்களைக் கவர்ந்தன.

இரவு, விடுதிக்குத் திரும்பிய பிறகு காலஞ்சென்ற கைவல்யசாமி அவர்கள் எங்களுக்கு அந்த தாடிக்காரரைப் பற்றி விவரித்தார்.

'பெயர் நெடுஞ்செழியன்; பெரியாரின் சீடர், மணிக்கணக்கில் பேசுவார், எளிய வாழ்க்கையிலும உயர்ந்த லட்சியத்திலும் ஈடுபாடு உள்ளவர். .... அசல் சைவம் ... இத்யாதி... இத்யாதி.

மறுநாள் நானாகவே சென்று திரு. நெடுஞ்செழியனிடம் பேசினேன். அவர் மிகச் சுருக்கமாகத்தான் பேசினார். ஒரு வேளை காங்கிரஸ்காரன் என்று ஒதுக்கினாரோ அல்லது கூட்டத்தில்தான் விவரமாக பேச வேண்டுமே ஒழிய தனிப்பட்ட உரை எதற்கு என்று எண்ணினாரோ தெரியவில்லை.

1945 என்று நினைக்கிறேன். கிண்டி பொறியியல் கல்லூரியில் வ. உ. சி. தினம். இதற்குள்ளாக திரு. நெடுஞ்செழியன், நாவலர் நெடுஞ்செழியனாக ஆகிவிட்டார். இருவரும் அன்று பேசுவதாக ஏற்பாடு. வ உ. சி. பற்றி விரிவாகப் பேசினேன். அவர் தேச பக்தி, கப்பல் விட்ட அதிசயம், கடன்பட்டா விவரங்கள், வெள்ளையர் படுத்திய

எஸ்.எஸ்.மாரிசாமி M.P.

கொடுமைகள், அதிகாரிகள் அவரை ஒதுக்கி வைத்த கொடுமை இப்படியாகப் பேசி முடித்து இனி பேசுவதற்குப்பொருளேது? என்ற எண்ணத்துடன் அமர்ந்தேன்.

அடுத்தவராக நாவலர் பேச எழுந்தார். கூட்டத்தில் முதலில் விம்மல், பின்னர் இலோன சிரிப்பு, இடையில் வெடிச் சிரிப்பு, இறுதியில் கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை இத்தனையும் அழகுத் தமிழில்... இப்படியாக ஒன்றரை மணி நேரம் கடல் மடையெனப் பேசினர்.

தூய தமிழில் இப்படியெல்லாம் பேச முடியுமா என்ற வியப்பில் ஆழ்ந்தேன. காரணம் பெரிய பெரிய தமிழ்ப் பேச்சாளர்கள் பேச்சை முன்பு கேட்டவன். அவற்றில் சொல்லிருக்குமே தவிர சுவை இருக்காது. அழகு இருக்குமே தவிர உயிர் இருக்காது. எதுகை இருக்கும் ஆனல பொருள் எக்கச் சக்கமாக ஓடும். மோனைக்கு சொல் தேடி அலைவார்களே அந்த அலைச்சல் முரண்டுகிற காளை மாட்டுச் சண்டை மாதிரி இருக்கும். நாவலர் உயிருள்ள ஓட்டமுள்ள ஆனல் தமிழ் நடையில் பேசினர். அவருக்கு நாவலர்பட்டத்தை ஈந்தவர்களை நினைந்து வணங்கினேன்.

ஒரு சமயம் செய்தித் தாள்களில் பரபரப்பான செய்தி மதுரை மாவட்டம் தேனி என்ற ஊரில் நாவலர் பேசிய கூட்டத்தில் பெரும் கலாட்டா என்று இந்தக் கலவரம் நடந்த மறு நாள் நான் வீரபாண்டி என்னும் அடுத்த ஊருக்குச் சென்றிருந்தேன். கலவரம் பற்றிய விவரங்களை நண்பர்கள் சொன்னர்கள். நானும் விசாரித்தேன். அப்போது நான் தீவிர காங்கிரஸ் காரன் என்றலும் "நாவலர் கூட்டத்தில் நாம் நடந்தது சரியில்லை" என்று பேசி எங்கள் வட்டாரத்தில் என் மீது கிளம்பிய புயலுக்கு ஆளானேன்.

இதற்குப் பல ஆண்டுகள் கழித்து மற்றொரு சமயம் சென்னையிலிருந்த ஒரு காங்கிரஸ் மந்திரிசபைக்கு நான் விரோதி. இந்நிலையில் கோவை அரசினர் கல்லூரி மாணவர்கள் அன்று தமிழ்ச் சங்கத்தில் பேச அழைத்து விட்டார்கள். என்னுடன் நாவலர் பேசுவதாக ஏற்பாடு.

கோவை போய் இறங்கியது தான் தாமதம். என்னைக் கல்லூரிக்குள் அனுமதிக்க முடியாது என்று கல்லூரி நிர்வாகிகள் தடை விதித்து விட்டார்கள். இந்தத் தடை நீங்க வேண்டுமானல் மந்திரி ஒருவருக்கு வேண்டிய ஒரு நிர்வாகியை நான சந்திதது "இன்றைய அரசியல் நிலைமை" குறித்து நேரிடையாகவோ, மறைமுகமாகவோ பேச மாட்டேன் என்பதாக உறுதி மொழி தர வேண்டும் என்று கூறினர்கள. இதறகு நான் சம்மதிககவில்லை. சென்னைக்கு அடுத்த ரயில் எப்போது என்று கேட்டு ஊர் திரும்ப எண்ணினேன. இதற்குள்ளாக மாணவர்களுக்கு செய்தி எட்ட அவர்கள் ஓடிவந்து கல்லூரிக்கு வெளியே கூட்டம் போடுவதாகக கூறினா கள். அன்று மாலை பெருங்கூட்டம். நாவலர் அவர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொணடதோடு "தடை" என்பது பறறி ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாகவே பேசினர். நான் அப் பேச்சை இன்று நினைத்தால் கூட புல்லரித்துப்போவேன.

தமிழ்நாட்டில் தமிழுக்கு ஒரு மறு மலர்சசி இயக்கம் இருந்தது என்றல் அதற்கு வித்தூனறியது அமரக் கவிஞன பாரதி. அநத வித்துக்கு நீா பாய்ச்சி, உரம போட்டு பெரியதொரு ஆல மரமாக்கியது யாரெனறல் பேரறிஞா அண்ணு. அவருக்குத துணை நினற அருமைத் தம்பிமாரில நாவலா இடியேறு போன்றவர். கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்பதை வாழ்ந்து காட்டி வரக்கூடியவர் இவை எல்லாவறறுககும் மேலாக அவரைப் பற்றி ஒரே வாா்த்தையில் சொலல வேணடுமென்றல அவர் அனைவருக்கும் "நல்லவர்."

அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும்; எலலா வளமும் பெறறு நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

இதயங்கவர்ந்தவர்

தென்னாட்டு அரசியலில் நாவலர் நெடுஞ்செழியனைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அன்று முதல் இன்று வரை அரசியலில் அன்பையும் பண்பையும் தன் இரு கண்களாகக் கொண்டிருக்கும் நல்லவர். மாற்றாரும் போற்றிப் புகழும் அளவுக்குப் பண்புமிக்கவர். அரசியலில் இருப்பவர் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக நடந்து கொண்டால் தான் 'அரசியல் நாகரிகம்' நிலைத்து இருக்குமென்று வாழ்ந்து காட்டியவர். பகை மிகுந்த அரசியலில் பண்பையே முதன்மையாகப் பெற்றவர்.

இவர் 1920 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11 ஆம் நாள் தஞ்சை மாவட்டத்திலுள்ள வடக்காளத்தூர் என்னும் கிராமத்தில் இராசகோபாலர் மீனாக்ஷி சுந்தரம் அம்மையாருக்கும் பிறந்தவர். இவருக்கு மூன்று சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் உண்டு. உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பட்டுக்கோட்டையில் முடித்துக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

தம் பள்ளி நாட்களிலேயே தீண்டாமை, சாதிப்பிரிவு போன்ற சமூகப் பழக்க வழக்கங்களை எதிர்த்து கட்டுரைகள் பல எழுதியுள்ளார். கிளர்ச்சிகள் சில செய்துள்ளார்.

பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு கோயமுத்தூரில் வந்து ஓரிரு ஆண்டு இருந்தார். பிறகு திராவிடக் கழகத்தில் சேர்ந்து அரும்பணி பல புரிந்தார்.

மருத்துவத் துறையில் பெரும் புகழோடு விளங்கும் டாக்டர் ஆர். விசாலாட்சியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். இவர்களுக்கு மதிவாணன் என்றொரு மகன் உண்டு. இல்லற வாழ்க்கையின் இனிமை இவருக்கு அரசியலில் பல சாதனைகள் புரிவதற்குத் துணையாக இருந்துகொண்டிருக்கிறது.

திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து அறிஞர் அண்ணா 1949 செப்டம்பரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அப்போது அவருடன் இருந்து அடிப்படையான செயல்கள் பலவற்றை ஆணித்தரமாகச் செய்துகொடுத்தார்.

திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்களில் ஒருவராக விளங்கினார்.

1949 முதல் 1955 வரை தி. மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருந்துள்ளார். அப்போது பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா என்பது குறிப்பிடத் தக்கது. 1962ல் முதல் முறையாக தமிழ்நாடு சட்டசபைக்கு தேர்ந்

தெடுக்கப் பட்டார். அப்போது சட்டசபை எதிர்க்கட்சித்தலைவராக இருந்து சிறப்பாக பணி பல புரிந்துள்ளார். ஆட்சியாளர்களின் தவறுகளை எடுத்துக்காட்டி அன்பாகக் கண்டித்து பண்பாக நடந்து கொண்டுள்ளார். 1955 முதல் 1960 வரை தி.மு கழகப் பொதுச்செயலாளராகப் பணியாற்றியுள்ளார். 1960 முதல் 1969 வரை தி.மு.க, அவைத்தலைவராகப் பணியாற்றியுள்ளார். 1969ல் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார்.

பகைமை பாராட்டிக் கொண்டு வருபவர்களைக் கூடப் பண்போடு உபசரிக்கும் பண்பாளர். நாவலர் சிறந்த தமிழறிஞர். தமிழில் பல புத்தகங்களை எழுதியுள்ளார். தி. மு. கழக நாளிதழான "நம் நாடு" பத்திரிகைக்கு ஒன்பது ஆண்டுகள் ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணா அவர்களால் 'நடமாடும் பல்கலைக்கழகம்'' என்று பாராட்டப்பட்டவர்.

1956ல் நாடாளு மன்ற முறைகளை அறிந்து வருவதற்காக இங்கிலாந்துக்கும், முதலாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கோலாலம்பூருக்கும் போய் வந்தார்.

1967ல் அறிஞர் அண்ணா அமைத்த அமைச்சரவையில் கல்வி, தொழில் அமைச்சராக இருந்தார். 1969 பிப்ரவரியில் அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டு பணியாற்றினார். பின்னர் கலைஞர் கருணாநிதி அமைச்சரவையில் கல்வி பொது நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்.

அரசியலில் நல்லவர்களைக் காண்பது அரிது. அந்த நல்லவர் நாவலர் நெடுஞ்செழியன் தான் என்றால் மிகையாகாது. பண்புள்ளம் கொண்ட அவரை எல்லோருமே போற்றிப் புகழ்கிறார்கள். எல்லோருடைய இதயத்தையும் கவர்ந்த அவர் இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

கல்விப் பணிக்குக் கணக்கற்ற உதவி

கல்வி வளர்ச்சி நிலையைப் பின்வரும் புள்ளி விவரங்களை தெற்றென எடுத்துக் காட்டும். 1966-67 ல் கல்விக்காக தமிழகத்தில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 45 கோடி ரூபாயாகும். 1969-70 ஆண்டிலோ ரூ. 67 கோடி செலவிடப் பட்டிருக்கிறது. கல்வித் துறையின் அரிய வளர்ச்சியினை எடுத்துக்காட்ட இதுவும் ஒரு அளவு கோலாக அமையும். 1947 ஆம் ஆண்டில் அன்றைய சென்னை மாநிலத்திலிருந்த தொடக்கப் பள்ளிகள் சுமார் 15,000 அவற்றில் கல்வி பயின்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை 16 இலட்சம். ஆனால் இன்று தமிழகத்தில் 32,000 தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் பயிலும் மாணவ மாணவியர் தொகை 63 இலட்சம். அன்றிருந்த உயர்நிலைப் பள்ளிகள் 573 தான். அவற்றில் பயின்றோர் தொகை சுமார் 3 இலட்சமே. இன்றோ 2,600 உயர்நிலைப் பள்ளிகள். அவற்றில் பயிலும் மாணவ, மாணவியரோ 15 இலட்சம்.

மதிய உணவுத் திட்டம் தமிழகத்தில் தான் முதன் முதலில் துவங்கப்பட்டது. இன்று சுமார் 18 இலட்சம் குழந்தைகள் இதனால் பயனடைகின்றனர். 'கேர்' நிறுவனத்தினரின் உதவி கொண்டு 1967 ம் ஆண்டிலிருந்து மதிய உணவுச் சமையற் கூடம் அமைக்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு மட்டும் 30 இடங்களில் மையச் சமையற் கூடங்கள் கட்டி முடிக்கப்படும்.

பள்ளிகளின் தேவைகளும் பெருகியுள்ளன. தத்தம் ஊர் பள்ளிகளின் தேவைகளை நிறை செய்ய ஊர்ப் பொது மக்களே முன் வந்துள்ளனர். இதன் விளைவே பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள். இதுவரை 379 மாநாடுகள் நடந்துள்ளன. அவற்றால் கிடைத்த கட்டிடங்கள், கருவிகள், பொருட்கள் இவைகளின் மதிப்புப் பத்துக் கோடி ரூபாய்க்கும் அதிகமாகும். இவ்வாண்டில் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 81 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

தொழிலதிபர், ஜி.டி.நாயுடு.

இலக்கிய அருவி

பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார்

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அரை நூற்றாண்டு ஆண்டுகளைக் கடந்து அடுத்த ஆண்டில் — ஐம்பத்தொன்றில் — அடியெடுத்து வைக்க இருக்கின்றார் என்ற செய்தி கரைகாணாக் களிப்புக் கடலில் ஆழ்த்துகின்றது

பிறந்தார் வளர்ந்தார் என்றில்லாமல், சிறந்தது பயிற்றல் பிறந்ததன் பயன் என்று கருதி, பட்டம்பெற்றுப் பதவிக்குச் செல்லாமல், தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தம்மை ஆளாக்கிக்கொண்டு அயராது உழைத்து வரும் அரிய செம்மல் ஆவார். நற்றமிழ் நாட்டை நன்முறை ஆளவில்லையேல் "உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக என் நிலவரை" என வஞ்சினம் கூறிய பாண்டி நாட்டுப் பெருமன்னன் நெடுஞ்செழியன் பெயரைத் தமக்குச் சூட்டிக்கொண்டதிலிருந்து இவர் குறிக்கோளும் செயல் திட்டமும் தெற்றென விளங்கும்.

அடிமைப்பட்டு மிடிமை புகுந்து அறிவிழந்து அல்லலுறும் தமிழ்மக்களை உய்விக்கப் பகுத்தறிவுப் பாசறை அமைத்த பெரியார் அவர்களின் பெரும்படையின் ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணாவின் முன்னணியில் முற்றுற்ற தம்பியாய் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அடைந்த இன்னல்களும் மிகப்பல.

'நாவலர்' எனின் இன்று நமது அன்பர் நெடுஞ்செழியனையே குறிக்கும். கடல்மடை திறந்தாற்போல் இலக்கிய அருவி பெருக்கெடுத்து ஓடிக் கேட்போர் செவிகளில் தேனென்னப் பாயும். உரைக்க வேண்டிய பொருள்களை உள்ளத்தமைத்து, மெய்ப்பாடு தோன்றக் குரலை ஏற்றியும் தாழ்த்தியும் கடல் அலைபோல் கருத்தலைகள் தவழ்ந்துவர, பல்வேறு பொருள்கள் பற்றியும் பாங்குடன் உரைத்துக் கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்ப மொழிந்து உள்ளங்களைக் கொள்ளை கொள்வதனால் பல்கலைக் களஞ்சியம் எனவும், நடமாடும் பல்கலை நிலையம் எனவும் நாட்டு மக்கள் புகழாரம் சூட்டுவர்.

தமிழகச் சட்டமன்றப் பேரவையின் எதிர்கட்சித் தலைவராய் இனிய பணியாற்றி இலங்கு புகழ்கொண்ட இவர் பேரறிஞர் அண்ணா அமைச்சரவையிலும் தமிழ்வேள் கலைஞர் அமைச்சரவையிலும் கல்வித்துறை அமைச்சராய் மாற்றுக்கட்சியினரும் போற்றும் வண்ணம் அமைதியாக அரும்பணி ஆற்றி வருகின்றார். அன்னைத் தமிழை அரியணையில் அமர்த்தும் பணியில் உலையாது உழைக்க முற்பட்டுவரும் நாவலர் அவர்கள் இன்னும் ஐம்பதாண்டுக்கு மேலும் இனிதே எல்லா நலன்களும் பெற்று வாழ்வாராக.

இவருக்கு இனிய துணையாக அமைந்து வாழ்வுநலம் சிறக்குமாறு அயராது அரும்பணியாற்றும் இவர் வாழ்க்கைத் துணைவி திருமதி விசாலாட்சியம்மையின் இன்புறு இன்னகைப் பெருவெள்ளத்தில் என்றும் நிலைத்து வாழ்வாராக.

வாழ்க பொன்விழாக் காணும் நாவலரும் அவர் நல்வாழ்க்கைத் துணைவியும். வாழ்க பல்லாண்டு, வளர்தமிழ்போல்.







அமைச்சர் நெடுஞ்செழியன் ஆற்றுப் படை

(ஆசிரியப்பா)

பூவுல கனைத்தும் போற்றுநன் னாட்டினில்
பாவலர் புகழும் பழம்பெரு நாட்டினில்
ஒப்பிலாத் திருவினை ஒருபொது மறையினை
இப்புவிக் கீந்தவர் இருந்தவிந் நாட்டினில்
ஆசா னிடத்தில் அடிபணிந் திருந்து
மாசிலா அன்பினை மாண்புறக் காட்டி
இருவென இருந்தவர் எழுவென எழுந்து
பெருநிலம் வாழ்த்தப் பிறங்கி நின்ற
மாணவர் வழிவழி வாழ்ந்த நாட்டினில்
காணருஞ் சான்றோர் கவினுற மேவி
அளவிலா நீதிநூல் ஆக்கி அளித்திவ்
விளைஞரை வளர்த்த இத்தமிழ் நாட்டினில்
என்ன சொல்லுவன்! இயம்புதற் கில்லை
நன்மை தீமை நாடுத லின்றி
எடுத்தவைக் கெல்லாம் எதிர்ப்புக் காட்டிப்
படிப்பு நிறுத்தமும் பவனி வருதலும்
ஆசிரி யருக்கும் அடங்காத் துணிவும்
மாசறக் கற்க மனமிலா நிலையும்
ஒழிக என்னும் ஓயாக் கூச்சலும்
இழிசெயல் இயற்றவும் அஞ்சிடா இயல்பும்
இத்தமி ழகத்தில் எங்கும் காண்கிறேன்;
புத்தகக் கல்வி பெருகி வழியினும்
ஒழுக்க நிலைக்கும் ஒழுங்கு முறைக்கும்
விழுமிய மதிப்போ விளம்பிடின் காண்கிலேன்;
என்ன செய்குவம்! என்றுளம் நொந்து
துன்பக் கடலில் தோய்ந்து நிற்குங்
கல்வித் தொண்ட! கலையறி புலவ!
அல்லற் படுதலை அறிகிறேன் நின்னிடம்
தொன்னகர் மதுரை நன்னக ரினரென
உன்தமிழ்ப் பேச்சால் உணர்கிறேன் ஐய!
வருந்துதல் வேண்டா வணக்கம்நல் லன்ப!
அருந்துக 'சோடா' ஐய இங் கமர்க!
நவிலுவன் நினக்கு நாடிக் கேண்மதி!
அவனியில் எங்குமே இதுநிலை அறிக.
அனைவர்க்கும் கல்வி அளித்திட அந்நாள்
முனைந்த தில்லை முன்னுள் அரசுகள்
குருகுல முறையில் குவலயத் தந்நாள்
தெரிந்தெடுத் தளித்தனர் தெளிந்த சான்றோர்.
இன்றைய அரசுகள் மக்களுக் கெல்லாம்
நன்முறைக் கல்வி நல்கு கின்றன.
எனவே, பண்பினை இந்நாள் அன்ப!
அனைவ ரிடமும் காணுதல் அரிதே.
வள்ளுவர் தாமும் வான்புகழ்க் கம்பரும்
உள்ளத் தொழுக்கமும் இறைவனை உணர்தலும்
நடுநிலை யுடனே நன்முறை வாழ்வும்
படிப்பின் நோக்கமாய்ப் பகர்ந்தனர் அந்நாள்.
இந்நாட் கல்விக் கிருந்திடும் நோக்கமோ
செந்தமிழ்க் கவிஞர்கள் செப்பிய வற்றுடன்
வாழும் வகைக்கு வழிகாண் முறையொடு
வாழும் மன்பதை வளர்ச்சிக் குழைப்பதும்
அறிவியல் முறையில் அறிவதும் ஆய்வதும்
குறுகிய மதியினைக் குலைத்திட முயல்வதும்
விதிவழி எனது விருப்பொடு முனைவதும்
புதுப்பொருள் புனைதலும் புதுமை காணலும்
உலக ஒற்றுமைக் குறுதுணை யாதலும்
நலமிகு நோக்கமாய் நவிலுவர் பெரியோர்.
இந்நாட் சூழலுக் கேற்ற நிலையினில்
செந்தமிழ் நாட்டுச் சிறுவரும் உள்ளனர்.
குறைகளே இலையெனக் கூற வில்லை.
அறைந்திடின் உண்மை ஐய! விளங்கிடும்.
ஈனக் கொள்கைக் கட்சிகள் சிலபிடித்
தான வகையில் ஆட்டிவைக் கின்றன.
சார்ந்த வண்ணம் சேர்ந்திடும் மாணவர்
ஈர்த்துக் கொள்ளப் படுகிறார் இந்நாள்.
என்ன செய்வ திந்நாள் சூழ்நிலை!
பன்னிப் பன்னிப் பகரினும் வழியிலை.
எல்லாச் சிறுவரும் இப்படி யில்லை.
சில்லோர் பலரைக் கெடுத்திடச் செய்கிறார்.
வல்லான் வகுத்தது வாய்க்கா லன்றோ?
நல்ல கட்சியும் நாட்டில் உண்டே.
அவைதாம் மாணவர்க் கறிவுறுத் திடிலும்
நவைமிகு கருத்தே நன்றேங்கு கிறதே!
அந்நாள் மாணவர் தம்மிலும் ஐய!
இந்நாள் மாணவர் எல்லாம் அறிந்தவர்.

இலக்கிய அறிவோ இல்லா திருக்கலாம்.
இலக்கியம் கற்போர் இனிமேல் சிலரே.
தொழில்நற் கல்வியே தொடர்ந்து வளர்ந்திடும்.
உழைப்புக் கல்வியே உயர்த்திடும் நாட்டினை
என்ப தறிக என்னரு நண்ப!
பன்னூ ருயிரம் பணியின் றிருப்பதால்
கலகமும் குழப்பமும் காணுதல் இயற்கை.
நலமிகு வேலைகள் நாட்டில் வளர்ந்திடின்
கலகமும் இராது; கயமையும் இராது.
நலம்மிக நாடும் நன்னிலை யுற்றிடும்.
கல்வித் தொண்ட! கலக்க முருதே!
நல்வழி பலவும் நாடிட முயன்றிடின்
இந்திய நாடே இந்நாள் புகழ்ந்திடும்
செந்தமிழ் நாட்டின் செங்கோல் ஆட்சியில்
கல்வி யமைச்சராய் கருத்துடன் பணிசெயும்
நல்ல அறிஞர் நாவலர் கோமான்
நெடுஞ்செழிய னிடம் நேரில் சென்றிடின்
நடுவு நிலைமையில் நன்கறிந் திடுவாய்!
அவர்வர லாற்றை அறைகுவன் நண்ப!
உவந்து கேண்மதி உண்மை தெளிந்திட!
வளம்மிகு தஞ்சை வடகாளத் தூரில்
நலன்தரப் பிறந்துநற் பட்டுக் கோட்டையில்
பள்ளிப் படிப்பைப் பாங்குடன் முடித்து
வள்ளல் அண்ணா மலையார் நிறுவிய
அண்ணா மலைப்பல் கலைக்கழகம் அடைந்து
தண்டமிழ் கற்றுத் தனிச்சிறப் புற்றிட
முதுகலைப் பட்டம் முனைந்து பெற்றும்
இதமுடன் மக்களுக் குழைத்திடும் இயல்புடன்
பெரியார் கட்சியில் பிறங்கிடச் சேர்ந்தே
அரியநற் றெண்டுகள் ஆற்றிய பின்னர்
இருமொழி நாவலர் ஏழைபங் காளர்
அருங்கலைச் செல்வர் அண்ணா வுடனே
திராவிடமுன் னேற்றக் கழகம் தொடங்கி
பராவருந் தலைவர் பண்பாட்டுச் செல்வர்
அண்ணா தலைமையில் அரியநல் தம்பியாய்த்
தொண்டுகள் பலவும் தொடர்ந்து செய்து
சட்ட சபையில் புகுந்தச் சபையின்
தக்க எதிர்கட்சித் தலைவராய் விளங்கி,
அண்ணா ஆட்சியை ஏற்ற அந்நாள்
அண்ணன் தலைமையில் அமைச்ச ராகி
இந்நா டுற்ற இருந்தவக் குறைவால்
எந்நாட் டவரும் ஏற்றிடும் அண்ணா

கன்னல் மொழியால் கவர்ந்திடப் பேசுங்
கலைஞர் கவிஞர் கருணா நிதியவர்
தலைமை ஏற்ற தனியர சவையில்
கல்வி அமைச்சராய்க் கல்வித் தொண்டினை
நல்ல முறையில் நாடு புகழ்ந்திடச்
செய்து வந்திடும் செம்ம லவரை
எய்திடின் ஐய, எல்லாம் அறிகுவாய்!
அன்னவர் பெயருக் கேற்ற வாறு
நன்னர் வடிவொடு காட்சி நல்குவர்;
புன்னகை யோடு புரிந்திட விளக்குவர்;
அன்னார் பண்பினை அறைகுவன் கேண்மதி;
தென்தமிழ் நாட்டின் சிந்தனைச் செல்வர்;
உன்னரும் பண்பினர்; உற்றது செய்பவர்;
நாவலர் போற்றிடும் நாவலர் கோமான்;
பாவலர் புகழும் பைந்தமிழ்ப் புலவர்;
எண்ணிய தஞ்சா துரைத்திடும் ஏந்தல்;
தண்டமிழ் வளர்த்திடத் தொண்டுகள்
செய்பவர்;

முன்னேற்றக் கழக முன்னணித் தலைவர்;
அன்புளங் கொண்ட அண்ணல் அவர்காண்;
அகவை ஐம்பதை அடைந்த இளைஞர்;
தகைமை மிக்க தமிழர் தலைவர்;
உலகத் தமிழ்மா நாட்டைச் சென்னையில்
நலமுற நடத்திய நற்றமிழ் அண்ணல்.

அவரை,

நீல நன்மலை நீள்கடல் எண்ணூர்
கோலத் திருத்தணி குமரி நன்முனை
ஆன எல்லையில் அடங்கித் திகழ்ந்திடும்
ஞானத் தமிழகம் எங்கும் காணலாம்.

அதா அன்று,

செந்தமிழ் மொழியினைச் சிறப்புற இந்நாள்
முந்துற வளர்த்திடும் முதுநக ரானதும்
உலகில் அழகிய கடற்கரை உள்ளதும்
கலையெலாம் பேணும் கவின்நக ராவதும்
தொண்டைநன் னாட்டின் நன்னக ராவதும்
பண்புறு சான்றோர் பலர்மிக வாழ்வதும்
வந்தவர் தமையெலாம் வரவேற் றினிதாய்ச்
செந்தமிழ்ப் பண்புடன் செறுபகை இன்றி
அன்புடன் போற்றி அணைப்பது மான
சென்னையம் பதியில் செயின்ட் ஜார்ஜ்
கோட்டையில்
இன்புறக்கண்டே இனிது
பேசலாம்.
பாட மொழியாய்ப்
பகர்கலை வகுப்பினும்
ஏடுகள் தமிழில்
ஏற்படும் வரைக்கும்

அந்தோ! மறைந்த
அந்த நாளில்
இந்தநல் லரசின் எழிற்
றலை அமைச்சராய்
சின்னாள் பணி செய்
திருந்த பின்பு —

பேராசிரியர்,
அ.கி.பரந்தாமனர்.

வேதியல் பயிரியல் விலங்கியல் கணக்கியல்
ஆதிய அறிவியல் பாடம் அனைத்தும்
ஆங்கில மொழியில் அருங்கலை வகுப்பில்
பாங்குறக் கற்பது பயன்தரும் என்பர்.
தூய தமிழெனத் தொல்லை யுருமல்
ஆய முறையில் அறிவிய லதனை
தொடக்க நிலையில் சொல்லுக என்பர்.
அடக்கமாய் இதனை அன்புடன் செப்புவர்.
ஆங்கிலம் தமிழக அருந்துணை மொழியாய்ப்
பாங்குறச் சிறப்பாய் பயிலுக என்பர்.
உலகில் முப்பது கோடி மக்களின்
நலமிகு தாய்மொழி நல்லாங் கிலமாகும்.
அறுபது கோடி மக்கள் அதனை
உறுதுணை மொழியாய் உற்றுளர் அதனால்
உலகத் தொடர்பினை உற்றிட ஆங்கிலம்
நலமிகு வாணிக நன்மொழி யாமென
அறிந்ததைக் கற்றிட அறிவுரை கூறுவர்.
செறிந்த அறிவால் செப்புவ திதுகாண்.
இப்படி அறிவுரை இயம்புவர் அறிகுதி!
செப்பிடின் இருமொழித் திட்டம் இதுகாண்.
கல்வித் தொண்ட, கலையறி புலவ,
அல்லற் படுவதை அகற்றி மாணவர்
நல்வழி உற்றிட நாடுக நற்பணி !
எல்லா நற்பயன் இனிதுறும் நாடும் !
வாழ்க தமிழகம் வாழ்க தமிழ்மொழி !
வாழ்க தமிழகக் கல்வித் திட்டம் !
வாழ்க அவர்குடி வாழ்க !
வாழ்க நெடுஞ்செழியனுர்! வாழ்கபல்லாண்டே!

மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக மக்களின் அலகுகளும் பெருகும் என்பதைப் பகுத்தறிவு இயக்கம் தமிழ்நாட்டில் சென்ற நாற்பது ஆண்டுக் காலம் தீவிரமாகக் கொள்கையைப் பரப்பச் செய்து வருகிறது. 1930 ஆம் ஆண்டுவாக்கிலேயே பெரியார் இராமசாமி அவர்கள் நடத்திவந்த 'குடியரசு' இதழ் கருத்தடை இயக்கத்தின் இன்றியமையாமை பறறிக் கட்டுரைகள் பல தீட்டிற்று அப்பொழுது அந்தக் கருத்தைச் சமயத்தின் பேராலும், சாதியின் பேராலும், குருட்டு நம்பிக்கையின் காரணமாகவும், மூடப் பழக்க வழக்கத்தின் காரணமாகவும் பிற்போக்கான வர்கள், பின் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், கடுமையாக எதிர்த்து வந்தனர். அதன் விளைவு தான் இப்பொழுது இந்தியா இருள் சூழ்ந்த ஒரு எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறது.

—நாவலர்

நடிப்பவரும் பார்ப்பவரும்

தி. மு. கழகத்திற்கும், தி. மா. முன்னேற்றக் கழகத்திற்கும் என்ன வேறுபாடு என்ருல்,

(1) தி. மு. கழகம் கொள்கை, குறிக்கோள் ஆகியவற்றை வகுக்கும்; தி. மா. மு. கழகம் அவற்றைத் தழுவி நிற்கும்.

(2) தி. மு. கழகம் தேர்தல், அறப் போராட்டம் போன்ற நேரடிப் பணிகளில் இறங்கும்; தி. மா. மு. கழகம அரசியலை அறிந்து கொள்ளும், ஆனல் நேரடி நடவடிக்கைகளில் இறங்காது.

(3) தி. மு. கழகக்தில் மாணவர் அல்லாத எல்லாத் துறையினரும், நிலையினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்; தி. மா. மு. கழகத்தில் பதினறு வயதுக்கு மேற்பட்ட மாணவர்களே இடம் பெறுவர்.

(4) தி. மு. கழகத்திற்குத் தனிச் சட்ட திட்டம் உண்டு; தி. மா. மு. கழகத்திற்கு வேறு சட்டதிட்டம் உண்டு.

(5) தி. மு. கழகத்தார் 'அரசியல் நாடகத்தில்' பங்கேற்று 'நடிப்பவர்களாக' இருப்பார்கள்; தி. மா. மு. கழகத்தார் 'அரசியல் நாடகத்தைப்' பார்த்துக் கொண்டிருக்கும் 'பார்வையாளராக இருப்பார்கள்.

பொதுவாக மாணவர்களுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பைப்பற்றிக் கூற வருகிறவர்கள் மூவகையினராக இருக்கிருர்கள் (அ) மாணவர்கள் அரசியலில் அறவே ஈடுபடக் கூடாது என்று ஒரு சாரரும்; (ஆ) மாணவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் நேரடியாகவே ஈடுபடவேண்டும் என்று மற்றொரு சாரரும்; (இ) மாணவர்கள் அன்ருட அரசியலை அறிந்து கொள்ளத்தான்வேண்டும்; ஆனல் அவர்கள் நேரடியாகப் பங்குகொள்ளக் கூடாது என்று வேருெரு சாரரும் கூறிவருகின்றனர் தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் மூன்ருவது கருத்தைத்தான் கடைப்பிடித்து வருகிறது.

நெஞ்சு நிறைந்த உவகையைத் தருகின்றது

புலவர் மா. நன்னன்

1943-44 ஆம் ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 26-ஆம் எண்ணுள்ள கூடத்திலே தமிழ் இலக்கிய மன்றக் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். மாலை நேரங்களில் நடைபெற்ற அக்கூட்டங்களுக்குச் சிறப்புக்குரிய பேராசிரியர் ஒருவர் தலைமை ஏற்பார். ஆராய்ச்சித் திறன் வாய்ந்த அறிஞர் ஒருவர் அல்லது இருவர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர். சொற்பொழிவைக் கேட்பதற்கு அவையில் ஐம்பதின் மருக்கும் குறைவானவர்களே கூடியிருப்பார்கள். தொடக்கத்தில் குறைவாக இருப்பினும் நேரம் ஆக ஆகக் கூட்டம் பெருகத் தொடங்கிவிடும். கூட்ட நிகழ்ச்சிகள் முடியப் போகும் நேரத்தில் கூட்டத்தினர் கூடம் நிரம்பி இருபுறத் தாழ்வாரங்களிலும் குழுமி நிற்பர். தலைவரின் முடிவுரை முடிவுறும் நேரத்தில் கூட்டம் உச்ச எல்லையைத் தொட்டுவிடும். பொதுவாகக் கூட்டம் கலைந்து செல்லத் தொடங்கும் நேரத்தில் இலக்கிய மன்றக் கூட்டத்தில் மட்டும் கூட்டம் நிறைந்து நிற்பதற்குக் காரணம் மன்றச் செயலாளரின் நன்றியுரையைச் செவிமடுக்கும் வேட்கையேயாகும். பிற இடங்களிலெல்லாம் நன்றியை எதிர் பாராத நற் பண்புடன் நன்றி நவிலப் படும்போது கலைந்து செல்லுகின்ற மக்களைக் காணும் நமக்கு நன்றியுரையை எதிர் பார்த்துக் கூட்டம் முடியும் நிலையில் சிறப்பாக மாணவர் குழாம் குழுமி நிற்பது வியப்பாகவே இருக்கும். அங்ஙனம் மாணவர் அனைவரின் பெரு வேட்கையையும் தூண்டிவிட்டு அவர்களைக் கவர்ந்து ஈர்த்துப் பிணைத்து நிறுத்தும் ஆற்றல் வாய்ந்த நன்றியுரை கூறும் திறம்பெற்று அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தினது செயலாளராகத் திகழ்ந்தவர் **சோணாட்டு வடக்காலத்தூர் இளநதாடி நெடுஞ் செழியனாராவார்.** நாவலர் என்று இன்று நம்மனைவராலும் அன்புடனழைக்கப்படும் பண்பின் திருவுருவாம் மேதகு அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அவைகளில் தூய வெண்மையான முழு உடையுடன் எடுப்பாக நின்று தலையை இருபுறமும் அசைப்பதின் மூலம் தமது இளநளம் வாய்ந்த கருந்தாடியை இப்புறமும் அப்புறமும் திருப்பிக் கருந்தாடிச் செறிவுக் கிடையே அழகான வெண்பல் இலங்கக் கைகளை உயர்த்தி எழும்பி எழும்பித் தமிழ் மழை பொழிந்த காட்சி இன்று நினைப்பினும் **நெஞ்சு நிறைந்த உவகையைத் தருகின்றது.**

"அன்பு கெழுமிய தோழர்களே! மதிப்பிற் குரிய தோழியர்களே!" என்று தமது வெண் கலக் குரலெடுத்து அவர் பேசத் தொடங்கிவிட்டால் அவரது உரை முடியும்வரையில் கூட்டத்தினரும் வெளியில் அண்டை அயலில் நிற்போரும் ஆடாது அசையாது நின்று கேட்கும் பெற்றிமை வாய்ந்தது அவரது பேச்சு. அன்றைய தமிழக மாணவருலகில் நாவலரும், பேராசிரியரும் ஆகிய பகுத்தறிவுக் காளையரைச் சொற் போட்டிகளில் வெல்ல வல்லார் எவருமே இல்லை. அவ்விருவரும் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று சொன்மாரி பொழிந்து பொதுவாகத் தமிழ் மாந்தரனைவரையும், சிறப்பாகத் தமிழக மாணவருலகையும் பகுத்தறிவுப் பாதையில் உடனழைத்துச் சென்றனர். சென்னை முதலிய பல இடங்களில் நிகழ்ந்த பேச்சுப் போட்டிகளில் இவ்விரட்டையர்களே முதற் பரிசு பெற்றுத் திகழ்ந்தனர்.

மாறுன கொள்கையை உடைய மாணவரும் நாவலரது இனிய எடுப்பான புகழுரையைக் கேட்கத் தவற மாட்டார்கள். கேட்டவர்கள் பையப் பைய அவருடன் நெருங்கிப் பழக விரும்புவர். பழகப் பழக நாவலரது பண்பு மற்றவர்களைத் தம்முடன் பிணைத்து பிரியாத் தன்மையை உண்டாக்கி அவர்களைப் பகுத்தறிவுப் பாசறையில் புதிய படைவீரர்களாகச் சேர்க்க வல்லதாகும். அங்ஙனம் அவரது பேச்சாலும் இனிய பண்பாலும் கவரப்பட்டுப் பகுத்தறிவுப் பாசறையில் இடம் பெற்றவர்களில், காங்கிரசுக் கொள்கையையும், கடவுட் கொள்கையையும் இரு கண்களாகக் கொண்டிருந்து பின்னர் அவற்றுக்கு மாறுகப் பகுத்தறிவையும் பைந்தமிழை

யும் இரு கண்களாகப் பீடுடன் ஏற்றுக் கொண்ட நானும் ஒருவன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அக் காலத்தில் பகுத்தறிவுக் கொள்கையையும் பைந் தமிழ் முன்னேற்றத்தையும் வளர்க்கும் திருப்பணியை எழுதவொண்ணாப் பேரிடையூறுகளுக்கிடையிலேயும் தொடர்ந்து நடத்தி வந்த பெருமை பேராசிரியர் அன்பழகன் அவர்களையும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையுமே சாரும். அப்போது பகுத்தறிவியக்க இதழாகத் திகழ்ந்த “குடியரசு” என்னும் இதழையும் பின்னர் அறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட “திராவிடநாடு” என்னும் இதழையும் வெளிப்படையாகக் கையில் எடுத்துக் கொண்டு மாணவர் கூட்டத்திற்கிடையே செல்லவும் முடியாதெனில் அன்றைக்குப் பகுத்தறிவாளர்க்குக் கிடைத்திருந்த நிலையை நன்குணரலாம். விழிப்புற்ற மாணவர் குழாத்தை அங்குத் தோற்றுவித்துக் கட்டிக் காத்து நிலைத்து வளர்ந்து பல்கச் செய்த அவர்களுக்கு நாவலரின் இளவல் இரா. செழியன் அவர்களும், இன்றைய உணவமைச்சர் மேதகு மதியழகன் அவர்களும், சட்ட மன்ற உறுப்பினர் கடலூர் இளம்வழுதி அவர்களும், பூ. கணேசன் முதலிய பத்துப் பதினைந்து பேர்களும் உறுதுணையாக இருந்தனர். அந்தப் பாசறையில் சேர்ந்திருந்த பேற்றை என் வாழ்விலேயே பெறலரும் பேறாக நான் இன்றும் கருதுகின்றேன். என்னை நல்ல தமிழ் மகனாக்கியது (மனிதனாக்கியது) அத் தொடர்பேயாகும்.

மற்றவர்களோடு கலந்து தம் கொள்கைகளை ஆராய்ந்து நிலைநாட்டுவதில் நாவலர் தனித்த போக்குடையவர். எதிரி கூறுவது எத்தனை மட்டமான கருத்தாக, ஒவ்வாத கருத்தாக இருப்பினும், அவர் தம் கருந்தாடிக் கிடையிலே வெண் பல் துலங்க நின்று பொறுமையோடு கேட்பார். அதுவே மாற்றானின் உள்ளத்தை ஓரளவு மாற்றி விடும். முற்றும் கேட்ட பின் படிப் படியாகத் தம் கொள்கையை எதிரிக்கு ஏற்ற அளவுக்கு விளக்கிக் கூறி அவனை சிறிது சிறிதாகத் தம்மிடம் ஈர்த்துக் கொள்ளும் திறம் நாவலருக்கு நிரம்ப உண்டு. அவரினும் இளைய என்னைப் போன்ற நண்பர்கள உரிமையோடு அவரிடம் பழைமை பாராட்டினால் அதனை அன்புடன் ஏற்கும் கெழுதகைமை அவரிடம் நிரம்ப உண்டு. இதுபோன்று கண்டிப்பும் ஒழுங்கும் அவரது உடன் பிறப்புக்களாகவே அன்றும் துலங்கின என்பதை மறைக்க முடியாது.

செயல் திட்டங்களை வகுத்து ஒழுங்காக நிறைவேற்றுவதில் அவர் அப்போதும் தனித்த போக்குடையவராகவே இருந்தார். அவரது அறிவில் அவ்வப்போது நல்ல நல்ல திட்டங்கள் அன்றைய நிலைக்கேற்ப உருவாகும். தமிழிசைக் கிளர்ச்சியின் பயனாகத் தமிழின் மாணவரனைவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கட்சி வேறு பாடுகளை மறந்து ஒன்று பட்டிருந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு பகுத்தறிவுப் பாசறை பெரியார் அவர்களை முதன் முறையாகப் பல்கலைக் கழகத்திற்கு அழைப்பித்துச் சொற்பொழிவாற்ற வைத்தது. அப்போது நாங்களனைவரும் பெரியார் அவர்களுடனிருந்து படம் எடுத்துக் கொண்டோம். அப்படத்திற்குத் தந்த தலைப்பு “**தன்மானக் கடலும் நன்மாணவ அலைகளும்**” என்பதாகும். அடுத்துப் பின்னர் புரட்சிக் கவிஞர் அவர்களுடன் நாங்கள் எடுத்துக் கொண்ட படத்திற்குப் “**புரட்சித் தீயும் போர்ப் பொறிகளும்**” என்று பெயர் கொடுத்தோம். கட்சியில் எங்கும் எப்போதும் உறுதியாக இருந்து நாங்கள் எட்டுப் பேர் சேர்ந்து ஒரு படம் எடுத்துக் கொண்டோம். அதற்கு “**கடற் பாறைகள்**” என்று பெயரளித்தோம். அத்தகு சூழ்நிலையிற்றான் அறிஞர் அண்ணா அவர்கள் முதன் முறையாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்து “**ஆற்றோரம்**” என்னும் புதுமைத் தலைப்பில் புரட்சிக் கருத்துக்களை பொழிந்தார்கள்.

ஓர் ஆண்டு தீபாவளிக்கு முன்னாளிரவு எங்கள் பாசறை கூடிற்று. வழக்கம் போல் நாவலர் அன்றைய ஆய்வில் சிறப்பாகப் பங்கேற்றார்; திட்டம் உருவாயிற்று. அதன்படி பிற மாணவரனைவரும் உறங்கிய பின் நாங்கள் ஏழெட்டுப் பேர்கள் மட்டும் எழுந்து கைகளில் சுண்ணாம்புக் கலவையும் மட்டையும் எடுத்துக் கொண்டு சென்று அண்ணாமலை நகரில் சாலைகளில் (சுவர்களில் அல்ல) பகுத்தறிவுப் பொன்மொழிகள் பலவற்றை எழுதினோம். அவற்றுட் சில வருமாறு:- “கண் மூடிப் பழக்க மெலாம் மண் மூடிப் போக”, “பகுத்தறிவு ஓங்குக”, “மூட நம்பிக்கை ஒழிக”, “தமிழர்களே! தீபாவளியைக் கொண்டாடாதீர்கள்”, “மகளிர் மடமை அடிமை ஒழிக!” இவற்றை எழுதிவிட்டு மற்ற மாணவர்கள் விழித்து எழும் நேரத்தில் நாங்கள்

உறங்கச் சென்று விட்டோம். காலையில் மற்றவர்களுடன் கலந்து நாங்களும் நகர்வலம் வந்து அப்பொன்மொழிகள் வழங்கிய காட்சியையும், அவை தோற்றுவித்த கருத்துப் புரட்சியையும் கண்டு களித்தோம்.

நாவலர் அவர்கள் பேராசிரியர் அன்பழகன் முதலியோருடன் கூட நாடகங்களிலும் நடித்துள்ளார். மடத் தலைவர்களாகத் தோன்றிய அவர்கள் மடம், கோவில் முதலியவற்றில் குவிந்து கிடக்கும் செல்வத்தை யெல்லாம், கல்வி முன்னேற்றத்திற்குச் செலவிட வேண்டும் என்று முடிவெடுப்பதாக அமைந்திருந்த ஒரு நாடகம் என் உள்ளத்தில் பதிந்திருக்கிறது. உடன் பயிலும் மாணவரைக் கவர்வது போன்றே தமிழ்ப் பேராசிரியர்களையும் கவர்ந்து கொள்ளும் பண்பு நலம் வாய்ந்தவர் நாவலராவர்கள். பேராசிரியர்களான கா. சு. பிள்ளை, அ. சிதம்பர நாதனார், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை முதலிய பேராசிரியர்கள் பலரும் நாவலர் அவர்களைப் பெரிதும் விரும்பிப் பாராட்டுவர். மற்றும் நாவலர் பயின்ற போது, பல்கலைக் கழகத்துக்குச் சிறப்புச் சொற்பொழிவாற்ற வந்த ஈராசுப் பாதிரியார் நாவலர் சோம சுந்தர பாரதியார் மறைமலை அடிகளார் ஈழத்து விபுலானந்த அடிகளார் முதலியோராலும் நன்கு மதிக்கப்பட்டுப் பாராட்டப் பெற்றவர் நம் நாவலர்.

குடந்தையில் தவமணி இராசன் அவர்களின் சீரிய முயற்சியால் திராவிட மாணவர் மாநாடு முதன் முறையாகக் கூட்டப்பட்டது. திராவிட மாணவரியக்கத்துக்கு அம் மாநாடே கால்கோளாக அமைந்த தென்னலாம். இரு நாட்கள் நடைபெற்ற அம் மாநாடு நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு நடைபெற்றது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவர் தலைமை ஏற்றுச் சிறப்பித்தனர். அப்போது புதுக்கோட்டைத் திவானாக விளங்கிய கானபகதூர் கலிபுல்லா போன்ற சான்றோர்கள் மூன்று பகுதிகட்குத் தலைவர்களாக விளங்கினர். அப் பெரியோர்கட்கிணையாக நம் இளநாவலர் ஒரு பகுதிக்குத் தலைவராக இருந்து மாநாட்டினைச் சிறப்புற நிகழ்வித்தனரெனில் நாவலர் தலைமைப் பொறுப்புக்கு அப்போதே ஏற்றவராக விளங்கினார் என்பது மிகையாகாது. நாங்கள் விடுமுறை நாட்களில் வெளியிடங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களுக்குத் தவறாமல் செல்வது வழக்கம். செல்லும் போதெல்லாம் எங்கள் படை பெரும்பாலும் ஒன்றாகவே செல்லும்; சிதம்பரத்திற்கும், புவனகிரி முதலிய ஊர்களுக்கும் கூட்டங்களுக்குச் சென்றால் திரும்ப வரும்போது (இரவு 10 மணிக்கு மேல்) நடந்தே வருவோம். வண்டி வசதியும் கிடைக்காது. அவற்றை ஏற்படுத்திக் கொள்ள கையில் காசும் இருப்பதரிது. இரவு உணவும் இல்லாமல் புவனகிரியில் கூட்டம் கேட்டு விட்டு அண்ணமலை நகருக்கு (ஏறத்தாழ ஏழுகல் தொலைவு) பலமுறை நடந்தே வந்திருக்கிறோம். அப்போதெல்லாம் எங்களுக்கு அலுப்போ, சலிப்போ ஏற்படாமல் காப்பது நாவலரின் குரலேயாகும். நான் கண்ட அமைச்சர் மேதகு நாவலர் இப்போதைப் போலவே அப்போதும் கூட எதனையுமே பொறுமையோடு முறைப்பட நன்கு எண்ணியே சொல்வார்; செய்வார். அவசரப்பட்டு எதனையும் ஆராயாது சொல்வதோ, செய்வதோ அவருக்கு விருப்பமற்றவை. எதிலும் செம்மையும், முழுமையும் திருத்தமும் இருக்க வேண்டும் என்பதில் அவருக்குக் கருத்து அதிகம் இருக்கும். தம்மைப் பற்றியும் அவர் தாழ்வாக எண்ணமாட்டார். தம் அறிவு, பண்பு, ஒழுக்கம், மாண்பு ஆகியவற்றில் அவருக்கு நிரம்ப நம்பிக்கையுண்டு. அது வீணானதன்று என்பதை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அவரது விழுமிய முயற்சியால், தமிழகத்தில் கல்வி, தொழில் முதலிய துறைகள் திருந்தி ஓங்கி வளரும் என்பதை எதிர்பார்க்க நாம் முழு உரிமை பெற்று மகிழ்கிறோம்.

உண்மை யான கவிஞன்

எதற்கும் அஞ்சாமல், விளைவைப் பற்றிக் கவலைப் படாமல், உண்மையைத் துணிவுடன் வெளியடுபவன்தான் உண்மையான கவிஞன் ஆகிறான். சிந்தையால்—சொல்லால்—செயலால் எதற்கும் அஞ்சாமல் பணியாமல், வளையாமல், நெளியாமல், விழாமல், சாயாமல் உள்ளதை உள்ளபடியே எடுத்துச் சொல்லுபவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார்.

— நாவலர்.

மதிப்பதில் பலவகை உண்டு

அரசியலில் மாற்றுக் கட்சிகளை மதிப்பதில் பல வகையுண்டு. கருத்தைச் செலவழித்து எடை போட்டு மதிப்பிடும் தரமும் உண்டு. கட்சியின் தனிப் பிரதிநிதிகள் மீது கல்லெறிந்து மரியாதை காட்டும் ரகமும் உண்டு.

சமீபத்தில் சென்னை சட்டசபை எதிர்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்களும் அவர் நண்பர்கள் சிலரும் பிரயாணம் செய்து கொண்டிருந்த கார் மீது சிலர் கல்லெறிந்து மாற்றுக் கட்சியினர் மீது மதிப்பைக் காண்பித்த செய்தி பத்திரிகைகளில் வெளியாயிருந்தது எல்லோருக்கும் தெரியும்.

திரு. நெடுஞ்செழியன் அவர்களையே சந்தித்து அவர் எப்படித் தம்முடைய மாற்றுக் கட்சிகளை மதிக்கிறார்; அரசியல் கட்சிகளில் கொள்கைக்கு முதலிடமா? தனி மனிதனுக்கு முதலிடமா? என்ற விவரம் பற்றித் தெரிந்து கொள்ள எழுந்த அவாவின் விளைவே இந்தப் பேட்டி. இவர் ஏவுகணைகளை வீசுவதில் சமர்த்தர் தான்! ஆனால் அவர் கணைகள் எதிராளிகளின் கொள்கைகளையும் லட்சியங்களையும் தான் குறி பார்க்குமே தவிர அவற்றின் நிழலில் ஒதுங்கும் தனி மனிதர்களையோ அவர் குறைபாடுகளையோ அல்ல! கருத்துக்கும் கல்லுக்கும் இங்கே தான் வித்தியாசம்.

திரு. நெடுஞ்செழியன் என்ன சொல்லுகிறார் பார்ப்போம்!

''ஜனநாயக நாட்டில் கட்சிகள் இருப்பதும் கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதும் இயற்கை ஆளும் கட்சி ஒரு புறமும்'' அதன் கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் திட்டத்திற்கும் மாறுபட்ட மற்ற கட்சிகள் எதிர்க் கட்சிகள் எனப்பெயர் பெற்று மறுபுறமும் நின்று பணியாற்றுகின்றன. இந்தக் கட்சிகள் இடமாற்றம் பெறுவது அவ்வப்போது பொது மக்களின் மன மாற்றத்தையும் அவர்கள் அளிக்கும் வோட்டுக்களின் எண்ணிக்கையையும் பொறுத்தது தான்.

''கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு அளித்து மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு, அருள், பற்று, நட்பு, உறவு ஆகியவற்றை ஒரு கட்சிக்காரர், மற்ற கட்சிக்காரருக்குக் காட்ட வேண்டியது சிறந்த ஜனநாயகப் பண்பாடாகும்.

''தன் தோட்டத்து ரோஜா தான் மணக்கும்; மாற்றான் தோட்டத்து ரோஜா என்றால் அது மணக்கவே செய்யாது' என்று கூறுவது அறிவுடைமையாகாது. மாற்றான் தோட்டத்து ரோஜா ஆனாலும் அது மணக்கும் போது மணக்கிறது என்று கூறுவதும் அதன் முள் குத்தும் போது அது குத்துகிறது என்பதும் தான் சிறந்த பண்பாடாகும். மாற்றுக் கட்சிக்காரரின் கொள்கைகளும் பண்புகளும் நல்லனவாக இருந்தால் அவற்றை மதிக்கவும், தீயனவாக இருந்தால் அவற்றை வெறுத்தொதுக்கவும் கற்றுக் கொள்வது சிறந்த ஜனநாயகப் பண்பாடாகும். ஆனால் மாற்றுக் கட்சியிலுள்ள தனி மனிதரின் சொந்தக் குறைபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முன்வந்து அதன் அடிப்படையில் அவர் சார்ந்திருக்கும் கட்சியைக் குறை கூறுவது என்பது பண்புக்குறைவான செயல். நாளையே அவர் மனம் மாறி கட்சி மாறலாம். அப்போது அவர் குறைபாடுகள், நிறைவடையுமா? அல்லது மற்றவர்களின் இலக்குக்குத் தப்ப முடியுமா?

''ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வது என்பதும் ஒரு மனிதனை மதிப்பது என்பதும் ஒன்றல்ல. தனித்தனியானவை யாகும். ஒரு கட்சிக்காரரின் கருத்தை மற்றொரு கட்சிக்காரர் ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம். அதே நிலையில் அவரை மதிக்கலாம். மதிக்க வேண்டும். கருத்திலே மாறுபட்ட

கல்கி-மேனு

வர்களை வெறுக்க வேண்டியது இன்றியமையா மையில்லை. அதே நேரத்தில் அவருடைய தனிப் பட்ட வாழ்க்கையின் குறைபாடுகளைத் தேடிப் பிடித்துப் பெரிதாக்கி அவர் சார்ந்த கட்சிக்கு மாசு கற்பிக்க முயற்சிக்காமலிருப்பது இன்றியமை யாததாகும். இந்தப் பண்பு தான் ஜனநாய கத்தை வளர்க்கும்.

"ஜனநாயகத்தில் கருத்துக்கு முன்னால் கருத்தையும் சொல்லுக்கு முன்னால் சொல்லை யும் எழுத்துக்கு முன்னால் எழுத்தையும் எடுத்துக் காட்டுக்கு முன்னால் எடுத்துக் காட்டையும், வாதத்துக்கு முன்னால் வாதத் தையும், நேர்மையாக, நாணயமாக, ஒழுங்காக உண்மையாக வைத்துத் தம் கொள்கையிலே வெற்றி பெற முயலுவது தான் ஒரு கட்சியைச் சார்ந்தவருக்கு அழகாகும். கருத்துக்கு முன்னால் கல்லையும், சொல்லுக்கு முன்னால் தடியையும் எழுத்திற்கு முன்னால் கத்தியையும், எடுத்துக் காட்டிற்கு முன்னால் துப்பாக்கியையும் வாதத் திற்கு முன்னால் சிறைச்சாலையையும் காட்டுவது அரசியல் விஞ்ஞானத்தைக் காட்டுவதாகுமே யல்லாமல் அரசியல் பண்பாட்டின் அறிகுறி யாகாது.

"கொள்கையிலும், அறிவிலும், ஆற்றலிலும் திறமையிலும், நம்பிக்கை யற்றவர்தான், கல்லால் அடித்தல், சொல்லால் திட்டுதல், கத்தியால் குத்துதல் போன்ற தனி நபரைத் தாக்கும் இழிதகைமை கொண்ட வன் செயலில் இறங்குவார்.

"மாற்றுக் கட்சிக்காரனைக் கருத்தால் தன் கட்சிக்கு மாற்ற முயன்று தன் கட்சியை வலுப் படுத்திக் கொள்வது தான் முறையே தவிர, அவனைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதின் மூலம் அவன் கட்சி வலுவைக் குறைக்க நினைப் பது நீதியாகாது. ஆகவே அரசியலில் தனி மனிதன் தன்னுடைய சாதாரண நல்ல குணங் களினால் முக்கியத்துவம் பெறலாமே தவிர, தன் னுடைய குறை பாடுகளினால் அல்ல! அவனு டைய குறைபாடுகளை நம்பி மாற்றுக் கட்சிக் காரர்கள் தங்கள் பலத்தை வளர்க்கலாம். என்று நினைப்பதும் பண்பான செயலல்ல!

"அமரர் காந்திஜி, நேரு, அல்லது பெரி யார் ராமசாமி போன்ற தலைவர்களின் படங்களை, ஊராட்சி, நகராட்சி மன்றங்களிம் பல சந்தர்ப் பங்களில் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த பிர முகர்கள் திறந்து வைக்கிறார்கள். மாறுபட்ட கொள்கையும் லட்சியமும்கொண்ட இயகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்று நாங்கள் ஒதுங்குவதில்லை. ஆங்காங்கு தனி நபருக்கும் அவர் சாதனைக்கும் மதிப்புக் கொடுக்க நாங்கள் தயங்குவதில்லை. ஆனால் இதே வேளைகளில் நாங்கள் கலந்து கொள்ளும் இத்தகைய நிகழ்ச்சி களை மாற்றுக் .கட்சிக் காரர்கள் அறவே பகிஷ் கரிக்க முயலும் போது, அவர்கள் எங்கள் அள வுக்கு உள்ளத்தில் விசாலம் பெறவில்லையோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது"

திரு. நெடுஞ்செழியனிடம் விடை பெற்றுத் திரும்பிய போது அவரிடம் மாற்றுக் கட்சிக் காரர்கள் ஏன் இவ்வளவு மதிப்பு வைத்திருக் கிறார்கள் என்ற ரகசியம் புரிந்தது. மாற்றாரை மதிக்கும் பண்புடையவரவல்லவா அவர்!

தமிழகத்தில் புகுமுக வகுப்புக்கு 70,000 இடங்கள்

மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்

புதிதாக 4 அரசினர் கலைக் கல்லூரிகள் உட்பட 10 கலைக் கல்லூரிகள் தமிழகத்தில் ஏற்படும்; இதன் மூலம் அதிகப்படியாகப் புகு முக (பி.யு.சி) வகுப்பில் 3,000 இடங்கள் கிடைக்கும்.

"தமிழ்நாட்டில் இப்போதுள்ள 140 கல் லூரிகளில் பி.யு.சி யில் 70,000 மாணவர்கள் சேரக்கூடிய இடங்கள் உள்ளன; புதிய— தனியார் கல்லூரிகள் அமைக்கப்படும் இடங் கள் பற்றிய தகவல் தெரிந்ததும், மாணவர் களுக்குக் கிடைக்கக் கூடிய இடங்கள் பற்றிய முடிவான வடிவம் விரைவில் தெரியும்.

"மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சினையை இப்போதுள்ள கல்லூரிகளா லேயே சமாளிக்க முடியுமாதலால், இந்த ஆண்டில் கல்லூரிகளில் 'ஷிப்டு' முறையை ஏற்படுத்த வேண்டியிருக்காது என்று பல் கலைக் கழக அதிகாரிகள் கருதுகின்றனர்; சென்ற ஆண்டில் ஒரு சில கல்லூரிகளில் மட் டுமே இடங்களுக்கான நெரிசல் இருந்தது; அதனால் பி.யு.சி வகுப்புக்களில் சுமார் 6,000 இடங்கள் நிரப்பப்படாமலே இருந்தன.

"தனியார் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் 'ஷிப்டு' முறை ஏற்படுத்தப்பட் டால், அரசு எல்லா உதவிகளையும் செய்யும்."

சுயமரியாதைச் சூறாவளி

கி. வீரமணி எம்.ஏ., பி.எல்.

'பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!' என்று எடுத்துக்காட்டி, தந்தை பெரியார் தம் பகுத்தறிவுப் பல்கலைக் கழகத்தில் பயின்ற தலைசிறந்த சுயமரியாதைச் சுடர்மணிகள், சொக்கத் தங்கமாக இன்றும் மிளிர்ந்து கொண்டுள்ளன. அவைகளில் 'நாவலர்' என்று நாட்டோர் அனைவராலும் ஒருமிக்க அழைக்கப்படும் மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் முன்வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் ஆவார்!

நாவலரின் குடும்பமே சுயமரியாதைக் குடும்பம். தந்தை முதல் தனையர்கள், தம்பியர்கள் அனைவரும் தந்தை பெரியார் தம் பகுத்தறிவுக் கொள்கைகளால் வெகுவாகக் கவரப்பட்டவர்கள். தந்தை பெரியார் அவர்கள் பலமுறை இதனை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

'குடி அரசு' ஏடு— அதுதான் அறிவுலகப் புரட்சி வெடிகுண்டாகும். வெடிகுண்டு வீசுபவர்களைக் கண்டு வெகுண்டு எழுவதுபோல, மிரண்டு பார்ப்பதுபோல, பச்சை நிறத்தில், உண்மைகளைப் 'பச்சையான' வசையில் எடுத்துரைக்கத் தயங்காத அவ்வேட்டினை வரவழைப்பதும், படிப்பதும், கையிலேந்துவதுங்கூட 'புரட்சி' யான காரியங்கள் போல் கருதப்பட்ட காலத்திலேயே அதற்கு 'விஷயதானம்' (இப்படித்தான் அந்நாளில் கட்டுரை எழுதும் எழுத்தாளர் பணியைக் குறிப்பது) செய்தவராக நாவலரின் அண்ணார் திரு. சௌரிராஜன் அவர்கள் இருந்தார்!

அமெரிக்க நாத்திக ஞானி—மேதை இங்கர்சாலின் கருத்துக்களைத் தமிழாக்கிப் பல வாரங்களில் தந்துள்ளதை இன்றும் 'குடி அரசு' ஏட்டினைப் புரட்டுகையில் ஆதாரமாகக் காணலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்வதற்கு முன்னரே நாவலரும் அவர் தம் இளவலான நண்பர் இரா. செழியனும் அய்யாவின் பாசறையிலும், 'அண்ணா'வின் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து படிப்பறிவோடு பகுத்தறிவையும் ஒன்ருய்ப் பெறும் வண்ணம் ஆயினர்.

பல்கலைக்கழக மாணவராக, இளந்தாடியராக அவர் இருந்த காலையிலேயே பகுத்தறிவுப் பிரசாரத்திற்காகவே, சிதம்பரம் மற்றும் கடலூர் போன்ற பல ஊர்களுக்குச் செல்வார். கல்லூரி விடுமுறை நாட்களிலுங்கூடப் பகுத்தறிவுப் பிரசாரத்தை யாங்காங்காற்றித் திராவிட மாணவர் உலகத்தில் தனித்ததொரு "விண்மீன்" என வானார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவத் தளபதியாக இருந்து பயின்று வந்த காலத்தில் அவர் பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு வரும்போதெல்லாம் இளந்தாடியுடன் வெள்ளுடை யுடுத்திக் கொண்டுதான் வந்துகொண்டிருந்தார். அப்போதெல்லாம் அவரை, 'யாரோ இளம்பாதிரி

யார் போலிருக்கிறது' என்று கருதியவர்களும் பலர் இருந்தனர்.

மேடைகளில் ஏறிநின்று சிங்கக் குரலோடு, பகுத்தறிவுப் பிரசாரத்தை புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்களின் கவிதையினை அவருக்கே உரித்தான மிடுக்குடன் முழங்குவதுகண்டு, அவர்பால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் ஆயிரம்! ஆயிரம்!!

பல்கலைக் கழகத்திலிருந்து எம். ஏ., பட்டதாரியாக வெளியே வந்த நிலையிலும் பகுத்தறிவுப் பிரசாரப் பணியே அவரது தொண்டாக—தூய நற்பணியாக இருந்தது.

தந்தை பெரியார் அவர்கள் முழங்குவதற்கு முன்னரே நாவலர் இடியோசை முழக்கம் பல மேடைகளில் கேட்கும். தமிழ் நாட்டில் பட்டி தொட்டிகளுட்பட அவர் சுற்றுப்பயணம் செய்யாத இடமே இல்லை.

தானைத் தலைவரும் தளபதியும் காட்சியளிப்பது போல அய்யாவுடன்தொடர்ந்து சென்று பிரசாரம் செய்தார்!

ஆதாரங்கள், புள்ளிவிவரங்கள், அடுக்கடுக்கான பத்திரிக்கைக் கத்தரிப்புக்கள் அவரது பேச்சின் போது அணிவகுப்பு வந்து செல்லும்!

பகுத்தறிவின் அவசியம்குறித்து அவரது அடுக்கடுக்கான வாதங்கள், பழமை வாதிகளைப் பிடரியில் குதிகால்படும்படி ஓடவோட விரட்டும் தன்மையன!

சுழன்றடிக்கும் இந்தச் சுயமரியாதைச் சூருவளிமுன் எதிர்ப்புக்கள், ஏளனங்கள், கண்டனங்கள் யாவும் வெறும்வெத்து வேட்டுக்களாயின!

"உறுதி, உறுதி, உறுதி.
ஒன்றே சமூகம் என்றெண்ணுர்க்கே
இறுதி! இறுதி!! இறுதி!!!'

—என்ற புரட்சிக் கவிஞரின் புரட்சிவரிகளை நாவலர் முழங்குவதைக் கேட்டால் விசையிழந்த தேகத்தில் வன்மை சேரும்!

1953-ல் நாவலரைக் கொல்லத் தேனீயில்(மதுரை மாவட்டத்தில்) அகிம்சா மூர்த்திகள் என்று தங்களை வர்ணித்துக் கொண்ட தேசீயங்கள் கோரத் தாண்டவம் ஆடிய நேரத்திற் கூட அவர் நெஞ்சுரத்துடன் எதிர்ப்பைக் கண்டஞ்சாமல் நின்ருர்!

எத்தனை இடுக்கண்களை அடக்குமுறைகளை, அபாய அறிவிப்புக்களை, காலித்தனங்களை, அவர் கண்டார் என்பதற்கு மறக்க முடியாத சம்பவம்—தேனீ சம்பவம்!

இதற்கு முன் திராவிடர் கழகத்தில் இருந்த காலை சேலத்தில் நிகழ்ந்த ஆண்டு விழாவின் போது, இவர் கலந்து கொண்ட கூட்டத்தில் கல்வீச்சு, சோடா புட்டி வீச்சு—இவைகளால் காலிழந்த தோழர், கண்ணிழந்த தோழர்களிடையே யும் இவர் கர்ச்சனை செய்யத் தவிர வேயில்லை!

நெருப்பாற்றை நீந்தித்தான் இன்று அமைச்சர், ஆளுங்கட்சியின் பொதுச் செயலாளர் என்ற நிலைக்கு அவர் உயர்ந் துள்ளார்!

கொடித்தூக்கிய எளிய தொண்டராக இருந்து, இன்று பொதுச் செயலாளர், செங்கோல் ஏந்திய அமைச்சர் என்ற நிலைக்கு உயர்ந்துள்ள நிலையிலும் கூட அவர் சீரிய பகுத்தறிவுவாதியாகவே, வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் வைதி கத்தை வாயடைக்கச் செய்யும்வைர நெஞ் சங்கொண்ட பகுத்தறிவு வாதங்களை யெடுததுரைக்கத் தவறாத சிறநத நற கொளகையுள்ளங் கொண்ட கோனாகக் காட்சியளிக்கிறார்! உயர்ந்து நிற்கிறார்!

பகுத்தறிவுக் கொளகையைப் பலர் ஏற்கும் வணணம் எடுத்துரைத்துச் செய லாக்கும் அவர் இது போன்ற பல பிறந்த நாட்களைக் காண வேண்டும்!

வாழ்க நாவலர்!
வாழ்க அவர் தம் கொள்கை
வெற்றிகள்!!

பணக்காரரை நம்பினால் தி. மு. க. வுக்கு ஆபத்து

பணக்காரர்களின் ஆதரவை தி. மு. கழ கத்தினர் நம்பி இருக்கக் கூடாது. பணக்காரர் களின் ஆதரவை நம்பியதன் மூலம் தமிழ் நாட்டில் காங்கிரஸ் பெரும் தவறு இழைத்தது. அதன் விளைவாக எவ்வளவு மோசமான நிலைக்கு காங்கிரஸ் வீழ்ச்சி அடைந்தது அனை வருக்கும் தெரியும். ஆகவே அதே தவறை தி. மு. கழகத்தினர் செய்து விடக்கூடாது. ஏழைகளின் நலனை உயர்த்துவதில் தி. மு. க.வினர் பாடுபட வேண்டும்.

—நாவலர். நெடுஞ்செழியன்.

கல்லூரிகளில் தமிழ்ப்பாட மொழித் திட்டம்

1967-68 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்புக்களில் தமிழ் பயிற்சி மொழியாக உள்ள கல்லூரிகளில் பட்டப் படிப்பிலும் கலைப் பாடங்களுக்கும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. 1968-69 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து கல்லூரிகளைத் தவிர எல்லாக் கல்லூரிகளிலும் புகுமுக வகுப் புக்களில் கலைப் பாடங்கள் தமிழ் மொழியி லேலே கற்றுக் கொடுக்கப்படுகிறது. தமிழ் தாய் மொழி அல்லாத மாணவர்களின் வசதிக் காக 5 கல்லூரிகளில் ஆங்கிலமும் பயிற்சி மொழியாக இருக்கிறது.

தொழிற் கல்வி

தொழிற் கல்வியில் தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக விளங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிற் துறையில் ஏறபட்ட தேக்கம் காரணமாக பொறி இயல் கலலூரிகளில் சேரும் மாணவர் மனுககளின் எணணிக்கை சற்று குறைநததாயினும் சேர்க் கபபடும் மாணவரின் தகுதி வரம்பு குறைக்கப் படவில்லை. சென்னை அடையாற்றல அமைந் துள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களைக் கொண்ட மையம் உலகத்திலேயே இவ்வகை யான சிறந்த அமைப்புக்களில் ஒனறாகும். தமிழ நாட்டில் தொழில் கல்விப் பல்கலைக கழ கம் நிறுவ வேண்டும் என்ற தமிழ நாடு தொழில நுட்பக் கல்விக்கான மாநில வாரியம் தெரிவித்திருந்த பரிந்துரை பரிசீலனையில் உள்ளது.

மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரை தமிழகததில் தற்போது 9 மருத்துவக கல்லூரி கள் உளளன. அவற்றில் 8 அரசாங்க மருத் துவக் கல்லூரிகள், மற்றொன்று வேலூர் கிருத் துவ மருத்துவக் கல்லூரி. 8 அரசாங்கக் கல லூரிகளிலும ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 1,125 மாணவர்கள சேர்ககபபடுகிறார்கள. சென்னையில் படிக்கும் மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவரின படிப்பு முடியும் வரை சுமார் ரூ 32,160-ம், மாவட்டங்களில் ஒரு மாணவருக்கு சுமார் ரூ 25,794 என்ற அளவி லும் அரசு செலவழிக்கிறது.

—நாவலர்

தமிழ்மொழியின் வருங்காலம் அவர் கையிலே இருக்கிறது

கட்டுறுதியுள்ள உடல்; கண்ணிலே நல்ல குணம்; சிவந்த முகத்தில் கன்னங்கரேலென்று கறுத்த இளந்தாடி; மேனி முழுவதும் வெள்ளாடை! மொத்தத்தில் கிறித்துவப் பாதிரியோ வென்று ஐயுறத்தக்க தோற்றம்!

இந்தத் தோற்றத்திலே சுமார் கால் நூற்றுண்டுகட்கு முன்பு முதன் முதலாகச் சென்னைத் தொழிலாளர் சங்க மேடையிலே நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைச் சந்தித்தேன். பி. அண்டு சி. மில்கள் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்காகப் போடப்பட்ட கூட்டம் அது. தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனாரும் மேடையில் இருந்தார். அன்றுதான் முதன் முதலாக நாவலர் பேச்சைக் கேட்டேன். பேச்சில் வெளிப்பட்ட கண்ணியம் என்னைக் கவர்ந்தது.

அன்று, நாவலர் சுயமரியாதைக்காரர்; நான் காங்கிரஸ்காரன். நாங்கள் இருவரும் எங்களை ஏற்றுக்கொண்ட கட்சிகளுக்கு விசுவாசமுடையவர்களாக இருந்தோம். சுயமரியாதை இயக்கமும் காங்கிரசும் பரஸ்பரம் பகைகொண்ட முகாம்கள் ஆயினும், நாவலரும் நானும் நண்பர்களானோம். அந்த நட்பு எத்தனையோ சோதனைகட்குப் பின்னும் தொடர்கிறது.

1957 பொதுத் தேர்தலில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சேலம் நகரத் தொகுதியில் தமிழக சட்ட மன்றத்திற்குத் தி. மு.க. சார்பில் போட்டியிட்டார். சென்னைத் திருவல்லிக்கேணி சட்ட மன்றத் தொகுதியில் தி. மு. க. வுடன் ஏற்பட்ட பூசல் காரணமாக, சேலம் நகர தொகுதியில் நாவலர் தோல்வியை உருவாக்குவதிலே, என் விருப்பத்திற்கு மாருக நான் பங்கு கொள்ள வேண்டியவன் ஆனேன். இதுகூட எங்கள் நட்பைப் பாதிக்கவில்லை. ஆம்; நாவலர், சேலத்தில் தாம் தோற்ற பின்னரும் என்பால் நல்லெண்ணம் உடையவராகவே இருந்தார்.

1962ல் நாவலரவர்கள் சென்னையில் நான் வாழும் திருவல்லிக்கேணி தொகுதியில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார். அப்போதும் நான் தி. மு. கவுக்கு எதிராகவே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டேன் என்றாலும், நாவலருக்கு எதிராக எனது நா அசையவில்லை. அவர் வெற்றி பெறுவதையே நான் விரும்பினேன். அதற்கு இயன்ற வரை உதவியாகவும் இருந்தேன்.

தேர்தல் முடிந்ததும் நாவலரவர்கள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரானார். இந்த நிகழ்ச்சி எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத்தந்தது. தமிழிலே புலமையும் அம் மொழியிடத்து பற்றுடைய நல்ல தமிழரொருவர் எதிர்க்கட்சித் தலைவராகவேனும் வரமுடிந்ததற்கு நான் மகிழ்ச்சியடைவது இயற்கைதானே !

காலம் ஓடியது. 1967ல் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதால், நாவலரவர்கள் கல்வி அமைச்சரானார். அதற்காக நான் மகிழ்ச்சியடைந்தேன். என்றாலும், ஒரு புறம் கவலையும் அடைந்தேன். நாவலருக்குமுன் கல்வி அமைச்சராக இருந்த திரு பக்தவத்சலமுதலியாரிடம் யான் பெற்ற அனுபவம் நாவலர் கல்வியமைச்சரானதற்குக் கவலைப்படும்படிச் செய்தது.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

ஆம்; கல்லூரிகளில் தமிழே பயிற்சிமொழியாக வேண்டுமென்றுகோரி அதற்காகக் கிளர்ச்சி செய்துவருவதற்காக, காங்கிரஸ் ஆட்சியிலே கல்வியமைச்சரால் நான் வெறுக்கப்பட்டேன். நாவலர் நல்ல நண்பரானதால், அவருக்கும் எனக்கும் உள்ள நட்புக்கு ஊறு நேருமோ என்று ஐயுற்றேன். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடந்து விடவில்லை.

சட்டமன்றத்தில் கல்வி மான்யத்தின் மீது விவாதம் நடந்த போதெல்லாம் நான் மிகுந்த கண்டிப்புக் காட்டிப் பேசி வந்துள்ளேன். ஆம்; தயவு தாட்சண்யமின்றி உணர்ச்சியோடு விமர்சித்துப் பேசியுள்ளேன். ஆனால், அதற்காக கல்வியமைச்சர் நாவலர் ஒருமுறைகூட என்மீது சினங்கொண்டு பதிலளித்ததில்லை.

சட்டமன்றத்திலும் வெளியிலும் நான் நிகழ்த்தும் சொற்பொழிவுகளில் பல 'முரசொலி'யில் வெளியாவதுண்டு. ஆனால், சட்டமன்றத்தில் கல்விமானியத்தின் மீது நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் ஒன்றுகூட இதுவரை 'முரசொலி'யில் வெளியானதில்லை என்பது எனது நினைவில் தங்கியிருந்து வருகின்றது. என் பேச்சில் வெளிப்பட்ட கண்டன உணர்வு காரணமாக இருக்கலாம்.

ஆயினும், நாவலரவர்கள் கல்வி மானியத்தின்மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் மிகுந்த பொறுமையோடு எங்கள் நட்புக்கு ஊறுநேராத வகையில் பதிலளிப்பதே வழக்கம்.

நாவலரிடம் கல்வித்துறை இருப்பதால், அவரிடம் நாடு அதிகம் எதிர்பார்க்கிறது. தமிழ்மொழியின் வருங்காலம் அவர் கையில் இருக்கிறது. தமிழ்த்தாய் தன் அருமை மகனாக நாவலரை இன்னமும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் - நானும் எதிர்பார்க்கிறேன்.

கல்வித்துறையில் மாறுதல் செய்வதற்குள்ள தடைகளை நான் அறியாமல் இல்லை. தடுக்கும் சக்திகளுக்கு சமுதாயத்திலுள்ள செல்வாக்கை நான் குறைத்து மதிப்பிடவும் இல்லை. ஆனால், நாவலர் மக்களை நம்பி மாறுதலைத்தொடங்கி விட்டார். தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ்மொழியே முதலிடம்பெறும் காட்சியை என் வாழ்நாளிலே நான் கண்டு களிக்குமாறு அவர் செய்யவேண்டும்.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் விஞ்ஞானம் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. விஞ்ஞானக் கல்வியிலும் அரசின் அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்காக இவ்வாண்டில் 108 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ரூ. 40,000 வீதம் அளிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ. 300ம், உயர் தொடக்கப் பள்ளிக்கு ரூ. 200-மும் விஞ்ஞானக் கல்விக்கு அளிக்கப்படுகிறது. இவ்வாண்டு இத் திட்டத்தால் 2000 தொடக்கப் பள்ளிகளும 400 நடுநிலைப் பள்ளிகளும் பயன் பெறும்.

கல்லூரி புகுமுக வகுப்பில் பிற்பட்ட வகுப்பினருக்கு உபகாரச் சம்பளச் சலுகையளிக்க 45-50 மார்க்குகள் தேவை என்னும் நிலையை மாற்றி இப்பொழுது 40 மார்க்குகள் போதும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. பள்ளிகளில் நூல் நிலையங்களை விரிவுபடுத்துவதற்காக 10,000 தொடக்கப் பள்ளிகளுக்கும், 2,500 நடுநிலைப் பள்ளிகளுக்கும், 159 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணிசமான அளவின் மான்யம் வழங்கப்படுகிறது.

மாநகராட்சியின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களின்கீழ உள்ள பள்ளிகளுக்கும் கொடுக்கப்படும் மானியத் தொகை 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகள் போன்றோரின் சம்பளச் செலவுகள் முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

1968ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் பள்ளிப் பாடத்திட்டத்திலிருந்து இந்தி மொழி நீக்கப்பட்டு இருமொழித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இது இன்றைய தமிழக அரசின் பெரும் சாதனையாகும்.

—நாவலர்

இது, நாவலரிடம் நான் எதிர்பார்க்கும் பிறந்தநாள் பரிசு!

அவர், ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்! நாவலர் மனப்பிணி போக்கும் மருத்துவர்; அவர் மனைவி விசாலாட்சியம்மையார் உடற்பிணிபோக்கும் மருத்துவர்! இருவரும் மணிவிழாக்காணும் நாளை நாமும் காண்போமாக!

வாழ்க, நாவலர் நெடுஞ்செழியன் தம்பதிகள்!

நடமாடும் பல்கலைக் கழகம்

'சொல்லல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

என்பது தமிழகந் தந்த தனிப்பெரும்புலவர் வள்ளுவர் காட்டும் ஆடவர் மேற்கொள்ளற்குரிய வாழ்க்கை நெறி. இச்செந்நெறியின் வழாது வாழ்ந்து வரும் நாவலர் நெடுஞ்செழியர் நல்வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் நாட்டிலே வளர்ந்து நலம் பயக்கத் தகுந்த முறையில் பண்பும் பயனுமுடைய நற்றொண்டிற் கழிந்தமை நாடறிந்த நற்செய்தி. தமிழினப் பெரியாரும் தகைசால் அறிஞர் அண்ணாவும் நாவலர் நல்வாழ்விற்கு நயந்தரு வழிகாட்டிகளாயத் திகழ்ந்தார்கள்—திகழ்கின்றார்கள்.

மூவேந்தர் ஆட்சியும் முடிந்து, அவர்களாற் போற்றப்பட்டு நாட்டின் நல்லாட்சிகளுக்கு வழி காட்டும் மாவேந்தர்களும் மறைந்து, கடல் கடந்து வாணிகம் புரிய வந்த அயலார் ஆட்சி காலூன்றிய பிறகு நாட்டின் பண்பாடும் மொழிகளும் உரங்குன்றி ஒதுக்குப் புறந்தேடிக் கரந்துறை வாழ்விற் காலங் கழிக்க நேர்ந்தமை கண்டு மனம் மாழ்கிய நல்லோர்கள்—தமக்கென வாழாத தண்ணருட் சீலர்கள்—ஒல்லும் வழியெல்லாம் முயன்று அயலரசை அகற்றி, நாட்டுக்கு உரிமையைக் கூட்டி வைத்தார்கள்.

இழந்த உரிமையை உழந்து பெறுவதில் தமிழ் நாட்டு நன் மக்களுக்கும் பெரும் பங்குண்டென்பதை வரலாறு காட்டும் தமிழகந் தழைக்கத்—தமிழர் பண்பாடு புத்துயிர் பெற்று ஒளிரக் கங்கணங் கட்டிக் கொண்டு தொண்டாற்றி வருங்கட்சிகளில் திராவிட முன்னேற்றக் கட்சி முதலணியில் நின்று தமிழக அரசு தழைக்க ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு வெற்றித் திருவிற்கு அடிகோலிய அறிஞர் குழுவில் நாவலர் நெடுஞ்செழியர் ஆற்றி வருந்தொண்டு அனைவரும் போற்றுதற்குரியதாகும்.

தம் எண்ணத்தால், சொல்லால், இடையீடில்லாத தொண்டால் நாட்டுக்கு நல்லனவே செய்து வரும் நாவலர், தாய் மொழியாம் தமிழ் மொழியிலும் சேய் மொழியாம் ஆங்கிலத்திலும் தக்காரிடம் பயின்று, புலமை மிக்காராய், 'நடமாடும் பல்கலைக் கழகம்' எனனும் நயஞ்சால் பட்டத்தை நல்லறிஞர் அண்ணாவால் வழங்கப் பெற்று, இந்நாள் அமைச்சரவையில் 'கல்வி—பொது நலத்துறை' எனனும் நாட்டின் நலவாழ்விற்கு இருகண் ணன அமையும்—பெருந்துறையமைச்சராய் இருந்து பணியாற்றி வருவது பண்பாளர் அனைவரும் பாராட்டுதற்குரியது.

மகாவித்துவான் செந்தமிழ்க் களஞ்சியம்
மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை.

'இந்நாள் நெடுஞ்செழியர் இன்னம்பல் லாண்டிருக்க
எந்நாவும் வாழ்த்தும் இனிது.'

நெடுந்தமிழர்

கி. வா. ஜகந்நாதன்

"நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந் தான்" என்று கம்பன் அகத்தியரைப் பற்றிச் சொல்வான். அங்கே தமிழை, 'நீண்ட தமிழ்' என்கிறான். காலத்தினாலும் இடத்தினாலும் அது நீண்டுகொண்டே போகிறதாம். இன்று உலகில் பல இடங்களில் தமிழ் மொழி பரவி வருவதை நாம் அறிவோம். தமிழ்க் காதலர்கள் பலர் அங் கங்கே தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் கள். ஆகையால் கம்பன், தமிழை, 'நீண்டதமிழ்' என்பது எவ்வளவு பொருத்தம்! அவன் காலத் திலேயே அது நீண்ட தமிழானால், இன்று அது பின்னும் நீண்ட தமிழாக விளங்குகிறது.

'நீண்ட தமிழ்' என்பதை நினைக்கும்போது எனக்கு ஒரு தமிழருடைய நினைவு வருகிறது, அவர் உருவத்திலும் நெடியவர்; பெயரிலும் நெடியவர்; பேச்சிலும் நெடியவர், மாண்புமிகு கல்வி அமைச்சர் நெடுஞ்செழியனாரைத்தான் சொல்லுகிறேன்'.

அமைச்சராவதற்கு முன்பே அவரை அறிந் தவன் நான். அமைச்சராவதற்கு முன் அவரைப் பார்க்கும் அளவுக்கு இப்போது பார்க்க முடிய வில்லை. அப்போது அவர் தனிக்காட்டரசர், இப் போது பதவிப் பிடிப்புக்குள் அகப்பட்டவர்.

அவர் பதவியில் இருந்தாலும் இல்லாவிட் டாலும், கட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டா லும் அவர் என்றுமே நீண்ட தமிழோடு தொடர் புடையவராகவே, அத்தமிழில் இன்பம் காணுப வராகவே இருப்பார்.

அவருடைய அரசியல் உருவம் எனக்குத் தெரியாது; அரசியல் பேச்சையும் கேட்டதில்லை. ஆனால் அவருடைய தமிழுருவம் எனக்கு ஓரளவு தெரியும்; தமிழ் இலக்கியப் பேச்சைக் கேட்டிருக் கிறேன். நாவலர் என்று அன்புடன் அன்பர்கள் பாராட்டும் அவருடைய நாவன்மையை உணர்ந் திருக்கிறேன்.

திரு. நெடுஞ்செழியன் பேசுகிறார். கூட்டத் தினிடையே அந்த நெடிய உருவம் வாய் திறந்து குரல் எழுப்புகிறது. எல்லோரும் ஆவ லராக நாவலர் தமிழைக் கேட்கக் காதைத் தீட் டிக் கொண்டிருக்கிறார்கள். நாவலர், பாரதி தாசன் பாட்டைப்பாடிச் சங்கே முழங்கு என்று தொடங்கினார். அவருடைய கருத்துக்கள் நீண்ட அருவி போல வருகின்றன. வாக்கியங்க ளும் நீளமாகவே வருகின்றன; சொற்கள் அலை யலையாக ஒன்றினை ஒட்டி ஒன்றாக வருகின்றன. அடைமொழிகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வருணிக்கிறார். தங்குதடையில்லாமல், ஒரு கணம் யோசிக்காமல் அந்த அடைமொழிகள் பொருத்தமாக வந்து விழுகின்றன. அழுத்த மாகச் சொல்ல வேண்டிய இடங்களில் சொற்க ளின் வேகம் பழுதாகிறது, மென்மையாக உள்ள இடங்களில் நெடுஞ்செழியன் ஒரு மெல்லியலைப் போலக் குழைந்து விடுகிறார். தமிழோடு கொஞ் சுகிறார். அவர் விரல்கள் அபிநயம் பிடிக்கின்றன. அவருடைய முகம் கொஞ்சுகிறது. வாய் பாதி மூடியபடி மெல்லிய குரலை எழுப்பிக் கொஞ்சு கிறது. சில சமயங்களில் மூக்கின் ஒலி மட்டும் வெளியாகிக் கேட்பவரின் கவனத்தை ஈர்க் கிறது. நாடகமகள் ஒருத்தி ஆடிப்பாடும் போது- தக்குச் சுருதியில் பாடும் போது- அவையினர் மூச்சும் பலமாக விடாமல் கேட்கிறது போல யாவரும் கேட்கிறார்கள்.

தமிழ்ச் சொற்களை அவர் மெழுகாக்கித் தம் கருத்தில் தோன்றிய எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கிறாரோ? ஆம், அவர் கைவிரல்களைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். அவரு டைய கண்களில் தோன்றும் குறிப்பு, அவர் மீசையின் சிற்றசைவுகள் யாவும் இந்த வடிவ அமைப்புக்குத் துணை செய்கின்றன.

வாக்கியங்கள் நீளமாகவே வருகின்றன. ஆனால் அங்கங்கே பொருள் முடிவு பெற்றுத் தெளிவாக விளங்குகின்றன. இவ்வளவு நீள மான வாக்கியங்களைத் தெளிவாகத் தமிழில் பேசுகிறவர்கள் மிகக் குறைவு. உண்மையில் திரு நெருஞ்செழியன் பேசும் போது அவருடைய தமிழ் நீண்ட தமிழாகவே இருக்கிறது.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, நீர்மை, மென்மை என்ற பொருள் உண்டு; அந்த மூன்றையும் நாவலர் தமிழில் காணலாம்; அதோடு நெடுமையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர் பேசுவது நீளுந்தமிழ், குலுங் குந்தமிழ், இனிய தமிழ்.

பேச்சு முடிவில் முத்தாய்ப்பாகப் பாரதிதா சன் பாட்டைச் சொல்லி நிறுத்துவார். அப் போது மனத்தில் ஒரு நிறைவு தோன்றும்.

என் மனத்தில் தோன்றுவதைச் சொல்ல எனக்கு உரிமையுண்டு என்று கருதுகிறேன். அமரர் அண்ணாவின் படை வீரர்கள் பேச்சில் ஒருவகையான பொதுமை இருக்கும்; அந்தக் குரலிலும், நிறுத்தத்திலும், நேரத்திலும் அந்தப் பொதுமை இருக்கும். இசையிலே ஒரு குருவின் வழிவந்த மாணவர்களுக்குள் ஒரு பொதுவான பாணி இருக்கும். அதுபோலவே, தி. மு. க பேச்சாளர்களிடையே குரலிலும் முறையிலும் ஒரு பொதுமையை, ஒரு தனிப் பாணியைக் காண லாம். நாவலருடைய பேச்சோ முற்றும் வேறு னது. அவர் குரல் மென்மையானது; தனக் கென்று ஒரு குழைவை உடையது; இலக்கிய மணம் கமழ்வது, தனக்கெனத் தனிப்பாணியை உடையது.

பொறுமை, பணிவு, கல்விக்கு மதிப்பு, கற் றவர்களிடம், அன்பு, நண்பர்களிடம் அன்பு மற வாமல் பழகுவது – இவை நாவலருடைய பெருங்குணங்களிற் சில.

நாவலர் நெடியவர்; நீண்ட தமிழை ஆளுப வர்; கூட்டத்தில் அவரைத் தனியே இனம் கண்டு கொள்ளலாம். வடிவத்தால் மட்டுமன்று; பேச்சிலுங்கூட.

இத்தகைய நெடுந்தமிழர் இன்னும் நீடூழி வாழ வேண்டும், நெடுந்தமிழ் இன்பத்தைப் பலருக்கு வழங்கவேண்டும் என்று வாழ்த்து கிறேன்.

மேல்படிப்பு படிக்க விரும்புபவர்கள்

கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் படிக்க விரும்பும் மாணவர்கள், ஆங்கிலத்தில் 60 சத விகிதம் மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும் என்று விதி செய்வது பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது; அத்தகைய விதி செய்வது நிச்ச யம்; ஆனால் இந்த ஆண்டில் இல்லை; இந்த யோசனையைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

சென்ற ஆண்டில் புகுமுக வகுப்பில் இருந்த 70,000 இடங்களில் 52,000 இடங்கள் ஆங்கில வகுப்புகளும், 18,000 வகுப்புகளே தமிழ் பிரிவுக் கும் ஒதுக்கப்பட்டிருந்தன.

தமிழில் பயிற்று மொழி இருக்க வேண்டு மென்பதற்காக ஆங்கிலத்தின் முக்கியத்து வத்தை நாங்கள் அலட்சியப் படுத்தவில்லை; வெளி நாட்டுக்குச் சென்று மேல்படிப்புப் படிக்க விரும்புபவர்கள்—வெளி மாநிலங்களுக்குச் சென்று உத்தியோகம் செய்ய விரும்புபவர்கள் இந்த 52,000-த்தை காட்டிலுமா அதிகம் இருக் கப் போகிறார்கள்?

தமிழாக்கம் நடைபெற வேண்டும்

அரசின் கொள்கை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு 'ஒரே பாய்ச்சலாக'த்தாவும் கொள் கையல்ல; படிப்படியாக—மெல்ல மெல்ல— ஆனால் உறுதியாகத் தமிழாக்கம் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை யாகும்.

"தூய தமிழில்தான் எழுதவேண்டும்" என்று மாணவர்களே வற்புறுத்தாமல் ஆங்கி லம், தமிழ் ஆகிய இரண்டையும் கலந்து எழு தவும் அனுமதிக்கப்படவேண்டும்.

பத்தாவது (எஸ். எஸ். எல். சி.) முடிந்து வெளிவரும் ஒரு மாணவன் தமிழிலும்—ஆங்கி லத்திலும் புலமை பெற்று இரண்டு மொழிகளி லும் மிக நன்றாகப் பேசவும் - எழுதவும் வரும் விதத்தில் பள்ளிப் பாடத்திட்டத்தை மாற்றி யமைப்பதைக் குறித்து கோவை கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்தைத் தமிழக பல்கலைக் கழகமும் அரசும் பரிசீலித்து வருகின்றன.

(பச்சையப்பன் கல்லூரியில்—தமிழில் கற் பிக்கும் ஆசிரியர்—புகுமுகப் பயிற்சித் திட்டத் துவக்க விழாவில் நாவலர்.)



அரசியலில் ஒரு புலவர்

பேராசிரியர் மா.கி. தசரதன். M.A.

புலவர் என்றால் அவர் பொதுமக்களோடு பழக மாட்டார்; தொடர்பு கொள்ள மாட்டார்; ஒதுங்கியே வாழ்வார்; தானுண்டு தன் சுவடிகள் போதும் என்றிருப்பார் என்று பிறர் எண்ணுவதை விடச் சில புலவர்களே இப்படி எண்ணிக் கொள்கின்றனர். அதன் விளைவு தங்களைச் சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொண்டு,—வேலி அல்ல-வேலியாக இருந்தாலாவது அதன் இடைவெளிகளில் வெளியுலகைக் காணவும் வெளியுலகம் தங்களைக் :காணவும் வழி ஏற்பட்டுவிடுமே—மதில் எழுப்பிக் கொண்டு அந்த மதிலுக்குள்ளே இருந்தவாறு சில பாடல்களை முணுமுணுத்துக்கொண்டு காலங் கழித்துவிடுகின்றனர். அப்படி இல்லாதவர்களைப் புலவர்கள் என மதிக்கவும் மறுக்கின்றனர்.

இது ஒருவகை மாயையே யாகும்! வாழ்வு மாயம் – உலகம் மாயம் என்று எண்ணுவது போல் இது ஒருவகையான மாயை—போலி அவ்வளவுதான்.

பாடல்களைப் படிப்பதிலும் பொருள் அறிந்து, நயம் உணர்ந்து தான் புது இலக்கியம் படைப்பதிலும் புலமை இருக்கிறது. அதோடு தான் பெற்ற இன்பத்தைப் பெறுக பிறரும் என்று எண்ணுவது தான் உண்மையான புலமையாகும். சேர்த்ததை மறைத்து மகிழ இடம் தருவது இலக்கியமன்று; அது வாணிபம்; செல்வம். ஆனால் ஈட்டியதைப் பிறர்க்குக் காட்டி மகிழ்ந்து மகிழ்விப்பது கலை; இலக்கியமாகும். அதனால் தான் வள்ளுவனும் கற்றதைப் பிறர்க்கு விரித்து உரைக்கும் திறன் வேண்டும் எனக் கூறி, அவ்வாற்றல் அற்றவன் மலர்ந்தும் மணமற்ற வெறு மலராவான் என்று கடிந்துரைக்கிறார். பிறர்க்கு உரைத்தல் என்பது தன்னொத்த புலவரிடையே பேசி மகிழ்வது மட்டுமன்று. பெற இயலாதார்க்கும் அந்த இன்பத்தினைத் தருதலே பிறர்க்குரைத்தலாகும்.

பாடல் சுவையைத் தருவது என்ற ஒன்று மட்டுமல்ல, தன்சிந்தை செயல் ஆகியவற்றையும் பிறர்காக்கி வாழ்பவனே பெருவாழ்வு பெற்றவன் ஆகிறான் அந்தப் பண்பு நிற்கஅதற்குத்தக' என்ற அடி அறிவுறுத்தியது ஆகும். பிறிதின் நோய் தன்நோய் போல் நினைத்து, நோய் போக்கும் பணியில் ஈடுபடுவோனே பண்புடையாளன் ஆவான்.

நீண்ட ஆடை, நிமிர்ந்த பாகை, இவையல்ல புலவர் குறி-நெகிழ்ந்த நெஞ்சம், நெஞ்சுவந்த தொண்டு இவையே உண்மையான புலமைக் குறிகளாகும். அத்தகைய குறிகள் பெற்றவர்களே இலக்கிய ஏடுகளில் இலக்காக விளங்கி வழி காட்டுகின்றனர்.

கண்ணகியின் கண்ணீர்க் காதையைப் பிறர் கூறக் கேட்டு நெகிழ்ந்த இளங்கோவின் நெஞ்சமே சிலம்பு எனும் கவிதைப் பண்ணையாயிற்று. எங்கோ ஒரு மலைச்சாரலில் ஒதுக்கப்பட்ட பகுதியில் ஒதுக்கப்பட்டு ஒடுங்கி வாழ்ந்த கண்ணகி எனும் பிறிதொரு பெண் அழுத அழுகை, விட்ட நெடுமூச்சு, பட்ட துன்பம் இவையெல்லாம் வீணாகிவிடவில்லை. கண்ட புலவர்களின் நெஞ்சங்களை நெகிழச் செய்துவிட்டன. புலமையை வெளிப்படுத்தத்தான் பாடல் இயற்றல் வேண்டும் என்ற போலிக் கொள்கையில் வீழ்ந்து விடாமல், பிறர் துன்பம் நீக்கத் தங்கள் புலமை பயன்படல் வேண்டும். என்று எண்ணினர், அரிசில் கிழார் போன்ற புலவர்கள். அதனால் மனம் பேதலித்துக் கிடந்த பேகனிடம் பொன்னும் மணியும் யானையும் மாவுமான பரிசில் வேண்டாது குழல் இணைவதுபோல் அழும் அவள் கண்ணீரைத் துடைக்க

வேண்டும் என்றும், அவளுடைய தழைத்த கூந்தலில் புது மலர் பொலிய வேண்டும் என்றும், அவள் துயர் துடைப்பதற்காக இவன் தேர் புறப்பட வேண்டும் என்றும் வேண்டினர்.

'யாரோ எங்கோ ஏனோ துன்பப்படுகின்றார்கள்-நமக்கதனால் என்ன? என்று வரட்டுவேதாந்தம் அவர்களுடைய வழியை மாற்றிவிடவில்லை. வாடிய பயிரைக் கொண்டவர்களாகப் புலவர் பெருமக்கள் வாழ்ந்தனர்.

பாரி மடிந்த பின் வேறு ஒரு வள்ளல் எங்கே என்று தேடிச்சென்று விடவில்லை கபிலர். தம் மகளிரைக் கைவிட்டு மறைந்த பாரியின் கடமையைத்தான் ஏற்றுக்கொண்டு "இவர்கள் கைப்பிடிப்பார் யாரோ' என்றகவலையில் நாடெல்லாம் சுற்றி அலைந்தார். அவர் 'யார் வீட்டுப் பிள்ளையையோ யானைக்காலில் இடரச் செய்தால் நாமிழப்பது என்ன? என்ற நீரற்ற நெஞ்சினராக இருந்து விடாமல் ஓடிச்சென்று பிளிறி வரும் யானையின் முன் நின்று தடுத்து அரசனை நல்வழிப்படுத்தியவர் ஒரு புலவரே யாவர். ஐயத்தினால் கைதியான இளந்தத்தனை மீட்டுக் கொண்டுவந்த உள்ளம்தான் உண்மையான புலமை கொண்ட உள்ளமாகும்.

அத்தகைய உள்ளம்தான் பிறர்படும் துன்பத்தைத் துடைக்கப் பயன்படும். அந்த நல்ல உள்ளங்களைச் சங்க இலக்கியம் முழுவதும் காணலாம். இங்கும் அங்குமாக ஒன்றிரண்டு என்றில்லாமல் எங்குமாக நிரம்பக் காணலாம். அப்படி ஒரு மரபினை, உண்மைப் புலவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். பொதுமக்களோடு பிரிக்க இயலாத தொடர்பு கொண்ட அந்தப் புலவர்கள் வரிசையில் வந்தவர்களுள் ஒருவர் **நாவலர் நெடுஞ்செழியன்** ஆவார்.

இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைக்காகத் தம் வாழ்க்கையை வாழுபவர் அவர்.

அரசியல் ஆபத்தானது! என்று பிறர் ஒதுங்கிய போது இவர் அரசியலில் ஈடுபட்டார்!

இலக்கியம் கற்ற இவர் அரசியல் வாதியானதைக் கண்ட சிலர்.

அரசியல் இலக்கியமா?

அது எப்படி முடியும்?

சே! சே! அரசியல் சாக்கடை அல்லவோ!

இலக்கியம் தேன் ஓடை ஆயிற்றே! இரண்டும் எப்படிக் கலக்கும்?

இப்படிச் சிலர் தங்கள் 'பொன்மொழி'களை உதிர்த்துத் தங்கள் வெறுப்பைக் கக்கினர்.

இலக்கியம் தேன் ஓடை என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அல்லது அதனால், அரசியலைச் சாக்கடை என்பது அடாதது; பழம் புளிக்கும் என்ற நரிக்குணம் அது.

முடிந்தால், அரசியலிலும் இடம் தேடிடப் பலர் தயார்தான். ஆனால் அவர்கள் உழுது, விதைத்து விளைவித்து அறுவடைக்கு அரிவாள் தேடுகின்றவர்கள் அல்லர். யாரோ வித்தைத்திருப்பதைக் தங்கள் விளைவு ஆக்கிக் கொள்ள அரிவாளை கூர் தீட்டிவைத்திருக்கும் தந்திரக் காரர்கள்தான் "ஆ! அரசியலா சே!" என்று கூப்பாடு போடுவர்.

அரசியல் ஆபத்தானதோ என்னமோ அது மிக **அவசியமானது** ஆகும்.

பூனை கண்ணைக் மூடிக் கொண்டால் பூலோகத்திற்கு இருட்டு இல்லை; பூனைக்குத்தான் இருட்டு. அரசியல் ஆபாசமானது என்று ஒதுங்கினால் அதனால் அரசியலுக்கு ஆபத்து இல்லை, ஒதுங்குகின்றவர்கள் தான் விடப்படுகின்றவர்கள் ஆவார்கள்.

ஆகவே அரசியலைத் தாங்கிக் கொண்டாக வேண்டும் என்றேனும் கருதுவார்களானால்அவர்களால் அரசியல் துறையிலும் அருவருப்பின்றி ஈடுபடமுடியும். ஈடுபடுகிறார்களோ இல்லையோ ஈடுபடுகின்றவர்களைப் பாராட்டாது போனாலும் இகழாமலாவது இருக்க இயலும்.

அரசியலும் இலக்கியமும் சேராது என்கிறவர்கள் ஒருமுறை நாவலரின் பேச்சைச் செவிமடுக்க வேண்டும்.

அரசியலியல் இலக்கிய மணம் கமழ்வதைக் காணலாம். 'இலக்கியம் என்பது ஏடு' என்று நினைப்போருக்கு இது புரியாது. ஏடு அல்ல இலக்கியம். ஏடு இயம்பிடும் செய்தியே இலக்கியம். இலக்கணம் இதைத்தான் ஆகுபெயர் என்ற பாடத்தில் கூறுகிறது. திருவாசம் என்பது புலவர் ஒருவர் பாடிய பாட்டு. ஆனால் திருவாசகம் கொண்டுவா என்றால் அந்தப்பாடல் அச்சிடப் பட்டுள்ள ஏட்டைத்தான் கொண்டுவருவோம். இந்த மாறுன முறையையே உண்மை எனப் பலர் நம்பி விடுகின்றனர். அதனல் அவர்கள் உருவத்தை விட்டு விட்டு நிழலை வழிபடத் தொடங்கி விடுகின்றனர்.

நாவலர் அத்தகைய போலிப்புலவராக இல்லாமல் உண்மைப் புலவராக விளங்குவதினல் தான் நாட்டு வாழ்வைப் பற்றி எண்ணிப்பார்த்தார். இந்தச் சமுதாயத்தைக் கப்பி இருக்கும் இருள்; இங்கே மண்டிக் கிடக்கும் அறியாமை; குவிந்து கிடக்கும் மூடப்பழக்கங்கள்; மலிந்து கிடக்கும் பொருளில்லாச் சடங்குகள் இவற்றையெல்லாம் போக்கியாக வேண்டும் என்று எண்ணிய எண்ணம் நாவலரை அரசியலில் கொண்டு வந்து நிறுத்தியது!

செந்தமிழுக்கு ஆபத்து என்றதும் சோர்ந்து விழுந்து விடாமல் எத்தனை படை கூட்டி வரும் அந்தப்பகை என்று ஆவேசமாக எண்ணிய எண்ணம் அவரை அரசியல் அரங்கத்தில் கொண்டு வந்து நிறுத்தியது!

யார் ஆண்டால் என்ன என்று பலரையும் போல எண்ணிவிடாமல் எப்படி ஆண்டால் என்று 'சும்மா' இருந்து விடாமல் அண்ணன் ஆளவேண்டும்; அந்த ஆட்சி இப்படி அமைய வேண்டும்என்றுஅவர் நினைத்தநினைப்பு அவரை அரசியல் உலகில் நிலைக்கச் செய்துவிட்டது.

அதனல் சொல்லடி, கல்லடி, பட்டுக் "கண்ணீரும் செந்நீரும்" சிந்தக் கழகத்தை வளர்த்த தலைவர்களில் அவர் ஒருவரானுவர்; ஒப்பற்றவரானுவர்.

அந்த நடமாடும் பல்கலைக் கழகத்திடம் பழகுவது சுலபமல்ல. உள்ளே இருக்கும் அன்பைப் பளிச்சென்று காட்டத் தெரியாது; ஆனல் கோபத்தை உடனே கொட்டி விடத் துடிக்கும் துடிப்பு உண்டு. இந்தப் பண்பு சிலபேரை அவரை விட்டுச் சற்று விலக்கி வைத்திருக்கிறது. எண்ணுவதற்கு அழகு என்னும் மெருகிட்டு வெளியிடுவது சொற்பொழிவில் தான்; நண்பர்களிடம் தனிப்பட்ட வகையில் பேசும் போது அந்த' நயம்' இவருக்குத் தெரியாத கலை. 'முடியாது' என்றே 'பட்' டென்று கூறிப் பலருடைய கசப்புக்கு ஆளாகி விடுகிறார். 'பார்க்கலாம்' என்பது கூட முடியாது என்ற பொருளைத் தருவதுதான். ஆனல் ஏனே நாவலர் இன்னும் பார்க்கலாம் என்ற இந்தச் சாதாரண சொல்லை வழங்கிடக் கற்கவில்லை!

ஆனல் அந்த முரட்டுக் கடமைப் போர் வைக்குள ஒருநல்ல உள்ளம், மறைந்திருக்கிறது. முள் தோலால் மூடப்பட்டிருக்கும் அந்தப் பழம் சுவையான சுளைகளை உடையது தான். வெளிப் பார்வைக்கு முள்மட்டுமே தெரிகிறது.

தனிப்பட்டோரின் தயவுக்குக் கட்டுப்படாத புலமைக் குணமே அப்படி முள்ளாகக் காணப் படுகிறது. அது வெறும் தோற்றமே! உண்மை அன்பு வடிவானது தான்.

நாவலரிடம் அமைந்துள்ள மற்ற எல்லாச் சிறப்புகளையும் விட நான் விரும்புவது ஒன்று உண்டு. அதுவே **அவர் தம் பேச்சினை முடிக்கும போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலைக் கூறி முடிக்கும் பாங்கு.**

புலமையும் அரசியலும் சந்திக்கும் இடம் தான் அது!

சுருக்கமாகச் சொல்வதானல் சங்க காலப் புலவர் ஒருவர் இன்றைய அரசியலில் ஈடுபட்டால் எப்படி இருக்கும் என்ற வினுவுக்கு விடை தான் நாவலர் நெடுஞ்செழியன்:

அவருக்கு இன்று பொன் விழா! பொருள் பொதிந்த வாழ்வுக்குப் பொன் விழா!

வாழ்க நாவலர்!

ஆற்று மணலினும் நீடு வாழ்க!

கே.என்.இராமச்சந்திரன் M.A., M.L.A.

கழகத்தின் காவலர், நந்தமிழ்ச் சொல் நாவலர், அறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பி நாவலர் நெடுஞ்செழியன் அவர்கட்கு இன்று ஐம்பத்தோராவது பிறந்த நாள்.

நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் ஆயிரமாயிரம் அன்புத் தம்பிகளிலே மூத்தவர். நமதருமைத் தமிழ்நாடு அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த அக் காலத்திலேயே சீர்திருத்தச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கருத்துக்களிலும், இளைஞர் உலகின் தளபதி என்று பெருமையோடும், பூரிப்போடும் அழைக்கப்பட்ட அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லாற்றலிலும் தம் சிந்தையைப் பறிகொடுத்துக் கழகத்திலே புகுந்தவர். இன்றைய நம் முதல்வர், நாட்டின் நல்லோர் எல்லோரும் போற்றும் கலைஞர், கழகத்தின் ஒப்பற்ற தலைவர் அவர்கள் சின்னஞ் சிறு மாணவராக இருந்த போதே, நாவலர் அவர்களை அழைத்துச் சென்று கூட்டங்கள் நடத்திய போது தாய் நாட்டினை நிலை உயரச் செய்தவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவராக இருந்த போதும் சரி; பட்டம் பெற்று வெளி வந்து முழுநேரத் தொண்டனாக, தமிழர் தாயின் தலைமகனின் வீர அணியிலே அணி வகுத்து நின்று களங்கள் பல கண்டபோதும் சரி; நமதருமைத் தாய் நாட்டின் தவப் புதல்வன், சொலல் வல்லன், சோர்விலன், யார்க்கும் அஞ்சாத சான்றாண்மை படைத்த பண்பாளன், நம் நெஞ்சமெல்லாம் நீங்காது நிலைத்துவிட்ட பூமான், நம் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் தமிழர் தம் இதய தெய்வம், அமரர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலே அமைச்சராகப் பொறுப்பேற்ற போதும் சரி; கதிரவன் பகலில் நம் முன்னே செங்கதிர்களை வீசிப் பணி புரிகின்றான்; சரி இரவு ஓய்வு கொண்டான் போலும் ஆதவன் என்று அறியாதார் எண்ணுவர்; விஞ்ஞானம் கற்ற மெய்ஞ்ஞானம் உள்ளவரோ ஓய்வு உலகின் ஒரு பகுதி மக்கட் கூட்டத்திற்குத்தான்; பகலவனோ உலகின் மறுபுறம் உள்ள மாந்தர்தம் புற இருளகற்றப் புறப்பட்டுவிட்டான் என்னும் விந்தை நிறை உண்மையை உணர்வர். அது போல ஓய்தல் இன்றி உலகுக்கு உழைத்து, திக்கெட்டும் முரசு கொட்டி, ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப'' வேய்ங்குழலில் தீங்கனிச்சாறு கலந்து பேசி, நம் தென்னாட்டிற் கிணையில்லை எந்நாடும் என்று, மற்றோரும் மாற்றாரும் வியந்து, புகழ்ந்து, திகைத்துக் களித்து நிற்க நல்லாட்சி புரிந்து வருகின்ற கலைஞர்அவர்களின்அமைச்சரவையில் பணிபுரிந்து வருகின்ற இந்நாளிலும் சரி, என்றுமே நிலையாக விடாமல் தொடர்ந்து வருகின்ற எளிமை, தலைவன் தாள் தலைப்பட்ட நங்கையாகத் தன் தலைவனிடத்தே அண்ணாவினிடத்தே கொண்டுள்ள பக்தி, ஆழ்ந்த தமிழ்ப் பற்று, உள்ளன்பும், உழுவலன்பும் பூண்டோரி

டத்தே எல்லையற்ற பாசமும் அத்துணையும் நாவலர் அவர்களிடம் விடாமல் தொடர்ந்து, மலர்ந்து, மணம் வீசி வருவன.

நாவலர் அவர்கள் கழகத்திலே சேராமல் இருந்திருப்பார்களேயானால், இன்று ஒரு பெரிய மடாதிபதியாக அவரை நாம் கண்டிருக்கலாம். இல்லையேல் பெரியதொரு தமிழ் ஆசானைக் கண்டிருப்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை பல பொது மேடைகளிலே நகைச்சுவை ததும்ப நாவலர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதை என்னைப் போலவே ஏனையோரும் செவிமடுத்து இருக்கலாம். அறிஞர் அண்ணா அவர்கள் நாவலரின் எல்லையற்ற தமிழ்ப்பற்றையும், துறவி போன்ற எளிய வாழ்க்கையையுமே இவ்வாறு அடிக்கடி எடுத்துக்கூறி வந்தார்கள் எனின் அது மிகையன்று. பண்டைக் காலத்துப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனே என்று பார்ப்போரைப் பிரமிக்க வைக்கும் தோற்றம் கொண்டவர்'' இதுவும் அறிஞர் அண்ணா அவர்களின் அன்பு மொழிகள் தாம்.

உடையார்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் தான் பள்ளியிறுதி வகுப்பு பயின்று கொண்டிருந்த நேரம், மாணவ மணிகளின் ஆர்வம் நாவலர் அவர்களை ஒரு பொதுக்கூட்டத்திற்கு அழைத்து வரச் செய்தது. கண்டோரெல்லாம் திகைத்தோம். காரணம் நாவலர் அவர்களின் இளந்தாடிதான். அழகிய சிறு தாடி; நீண்ட மேல் சட்டை; ஆற்றொழுக்கன்ன தெள்ளு தமிழ்ச் சொற்கள்; அவை போட்டிபோட்டுக் கொண்டு பாயும் மலையருவியன்ன வேகம்; கேட்போர் தம் நெஞ்சிலே ''தண்''ணென்ற குளுமையுணர்ச்சி; பெருகி வரும் கடல்மடை போன்று அவர்தம் வாய் வழியே வெள்ளமாய் வழிந்தோடிய பாவேந்தரின் புரட்சிக் கவிதைகள். அவற்றைக் கேட்டோர் உள்ளமெல்லாம் வீர உணர்வு.

இவையனைத்துமே இன்று நிகழ்ந்தாற் போன்று தான் என் அகக்கண்ணில் படமாய் விரிகின்றன.

தென்னாற்காடு மாவட்டத்தின் கழக மாநாடு கள்ளக்குறிச்சியில் நடைபெற்றபோது, என்னைத் தலைமை தாங்கப் பணித்தனர் பேரறிஞர் நம் அண்ணன் அவர்களும், நாவலர் அவர்களும். மாநாட்டின் இறுதி நாளன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொற்பெருக்காற்றுவதற்கு முன்பாக, நாவலர் அவர்கள் உரையாற்றினார்கள். நீண்ட நெடும் தமிழ்ப் பேச்சு, ஆயினும் அவையனைத்துமே இறுதியில் அறிஞர் அண்ணா அவர்களின் புகழ் பாடும் பரணிகள். அன்று நாவலர் அவர்கள் கூறினார்கள்: ''அறிஞர் அண்ணா அவர்களை நாம் புகழ்வதால் அவர்கட்குப் புது உயர்வு ஏதும் கிடைக்கப்போவதில்லை. அறிஞர் அண்ணா அவர்களைப் புகழ்வதன் மூலம் நம்மை நாமே உயர்த்திக் கொள்கிறோம்; அவர் நாமத்தைப் பாடிப்பாடிப் பரவசமடைகிறோம். இது நம் கழகத்தவர்க்கு மட்டுமே கிடைத்த பேறு'' என்றார்கள்.

அடுத்து, அறிஞர் அண்ணா அவர்கள் மாக்கடலெனத் திரண்டு நின்ற மக்கட் கூட்டத்தின் நடுவே—முகிற் கூட்டம் புடை சூழ, விண்மீன்கள் நின்றிருக்கத் தோன்றும் தண்மதியென—எழுந்தார்கள், பவள மணிவாய் திறந்து, அறியாமை இருளகற்றி, அறிவுச்சுடர் விளக்கு ஒளிர! ஒலிபெருக்கியின் முன்பு அமைக்கப்பட்ட மேடை உயரமாக அமைந்திருந்தது. எனவே, அண்ணா அவர்களின் உயரத்தைச் சற்று அதிகமாக்கக் கீழே ஒரு பலகை போடப்பட்டது. அதன் மேல் ஏறி நின்ற வண்ணம் அறிவுத் திருவிளக்கு, நம் அண்ணா அவர்கள் தம் உரையைத் தொடங்கினார்கள், இப்படி :- ''இந்த இடத்திலே-நாவ

லர் நின்று உரையாற்றிய இந்த இடத்திலே நான் நிற்கிறேன். ஆனால் என்னால் தனித்து நிற்க முடியவில்லை. அதனால் துணையுடன் நிற்கிறேன். எதிலும் தனித்து நிற்க இயலாமல், துணையுடன் நிற்க விரும்புபவன் நான் என்பதையே இந்நிகழ்ச்சி காட்டுகிறது''! என்றார்கள்.

இருவருடைய சொற்களையும் உற்று நோக்கின், நம் நெஞ்சமெல்லாம் நெகிழும்; தலைவனுக்கேற்ற தம்பியும்; தம்பிக்கு ஏற்ற தலைவரும்!

நாட்டின் நன்மைகள் மலர நாவலர் அவர்கள் ஏற்றுக் கொண்ட இன்னல்கள் ஏராளம்; அவ்வின்னல்களின் நடுவே கோடை வெப்பத்தின் நடுவே பெய்யும் சிறுமழையின் தன்மை போல இதயத்திற்கு இதந்தரும் வாய்ப்புக்கள் உண்டென்றால் அதுவே கழகத்தவரிடையே உள்ள பாசப் பிணைப்பு. அந்தப் பாசமென்னும் மெல்லிய நூலிழை - அன்பும், பரிவும் சேர்த்துப் பின்னப்பட்ட நூலிழை - அற்றுப் போகாமல் அழகாக அசைந்தாடுகின்றதென்றால் அதற்கு நாவலரைப் போன்றவர்களின் உயர்ந்த பண்புகளே ஏது ஆகும்.

அன்று பார்த்த அதே நாவலரை இன்றும் பார்க்கறேன். அன்று கண்ட அமைதியை இன்றும் காண்கிறேன். என் மனத்தில் வள்ளுவ மாமுனியின் தெள்ளு தமிழ்க் குறள் ஒலிக்கின்றது.

ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி யெனப் படுவார்.

அரசியல் வாழ்வு என்பது கண்ணாடி ஜன்னலின் வழியே காணும் மழையைப் போன்றது என்னலாம். கண்ணாடி ஜன்னல் வழியே காணும் போது வானத்துக்கும் பூமிக்கும் நாட்டப்பட்ட சங்கிலித் தொடராக அழகு மிளிரும் மழை. ஆனால், வெளியே வந்து மழையில் நனைந்தால் காய்ச்சலும், நீர்க்கோர்வையும்தான் ஏற்படும்; உடல் அவதியுறும்; அதுபோலத்தான் அமைச்சர்கள் என்றும், அரசியல்வாதி என்றும் வாழ்வது, வெளியே நின்று காண்போர் ஏக்கம் கொள்வர், இத்துணை வசதிகள் நிறைந்த வாழ்வா என்று! உள்ளே வந்து அருகே இருந்து பார்த்தால்தான் தெரியும், அரசியல் வாதிகளின் தொல்லை. இப்படிப்பட்ட துன்பம் நிறைந்த வாழ்வு நடத்துவோர்தான் இன்றைய நம் முன்னணித் தலைவர்கள் அத்தனைபேரும்.

நடமாடும் பல்கலைக் கழகம் ஆவார், நாவலர் அவர்கள். அந்தப் பல்கலைக்கழகம் தன்னுள் மிக்க விருப்புடன் போற்றி மகிழும் நூல் புரட்சியாளரின் புதுமைக் கவிதைகள் ஆகும். அன்றோர் தமிழ் மன்னனைப் புலவனொருவன் வாழ்த்தினன், "ஆற்று மணலினும் நீடு வாழ்க'' என்று. அதையே என் நெஞ்சமும் வாழ்த்தாகக் கூற விழைகின்றது. வாழ்க நாவலர்!

''கோட்டை நாற்காலி இன்றுண்டு நாளை
கொண்டு போய் விடுவான் திராவிடக் காளை.''

இது பாரதிதாசனின் முன்னாள் கனவு; அது இந்நாள் நனவாயிற்று.

பாடமொழியாகத் தமிழே இருகக வேணடும்

''எல்லாத் தனியார் கல்லூரிகளிலும் தமிழையே பயிற்று மொழியாகக் கொண்டு வகுப்பு நடத்துமாறு வற்புறுத்தும் கட்டம் வரலாம்''

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஆங்கிலத்தில் 60 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் மட்டும்தான் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் என்று விதி இயற்றுவது பற்றி அ.சு பரிசீலிக்கும்.

அரசினர் கல்லூரிகள் அனைத்திலும் தமிழைப்பயிற்று மொழியாகக் கொண்ட வகுப்புகள் கட்டாயமாக ஏற்படுத்தப் பட்டிருகின்றன.

தனியார் துறையைச் சேர்ந்த 89 கல்லூரிகளில் இப்பொழுது தமிழ்ப் பிரிவு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில் பாடமொழியாக தமிழே இருக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கிணங்க, இம்முயற்சியைத் துரிதப்படுத்தும் வகையில் எல்லாத் தனியார் கல்லூரிகளிலும் தமிழ்ப் பிரிவுகள் வைக்கப்பட வேண்டும் என்று அரசு வற்புறுத்த வேண்டிவரலாம்; ஆனால் அது இப்பொழுது அல்ல: இன்னும் சில ஆண்டுகளில் அத்தகைய ஏற்பாடு வரலாம்.

— நாவலர்

ஆழ்ந்த சிந்தனையாளர்

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ் நாட்டின் தலைசிறந்த தலைவரென மக்களால் பெரிதும் போற்றி மதிக்கப் பெற்று வருகிறார். தையல் தொழில் துறையில் சிறந்து விளங்கி எழுத்தாளராயும் புகழ்பெற்றுள்ள திரு. கே. பி. சுந்தரம் அவர்கள் 'தையற்கலை' என்னும் இதழை இனிது நடத்திவருவதுடன், நாவலர் பொன்விழா மலரும் வெளியிட முன்வந்திருப்பதை வரவேற்கிறேன்.

நாவலர் ஆழ்ந்த சிந்தனையாளர். அமைதியும் ஆற்றலும் மிக்கவர். தம்மிடம் வந்து பலரும் தெரிவிக்கும் கருத்துக்களை ஆறுதலாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொள்ளும் இயல்பினர். தாம் பயின்ற ஆசிரியர்களிடம் அளவற்ற பற்றும் பாசமும் மிக்கவர். ஊழியர்களிடத்தில் அன்புடன் பழகுபவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவால் ஏற்பட்ட சூழலில், தாமே ஒதுங்கி நின்று கட்சியின் புகழும் தமிழ்நாட்டின் பெருமையும் ஓங்கச் செய்தவர். நாவலர் நினைத்திருந்தால், "இரண்டாக உடைந்து விடாத இந்திய அரசியல் கட்சி தி. மு. க. ஒன்று தான்" என்ற பெயர் தி. மு. க.வுக்கு இருந்திராது. அச்சிறப்பின் பெருமை நாவலரையே சேரும்.

மதுரைப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவர் படிப்பையே ஒழித்துக் கட்ட தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் முழுமூச்சாக முனைந்த போது, அதைத் தடுத்து நிறுத்தியவர் நாவலர் அவர்களே என்பதைத் தமிழன்பர்கள் நன்றியுடன் நினைக்கவும் போற்றவும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இரண்டாம் உலகத் தமிழ்நாடு சென்னையில் கூடியபோது, விழாத் தொடக்க நிகழ்ச்சியில் மலாயா நாட்டுப் பிரதிநிதி பத்து லட்சம் மக்கள் முன்னிலையில் பேச வாய்ப்புக் கொடுக்கப் படவில்லை. இதனால் மலாயாவிலிருந்து வந்திருந்தவர்கள் மனம் வருந்தினர். உலகத் தமிழ் மாநாட்டை முதலிற்கூட்டிய தாங்கள் தமிழ் நாட்டில் மதிக்கப்படவில்லை என்ற குமுறல் அவர்களிடையே நிலவியது. இதையறிந்த நாவலர் அவர்கள் உடனே மலேயா நாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறி, சிக்கலையும் மனக் கசப்பையும் தவிர்த்தார்.

உலகத் தமிழ்க் கல்லூரி உருவாகவும் அது சென்னையிலேயே அமையவும் நாவலர் செய்துள்ள பணி சிறப்பானது; குறிப்பானது. ஒப்பற்றது. கல்வித் துறையிலும் மருத்துவத் துறையிலும் தமிழ் ஏற்றம் பெறவும், அதே நேரத்தில் ஆங்கில அறிவின் பயனை நாம் இழந்து விடாதிருக்கவும் நாவலர் செய்து வரும் முயற்சிகள்யாவும்வெற்றிபெறவும் பண்பும் புலமையும் மிக்க இப் பெருந் தலைவரின் அயராத தொண்டு தொடர்ந்து தமிழ் நாட்டுக்குக் கிடைக்கவும் வேண்டுகிறேன்.

'சோமலெ'

நாவலர் வாழ்க

தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அகவை ஐம்பது நிரம்பப் பெறுகிறார். இப் பொன்விழா நினைவாக அருமை நண்பர் தையற்கலை வல்லுநர் திரு கே. பி. சுந்தரம் அவர்கள் சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்; அவர் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சென்னைத் தமிழ்ச்சங்கம் தமிழ்ப் பெரி திரு. வி. க. அவர்களின் மணிவிழா நினைவாக 1943 இல் கல்லூரி மாணவர்களுக்கு என ஒரு பேச்சுப் போட்டியை ஏற் படுத்தியது. 1943 சனவரித் திங்களில் சிந்தாதிரிப்பேட்டை உயர்பள்ளியில் நடந்த முதல் போட்டியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாணவராக வந்து கலந்துகொண்டு, வென்று, இளந் தாடி இரா. நெடுஞ்செழியன் திரு. வி. க சுழல்வெண் பொற்குடத்தினையும் தனிப் பரிசினையும் பெற்றுச் சென்றார். அந்தக் காட்சி என் மனத்தில் இன்னும் பசுமை யாக நிற்கின்றது.

அதன் பின்னர்ப் பேரறிஞர் அண்ணா அவர்களின் படையில் சேர்ந்து நாடறிய நாவலராக, நல்லமைச்சராக உலாவந்த— வருகின்ற-வரலாற்றினை நாடறியும்.

சென்ற ஏப்ரல் இறுதியில் மாநகரத் தமிழாசிரியர் கழகம் நடத்திய பாரதிதாசன் நினைவு விழாவில் சுமார் ஒன்றேகால் மணி நேரம் நாவலர் அவர்கள் நிகழ்த்திய இலக்கியப் பேச்சினை எண்ணி எண்ணி இறும்பூது அடைகின்றேன். நம் தமிழகம் எங்கணுமிருந்து வந்து அக்கூட்டத்தில் கலந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழாசிரியப் பெருமக்கள் அத்துணைப் பேரும் அப் பேச்சினை ஒருமுகமாகப் பாராட்டினர். இத்தகைய சிறந்த பெருமகனார் ஒருவர் தமிழக ஆட்சியின் கல்வித் துறைக் காவலராக இருப்பது தமிழகம் செய்த பேறு என வாழ்த்தினர்.

நாவன்மைக்கும் தில்லைக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. போலும்! யாழ்ப் பாணம் ஆறுமுக நாவலரும் பசுமலை நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் தில்லையிலிருந்து தமிழ்ப் பணியாற்றிய பெருமக்கள் ஆவர். அவர்கள் வழியில் இந்த நெடுஞ்செழிய நாவலரையும் தில்லை (அண்ணாமலை)ப் பல்கலைக் கழகம் நாட்டிற் குத் தந்துள்ளது

இந் நாவலர். அண்மையில் மலை நாடெல்லாம் சென்று தமிழ் பரப்ப இருக் கின்றார். நாவன்மையும் நல்லாட்சித் திற னும் நிரம்பப் பெற்றுள்ள இப் பெருமகனார் ஆண்டு பல வாழ்வாராக என உளமார வாழ்த்துகிறேன்; இவருடைய எண்ணமும் செயலும், தமிழக எழுச்சிக்கும் பயன்படுவனவாக எனப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

பேராசிரியர்
அன்புகணபதி.

நாவலர் ஆட்சி நல்லாட்சி ஆகுக!

பெயருக்கேற்ற பெருந்தோற்றம்! பட்டத்திற்கேற்ற பண்பு! உருவத்திற்கும் உரைக்கும் ஒத்த பெயரும் பட்டமும்!

* * *

விருத்தப்பாவில் முதற்காப்பியம் செய்த திருத்தக்கதேவர் 'அமைச்சர்' என்ற பொருளிலேயே 'நாவலர்' என்ற சொல்லை எடுத்தாள்கிருர். 'நாவலர்' சொற்கொண்டார்க்கு நன்கலால் தீங்கு வாரா' என்பது அவரது அருமையான திருவாக்கு.

* * *

இருபது ஆண்டுகட்கு முன்பு ஒரு நாள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவனாய் இருந்த காரணத்தால் திரு விசுவநாதம் என்ற பொருளியல் மாணவ நண்பருடன் பேரறிஞர் அண்ணாவை ஒரு கூட்டத்திற்கு அழைக்க 'அறிவகம்' சென்றிருந்தேன். பேரறிஞர் அண்ணா வேட்டியும் பனியனும் அணிந்து ஏதோ அச்சுத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தார். வேண்டுகோளைத் தெரிவித்தோம். 'சரி' என்று நாள் தந்தார். அப்போது அவருக்குச் சற்று தொலைவிலே நாவலர் அமர்ந்திருந்தார்; ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். பேரறிஞர் அவரை நோக்கி 'என்ன? மாநாட்டில் கொடியேற்ற மனைவி யார் பெயரைப் போடலாமா?' என்ருர் வலைவீசும் கலை விழிகளோடு! குடும்பம் குடும்பமாகச் சேர்ந்தால்தான் இயக்கம் வலுப்பெறும் என்பதை அண்ணல் காந்தி வழி அறிஞர் அண்ணா அறிவார் அன்ருே! நாவலர் ஏதும் பதில் நவிலவில்லை! அண்ணாவும் ஆண்மகன் தானே! நிலைமை அறியவல்ல தலைவர் தானே! புன்முறுவலோடு அச்சுத் தாள்களைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டார். நாங்களும் விடைபெற்றுப் பிரிந்தோம்.

டாக்டர் ந. சஞ்சீவி

அந்த நாவலர் இன்று தமிழ்நாட்டின் கல்வி—நலமைத் துறை அமைச்சர்! தி. மு. க. அரசு ஏற்பட்ட நிலையில் கல்வி—தொழில்—இந்து அறநிலைய—அமைச்சர்! தி. மு. க. அரசு ஏற்படுமுன் தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர். தி. மு. க. அரசு ஏற்பட்டபின் சட்டமன்றத்துள் ஆளுங்கட்சித் தலைவர் (Leader of the House).

நாவலர் உண்மையிலேயே நாவலர். 'கணீர்' என்ற குரல்! கடல்மடை திறந்தாற்போன்ற சொல் வளம்—சொல் வெள்ளம்! இன்றைய தி. மு. க. தலைவர்களுக்குள்ளேயே தலைசிறந்த இலக்கியப் புலமை தோய்ந்த பேச்சாளர் அவர் எனலாம்!

அமைச்சராகும் முன் அவர் நடத்திய 'மன்றம்' இதழ் அனைவர்

மன்மும் கவர்ந்தது. காரணம் அதன் கல்வித் தரமே.

பேரறிஞர் அண்ணு அமைச்சரவை அமைத்தபோது நாவலரைத் தனக்கு அடுத்த நிலையில் வைத்துச் சிறப்பாகக் கல்வித் துறையை அவர் கையில் கொடுத்தது எல்லோரும் எதிர்பார்த்ததே.

எளியேனுக்குத் தெரிந்த வகையில் நாவலர் கல்வித் துறைப் பொறுப்பேற்ற பின் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரே சீர்திருத்தம்– குறைபாடுகள் இருப்பினும் சிறந்த சீர்திருத்தம்—ஓரிடத்திலேயே தேர்வுத் தாள்களைத் திருத்தலே (Central Valuation) இதில் இப்போதுள்ள சில குறைபாடுகளையும் மிக எளிதில் நீக்கலாம். அதிகாரிகட்கும், ஆசிரியர்கட்கும் கடமை உணர்வும் கண்டிப்பு உணர்வும் இருந்தால் ஆகாதது ஒன்றும் இல்லை.

இதற்கு அடுத்த நிலையில் மெல்ல மெல்லவேனும் தமிழைப் பயிற்சி மொழி ஆக்குவதில் நாவலர் நாட்டம் காட்டி வருகிருர். இது வரவேற்று வாழ்த்தற்குரியது.

தமிழனுக்கு (ஆம். தன்னினும் தமிழ் உயர்ந்ததாய்க் கருதும் தமிழனுக்கு— வயிற்று வாழ்வினும் மான வாழ்வைப் பெரிதாய் நம்பும் தமிழனுக்கு) ஒரு நாளிதழ் கிடையாது. (கட்சிச் சார்பற்றுத்)—தமிழில் கூட! தமிழ்ப் பகைவர்க்கோ பலப்பல இதழ்கள்—தமிழிலும், ஆங்கிலத்திலும்! இந்தச் சூழலில் 'இந்து' வும், 'எக்ஸ்பிரசு'ம், 'மெயிலு'ம், 'தினமணி'யும், 'மித்திர'னும் படுத்தும் பாட்டில் நாவலர் தமக்கே இயல்பான பொறுமையோடு உறுதியாக இருப்பது தமிழ்த்தாய் செய்த தவம்! ஆம், இல்லையேல் யார் என்ன செய்ய முடியும்? குடியாட்சி! முடியாட்சியினும் அஞ்சத்தக்கது! தமிழ் வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன? சின்னஞ்சிறு ஐரோப்பிய நாட்டான் எல்லாம் 'கன்னித் தமிழ்—ஈராயிரம் ஆண்டு இன்பத் தமிழ்—என்கிருயே! கறுப்பா! உன் நாட்டுப் பல்கலைக் கழகப் பாடமொழி எது?' என்று கேட்டால் 'வெள்ளைத் துரையே! ஆண்டான் போனுலும் எங்கள் அடிமைப்புத்தி போகவில்லை. எங்கள் தமிழில் என்ன இருக்கிறது? உங்கள் ஆங்கிலத்தில்தானே எங்கள் வயிறும் வாழ்வும்?' என்று சொல்லத்தானே 'இந்து' – 'எக்சுபிரசு' – 'மெயில்' – 'தினமணி' – 'மித்திரன்' – இதில் பார்ப்பனத் தமிழரோடு பச்சைத் தமிழரும் போட்டி போடுகிருரே! 'எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்று!

இந்த சூழ்நிலையில் நாவலர் மெல்ல மெல்லவேனும் தமிழ் பயிற்சி மொழியாகப் பாடுபடுகிருரே! வெள்ளையனை எதிர்த்த பல வீரர்களுக்கு இல்லாத அக்கறையை அவர் காட்டுகிருரே! அது போதாதா?

மந்திரிக்கேற்ற மக்கள் கிடைக்கமாட்டார்கள்! மக்களுக்கு ஏற்ற மந்திரிகள் தான் கிடைப்பார்கள். மந்திரிகளால் மக்கள் மாறவேண்டும் என்ருல் அதற்கு ஓர் அண்ணுதான் வரவேண்டும்! அவரும்...

பயிற்சி மொழி பற்றிச் சிக்கலே ஏதும் இல்லை. இல்லாத சிக்கலை ஏற்படுத்தி 'சிண்டு' முடிக்கிருர்கள் படித்த பாவிகள்!

சிலவே சில வினுக்கள் – விடைகள் :

1. கல்வி உளவியல்படி பயிற்சி மொழிக்கு ஏற்றது எது?

சர். ஏ. எல். முதலியார் உயர்நிலைப் பள்ளி கல்வி அறிக்கையாலும் சரி சர். இராதாகிருட்டினன் – கோத்தாரி – பல்கலைக் கழக கல்வி அறிக்கைகளாலும்

சரி ஒரே குரலில் சொல்லும் பதில் தாய் மொழி. அப்படியானால் அரசினர் கல்வி நிலையங்களிலும் அரசினரிடம் 'நன் கொடைகளிலும் (ஆமாம்! 'பிச்சை'க்கு வேறு பெயர்!) வாங்கி நடத்தும் கல்வி நிலையங்களும் கட்டாயமாகத் தாய்மொழி யில் கற்பிக்க வேண்டியதுதானே!

2. தாய்மொழி வாயிலாகக் கற்பிப் பதே தலைசிறந்தது என்றால் அத்தகுதி தமிழுக்கு உண்டா இல்லையா?

'கலைக்களஞ்சியம்' கண்ட தமிழுக்கு அந்த ஆற்றல இல்லை என்றால் அந்தத் தமிழ் வாழ்ந்தென்ன செத்தென்ன? வாழ் விக்க முடியாத தமிழ் வாழ்வதிலும் சாவது மேல். மேலும் தமிழால் பி. ஏ., எம். ஏ. பாடங்களைக்கூடக் கற்பிக்க முடியாது என்றால அதைக் குழியில புதைத்து விட்டு அடுப்பங்கரை முதல் ஆங்கிலத்தையே ஆட்சிமொழி ஆக்கிவிடுவதே நல்லது — ஏன்? — கோவில்களிலகூட ஆங்கிலத்தி லேயே வழிபாடு செய்யலாமே! ஆங்கிலத் தால்தானே 'இந்து'வுக்கு வாழ்வு? ஏன? கீதைக்கும், வேதத்துக்கும் கீர்த்தி? எனவே ஒன்று தமிழை மெலல, மெலல அல்ல — வெல்ல, வெலல — விரைந்து பயிற்சி மொழி ஆக்கவேண்டும். இல்லை யேல் பாடைகட்டி அனுப்பிவிடவேணடும்! குறறுயிராய் வைததுக் கூண்டில் அடைத்து உலகம் பாரத்து நகைக்க விடக் கூடாது! அதைச் செய்யததான் 'ஆரியம், அவாவுகிறது! வழககம்போல 'திராவிடம்' தடுமாறுகிறது!

3. 'மத்திய ஆட்சி மொழி ஆங்கிலம்' என்பதுதான் தி மு. க. கொள்கை. அதை எந்த வகையில பயிற்சித் தமிழ் கெடுக் கிறது.

தமிழ்நாட்டில் மூன்றாவது முதல் புகுமுக வகுப்பு வரை ஆங்கிலம் இன்னும் கட்டாயம் இல்லையா? ஏன் அதற்கப்புறம் பி. ஏ. பி. எசியிலும் ஆங்கிலம் கட்டாயம் தானே! — இரண்டாம் மொழியாக இரண் டாண்டுகட்கு! எனவே பி ஏ. பி.எசி. பட்ட தாரிக்கு ஆங்கில அறிவு இல்லை என்று எந்த அறிவுள்ளவன் சொல்வான்?

இணைப்பு மொழி அறிவுக்கு இந்த 14 ஆண்டு ஆங்கிலப் படிப்பு போதாதா?

இணைப்பு மொழிக்காக இந்திய மொழி கள் கொல்லப்பட வேண்டுமா? அதுதான் 'இந்து' வழியா? தேசிய நெறியா? அதற் குத்தான் காந்தி விடுதலை கேட்டாரா? அதற்குத்தான் பன்னூருயிர மக்கள் தங் களைப் பலி கொடுத்தார்களா? வயிறு பெரிதா? மானம் பெரிதா? கற்பை விற்றால் கூட காசு வரும்! அந்த வழி 'இந்து' வழியா?

இணைப்பு மொழி நிலை தாயின் நிலை; பயிற்சிமொழி நிலை மனைவியின் நிலை! தாயும் மனைவியும் ஒன்றா?

சரி, 'இந்து' கடவுளிடம் ஓதும் தேவ பாடையில் அறிவியலையும் படிக்கட்டுமே! அல்லது அறிவியலைக் கற்பிக்கும் ஒரே உலக மொழியாகிய ஆங்கிலத்தில் வேதம் ஓதட்டுமே. இரண்டு நிலை எதற்கு?

மேலும்; தமிழ்நாடு தனி நாடானால் உலக மொழிகளுள் எந்த ஒன்றையும் இரண்டாவது மொழியாகக் கற்று அந்த மொழிவழி அறிவை எல்லாம் தமிழுக்குக் கொண்டு வரும் பொன்னான வாய்ப்பைப் பெற்றிருக்கும். ஆனால் இந்திய ஒருமைப் பாட்டுக்காக இன்பத் தமிழர் தரும் விலையே 'கட்டாய ஆங்கில மொழிப்' படிப்பு.

4. பிற மாநிலங்களில் வேலை எப் படிக் கிடைக்கும்? — இது ஒரு 'பெரிய' கேள்வி!

ஏன்? அந்த அந்த மாநிலங்களில் அறிவு இல்லையா? சரி, பிற மாநிலங்கட்குப் போவோர் விழுக்காடு எவ்வளவு? அப்படியே போகிறவர்கட்குப் பதினாலு (14) ஆண்டு ஆங்கிலம் போதாதா? போதாது என்றால் அப்படிப் போய் கொடுக்க நினைக்கிறவர்கள் 'இங்கிலாந்து, போய் இங்கிலீசில் படிக்கட்டுமே! இலலை தனிச் செலவு செய்து தனிப் பயிற்சி பெற்று ஆங்கிலத்தை அரைத்துக் குடிக் கட்டுமே! ஒரு சிலருக்காக மிகப் பலர் பலி யாக வேண்டுமா? இங்கிலீசுக்காக இந்திய மொழிகள் பலியாக வேண்டுமா? ஒற்று மைக்காக உரிமைகள் பறிபோக வேண் டுமா? தமிழின் பெயரால் ஆட்சிக்கு வந்த தி. மு. க. பயிற்சி மொழி தமிழாக என்ன என்ன செய்தது என்று பிற மாநிலங்கள் பேசும் கேலி பெருக வேண்டுமா? ஆரிய ஆங்கிலத்திற்குத் திராவிடத் தமிழ் பலி யாக வேண்டுமா?

5. 'இந்தியைத் தடுக்க இங்கிலீசு வேண்டாமா?' - இப்படிச் சில பைத்தி யங்கள்!

'புலிக்குப் பயந்தவன் எல்லாம் என் மேல் படுத்துக் கொள்ளுங்கள்' என்றானும் ஒரு வீரன்! இந்தியைத் தடுக்க உன் இன் பத் தமிழால் முடியாதா? அதற்கு அந்த அறிவு, ஆற்றல், சூடு, சொரணை, மானம், மதிப்பு இலலையா? இல்லையென்றால் அந் தத் தமிழ் வாழ்வதிலும் அழிவது மேல்!

நம்மை நாம் காக்க நம்மால் முடியா தாம்! கன்னித் தமிழால் கையாலாகாதாம். கடல் கடந்து வந்த மொழியால்தான் முடியுமாம்! இப்படிப் பேசுபவர்களையும் தமிழ்த்தாய் பெற்றாளே!

6. 'பிற நாட்டுக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தும் நமக்கு பிறமொழி ஏன் கூடாது? இப்படியொரு கேள்வி.

ஆமாம். வேண்டியதில்லைதான்! நம் பெண்களுக்கு எட்டு முழப் புடவை எதற்கு? தொடை தெரியும் - முதுகு மினுக்கும் - நெஞ்சு நெளியும் - முக்கால் நிர்வாண கவுன் போதுமே! பரத நாட்டி யம் எதற்கு? பால் டான்சு போதுமே - அமாவாசை அமாவாசைக்குத் தர்ப்பணம் எதற்கு? - மதுவிலக்கு எதற்கு? - கோயில் எதற்கு? குளம் எதற்கு? கும்பாபிடேகங் கள் எதற்கு? அயலநாட்டு அறிவியல் போக்கிலேயே போய்க் கடவுளைக் காலால் உதைக்கலாமே! 'இந்து' வழி விட்டு இந்த வழி போகலாமே! 'இந்து' என்ப தெல்லாம் 'நாமம்' வைப்பதிலதானு!

சரி போகட்டும். பொன்விழாக் கொள் ளும் நாவலருக்கு இல்லாத பொறுப்பா நமக்கு?

இன்றைய தி. மு. க. அரசு தமிழை வலிவூட்டித் தன் காலத்தில் காக்கத் தவறி விடுமானால் - இல்லை வளர்க்கத் தவறிவிடு மானால் - அந்தப் பழியை அது சுமக்கப் போகிறது!

ஒன்றுமட்டும் உறுதி; தமிழ் வழி யாகப் படித்தவர்க்குத்தான் தமிழக அரசில் வேலை என்ற குறைந்த அளவு ஆணையைக் கூடத் தமிழக அரசு பிறப்பிக்காத வரை தமிழ் மொழி பயிற்சி மொழியாக வெற்றி பெறுவது முடியவே முடியாது! எல்லாம் கண் துடைப்பாகவே முடியும்!

அண்மையில் (சூலை-2-ஆம் நாள் (1)அரசு ஆணை வழி பிஞ்சிளம் தமிழ்க் குழந்தைகளுக்கு (1) 1முதல் 5 வகுப்பு களில் (ஒப்புதல பெறாத நூற்றுக்கனக்கான பள்ளிகளிலும் இந்த நாட்டில் குழந்தைக் கல்விஇருக்கும்அழகுஅது!) ஆங்கிலமொழி வாயிலாகவே கலவிகற்றுத் தொடர்ந்தும் ஆங்கிலமொழி வாயிலாகவே கல்வி கற்க இடையில் இருக்கப்பட்ட விதிகளையும்

அழித்திருப்பது ஆங்கில ஆதிக்கதிற்கு மறு படியும் வாழ்வளிப்பதே ஆகும். இக்கருத்து சரியாயின் ஆரியத்தமிழரோடு பச்சைத்தமி ழரும் விரிக்கும் கட்சி வலையில்-வெட்டும் குழியில் -தமிழாட்சி-தமிழராட்சி-வீழ்ந்தே விட்டது எனலாம். தி.மு.க. ஆட்சியிலும் நாய்ப்பால் தானே! தாய்ப்பால் ஏது?' என்று இதே பச்சைத் தமிழர் பறை யறையப் போகிறூர்! ஒரே நேரத்தில் 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்றிருக்க முடியவே முடியாது! அரசியல் ஆட்சிக் கலை - பயின்ற ஓர் ஆராய்ச்சி மாணவன்-தமிழ்ப் பெற்றேன் - என்ற வகையிலேயே இக்கட்டுரையாளன் கருத்து இதுவாகும். தவறுயின் பொறுக்க!

உலகத் தமிழ் மாநாட்டின்போது கடற்கரை கண்ட சிலைகட்குக் காரணம் - எனக்குத் தெரிந்த வரையில் - நாவலர் அவர்களே! தமிழ்ச் சிலைகளை நட்ட அவர் தமிழ்க் கலைகளையும் நடமாட்டாரா என் பதே என் போன்ரூேர் ஏக்கம். வெலிங்டன் மகளிர் கல்லூரியை விவேகானந்தர் மகளிர் கல்லூரி என்றேனும் ஆக்கமாட் டாரா - குவின்மேரிசு கல்லூரியை - கோப் பெருந்தேவி கல்லூரி என்றேனும் ஆக்க மாட்டாரா என்பதே என் போன்ரூேர் கவலை.

தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களில் தவ றுடையனவற்றை எல்லாம் ஒரு சேரப் பட்டியல் தயாரித்து அவற்றிற்கு உரிய திருத்தமான பெயர்களைத் தந்து ஒரே தடவையில் - மூச்சில் மைய அரசின் இசைவு பெற்று மாற்றங்கள் செய்ய முடி யாதா? சென்னையில் உள்ள தெருக்களின் பெயர்களில் எல்லாம் செந்தமிழர் புகழ் மணக்கச் செய்ய எத்தனை ஆண்டுகண் தேவை?

நாவலர் நினைத்தால் நாள்கள் போதும். நினைக்கவேண்டுமே!

அவர் புகழ் ஓங்க ஆசை கொள்ளார் யார்?

எல்லாவற்றிற்கும் மேலாக பாட நூல் துறையை கூட்டுறவுத் துறையின் கையில் ஒப்படைத்தால் ஒழிய கல்வித் துறை கையூட்டுக் காடாகி அழிதல் திண் ணம். எனவே அவர் ஆட்சியின் மாட்சிக்கு இச்செயல் இன்றியமையாதது.

இனி இன்னென்று. குடும்பக் கட்டுப் பாட்டுக்குச் செய்யும் விளம்பரங்களில் கால் பகுதியாவது நலமை விளக்கச் சுவரொட் டிகள் வாயிலாகச் செய்யக் கூடாதா?

நாட்டு மருத்துவ முறைகளும்--ஓமி யோபதியும் — செழித்து ஏழைகளை வாழ் விக்க நாவலர் எவ்வளவோ திட்டங்கள் இயற்றலாமே!--இயற்றிச் செயல்படுத்த லாமே!

நம் உணவுச்சாலைகளில் 'பிராமணுள்' என்றிருக்கும் வகுப்புவாத வாடையை ஒழித்தால்தான் இசைவுரிமை (லைசன்சு) என்று ஆணை பிறப்பிக்கலாமே!

உணவுச் சாலைகளில் தலைமை முறை கள் ஓங்க வலிமையான வழிகள் செய்ய லாமே!

'நாவலர்' 'நாவலர்' என்று எவ்வளவோ எதிர்பார்த்தோம்! ...எதிர்பார்க்கிறோம்!... நாடு வாழ-மொழி வாழ-நாவலர் நீடு வாழ்க! வெல்க!

நாவலர் வாழி நெடுங்காலம்!

கவிஞர் புத்தனேரி. சுப்பிரமணியம்

சங்கத் தமிழின் அறிவாளன்,
தன்னலம் அறியா நெறியாளன்;
தங்க மனத்துப் பெருந்தகையோன்
தன்மா னத்தால் உயர்ந்திடுவோன்;
பொங்கும் நகைச்சுவை தொடுமொழியன்;
புலமை அமைச்சர் நெடுஞ்செழியன்;
சிங்க முழக்கம் நாவலரின்
செந்நா வீறு வாழியவே!

அண்ணு காட்டிய வழிநடப்போன்;
அமுதச் செந்தமிழ் மொழிவளர்ப்போன்;
கண்ணும் கருத்தும் இணைநிற்கக்
கலைஞர் ஆட்சியின் துணைநிற்போன்;
எண்ணம் சொல்லாய்ச் செயல் முடிக்கும்
எழுச்சி அமைச்சர் நெடுஞ்செழியன்
பண்ணுர் தமிழ் போல் புகழ் மணக்கப்
பன்னெடுங் காலம் வாழியவே!

நாற்பத் திரண்டில் முதன்முதலில்
நாவலர் பேச்சை நான கேட்டேன்;
கேட்பவர் உள்ளம் ததும்பிடவும்,
கேளார் கேட்க விரும்பிடவும்,
ஈர்ப்பது நாவலர் பேச்சாகும்;
இலக்கியம் அவரது மூச்சாகும்;
வேட்பது பெரியார் பகுத்தறிவு;
வெற்றித் தளபதி வாழியவே!

"மன்றம்" கண்ட பேராசான்;
வளர்த்த ஏடு "நம் நாடு";
தென்றல் போலப் பழகிடுவான்;
சிறந்த இயக்கப் பொதுச்செயலர்
என்றும் நேர்மை பிறழாதான்';
இம்மியும் கடமை மறவாதான்!
நன்றே நினைக்கும் நெடுஞ்செழியன்
நாவலர் வாழி நெடுங்காலம்!

அண்ணா வாக்கு இவருக்கு அமுத வாக்கு

தமிழ்வாணன்

நாவலர் நெடுஞ்செழியனை நல்லவர் என்று தான் பொதுவாக எல்லாரும் சொல்லுகிறார்கள். அவர் சார்ந்து இருக்கும் தி. மு கழகத்திற்கு வெளி வட்டத்தில் இருப்பவர்களிலே பலர்கூட, நாவலர் நல்லவரே என்றுதான் சொல்லுகிறார்கள்.

இந்த நாளில் அரசியலில் நல்லவர் என்று பெயர் பெற முடியுமா? அப்படிப் பெற்ற பெயரைத்தான் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? நெடுஞ்செழியன் நெடு நாட்களாக நல்லவர் என்ற பெயரை எப்படியோ காப்பாற்றி வருகிறார்!

எம். ஏ. படித்துப் பட்டம் பெற்ற நெடுஞ்செழியன் அரசியலுக்கு வராமல் இருந்து இருந்தால் எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கலாம் .எந்த சர்வகலா சாலையிலாது பேரசிரியராகவோ, துணை வேந்தராகவோ பணிபுரிந்து, மாலைமங்கியவுடன் கை நிறையப் புத்தகங்களைச் சுமந்து கொண்டு மனச் சுமை இல்லாமல் இல்லம் போய்க்கொண்டு இருக்கலாம். மாதச் சம்பளமும் டாண் டாண் என்று கணிசமாகக் கிடைத்துக் கொண்டு இருக்கும்! விரும்பத் தகாதவர்களோடு இப்போது விருப்பமில்லாமல் பழகிக் கொண்டிருக்கிறாரே, இந்த வேதனையைத் தவிர்த்திருக்கலாம்!

அப்படி எல்லாம் தன் வாழ்க்கைத் திட்டத்தை அமைத்துக் கொள்ளாமல் இந்தநெடுஞ்செழியன், கல்லூரியில்இளங் கன்றாக இருந்த பொழுதே, 'அண்ணா' என்ற குரல் கொடுத்துக் கொண்டு அரசியலுக்குக் கட்டு அவிழ்த்துக் கொண்டு ஓடி வந்து விட்டார்!

அன்று இருந்த அதே அண்ணா குரல், அதே வாஞ்சை. அதே மதிப்பு இன்றும் நெடுஞ்செழியனிடம் நிலவி வருகின்றன.

அண்ணா வாக்கு இவருக்கு அமுத வாக்கு. இந்த நல்ல தன்மையினால் தன உடைமைகள் பலவற்றை இவர் இழந்து இருக்கிறார்.

இவர் அண்ணாவுக்கு மட்டும் நல்லவர் அல்லர். கருணாநிதிக்கும் நல்லவர். இந்த இருவருக்கும் நல்லவராக இருந்து, இவரிடமும் நற்பெயர் பெற்று இன்றும் அதைக் கெடுத்துக் கொள்ளாமல் இருக்கும் ஒரே தி. மு. க. தலைவர் இன்று நெடுஞ்செழியன் தான். அண்ணா ஆளாகவும் கருணாநிதி ஆளாகவும் பல ஆண்டுகளைத் தள்ளிவிட்ட நாவலரால் அப்படியே இன்னும் பல ஆண்டுகளைத் தள்ளி விட முடியாதா என்ன!

நாவலர், நாக்கு வல்லமைமிகுந்தவர். மேடைகளில் தாக்கிப் பேசுவதற்கோ இவருக்கு என்று தனிக் குரல். தனி முறை தனிப் பாணி ஒன்று உண்டு. பூச்சரம்

தொடுப்பது போலச் சொற்களை ஒன்றன் பின் ஒன்றாக, அழகாக அடுக்கிப் பேசுவதில் சமர்த்தர். நடு நடுவே காவிய மணம் வீசும், தரக்குறைவாக யாரையும் இவர் தாக்கிப் பேசமாட்டார். ஆனால் அழகான கிண்டல் இவர் பேச்சில் இருந்தே தீரும்!

இவரது பேச்சின் இறுதியில் திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தைப் பார்க்க முடியாது. அண்ணா(மட்டும்) வாழ்க என்றும் இவர் முடிப்பதில்லை. பெரும்பாலும் பாரதிதாசன் கவிதை ஒன்றைச் சொல்லித் தன் பேச்சை முடிப்பார். தி.மு. கவில் இவர் ஒருவர்தான் இன்னமும் கவிஞர் பாரதிதாசனுக்குப் பெருமை தந்து நிற்கிறார்.

இவர் அதிகம் உண்பதில்லை. அதனால் அதிகம் உறங்குவதில்லை. ஆனால் மேடைகளில் அதிக நேரம் பேசுவது உண்டு! இப்போது இவர் தன் பேச்சோடு அபிநயமும் பிடித்துக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்! பேச்சில் சலிப்புத் தட்டும் பொழுது மக்கள் அவருடைய அபிநயத்தைச் சுவைக்கத் தொடங்குகிறார்கள்! அவை நோக்கம் அறிந்து தன் பேச்சை முடித்துக்கொள்ளப் போகிறார் என்று மக்கள் நினைக்கும் போது மறுபடியும் எடுத்துத் தொடுத்துப் பேச ஆரம்பித்து விடுவார் இவர்!

இது வரையில் சட்ட மன்றத்திலே இவர் சொல்லக் கூடாத ஒரு சொல்லைக் கூட இவர் சொல்லியது இல்லை. தி. மு. க. வின் சுலோகம் இருக்கிறதே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு --அவைகளை அப்படியே சட்டமன்றத்திலே இவர் பின்பற்றி வருகிறார்.

குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டு, தி.மு.க வின் தலைமையகம், அண்ணாவின் காஞ்சீபுரம், கருணாநிதியின் கோபாலபுரம் என்றே சுற்றிக் கொண்டு இராமல், நெடுஞ்செழியன் அண்மையில் கீழ்த்திசை நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

அங்கெல்லாம் அரசியல் கட்சிகள் எப்படிச் செயல்படுகின்றன என்று கண்டு வந்தார். அங்குத் தேர்தல் கூட்டங்கள் எப்படி நடத்தப்படுகின்றன என்று பார்த்தார். அந்தப் பயணத்திற்குப் பிறகு நெடுஞ்செழியன் இன்னும் நல்ல பக்குவம் பெற்றிருக்கிறார். இவரது அரசியலில் மேலும் நாணயமும் நல்ல தன்மையும் படிந்த வருகின்றன.

முன்பு இளந்தாடி வைத்துக் கொண்டு இளந்தாடி நெடுஞ்செழியனாக விளங்கி வந்தார். இப்போது...

அந்தத் தாடியும் இவரிடம் இல்லை. பெரியாருக்கு பரியாதை காட்டுவதற்காக அந்தத் தாடியை இவர் எடுத்துவிட்டார் போல இருக்கிறது!

நாவலர், தனக்கு இருந்து வரும் உயரத்துக்கு, தனக்கு இருந்து வரும் உடம்புக்கு, தனக்கு இருந்து வரும் கல்விக்கு தனக்கு இருந்துவரும் தனிவசதிக்கு யாரிடமும் பயப்பட வேண்டியதில்லை!

நாவலருக்கு என் வாழ்த்துக்கள்!

பண்பாட்டைப் பெறுவது கடினம்

பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒருபோதும் மாறக்கூடாது.

-அமரர் அண்ணா



அறநெறிச் செல்வர்

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் உள்ளப் பண்பையும்—பழகும் தன்மையையும்—வாழ்க்கையின் எளிமையையும்—நான் அறிந்து போற்றிய அந்த நாட்கள், என மனதில் ஆழப்பதிந்து விட்டிருக்கின்றன.

நான் திராவிட இயக்கத்தில் சேருவதற்கு முன்பே, அவரிடம் எனக்கொரு தனிப்பற்று உண்டு. தீவிர காங்கிரசுக் காரனுக நான் நடமாடிய அந்தக் காலத்திலேயே, என் உள்ளத்தைக் கவர்ந்தவராவார் நாவலர் அவர்கள்!

கே. டி. எஸ். மணி
செங்கை மாவட்ட
தி. மு. க. செயலாளர்

தி. மு. க. தலைவர்களில் மாற்றுக் கட்சியினரால் இன்றும் மதிக்கத் தக்க — போற்றிப் புகழத் தக்க-நிலையில் உள்ளவராவார் நாவலர். அன்றும் அவர் அதே சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார் என்பது நமக்கெல்லாம் பெருமை தரத்தக்க செய்தியாகும்.

1946ஆம் ஆண்டு! ஆமாம், தீவிர காங்கிரசுக்காரனுக நான் உலவிய காலமது! அந்த ஆண்டு காஞ்சியாரின் (இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களை இப்படிச் சுருங்கக் கூறுவது வழக்கம்) மகளுக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. அவர்களோ திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள். நானே காங்கிரசுக் காரன். எனது திருமணம் இன்று சட்ட மன்ற செயலாளராக இருக்கும் திரு சி. டி. நடராசன் அவர்கள் தலைமையில் நடந்தது. மணப்பந்தலில் ஒரு புறம் காங்கிரசுக் கைராட்டைக் கொடி! மற்றொரு பக்கம் தி. க. கொடி! இந்தக் 'கலப்பு அரசியல்' திருமணத்தில் நாவலர் அவர்கள் வந்து பேச வேண்டும் என்று நான் விரும்பினேன். என் ஆசையைக் காஞ்சியார் அவர்களிடம் மிகவும் வற்புறுத்திக் கூறினேன். ஆனால் அந்த மணவிழாவில் அவரோடு கலந்து கொள்ள முடியாமல் போயிற்று. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் திருமணத்தில் கலந்து கொண்டு, எங்களை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

மாற்றுக் கட்சியிலே உள்ளவர்களும் மனம் உவந்து ஏற்றுக் கொள்ளும் விதமாக—அந்தக் காலத்திலேயே பற்றும் பாசமும் ஏற்படும் விதமாக—நமது நாவலர் தமது பொதுப் பணியை அமைத்துக் கொண்ட நல்லவர்—தூயவர்! சரித்திரச் சான்றுகளை இனிய தமிழில் எடுத்துக்கூறி, மக்களின் பெரும் பகுதியினரைக் கழகத்தின் பால் இழுத்த சொல்லின் மன்னனுவார் அவர்.

இவரிடம் கடந்த 20 ஆண்டு காலமாக நெருங்கிய பழக்கம் பெறும் வாய்ப்புப் பெற்றவன் என்பதால், அவரது பொன் விழா சிறப்படைய வேண்டும் என்றும்—

தொடர்ந்து அவரது பிறந்த நாட்கள் கொண்டாடப்பட வேண்டுமென்றும்— மனதார ஆசைப்படுகிறேன்.

காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'திராவிட நாடு' இதழில் நாவலர் அவர்கள் சிறிது காலம் பணியாற்றினர். அப்பொழுது 'திராவிட நாடு' அலுவலகத்தில் நானும் பணியாற்றி வந்தேன்.

அவர் தம் பணிகளை முறையாக, காலத்தோடு, திட்டமிட்டபடி செய்து வருவதை உடனிருந்து கவனித்திருக்கிறேன். அந்தப் பண்புகள் நமக்கும் ஏற்பட வேண்டும் என்ற ஆசையில், அவரைப் பின்பற்றி நடக்கும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டது.

பொது வாழ்க்கைக்கு வருபவர்கள்— நாட்டைத் திருத்த முயல்பவர்கள்—நல்ல திட்டங்கள் தீட்டுபவர்கள்—முதலில் தம் வாழ்க்கையில் தாம் சொல்லுவதைக்கடைப்

பிடிக்க வேண்டும் என்பதை அடிக்கடி நாவலர் அவர்கள் வலியுறுத்திக் கூறுவார். பிறருக்கு எடுத்துச் சொல்வதோடு நின்றுவிடாமல், தாமே அப்படி நடந்து காட்டுவார். 'திராவிட நாடு' அலுவலகத்தில் பணியாற்றிய அந்தக் காலத்தில் அந்த உயரிய பண்பை உடனிருந்து பார்த்து— அவரைப் போல வாழவேண்டும் என்ற துடிப்பை என் உள்ளத்தில் ஏற்றிக் கொண்டேன்.

பொது வாழ்வில் ஒழுக்கம், கடமை உணர்வு, சொல்லும் செயலும் ஒன்றாக அமைதல், காலம் தவறாமல் நிகழ்ச்சிகளுக்குப் போவது, ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிகளுக்குத் தவறாமல் செல்வது ஆகியவை இன்று என்னிடம் இருக்கின்றன வென்றால்—அது நாவலர் அவர்கள் எனக்கு எடுத்துச் சொல்லிய, தாமே நடந்து காட்டிய நல்ல நெறிகளே காரணமாகும்.

'திராவிட நாடு' அலுவலகத்திற்குக் காலை 6 மணிக்குச் சென்றுவிடுவேன். ஆனால் அங்கு, அதற்குமுன்பாகவே காலைக் கடன்களை எல்லாம் முடித்துக் கொண்டு, அன்று வந்த தினத்தாள்களைப் படித்து, சிலபல பகுதிகளில் கோடிட்டுக் கொண்டிருப்பார் நாவலர்.

நான் அறையினுள்ளே சென்று, சிற்றுண்டிக்குச் செல்லலாமா என்று கேட்பேன். ஒவ்வொரு நாள் போகலாம் என்று எழுந்து என்னோடு வருவார். பல நாட்களில், "மணி! நீ சாப்பிட்டுவிட்டு எனக்கும் வாங்கிக் கொண்டு வந்துவிடு!" என்பார். அவர் பெரிதும் அன்பும் பாசமும் வைத்துள்ள திரு. புட்டாசாமி அவர்களின் "ஸ்வாமீஸ் கேப்" ஓட்டலில் இருந்து அவருக்கு மிகவும் பிடித்தமான நெய் தோசை, இட்லி, வடை, பூரி ஆகியவைகள் அடங்கிய பொட்டலங்களுடன் — 6-30

மணிக்கெல்லாம் அலுவலகத்திற்குத் திரும்பிவருவான்.

அன்போடு அவருக்குப் பொட்டலங்களைப் பிரித்து வைத்துச் சாப்பிடச் செய்வேன். சிற்றுண்டி சாப்பிட்டு முடிந்ததும் அலுவலகத்திற்கு அருகாமையில் இருக்கும் 'லட்சுமி கேப்' என்ற தண்ணீர்பந்தல் ஓட்டலிலிருந்து பால் (அந்தப் பெயரில் தரும் வெந்நீர்) வாங்கிவந்து அவருக்குத் தருவேன். 7 மணிக்கு மேலும் புத்தகங்களையும், அன்றைய தினத்தாள்களையும் படிக்கத் துவங்கி, முக்கிய பகுதிகளைக் கோடிட்டுக் கொண்டிருப்பார். நான் எனக்கு அளிக்கப்பட்ட கணக்கு எழுதும் பணியிலும் தபால் வாங்கி வரும் பணியிலும் ஈடுபட்டுவிடுவேன். எட்டு மணி சுமாருக்கு அலுவலகம் வரும் திரு. ஈழத்தடிகள், "மணி! நாவலருக்கு டிபன் வாங்கித் தந்தாகி விட்டதா?" என்ற கேள்வியைக் கேட்டவாறு உள்ளே நுழைவார்!

10 மணி அளவில் பத்திரிகைக்கு எழுதத் தொடங்கி, பகல் ஒரு மணிவரை அதில் ஈடுபடுவார். பிறகு அலுவலகத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்கு அவருடன் நான் செல்வேன். அங்கே அவர் உணவு அருந்திவிட்டு, பத்து நிமிடம் தொத்தாவுடன் பேசியிருந்துவிட்டு, அலுவலகம் திரும்புவார். அவரை ஓய்வு எடுத்துக் கொள்ளச் செய்துவிட்டு, அதன் பிறகே சாப்பிட நான் வீட்டிற்குச் செல்வேன். பிற்பகல் 3 மணிக்கு, காலையில் எழுதிய கட்டுரையைச் சரிபார்த்து, அச்சு கோர்க்கத் தயாராக வைத்திருப்பார். சாப்பிட்டு விட்டு நான் திரும்பியதும் அந்தக் கட்டுரையை எடுத்து, அச்சுக் கோர்க்கத் தருவேன்.

அலுவலகப் பணிகளை முடித்துக் கொண்டு மாலை 5 மணிக்கு வெளியில் புறப்படுவோம். ஆடிசன் பேட்டைக்கு வந்து, துளசிக் கடையில் இரண்டு அணுவுக்குப் பகோடா வாங்கிக் கொண்டு இரயில்வே சாலையில் நடந்து, இரயில் நிலையம் பக்கத்தில் இறக்கப்பட்டுள்ள பெரிய பெரிய மரதிம்மைகளின் பேரில் இருவரும் வந்து உட்காருவோம். அரசியல் சமூக சீர்திருத்தம், கலை, சிற்பம், நாடகத்துறை, கழக வளர்ச்சி—இப்படி பல்வேறு பொருள்களைப் பற்றிப் பேசிக் கொண்டே, கையிலுள்ள பொட்டலத்தைப் பிரித்து இருவரும் சாப்பிடுவோம்.

அத்தகைய நேரங்கள் பல அரிய கருத்துக்களை என் மனதில் பதிய வைப்பார்.

நாடும் வீடும் நல்லமுறையில் இருக்க திட்டங்கள் பல தீட்டுவதும், தீட்டப்பட்ட திட்டங்களை விளக்கிச் சொல்வதும்மட்டும் நன்மை பயக்காது. பிறருக்குச் சொல்வதைப் போல, முதலில் நாம் நடந்து காட்ட வேண்டும் என்று வலியுறுத்துவார். அவருடன் நான் நெருங்கிப் பழகியதால், தலைவர்கள் சொல்வதைத் தட்டாமல் ஏற்று நடக்கும் குணத்தைப் பெற்றிருக்கிறேன்.

இரயில் நிலையத்தின் பக்கத்தில் உட்கார்ந்து பேசுவதை முடித்துக் கொண்டு, இரவு 7-30 மணிக்கு அங்கிருந்து புறப்படுவோம், நடந்தே அண்ணு அவர்களின் வீட்டிற்குச் செல்வோம். அங்கு அவர் சாப்பிட்டு முடிந்ததும், இருவரும் அலுவலகம் திரும்புவோம். அவரை அங்கே விட்டு விட்டு இரவு 10 மணிக்கு மேல் நான் என வீட்டிற்குச் செல்வேன்.

மாண்புமிகு அமைச்சரும் பொதுச் செயலாளருமான நாவலர் அவர்களின் காஞ்சி வாழ்க்கையின் அன்ருட நிகழ்ச்சியாகும் இது. அந்தக் காலத்தில் அவர் செல்லும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம், நானும் உடன் செல்வேன். கோதுமையை உடன் எடுத்துச் சென்று, அதைச் சமைக்கச் செய்து அவரை உண்ண வைப்பேன். அரிசி உணவு அவருக்கு ஒத்துக் கொள்ளாததால், கோதுமை உணவுக்கு நான் உடனிருந்து ஏற்பாடு செய்து தருவேன்.

தலைவர்கள் வாழ்க வாழ்க என்று வானளாவ ஒலி யெழுப்பும் நாம், அவர்களை அழைதது நிகழ்ச்சிகளை நடத்தும் போது, தலைவர்களது வசதியையும், அவர்களது உடல் நலம் பாதிக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வதும் நம் கடமை என்பதை, இந்தச் சமயத்தில் கழகத் தோழர்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

"தம்பி வா! தலைமை ஏற்கவா!" என்று கழகத் தோழர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய—அறிஞர் அண்ணுவின் மணிக்குரல் ஒலித்த—திருச்சி மாநிலமாட்டிற்கு நான் சென்றிருந்தேன்.

செங்கற்பட்டு மாவட்ட செயலாளன் என்ற முறையில் நாவலரை வழிமொழிந்து பேச, முதல் முதலாக நான் அழைக்கப்பட்டேன். அப்பொழுது ஒலி பெருக்கியின் முன்புவந்து நின்று என் மனதில் நாவலர் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களை வெளியே எடுத்து வைத்தேன்.

ஒழுக்கத்தின் உறைவிடம், உண்மையின் இருப்பிடம், சொல்லும் செயலும் ஒன்ருக அமைந்த சீலத்தின் பிறப்பிடம், மாற்ருரும் போற்றும் நிறைந்த பண்பு கொண்ட நாவலர் அவர்களே! பேரறிஞர் அன்பைப் பெரிதும் பெற்றவரே! கழகத் தோழர்களின் உள்ளமெலாம் பூரிக்க, சரித்திர ஆதாரங்களைக்காட்டி எதிரிகளின் வாதத்தைத் தூள்தூளாக்கியவரே! இளந்தாடி வேந்தரே! நடமாடும் பல்கலைக் கழகமே! நலலவரே! தூயவரே! தலைமை தாங்க உம்மை வரவேற்று வழிமொழிகிறேன்!" என்று ஆனந்தக் கண்ணீர் மல்க அன்று நான் பேசியது—இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

அந்த மாநாட்டில் ஒரு வாரம் இரவு பகல் தூக்கமின்றி பணியாற்றியதால், எனக்குச் சோர்வு அதிகமாக மார்வலி வந்துவிட்டது. அந்த மார்வலி நீடித்திருக்கவே, மாவட்டச் செயலாளன் பொறுப்பிலிருந்து நான் விலகிக் கொண்டேன். அப்படி விலகிக் கொள்ளும் பண்பு எனக்கு வந்ததும், நாவலரின் நல்லறிவு உரையால் தான.

கழகத்தில அவ்வப்போது ஏற்படும் நிகழ்ச்சிகள், மாநாடுகள், போராட்டங்கள், அனைத்திற்கும் அண்ணு அவர்களுடன் கலந்து பேசி திடடங்கள தீட்டியதில் கலைஞருக்கும் நாவலருக்கும் பெரும் பங்கு உண்டு.

அறிஞர் அண்ணுவின் தலைமையிலும், கலைஞர் தலைமையிலும் அமைச்சர் பொறுப்பேற்று நற்பணியாற்றும் நாவலர், அவர்கள் பல்லாண்டு வாழ்கவாழ்க என்று குரல் எழுப்புகிறேன். தன்னிகரில்லாக் கலைஞர் ஆட்சி செழிக்க, நாவலர் அவர்களின் தொண்டு வளர்க! வளர்க!

தமிழ் அருவி

கே.ஜி. இராதாமணாளன்

சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் மணிவிழாக் கொண்டாட்டக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் கல்லூரி மாணவர்களின் பேச்சுப் போட்டி ஒன்று நடந்தது. அப்பேச்சுப் போட்டியில் தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளும் கலந்து கொண்டன.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பங்கெடுத்துக் கொண்டார். ஆமாம், நான் கேட்ட நாவலரின் முதற்பேச்சு அதுதான்.

அவரது தமிழைக் கேட்டு சபை அமைதியில் ஆழ்ந்தது—ஆனந்தத்தில் மூழ்கியது. அருவியென—அன்றலர்ந்த மல்லிகையின் மணமென—வீசும் இளந்தென்றலென—அவரிடமிருந்து தமிழ் புறப்பட்டது. அந்தத் தமிழில்—இனிமையில்—நான் மெய்மறந்தேன்! நாம் சார்ந்திருக்கும் இயக்கத்தில் இப்படியும் பேச வல்ல மாணவர் ஒருவர் இருக்கிறாரே என்று நினைத்து அன்று கழகத் தோழர்கள் பெருமிதம் கொண்டார்கள்—பெருமகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

அந்தப் பேச்சுப் போட்டியின் முடிவு எதுவாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை! நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது இளந் தாடியைத் தடவி விட்டுக் கொண்டு பேசிய அக்கூட்டத்தில் வேறு யாருக்குப் பரிசு கிடைத்திருக்க முடியும்?

நாவலரின் தூயமொழி—துள்ளும் தமிழ் – கல்லூரிப் போட்டியில் மட்டுமல்ல அரசியலிலும் அவருக்குப் பெரும் வெற்றியைத் தந்திருக்கிறது

நாவலர் தம் பேச்சில் மட்டுமல்ல, எழுத்திலும் தமிழைப் பொலிவோடு வலிவோடு கையாள்பவர். அவரது எழுத்துத் தமிழ் – தமிழ் கற்ற மற்ற புலவர்களினின்றும் மாறுபட்டது! எளிமையானது – எடுப்பானது! படிப்போர் உள்ளத்தைக் குளிரச் செய்வது – குதூகலிக்க வைப்பது!

பொன் விழாக் காணும் நாவலர் – அறிஞர் அண்ணாவின் பொன்விழாவின் போது எழுதியது இதோ:

“அண்ணாவே வாழ்க! அறிஞர் அண்ணாவே வாழ்க! அறிவுலகச் சிற்பியே வாழ்க! பகுத்தறிவு ஒளி பரப்ப வந்த பண்புடைச் செல்வமே வாழ்க! தாயகத்தை – திராவிடத்தை மீட்கத் தோன்றிய தங்கமே வாழ்க! அடிமை விலங்கை முறித்தெறிய அரும்பாடுபடும் அடலேறே வாழ்க! வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சியுறச் செய்யப் போந்த வீறுடைச் சிங்கமே

வாழ்க! சமூக-பொருளாதாரச் சமத்துவத்தை நிலைநாட்டத் தோன்றியசெம்மலே வாழ்க! வாழ்க! அரசியல் நேர்மையை-நாணயத்தை - நீதியை - கண்ணியத்தை நாட்டினர்க்குக் கற்றுக் கொடுக்க வந்த அரசியலறிஞரே வாழ்க! சனநாயக மணம் எங்கணும் எப்பொழுதும் கமழப் பாடுபடும் மேதையே வாழ்க! உண்மைக்குப் பரிந்து பேசும் உத்தமரே வாழ்க! திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்ட தீரரே வாழ்க! அஞ்சா நெஞ்சத்துடன் கடமையாற்றிப் பலமுறை அருஞ்சிறை புகுந்த அண்ணலே வாழ்க! உரிமைக்குப் போராடப் பல முறை களத்திலே இறங்கிய கண்ணியரே வாழ்க! கண்ணியம் கடமை கட்டுப்பாடு என்னும் பண்புகளைக் கழகத் தோழர்களின் முன்வைத்த நேர்மையின் உருவே வாழ்க! நாடகக் கலை-இசைக் கலை-திரைப் படக்கலை வாழவும், வளரவும், பெருமை பெறவும் வழிவகுத்துத் தந்த நாயகமே வாழ்க! எங்கள் உள்ளங் கவர்ந்த கண்மணியே வாழ்க! எங்கள் வழி காட்டியே வாழ்க! எங்களுக்கு உறுதுணையாக நிற்கும் கொழு கொம்பே வாழ்க! எங்களுக்கு ஆறுதல் கூறும் அருட் பெட்டகமே வாழ்க! எங்களுக்கு அறிவுரை பகரும் அரசிய லாசிரியரே வாழ்க! தம்பிகளாகிய எங்களிடம் அன்பு காட்டும் அண்ணாவே வாழ்க! நீவிர் வாழ்க! பல்லாண்டு காலம் வாழ்க! பலகோடி நூறுபிரம் ஆண்டு வாழ்க! காவிரியாற்று மணலினும் பல்லாண்டு காலம் வாழ்க! திராவிடத்தின் மண்ணின் எண்ணிக்கையினும் பல்லாண்டு காலம் வாழ்க! நும் உயர் உள்ளம் வாழ்க! நும் அரிய முயற்சி வளர்க! நும் சீரிய தொண்டு வெல்க! நீவிர் நெடிது வாழ்க, வாழ்கவே!"

அறிஞர் அண்ணாவை நினைக்கையில் நாவலரின் உள்ளத்திலிருந்து எத்தகைய தமிழ் அருவி கொட்டுகிறது! அந்த அருவியில் மூழ்கும் நமக்கு எத்துணை உவப்பும் உள்ளக் குளிர்ச்சியும் ஏற்படுகின்றன.

தமிழால் வளர்ந்தவர் நாவலர்-நாவலரால் வளர்ந்தது தமிழ்!

இத்தகைய தமிழறிஞரின் பொன் விழாவைக் கொண்டாடுவதில் தமிழகம் பூரிப்பும் பெருமிதமும் கொள்கிறது! பெருமையும் உயர்வும் பெறுகிறது!

வைரத்தை அறுக்க வைரம்!

கழக அரசின் சாதனைகள் கழகத்திற்குச் செல்வாக்கைத் தேடித் தர வேண்டும்; கழகத்தின் கொள்கை விளக்கப் பிரச்சாரம் அரசுக்கு உறுதுணையாக அமைய வேண்டும்.

இரும்பை இரும்பைக் கொண்டு வெட்டுவது போல, வைரத்தை வைரம் கொண்டு அறுப்பதைப் போல, முள்ளை முள்ளைக்கொண்டு எடுப்பதைப் போல, எதிரியின் பிரச்சாரத்தைப் பிரச்சார வலிவால்தான் எதிர்த்து வீழ்ச்சியடையச் செய்ய வேண்டும்.

—நாவலர்.

நாவலர் நேர்மை!
நாவலர் சீர்மை!!

கவிஞர் கண்ணதாசன்

காவலர் சேரர் சோழர் பாண்டியர்
கன்னித் தமிழர்தம் காவல் கொண்டதும்
பாவலர் பாணர் பாடினியாரொடும்
பண்பும் அன்பும் பரவ வளர்த்ததும்
கோவலர் உழவர் கொள்முதல் வணிகர்
கொற்றக் குடையைக் குளிர வைத்ததும்
நாவலர் வாய்மொழி நவிலுங்காலை
நாம் பறந்தோடும் அந்நாள் தமிழகத்தே

★ ❋ ★

உயர்ந்த உருவம், அனையதே உள்ளம்
மலர்ந்த முறுவல், அனையதே வாழ்வு
சிறந்த நற்புகழ் சேர்த்த பெற்றியன்
மழலை வடிவம் மனிதருள் வைரம்
கசடறக் கற்றுக் கற்றபடிக்குப்
பிழையாதொழுகும் பேரினன், பாண்டி
நெடுஞ்செழியன் பேர் நேரிய பெயராம்;
நீதிச் செங்கோல் நிமிர்ந்த கொற்றம்
ஆளுந்திறமை அடங்கிய மன்னன்
வாழிய நீடு வாழிய பல்லாண்டு!

மன்னிப் பொலிக மகிழ்ந்து

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கட்கு ஐம்பதாண்டு நிறைந்து விட்டதாம். "அப்படியா?" என்கிறது இரண்டு கூட்டம். ஒரு கூட்டம் சொல்கிறது. "என்ன இப்படிச் சொல்கிறீர்கள் ஆளைப் பார்த்தால் முப்பது வயது தானே மதிக்க முடிகிறது?" என்று.

"கணக்கில் தவறு தேர்ந்திருக்க வேண்டும்! பல ஆண்டுகளாகவே பொது வாழ்வில் ஓர் இடம் பெற்றுப் பிறங்கும் இவர்க்கு அறுபது ஆண்டுகளாவது நிரம்பியிருக்க வேண்டும்" என்று கூறுகிறது மற்றொரு கூட்டம்.

சா. கணேசன், M.L.C

ஆம் பஞ்சாங்கத்தை (காலண்டர் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்) எடுத்துப் பார்க்கா விட்டால் இரண்டும் சரிதான். உடலையும் உள்ளத்தையும் வைத்துப் பார்த்தால் சுமார் முப்பது முப்பத்தைந்து தான் மதிக்கலாம். பொது வாழ்வையும் பேச்சையும் கொண்டு கணித்தால் அறுபதுக்கு மேற்பட்ட வயதுதான்.

இதனால் முதிர்ந்த அறிவும், தளரா உடலும் வாய்த்தவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் என்பது தெளிவாகிறது. இத்தகைய நலனுடைய நாவலர் ஐம்பதாண்டு நிறைந்த ஆடவர் திலகனாய்த் திகழ்கிறார்.

ஐம்பதாண்டு நிறைவைப் 'பொன் விழா' என்பர். பொன்விழாச் செல்வர் நாவலர் அவர்களை யான் சில காலமாகவே நன்கறிவேன். எல்லார்க்கும் இனியராய் மட்டுமன்றி எளியராயும் விளங்கும் அரியர் அவர். நல்ல தமிழறிஞர்; சொல்லாற்றல் மிக்கவர்; பதறாமல், சிதறாமல், செயலாற்றும் திறவர்; எதையும் ஆர அமர ஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வருபவர். தமக்கு இனிக்காத காரணத்தால் பிறர் மதிப்பதை அவமதிக்கும் போக்கு இவர்க்குப் பிடிக்காது.

தமிழ்க்கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் மிக்க ஈடுபாடுடைய நாவலர் பதவி காரணமாக அல்லாமல் இயல்பாகவே பல்லோருடைய அன்புக்கும் பாராட்டுக்கும் உரியராய் விளங்கி வருகிறார்.

பொன் விழாக் கொள்ளும் நன்மகன், நாவலர், இன்னும் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலன்களும் நிரம்பப் பெற்று நிறை நல்வாழ்வு வாழ ஆண்டவன் அருள் புரிய வேண்டுமென்று அன்பர் பல்லோருடன் கூடி அகங்குளிர, நாவினிக்க, வாய் மணக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

"நன்று பல தொண்டாற்றி
நானிலத்தில் நூற்றாண்டும்
நின்று புகழ்கூட்டி
நெடுஞ்செழியன்—என்றென்றும்
கன்னித் தமிழ்மொழி போல்
கம்பனைப்போல், வள்ளுவம்போல்,
மன்னிப் பொலிக மகிழ்ந்து"

இனிய நினைவுகள்

ஏ. பி. ஜ னார்த்தனம் M.A., M.L.C.

1944, 45 ஆண்டுகளில் நாங்களெல்லாம் 20, 25 வயதுள்ள ஆர்வமிக்க இளைஞர்களாகஇருந்தோம்.சுயமரியாதைக் கருத்துக்களில் மனதைப் பறிகொடுத்து, திராவிட இயக்கத்துக்கு வாழ்வை அர்ப்பணித்துவிட்ட நாட்கள். அப்போதெல்லாம் இயக்கத்துக்கு இளைஞர்களும், மாணவர்களும் கிடைப்பது அரிதாயிருந்தது. அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும், எழுத்தும், 'திராவிட நாடு' பத்திரிகையும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின. நீதிக்கட்சியை ஆதிக்கக்காரரிடமிருந்து மீட்டு பெரியாரிடம் கொண்டு வந்து விட்டார் அறிஞர் அண்ணா அவர்கள். சேலம் மாநாடு திராவிட இயக்கத்தில் ஒரு திருப்புமையமாக அமைந்தது. திராவிட உணர்வும் சமதர்ம நோக்கும், பகுத்தறிவுக் கருத்துக்களும் இளைஞர்களை இழுத்தன.

மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும் பேராசிரியர் அன்பழகன் அவர்களையும், என்னையும் நாட்டுக்கு அறிமுகப்படுத்தல் வேண்டும் என்ற ஆர்வத்தில் 'மணிமாலை' என்ற கட்டுரையை எழுதினர், மாணவமணிகள் எழுத்தால், பேச்சால், நடிப்பால் நாட்டை மாற்றவேண்டும் என்ற ஆர்வத்தில் பெரியாரும் ஈரோட்டில் மாநாடு கூட்டினர். பயிற்சிப் பள்ளி நடத்தினர். கோடை விடுமுறையில் மாணவமணிகள் பல பிரிவினராக பல மாவட்டங்களுக்கு பிரசாரத்துக்கு அனுப்பப்பட்டனர்.

குடந்தை மாநாடு, கலைஞரின் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம், மதுரைத் தமிழ்நாடு திராவிட மாணவர் கழக மாநாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கொடிப் போராட்டத்தில் மாண்புமிகு மதியழகன் உள்ளிட்ட பலர் அடக்கு முறைக்கு ஆளானது, மாணவர் மாநாட்டு கண்காட்சிகள், அறிஞர் அண்ணா அவர்களின் நாடகங்களில் இளைஞர்கள் பங்கேற்பு, இப்படி பல கட்டங்கள் நினைவுக்கு வருகின்றன.

நாவலர் அவர்கள் இளந்தாடி அசைய தனக்கே உரிய மிடுக்குடன் புரட்சிக் கவிஞரின் பாடல்களை முழங்கி, தமிழ் உணர்வை எங்கும் பரப்பி வந்தார்.

எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்; என்று எக்காளமிட்டு, 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித்தோள்கள்,' என்று பரணி பாடி, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை, என்று துந்துபி முழங்கி, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!' என முழக்கமிட்டு 'பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப் பட்டது. சிறுத்தையே வெளியில் வா!' என்று அழைப்புவிட்டு சுயமரியாதைச் சூருவளியென நாவலர் தமிழகத்தைத்தட்டி

எழுப்பியது இன்றும் பசுமையாக என் நெஞ்சில் உள்ளது.

அவை எதிர்நீச்சல் நாட்கள். பயங்கர எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது. உதை படாமல் ஊர் திரும்பினால் போதும் என்றிருந்த நிலை! இரண்டொரு ஏழைத் தோழர்கள்! கூட்டத்துக்கு செலவு செய்ய சொந்த நகைகளை அடகு வைத்தவர்கள். உள்ளதை இழந்தவர்கள்! ஒரு முறை கலைஞர் என்னை சென்னைக்குத் திருப்பி அனுப்ப தன் மனைவியின் வெள்ளிக் கிண்ணத்தையே அடகு வைத்தார். உற்றார், உறவினர், ஊரார் பகையை சமாளித்து இயக்கப் பணியாற்றிய அன்றைய தொண்டர்கள்தான் இன்றைய செழிப்புக்கு வித்திட்டவர்கள். எஃகு கம்பிகளாக, இனத்தின் ஈட்டி முனைகளாக, எதற்கும் வளையாமல், நெளியாமல், பசப்பாமல், கொள்கைத் தங்கங்களாக, சுயமரியாதைச் சிங்கங்களாக, புத்துலகச்சிற்பிகளாக, பழமை ஏற்பாட்டைத் தகர்ப்பவர்களாக திராவிடர் மறுவாழ்வின் விடி

வெள்ளிகளாகத் திகழ்ந்த அந்த வீரர்களை மறக்கவே முடியாது.

புரட்சிக் கவிஞரின் புயல் பாட்டுக்கள் அஞ்சா நெஞ்சன் அழகிரியின் ஆவேசப் பேச்சுக்கள், பெரியாரின் பொன்மொழிகள், அறிஞர் அண்ணா அவர்கள் தந்த ஆதாரங்கள், இத்தனையும் நம்மை முடுக்கி விட்டன.

கடவுள் முதல் கம்யூனிஸ்டுகள் வரை யாரையும் நாம் விட்டுவைக்கவில்லை. அனை வரையும் கொள்கையில், வாதத்தில் வெற்றி கண்டோம். திராவிட எழுச்சிப் பண்பாடித் திரிந்த அந்த நாளில் இருந்த உணர்ச்சி ஆவேசம், ஆர்வம், பாசம், துடி துடிப்பு எப்படியென்பதை வார்த்தைகளால் எடுத்து இயம்ப இயலாது.

நாவலர் அவர்களுடன் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அன்று எத்தகைய நிலையில் பணியாற்றினோம் என்பதை கொஞ்சம் எடுத்துக் காட்டுகிறேன்.

நாகர்கோவில் நகர் மன்றமும். சட்ட மன்றத் தொகுதியும் இன்று நம் வசத்தில் உள்ளன.

ஆனால் 1944ல் கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலைதான் நாஞ்சில் நாட்டில் நம் பாசறையாக இருந்தது. நாம் இராமாயண எதிர்ப்புப்பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தோம். கம்யூனிஸ்டுகளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தோம்.

நாவலர் அவர்களும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும், நானும் நாகர்கோவிலில் இரண்டு கூட்டங்களில் பேச அழைக்கப்பட்டிருந்தோம்.

கோட்டாறு சமரச வீதியில் மாபெரும் கூட்டம். இராமாயண பக்தர்களும், கம்யூனிஸ்டுத் தோழர்களும் (தோழர் ப. ஜீவானந்தம் முன் வரிசையில்) திரண்டிருந்தனர். நாவலர் அவர்களும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் பேசி முடித்ததும் இறுதியில் நான் கம்யூனிஸ்டுகளுக்கு

விளக்கமளித்தேன். கூட்டம் முடிந்து மக்கள் கலையும் நேரத்தில் ஒரு பக்தர் பேராசிரியர் அன்பழகன் அவர்களிடம் விளக்கம் கேட்டார். பக்தர் பேராசிரியரைத் தாக்குவதாக தவறாக நினைத்த நம் தோழர் பக்தர் மீது தன் பெல்டை வீசிவிட்டார். படார் என்ற சத்தத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டு அடங்கிவிட்டது.

மறு நாள் நாங்கள் குமரிமுனையில் இருந்தோம். அன்று மாலை வடசேரியில் நாங்கள் பேசுவதாக ஏற்பாடு. ஆத்திரங் கொண்ட மாற்றார் படை திரட்டுவதாகவும், வாளும், தடியும், கல்லும் கூட்டத்தில் பயன படுத்தப் படலாம என்றும், பெருங் கலகம் மூணடுவிடும் என்றும், பதட்ட நிலை அடங்கிய பிறகு கூட்டத்தை நடத்தலாம். என்றும் நம் தோழர்கள் கேட்டுக் கொண்டனர். அதை ஏறறு ஊர் திரும்பினோம்.

சிதம்பரத்துக்குப் பக்கத்தில் வேளபூண்டி எனற ஒரு சிற்றூரில் சீர்திருத்தத் திருமணத்துக்கு நாவலரும், சிந்தனைச் சிறபியும், நானும் அழைககப் பட்டிருந்தோம். சிதம்பரம இரயிலடியிலிருந்து ஒலி பெருக்கி செட்டுடன் ஒரு ஓட்டைக் கார் நள்ளிரவுக்குமேல் கிளமபி, சேறும் சகதியும் நிரம்பிய சாலையில், மெல்ல ஊர்ந்து காலை 6 மணிக்கு அந்த ஊரை அடைந்தோம். காலை ஒனபதுமணிக்குத்தொடங்கிய திருமண நிகழ்ச்சி பகல் ஒரு மணிககு முடிநதது. சாப்பாட்டை எதிர்பார்த்து பக்கத்து திண்ணையில் உட்கார்ந்து விட்டோம். நேரம் ஆகஆக பசி வாட்டத் தொடங்கி விட்டது. பிறபகல் இரண்டரைமணி வரை நேரம கடத்தி விட்டனர். தாங்க முடியாத நிலை ஏற்பட்டு விட வேசிந்தனைச் சிறபி சீறி விட்டார். கடைசியில் மூன்று மணிக்கு அப்பளமும், மோரும் சாதமும் கிடைத்தன.

மாலையில் பக்கத்து ஊர் பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு இரவு 11 மணியளவில் அந்த ஓட்டைக் காரில சிதமபரத்தை நோக்கித் திருமபினோம். சில மைல் கடந்ததும் அநதத் தெனவிராமன் கார் முக்கி முனகிப படுத்துவிட்டது. அங்கிருந்த பாலத்தின் ஒரு கட்டையில் நாவலரும், மறுகட்டையில் சிநதனைச் சிறபியும் படுத்து விட்டார்கள். நான காருக்குள் முடங்கி விட்டேன்.

காலையில் குதிரை வண்டியிலும், உந்து வண்டியிலும் பயணப்பட்டு ஒரு வழியாக 9-30 மணிக்கு சிதம்பரத்தை அடைந்தோம்.

பெங்களூர் நகரில் நாம் கூட்டம் போட முடியாத காலம். ஊர் எல்லையில் எப்பால் அல்லது உப்புமண்டி என்ற ஒரு பகுதி. அங்கு ஆர்வம் நிறைந்த சில ஆதித் திராவிடத் தோழர்கள் நமக்கு ஆதரவாளர்கள். அரும்பாடுபட்டு ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். நாங்கள் முதல் இரவே அங்கே சென்றோம். புழுக்கமும், வாடையும் நிறைந்த ஒரு சிறு கடையில் தங்கினோம். சில்லென்ற வாடைக் காற்று, கொசுக்கள், நாற்றம்இவற்றிடையே படுத்துக்கொண்டோம்.

இப்படிப் பல இக்கட்டுகள், எதிர்ப்புகள், தொல்லைகள் இருப்பினும் தூங்கி விட்ட ஒரு இனத்தைத் தட்டி எழுப்புகிறோம் என்ற உணர்ச்சியும், உவகையும் எங்களை இயக்கி விட்டன.

படிப்படியாக ஏற்றம் பெற்று நாவலர் அவர்கள் இன்று ஐமபதாவது ஆண்டைத் தாண்டுகிறார். அவர் மேலும் பலலாண்டு வாழ்ந்து இன்பத் திராவிடத்துக்குப் பாடுபடவேண்டும் எனறு விரும்புகிறேன்.

இன்றுள்ள ஒரே நாவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழக அரசின் கல்வித்துறைஅமைச்சர். மாண்புமிகு. இரா. நெடுஞ்செழியன். எம்ஏ. அவர்களுக்கு வருகிற ஜூலை மாதத்தில் ஐம்பதாம் ஆண்டு பிறந்தநாள் விழா நடைபெற விருக்கிறது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று மலரவிருக்கிறது என்ற செய்தியும எனனை மகிழ்விக்கின்றன.

பட்டுக்கோட்டை காசான்குள வடகரையில் நடந்து கொண்டிருந்த சுயமரியாதை இயக்கக் கூட்டத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அன்பர் நெடுஞ்செழியன் அவர்களை முதல் முதல் பள்ளி மாணவனுகக் கண்டதாக நினைவு.

பின் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் போதும் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அப்போதே அவர் தமிழநாட்டுணர்வும், மொழிப்பற்றும், சீர்திருத்தக் கொள்கையும் உடையவராக விளங்கினர். 1938- ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரிலும் அவர் கலநதுகொண்டார்.

அதற்குப்பின் கோவை விஞ்ஞானப் பேரறிஞர். உயர் திரு நாயுடு அவர்கள் நடத்திவந்த பொறியியற் கல்லூரி விடுதியின் கண்காணிப்பளராக இருந்து திறம்படப் பணியாற்றி வந்தது எனக்கு இன்னும் நினைவிலிருககிறது.

அறிஞர் அண்ணு அவர்கள் பெரியாரோடு கருதது மாறுபட்டு முன்னேற்ற இயக்கம் கண்ட பிறகு அவர் வழிநின்று தி. மு. கழகத்தில் பெரும்பணியாறறி வந்திருக்கிருர்.

உயர் திரு. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், நாவலர். ச. சோமசுந்தர பாரதியார், நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற பல நாவலர்கள் தமிழகத்தில் முன்பு இருந்து வந்தனர். இன்றுள்ள ஒரே நாவலர், நாவலர் நெடுஞ்செழியனின் அவர்களே.

" நம்நாடு'' ''மன்றம்'' முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்து எழுததுப பணியும், தமிழகம் முழுதும சுற்றி பல்வேறு மேடைகளிலும் ஏறிப் பேச்சுப்பணியும், பல நூல்களை இயற்றி ஆசிரியப்பணியும புரிந்து வந்தவர்.

பொதுவாக அவரது எழுத்துத் தொண்டும, பேச்சுத் தொண்டும் தமிழக மககளால் மறக்க முடியாதவை, குறிப்பாகக் கூறவேண்டுமானல், அறிஞர் அண்ணு அவர்களால் பாராடடப்பெற்ற தமிழக எழுத்தாளர்களில், பேச்சாளர்களில் நாவலர் அவர்களும் ஒருவர் எனக் கூறிவிடலாம்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே அவர் கழகத்தில் உள்ள நல்ல பிள்ளைகளில் ஒருவர் என அனைவராலும் பாராட்டப்பெற்றிருக்கிருர்.

சேலம் அவர்து சொந்த ஊர் அல்ல, அப்படியிருந்தும் 12 ஆண்டுகளுக்கு முன்பு அவ்வூரில் தேர்தலுக்கு அவர் நின்றது என்னை வியப்படையச் செய்தது. இன்னும் 200 ஓட்டுகள் கிடைத்திருந்தால் வெற்றிபெற்றிருப்பார். என்ருலும் அவருக்குக் கிடைத்த பல்லாயிரக் கணக்கான ஓட்டுகளைக் கண்டு அவ்வூரிலுள்ள பெரிய மனிதர்கள் பலர் வியப்படைந்தனர்.

நடந்து முடிந்த — சென்ற சட்டசபையில் எதிர்கட்சித் தலைவராக இருந்து அவர் ஆற்றிய பணியும், நடந்துகொண்ட முறையும் பல கட்சித் தலைவர்களாலும் பாராட்டப்பெற்றிருக்கிறது.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்நாட்டுக் குழுவில் கலைஞர் அவர்களும் நாவலர் அவர்களும், நானும் துணைத் தலைவர்களாக இருந்து தமிழ்ப் பணி புரியும் பொழுது முன்னைவிட அதிக நெருக்கமாகப் பழக நேர்ந்தது. அப்போது அவர்களின் ஆற்றலைக் கண்டு வியக்கவும் நேர்ந்தது.

மாண்புமிகு. நாவலர். திரு. இரா.நெடுஞ்செழியன் அவர்களின் 50வது பிறந்த நாள் விழா இனிது நடைபெற வேண்டுமெனவும், மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து நாடுமுழுதும் நன்மணம் வீச வேண்டுமெனவும், நாவலர் அவர்கள் பன்னெடுங் காலம் நல்ல உடல் நலத்துடன் இருந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழ வேண்டுமெனவும் இப்பொன் விழா நாளில் மகிழ்வோடு வாழ்த்துகிறேன்.

★ ✻ ★

ஆங்கிலத்தை அழிக்க முடியாது

தமிழ் நாட்டிற்குத் தமிழ்—இந்தியா உலக உறவுக்கு ஆங்கிலம்—என்ற திட்டவட்டமான கொள்கை உடைய தி. மு. கழகம் எப்படி ஆங்கிலத்தை ஒழிக்கும்!

உலக உறவு தரும் ஆங்கிலத்தை யாரும் அழிக்கவும்இல்லை; அழிக்க விரும்பவும் இல்லை; அழிக்கவும் முடியாது!

ஆங்கிலத்தை அழிக்க நினைக்கிறது தி. மு. கழக ஆட்சி என்பது பொய்!

இந்த ஆட்சிமீது சொல்லப்படும் பல பொய்களில் இதுவும் ஒன்று!

ஒரு தவருன கருத்து என்னைப் பற்றியும் – தி. மு. கழகத்தைப் பற்றியும் இருக்கிறது!

ஆங்கில அறிவே வேண்டாம் என்று நாங்கள் கூறுவதாக நினைக்கிருர்கள்; அது தவறு!

தமிழின் இடத்தை வரையறுத்து அந்த இடத்தில் ஆங்கிலம் நுழையக்கூடாது என்றும்–ஆங்கிலத்தின் இடத்தை வரையறுத்து அந்த இடத்தில் இந்திக்கு இடமில்லை என்றும் தெளிவாகக் கூறுபவர்கள் தி. மு. கழகத்தினர்!

–சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

(பிறந்தநாள் விழாவில் பேசியது 26-6-70)

இளைஞர் உலகின் வழிகாட்டி

அமுதா ராகவன்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி தாய்த் திருநாடு பாழ்பட்டு நின்ற நேரமது, அரசியல் வானில் அடிமை இருள் அகன்று உரிமையாட்சி என்னும் உதயசூரியனின் ஒளிக்கற்றைகள் கீழ்வானில் பரவாத நேரம். அரசியல் விடுதலை மட்டுமல்ல அத்தோடு பொருளியலில் முன்னேற்றம்- தொழிற் பெருக்கம்- வலியோர் சிலர் எளியோர் பலரை வதையே புரிகின்ற இழிநிலையில் மாற்றம்- சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி இவைகளுக்காக தன்மான இயக்கமும் திராவிடர் கழகமும் தந்தை பெரியாரும் பாடுபட்டுக்கொண்டிருந்த காலம். மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடாக நாடு காட்சி தந்தது; கவியரசர் கூறியதுபோல 'இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே; மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே; வாயடியும் கையடியும் மறைவதென்நாள்?' என்று பகுத்தறிவுப் பாசறையில் போர்ப் பரணி பாடிவந்த பேரறிஞர் அண்ணா அவர்களால் கவரப்பட்ட ஆயிரமாயிரம் இளைஞர்களில் அவரும் ஒருவர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். அண்ணா அவர்கள் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றோரம்' போன்ற பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றத் துணைநின்ற அந்த இளைஞர்தான் பின்னாளில் இளந்தாடி வேந்தர் என்றும் **இளைஞர் உலகின் வழிகாட்டி** எனவும் நாடு புகழும் நாவலர் என்றும் நம் கழகப் பொதுச் செயலாளர் – பேரவைத் தலைவர் என்றெல்லாம் அன்போடும் பரிவோடும் அழைக்கப்பெறும் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். நாவலர் அவர்களின் பணி சிறப்பானது; செம்மையானது; அவர்கள் வாழ்வு இயக்க வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று.

கழகம் பிறந்தது. நாவலர் அவர்கள் கூறுவது போல, கண்ணீரிலும் செந்நீரிலும் பிறந்த கழகம் அது. கழகத்தின் இலட்சியங்கள் ஏற்றமிக்கவை; எழுச்சியூட்டுவன. என்றாலும் எதிர்ப்புகள் ஏராளம்; ஏராளம். ஆற்ற வேண்டிய பணிகள் அளவிலடங்கா. அடைய வேண்டிய இலக்கு நெடுந் தொலைவிலிருந்தது. இந்த இமாலயப் பணிக்கு எது செய்ய நாட்டிற்கே எனத் துடிக்கும் இளைஞர் உலகை ஈர்த்த பெருமையில் நாவலர் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நின்று சிற்றூர், பேரூர், பட்டி தொட்டிகளிலெல்லாம், ஓய்வு ஒழிச்சலின்றி கொள்கை முழக்கமிட்டார். எதிர்ப்புக்கள் கண்டு கலங்கவில்லை. மதுரை மாநாட்டுப் பந்தலுக்கு மாற்றார்கள் தீ வைத்தபோதும் தேனிக் கலவரத்தின் போதும் நாவலர் காட்டிய நெஞ்சுரம் பாராட்டற்குரியது. விடுதலை வீரருக்கு காங்கிரசாட்சி 'பரிசு' வழங்கியபோது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று சென்றார்.

நாவலர் அவர்களுடைய சொற்பொழிவுகள் ஒவ்வொன்றும் கருத்துக் கருவூலங்கள்; கொள்கை விளக்கப் போர் முரசங்கள். கருத்தாழமும் சொற்சுவையும் கொண்ட அவரது பேச்சுகளில் இலக்கியநயம் மிளிரும்; ஏற்றமிகு தமிழகத்தின் எழிலார்ந்த தோற்றம் புலப்படும். பத்தில்—எட்டில்—பதினென் கீழ்க்கணக்கில்—ஐந்தொகையில் இன்னோரன்ன ஆயிரமாயிரம் காவியங்களில் காணப்பெறும் தமிழகத்தின் மாட்சியை—மாண்பை தனக்கு உரிய தனிப் பாணியில் எடுத்துச்சொல்லி இன்றைய நிலையைச் சுட்டிக் காட்டுவார். வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மைவேண்டும் என்பார். நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழிலாண்ட உரவோன் மக்களான நாம் இன்று செய்தொழிலின்றி தேம்பித் திரிவதையும் பிழைப்புக்காக அலைகடல் தாண்டி அவதிப்படுகின்ற அவலநிலையினையும் படம்பிடித்துத் தருவார். நாட்டின் இயற்கைவளம் காட்டுவார்; நலிவிற்கான காரணங்கள் சொல்வார். அதிகாரங்கள் பரவலாக்கப்படாமல் மத்தியிலே குவிந்திருப்பதால்—அதைத் தட்டிக் கேட்க—தடுத்து நிறுத்த ஆற்றலற்றவர்கள்—ஆசையும் அக்கறையும் இல்லாதவர்கள் ஆளவந்தார்களாக இருப்பதால் நாடுறும் கேடு பற்றியும் தெளிவுரை தருவார் மத்திய—மாநில அரசுகளுக்கிடையேயான நிதி ஒதுக்கீடு பற்றிய அவரது கேள்விக் கணைகள் கருத்தாழம் நிரம்பியவை.

எதிர்கட்சித் தலைவராக நாவலர் அவர்கள் ஆற்றிய பணி சிறப்பானது. மக்களாட்சியில் எதிர்க்கட்சித் தலைவரின் இலக்கணங்களுக்கு சிறப்பானதோர் இலக்கியமாகத் திகழ்ந்தார் நாவலர். காங்கிரஸ் செய்த நல்லனவற்றிற் கெல்லாம் ஆதரவு நல்கினர். தீமைகள் கண்டு பொங்கி எழுந்தார்.

தமிழறியா அமைச்சர்கள்பற்றி கவியரசர் வெகுண்டெழுந்து பாடிய வெண்பா ஒன்று நினைவிற்கு வருகின்றது. நாட்டவரை (நம்ம வரை) ஆதரிப்பீர் என்று வேண்டுகோள் விடுத்தார்களாம்—மக்கள், அமைச்சரிடம். ஆனல் அந்த அமைச்சரோ "நாட்டு அவரை கூட்டுக்கும் நன்று குழம்புக்கும் நன்று" என்றாராம். அந்த இழிநிலை இன்றில்லை. தமிழுக்கு முதலிடம் தருகின்ற கழக ஆட்சி நடைபெறுகின்றது. தாயகத்தின் நலங்காக்கும் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளனர்.

துடிப்பும் ஆர்வமுமிக்க இளைஞராய்-இயக்கத் தொண்டராய்—பத்திரிகை ஆசிரியராக—பாசறைத் தளபதியாக—கழகப் பொதுச் செயலாளராக-பேரவைத் தலைவராக—அமைச்சராய் பல்வேறு துறைகளிலும் சிறக்கப் பணியாற்றுகின்ற, நாவலர் அவர்களின் பொன்விழா தென்னாட்டின் வரலாற்றில் ஒரு பொன்னேடு ஆகும்.

எம் நாட்டை நாமாள ஏற்ற கலையுதவும்-தென்னாட்டுத் தீரர்; செழுந்தமிழர் நாவலர் அவர்களிடமிருந்து நல்ல பல பணிகளை நாடு எதிர்பார்க்கிறது. பொன்விழா நாளில் நாவலர் அவர்கள் அடிக்கடி கூறுகின்ற கவியரசரின் வரிகளை நினைவு கூர்கிறேன்.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செயப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே, திருப்புமுகம்! திறவிழி!

நாவலர் நெடுஞ்செழியனார் அவர்கள் பொன்விழா வாழ்த்து

டாக்டர் மொ.அ. துரை அரங்கசாமி

தஞ்சையில் வடக்கா ளத்தூர்
தவம் செய்து பெற்ற நம்பி
பஞ்சைகள் என்போர் தங்கள்
பதவிகள் உயர வாழ்ந்து
விஞ்சையில் தன்னே ரில்லா
மேதையென் றேத்த நின்று
தஞ்சமென் றண்ணா வின்சொல்
தலையினால் தாங்கிச் செல்வோன். (1)

நாவலர் தம்முள் மிக்க
நாவலன் நண்பன் யார்க்கும்
காவலன் கழகத் திற்குக்
கடுஞ்சொலைத் தவிர்ந்தோன் பாரில்
யாவரும் போற்ற ஐயைந்
திரட்டியாண் டியன்ற வெல்லாம்
மேவரச் செய்தோன் செம்பொன்
விழாக்கொள வீறு கொண்டோன் (2)

நெடுஞ்செழி யன்என் நாமம்
நீணிலம் தன்னில் ஓங்கிச்
சுடுங்கதிர் மதியோ டென்றும்
துலங்கிட யாவும் ஆற்றி
நடுங்கலில் லாதிந் ஞாலம்
நலம் பெற உய்த்த செம்மல்
இடும்பையில் லாதெஞ் ஞான்றும்
ஈடெடுப் பற்று வாழி. (3)



ஈடுகொடாச் சிற்பி

பேராசிரியர் நா. பாண்டுரங்கன், எம்.ஏ.

கதிர் எழும்போதே உலகு கதிரை அறிந்து மகிழ்ந்து வரவேற்கின்றது; பறவைகள் இனிய குரலெடுத்துப் பாடுகின்றன. குளங்களில் தாமரைகள் உடலும் உள்ளமும் குலுங்க உவகையால் சிரிக்கின்றன.

புல்லாங் குழலிலிருந்து நெஞ்சை நெகிழவைக்கும் பண், தலை நீட்டும்போதே குழந்தை தாயின் முகத்தில் தன் முகத்தை வைத்துத் தழுவுவது போல் அதன் இனிமையால் நம் இதயத்தைத் தழுவுகிறது!

தலைவர் பெரியார் அவர்களின் இயக்கத்தலைமையிலும்பேரறிஞர் அண்ணா அவர்களின் தானைத்தலைமையிலும் பகுத்தறிவு இயக்கம் தமிழகத்தில் பணி புரிந்து வந்த போது — அந்த இயக்கத்தில் பெரு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மாணவப் பருவத்தில்தொண்டுதொடங்கிய காலத்திலேயே எழுகின்ற செக்கர்வான் செங்கதிர் போல் எல்லோரும் அறிந்து மகிழ்ந்து வரவேற்கும் வல்லவராகவே பொது வாழ்வுப் பணியைத் தொடங்கினர். பகுத்தறிவாளர்களின் இதய வானத்தில் களிப்புப் பறவைகள் காலைப் பண்புகள் பாடின; புத்தறிவுக் குளங்களில் கொள்கைத் தாமரைகள் பூரித்துச் சிரித்தன! மழைத்தமிழால் பட்டி தொட்டிகளிலெல்லாம் இளந்தாடி நெடுஞ்செழியன் அவர்கள் தொண்டு தொடங்கியதுமே--புல்லாங் குழலின் புன்னகைவராளியைப் போல் மக்கள் இதயங்களை அவர் பணி தழுவியது!

பகுத்தறிவு இயக்கத்துக்கு அண்ணா அவர்கள் மாணவர் அணி எனும் தங்க மாலையைச் சூட்டினார்கள்; அந்தத் தங்க மாலையில் வைரம் பதித்த பொற்பதக்கமாக நாவலர் அவர்கள் விளங்கினார்கள்!

பட்டம் பெற்றதும் பணியில் அமர்ந்து பதவிச் சம்பளம் பெற்றுக் குடும்பத்தைக் காக்கும் கடமையில் ஈடுபட வேண்டிய நாவலர் அவர்கள், குடும்பத்தை மறந்து நாட்டையே குடும்பமாகக்கொண்டு நாளும் உழைக்கும் பொதுப் பணித்தொண்டராகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டார்கள். எரிந்து தான் மணக்கும் ஊதுவர்த்தி போல், தேய்ந்து தான் மணக்கும் சந்தனம் போல் தியாகத்தால் மலரும் இசை வாழ்வை நாவலர் அவர்கள் தம் வாழ்வாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்!

குடும்பத்தில் குழந்தைகள் உண்டு மகிழும், விரும்பியதெல்லாம் கொண்டு மகிழும், விருந்தினர் சாப்பிட்டு மகிழ்ந்து செல்லுவார்கள்; பணியாளர் சம்பளம் பெற்று மகிழ்வார்கள்; மனைவியோ வரவை வைத்துக் குடும்பத்தைக் காக்கும் கடமையைச் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பாள். குடும்பத்தின் உயிராகவும் பயிராகவும் அதற்கு உழைத்து வருவாய் தேடிக் கொண்டு வரும் தகைமைக் கடமையை தந்தையே செய்கின்றார்; தந்தையால் உருவாகும்பிள்ளைகளே செய்கின்றார்கள்! குடும்பத்தின் உயர்வுக்கு வருவாய் கொண்டு வரும் தந்தையும் பிள்ளைகளுமே ஊற்றாக இருக்கின்றனர்!

ஓர் இயக்கத்துக்கும் அதன் உயர்வுக்கும் ஊற்றாகத் தம் அறிவால், பண்பால், தொண்டால், உழைக்கும் தலைவர்களே வருவாய் கொண்டு வரும் தலைவர்கள் ஆவார்கள். இவர்களே இயக்கத்தின் இதயம். இவர்களேஇயக்கத்தின் அறிவு; இவர்களே இயக்கப் புகழின் செறிவு!

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பகுத்தறிவு இயக்கக் குடும்பத்தில் இயக்கக் குடும்பத்துக்கு வருவாய் கொண்டு வரும்

வல்ல தலைவர்களில் வல்லவர்! நாவலர் அவர்கள் இயக்கத்தின் ஊற்றுச் செல்வம்!

திருக்குறளைக் கொண்டு தமிழ்ப் புலவர்கள் தலைமுறைதலைமுறையாகப்பெருந் தொண்டு புரிந்து வருகின்றனர்! இது போற்றும் பணியே ஆகும்! தமிழ்ப்புலவர் தம் புகழ்ப்பணிக்குத் திருக்குறளே காரணமாக இருக்கின்றதல்லவா? நாவலர் அவர்களின் தமிழ்ப்பணி, தமிழ்ப் புலவர் தம் தமிழ்ப்பணி போன்றதல்ல; திருக்குறளின் தமிழ்ப்பணி போன்றது! சிலப்பதிகாரத்தின் தமிழ்ப்பணி போன்றது! நாவலர் பணி பணிக்கெல்லாம் உயிர்தரும் பணி; பணி; மணி, மணி அணி!

தாய்வயிற்றிலிருக்கும் போதே தாயம் எய்திப் புகழ் பெறும் அரசர் வீட்டுப்பிள்ளை போல் நாவலர் அவர்களின் பொதுப்பணி அது பிறக்கும்போதே அண்ணா அவர்களின் பொதுப்பணி போல் சிறப்பில்பிறந்து நிறை நிலவாய் வளர்ந்து வரும் பெரும் புகழ்ப் பணியாகும்.

வாழைகுருத்து விடும்போது இலையும் பயன் தரும; பூக்கும் போது பூவும் உணவாகப் பயன்படும்; காயும் உணவாகும்! கனியும் உணவாகும். காந்தியடிகளின் தொண்டு அவர் வாழ்வு குருத்து விடும் போது, பூவாகவும் காயாகவும் கனியாகவும் இருக்கும் போதும் வாழை போன்ற வளமார்பணி வழங்கியது. அண்ணாவின் பணியும் அப்படியே. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பணியும் அந்த அணியைச் சார்ந்ததே ஆகும்!

தி. மு. க. மலர்ந்த பிறகு நாவலர் பெற்று வந்திருக்கும் பணி அணியே இதற்குச் சான்று பகரும்.

துணைப்பொதுச் செயலாளர்

பொதுச் செயலாளர்

அவைத் தலைவர்

எம். எல். ஏ.

சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர்

சட்டமன்ற பொதுக்கணக்குக் குழுத் தலைவர்

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்

அண்ணா ஆட்சியில்

கல்வி அமைச்சர்

அண்ணாவுக்குப் பின் இடைக்கால முதல் அமைச்சர்

கலைஞர் ஆட்சியில்—

பொதுச்செயலாளர்

கல்வி சுகாதார அமைச்சர்

....

நாவலர் அவர்கள் தம் பணி அணி நிறைநிலவாய் வளர்ந்து வரும் மாண் பணியாக மலர்ந்து ஒளி வீசிக் கொண்டிருப்பது நாட்டின் ஒளியாகும்!

நாவலர் பேச்சு நடமாடும் பல்கலைக் கழக மாகும்!

நாவலர்தம் பேச்சு நல்ல தமிழின் பத்துப்பாட்டாகும்; மலை படு கடாத்தின் கலை நலம் பொங்கி வழியும்-மாதிரம்அனைத்தும் மங்காமல் மறையாமல் நாளும் பொழுதும் எப்போதும் கலந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் நாட்டுவளத்தின் கலை மலை ஓசை அவர் தம் பேச்சில் ஒலித்துக்கொண்டே இருக்கும்! மாற்றுக் கட்சியினருக்கு அவர் பேச்சிக் நெடுநல் வாடை யிருக்கும். புலவர்களுக்குப் புள்ளிமயிலாடும் முல்லைப் பாட்டு உண்டு; பொது மக்கள் அனைவர்க்கும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனும் வழி நடந்து பகுத்தறிவுச்சமதர்ம இன்ப வாழ்வு எனும் பரிசில்பெறச் சிறுபாணாற்றுப்படையும் —பெரும்பாணாற்றுப்படையும்— பொருநராற்றுப் படையும் நாவலர் தம் பேச்சின் முக்கனிச்சாறெனக் கலந்து ஆறென ஓடும்; தமிழகத்தின் இயற்கைவளங்களையெல்லாம் தட்டிக் காட்டும் குறிஞ்சிப்பாட்டு அவர் தம் பேச்சில் குழலிசைக்கும்; மங்காத தமிழ்நாகரித்தின் மாண்பினை மதுரைவலம் வந்து மாநகரக்காட்சி காண்பது போல் வண்ணப் படம் பிடித்து வருணிக்கும் மதுரைக்காஞ்சி அவர்தம் சொற்பொழிவில் காதலியைக் காதலன் கொஞ்சுவது போல் கொஞ்சும்; 'முட்டாச்சிறப்பிற் பட்டினம் பெறினும் வயங்கிழை ஒழிய வாரேன், எனக்கூறும் இதயம் போல் பொது வாழ்வு எனும் வயங்கிழை ஒழிய புது வாழ்வு

ஈனும் தன்னல் வாழ்வுக்கு வீழ்மாட்டேன் எனக் கேட்பவர் உள்ளமெலாம் பொது நலப்பணி செய்ய உயர்த்தும்—பாலையெல்லாம் பட்டினமாக்கப் பாடுபடப் படை சேர்க்கும்பட்டினப்பாலை நாவலர் தம்பேச்சில் பழம்முதிர் சோலையாக மண்டியிருக்கும்; தமிழ்க்கோயிலில் தலைவணங்கி நிற்கும் போது நெஞ்சில் அலையெனப் புரளும் கலை அமைதியைத் —திருமுருகாற்றுப்படையின் பெரும் பேரமைதியை—நாவலர் தம் குற்றாலப் பொங்கருவிப்பேச்சில் அவர் தம் கருத்துக்கோயிலில் தலைவணங்கி நிற்கும்போது நெஞ்சில் பக்தி அலை புரளும் போது கற்றோரும் மற்றோரும் எல்லோரும் உணர்வர்!

.........நாவலர் நெடுஞ்செழியனார் தம் பேச்சில் அண்ணாந்து பார்த்தாலும் முடி தெரியாது வளர்ந்திருக்கும் தேக்கு மரக்காடுகளைப்போல் கருத்துக்கள் விண்ணளாவி வளர்ந்திருக்தும்! அக்கருத்துத் தேக்கு நெஞ்சமெலாம் வீரம் செறிந்த கருத்தைத் தேக்கும் செயலை நாடறியும். அலக்சாண்டரை எதிர்க்க அம்பியைப் புருடோத்தமனுக்கும் ஆற்றல் அவர் தம் அலை கடல் முழக்கக் கலைத்தமிழ்ப் பேச்சுக்கு உண்டு!

நாவலர்தம் வாழ்வு ஒரு புறநானூறு; அதிலே அவர் எழுதி முடித்திருப்பவை ஒரு நூறுதான்! புற நானூற்றில் ஒரு நூறென்ன—ஒரு பாட்டே உலகம் வாழ்விக்கும் உயர் பாட்டாயிற்றே!

நாவலர் இயற்கைத் தலைவர்; வெளிப்படையாகப் பேசும் வெள்ளை உள்ளம் படைத்தவர்! பழகும் போது அவர் பேச்சில் மாம்பழங்களையும் திராட்சைகளையும் எதிர்பார்க்கும் புதியவர்களும் புரியாதவர்களும் பலாப்பழங்களும் தென்னம்பழங்களும் உதிரும் போது பாரம் தாங்காமல் முகம் சுளிப்பர்; அதைக் கண்டு அறிந்தோர் அகம் களிப்பர்!

"ஒழுகாத கூரை—கிழியாத உடை—பசிக்கும்போதெல்லாம் உணவு-எல்லோருக்கும் எப்போதும் இருக்க வேண்டும். இக்கருத்து என்னைக் கவர்ந்த கருத்து. இதைச்செயலாக்க எப்போதும் பாடு படுவேன்!" என்று ஒரு பேட்டிக் கட்டுரையில் நாவலர் அவாகள் சொல்லி யிருந்தார்கள்!

பெருந்தலைவர் நாவலர் அவர்களின் எளிமைக்கு இது சான்று. புதிய சமுதாயம் உருவாக்கும் புத்துலகச் சிற்பிகளின் வரிசையில் நாவலர் அவர்களுக்குப் புகலிடம் பெரிது!

"தம்பி வா! தலைமைதாங்க வா! உன் ஆணைக்குக்கட்டுப்பட்டு நடக்கிறோம் என்று உறுதி கூறுகிறோம்" என்று அண்ணா அவர்கள் நாவலரை மாநாட்டுத் தலைமைஏற்க அழைக்கும் உரையில் அருளிய திருவாசகம் ஒன்றே போதும் நாவலர் தம் புகழைத் திருக்குறளாகக்காண. அண்ணாவின் இத்திருவாசகமே போதும். நாவலர் வாழ்க! நாடுவாழ்க! நற்றமிழ் வாழ்க!

அண்ணாவை மறந்தால்...
காங்கிரசின் கதியே நமக்கும்

என்றென்றைக்கும் நமக்கு வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள்தாம். அவரது நாற்பதாண்டு காலப் பொது வாழ்வில் அவர் எழுதித் தந்த கருத்துக்கள் கொஞ்சநஞ்சமல்ல. சமுதாயத் துறையில் நாம் இன்னும் நூற்றாண்டுக் காலம் அவற்றை வைத்துப் பணியாற்றிட என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் அண்ணா நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். அரசியலில் நாம் ஆற்ற வேண்டிய பணி என்ன என்பதைக் கடைசியாக எழுதிய தமது கட்டுரையில் அண்ணா நமக்கு விளக்கிவிட்டுப் போயிருக்கிறார்.

அண்ணாவையும், அவரது கருத்துக்களையும் நாம் மறப்பது கூடாது. மறந்தால் காங்கிரசுக்கு வந்த கதியே நமக்கும் வரும்.

—நாவலர் நெடுஞ்செழியன்

ஐம்பெருஞ் சிறப்புகள்

கி. இராமலிங்கனார் எம்.ஏ.

தமிழ் ஆர்வத்தின் தனியுருவம்

தமிழ்மொழியின்பால் ஒருவர் கொள்ளக் கூடிய ஆர்வத்தினை, ஓர் உருவமாக்கிக் காணவேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவாகளைக் காணவேண்டும்' அன்னை தமிழ் அவர்களுக்குக் கன்னலும் பாலும். அவர்களது திருத் தோற்றமே அருந்தமிழ்த் தோற்றம். அதன் தனித் தன்மையைக் காப்பதில் அவர்கள் தனித்தன்மை பூண்டவர்கள். அவர்களது பெயர் 'நாராயணசாமி' என்று இருநததை, அவர்களோடு இளமையிற பழகியவர்கள் அறிவார்கள். அப்பெயரின்மேல் அவர்களுக்கு அருவருப்பில்லை. அப்பெயர் எழுதப்பெறறுள்ள மொழியின்பேரிலும் அவர்களுக்கு வெறுப்பில்லை. அப்பெயர் குறிக்கும பொருளின் மீதும் அவர்களுக்கு மனக்குறையில்லை. அதனைத் தனக்கு இட்ட தம் அருமை அன்னை தந்தையரிடம் அகனமர்ந்த பற்றுடையவர்கள் எனினும், அந்தப் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்கள்? தமிழ்த்தாயினிடம் அவர்களது உள்ளத்தில் இன்றுபோல் அன்றும் ஊற்றெடுத்து வந்த ஈடு எடுப்பிலாத இன்ப அன்பே, அதற்குக் காரணமாகும்.

தமிழில் ஆர்வமுடைய, எலலோராலும், இவ்வாறு செய்துவிட முடிவதிலலை. மாண்பிற் சிறந்த மறைமலையடிகளாருக்கு உள்மனத்தில் வேரூன்றியிருந்த உறுதிப்பாங்கு, மாண்புமிகு நெடுஞ்செழியனார்க்கும் இருந்தது! தமிழ்ப பற்றுடைய அனைவர்க்கும அப்பாங்கு வாயததுவிடுவது அரிது. சுற்றுச் சூழலுக்கு அஞ்சியோ, பிற ஏதுக்களுக்காகவோ, தம் அயல்மொழிப் பெயரை அழகு தமிழில் அமைத்துக் கொள்ளத் தயஙகுகிறவர்கள், பலராக உள்ள தமிழகத்தில், இருபதாண்டுகளுக்குமேல் பழக்கமான தமது பிறமொழிப் பெயரைத் துணிந்து, தமிழவீறு மிளிர, தமிழாக்கிக்கொண்ட தன்மையை என்னவென்று புகழ்வது!

தமிழுக்குக் கல்வி நிலையங்களில் முதலிடந் தந்து, தமிழில் எல்லாப் பாடங்களையும் கறபிப்பதறகான வசதிகளை விரைந்து பெருககிவரும் சிறப்பு நம் அண்ணலாம் அருந்தகை நெடுஞ்செழியனார்க்கே உரியது. எத்தனையோ எதிர்ப்புககளிடையே எவ்வளவோ கட்டுப்பாடுகளுக்கு நடுவே, தமிழின் பெருமையை அவாகள் தாமதியாமல் காத்து வருகிறார்கள். தமிழ் பயிற்றுமொழியானால் நாடே நலமிழந்து போகும். மக்கள் பண்பற்ற பழங்கால மக்களாக இழியும்நிலை ஏற்பட்டுவிடும்' என்றெல்லாம் எழுதியும் பேசியும் அச்சுறுத்தும் தன்னல மிகுதியினால் தமிழ் நலம் வெறுப்பவர் நடுவே, நம் அமைச்சர் பிரானார் அவர்கள் அஞ்சாத அரிமாவாக ஆட்சிமணையில் அமர்நது, தமிழின் தனிப் பெருமை குன்றாமல காத்து வருவது தமிழ் அன்னை செய்த தவப்பயனே யாகும்.

உவகை பெருக்கும் உரைவன்மை!

கேட்பவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்னும் ஆவலுடைய வர்களாகுமாறும், கேட்பதற்கு வர இயலாதவர்கள், கேட்டவர்கள் சொல்லக் கேட்டுத் தாமும் கேட்காமற் போனேமே என்று வருந்தி, அடுத்தமுறை எப்படியும் கேட்டுவிடவேண்டும் என்னும் வேட்கை மிகுந்தவர்கள் ஆகுமாறும், ஒருவரது பேச்சு அமையவேணடும் என்பது மறை தரும் ஆணை. அவ்வாறு பேசுவதில் பெருவனமை படைத்தவர்கள் நம் அமைச்சா பெருமானார் அவர்கள்.

தனித் தமிழில், பல சுவை நயங்கள் பொருந்த, உரையாற்றுவார்கள். மிகமிக நீண்ட தொடர்களாகப் பேசுவதில் அவர்களே அவர்களுக்கு நிகர். எங்கே தொடங்கி எங்கே முடித்தார்கள் என்று அறியமாட்டாமல் செவிமடுப்பவர்கள் திகைக்குமாறு பேசினாலும், வாக்கியங்கள் இலக்கண மரபு வழுவாமல் திருத்தமாக அமைந்து விடுவது வியப்பாக இருக்கும்! உரை நிகழ்த்தும் பொருளை உளங்கொள்வதிலும் குழப்பம் சிறிதும் நேராது. பேச்சு தெளிவாக விளங்கும்.

ஒரு பள்ளியில் அவர்கள் பேசிய போது, தமிழ் பேச மட்டுமே சிறிதளவு தெரிநத ஒரு மலையாள அம்மையார் அக் கூட்டத்தில இருந்தனர். நம் அமைச்சர் பெருமானாரின் பேச்சைப் போற்றிப் பாராட்டி அந்தஅம்மையார்சொல்லக் கேட்டுச் செவி குளிர் நதேன்!'பெருமானார் பேசியது உங்களுக்குப் புரிந்ததா?" என்றேன். 'நன்ருகப் புரிந்ததே! கேட்பதற்கு இனிமையாகவும் இருந்தது!' என்று சட்டென விடை பகர்ந்தார் அவ்வம்மையார்.

அமைச்சர் பெருந்தகையாரின் உரையாற்றலில் இன்னெரு சிறப்பும் உண்டு. கேட்பார்க்குச் சலிப்புச் தட்டாவண்ணம், இடையிடையே குரலை மாற்றுவார்கள். அம்மாற்றங்கள் திடும் என நேரும்போது ஒரு தனிச் சுவையும் பிறக்கும்; அப்போது உருவாகும் மெய்ப்பாடு, கூட்டத்தில் ஒரு துளும்புதலையும் உண்டாக்கும் இடத்துக்கு ஏற்ற பலப்பல இலக்கியச் சொற்களைப் பெய்தும், புதிதாகப் புனைந்த பல இனிய சொற்களை இடையிட்டும், பேச்சினை வளமாக்கி இன்புறுத்துவார்கள்.

அமைதி நிலவும் அன்பு மனம்

நம் அன்பிற்கு உகந்த அமைச்சர் பெருமானார், தம் கனிந்த அனபினல், தம்மை அணுகுவோரின அன்பினைக் கவர்ந்து, அவாகளது உள்ளத்தை ஈர்க்கும் இயல்பினர். அவர்களது அன்பு ஆரவாரம் அற்றது. அகத்தின அடிபபகுதியில் தோன்றி வளர்வது. சிலரைப்போல், பகட்டாகப் பேசி, ஏமாற்றும் பழக்கமில்லாதவர்கள். கறந்த பால் கனனலொடு நெய் கலந்தாற போன்ற அவர்களது உரையாடலில உண்மை அனபு நிலவும். அவர்களது பேச்சை நம்பலாம். உள்ளொனறு வைத்துப் புறமொன்று பேச அறியாதயாதவர்கள்.

எந்தச் செய்தியைப் பற்றியும் அவர்கள் பரபரப்பு அடைநதுவிடமாட்டார்கள். பொறுமையோடு எதையும் ஏற்றுக்கொள்வார்கள். ஆர அமரக்கேட்டு ஆய்நதுமுடிவு செய்யும் அமைதியும் ஆற்றலும் படைத்தவர்கள். மற்றவர்களது மனநிலையை எளிதில் உணாநதுகொணடு. அவர்களது பரபரப்புணர்ச்சியையும், தமது கவரும் உள்ளத்தால் மாற்றிவிடுவார்கள்; அமைதி கொள்ளச் செய்து, அன்புமனம் பூணவைப்பார்கள். 'செம்பைப் பொன்னுக்கும் செந்திறமோ இவர்கள் திறம்!' என்று உவந்து போற்றுவர் உண்மைநிலை யறிநதோர்.

பழமை மறவாப் பண்பு நலம்

மாண்புமிகு அமைச்சராயின் பின்னும் அவர்களோடு, அனபோடு பழகிய பழைய நண்பர்களை மறவாமல் அரவணைத்து அளவளாவும் மாணபு, மிகுந்தவர்கள. தம மோடு பெரிதும் நெருங்கி உறவாடியவரையும், தாம் ஒரு சிறிய உயர்நிலையடைந்து விட்டதும், கண்பொருந்தக் காணவும் கூடாதவராக, ஆகிவிடும் பலரைப்

பார்த்துவரும் இந்நாளிலே, திரு நெடுஞ் செழியனாரின் பழைமை பாராட்டும் பண்பு, அங்ஙனம் பாராட்டப்பெறுவோரின் உள்ளங்களில் உலப்பிலாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்து வருகிறது.

பழைய அன்பர்களும் நண்பர்களும், மிக எளிய நிலையிலிருப்பவர்களாயினும், மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையாரை எப்போதும அணுகலாம்; அளவளாவி மகிழலாம். அத்தகையவர்களுக்கு ஒருதனி நயப்புக்(சலுகை)காட்டுவது அவர்களது பெருந்தன்மையாகும். எனினும், பழமை பாராட்டிக்கொண்டு, எவரும் அமைச்சரிடம் சென்று, அறமல்லாத செயல்களுக்கு ஆக்கந் தேடிவிட முடியாது.

நேர்மை சான்ற சீர்மை யாட்சி

அரசியலிலே, அமைச்சர்பிரானாரோடு இணைந்தவர்களாயினும், கட்சிக் கட்டுப்பாடு என்னும் கயிறு ஒன்றினாலேயே பிணைக்கப்பட்டு, செயலகளைச் செய்துவிட மாட்டார்கள். அமைச்சர் அவர்கள் நேர்மைக்கு மாறாகாமல் கட்சிப் கட்டுப்பாடும் இருக்கவேண்டும் என்று விழைபவர்கள், நேர்மை, கட்சிக் கட்டுப்பாடு என்ற இரண்டில் எதைக் கடைப் பிடிப்பது என்னும் சிக்கல் எழும்போது, கட்சிக் கட்டுப்பாட்டை நேர்மையோடு தொடர்புபடுத்திச் சிந்திப்பார்கள். நேர்மையை விட்டுக்கொடுத்துவிட அவர்களது அற உள்ளம் இடந் தராது. இவ்வுணமைகளை அரசியலில் ஈடுபட்டவர்கள் நன்கு அறிவர். வெளியாரும் இதனை விளங்கிக்கொள்ளாமல் இல்லை.

அரியணையிலே அமர்ந்து ஆட்சி புரியும் நேரங்களில், அமைச்சர் பெருந்தகையைக் காண வாய்ப்புப் பெறும் அன்பர்கள் எவ்வளவு நேர்மையான முறையிலே, அமைச்சர் அவர்கள் ஒருபால் கோடாத சான்றோராய் இலங்குகிறார்கள் என்பதை எளிதில அறிந்து அகமுவப்பர். அதனோடு. அரசாளுந் தந்திரக் கலையிலே எத்துணை வளமை நிரம்பியவர்கள் என்பதையும் நேரில் தெரிந்து நெஞ்சங் களிக்கொள்வர்.

ஆளுந் திறமையோடு இணைந்து பிணைந்த அரச தந்திர அறிவும் ஆற்றலும் நாட்டின் நன்மைக்கும், மக்கள் வாழ்வின் மேம்பாட்டிற்குமே பயன்படுத்தப் பெற வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்தவர்கள் நம் அமைச்சர் பெருமானார். அரச தந்திரத்தைத் தன் திறமும் தன் நலமும் ஓங்குதற்காகவே இசைவாக்கிக்கொள்ள ஒருபோதும் ஒருப்படார்கள்.

இப்பெருமகனாரின் நேர்மை சான்ற ஆட்சியிலே நாடு நாடாவதற்கான பாங்குகள் பல்கி வருகின்றன. மக்கள் சீரும் சிறப்போடு, வாழ வழிவகைகள் காண்கின்றனர். எதிர்காலதில் தமிழகத்தில் அறிவியல் மேதைகள் தோன்றும் வாய்ப்புகள், தமிழ் பயிற்று மொழியாவதால், பெருகி வருகின்றன. எந்த அறிவியற் செய்தியையும் தம் தாய்மொழியில் இனிது விளங்கிக்கொண்டு புதுப் புனைவுகள் காண்பதற்குத் தமிழர் ஆயத்தம் செய்யப் பெறுகின்றனர். மக்களின் உடல் கட்டுடனும் செம்மையுடனும் வாழ்வதற்கான ஏற்பாடுகள் மிகுந்து வருகின்றன. மக்கள் பெருக்கத்தைக் குறைத்து, சீரான முறையில் எல்லா நலன்களையும் மக்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் பெருகுகின்றன.

ஐம்பெரும் சிறப்புகள் பூண்ட அமைசசர் பெருமகனார் எல்லா நலன்களுடன் பல்லாண்டு ஆட்சியரியணையில் அமர்ந்து, மேலும் பல நலன்களையும் வளங்களையும் நாட்டுக்கு நல்கவேண்டுமென உளங்குளிர வாழ்த்தி வரவேண்டுவது மக்களின் கடமையாகும்.

எல்லோருக்கும்
மாலை போடுகிறார்களே!

பண்டைய காலத்தில் நம் நாட்டில் போருக்குப் போகும் போதும், போரிலிருந்து வெற்றி பெற்றுத் திரும்பும் போதும் மாலைபோட்டு மரியாதை செய்வது வழக்கம். ஆனால் இப்போது பொருள் (பணம்) பெறுவதற்காகவும் புகழ் பெறுவதற்காகவும் எல்லோரும் எல்லோருக்கும் மாலை போடுகிறார்களே!

-அமரர் அண்ணா

கழகத்துக்குப் பொன் விழா!

அருண்மொழி வில்வம்

நாவலருக்குப் பொன் விழா என்ற பேச்சு அடிபட்டது. அதை யடுத்து நாவலர் பொன் விழாவை யொட்டி ஒரு மலர் வெளியிடப் போவதாகவும், அம்மலரில் நானும் எழுத வேண்டுமென்று மலர் வெளி யீட்டாளரின் மடலும் கிடைத்தது.

நாவலருக்குப் பொன் விழாவா? இல்லவே இல்லை. யாரோ தெரியா மல் சொல்லிவிட்டார்கள். அது இப் படிப் பரவியிருக்க வேண்டும். எப்படி நமது நாவலருக்கு மட்டும் தனியாகப் பொன்விழா வரும்? நாவ லருக்குப் பொன்விழா என்றால் நமக் கெல்லாம் பொன்விழா வல்லவா? பரணி பல கொண்டு தரணி புகழ்ந் தேத்தும் தமிழ்த்தாயின் பொன் விழா வல்லவா? தமிழகத்தேயும் கடல் கடந்து உலகத்தின் பல பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் புலவர்கள் ஒவ் வொருவருடைய பொன்விழாவல்ல வா? அப்படியிருக்க நாவலருக்குப் பொன்விழா என்றால் நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

முக்கடலுடுத்து, முத்தமிழ் பெற்று, முச்சங்கத் தொட்டிலிட்டுத் தாலாட்டிய முத்துக் குமரியாம் தமிழன்னையைப் பொன்னுசனத் திருத்தி அவள் புகழ் பரப்பிய பாண் டிய மன்னர்களில் நெடுஞ்செழி யப் பாண்டியனை அறியாதார் உண் டோ இலக்கியத்தில் சரித்திரத்தில் நாவலரின் நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், அஞ்சா நெஞ் சமும் கொஞ்சு தமிழுதிர்க்கும் தனியாற்றலும், நமக்கு இலக்கியத்து நெடுஞ்செழியப் பாண்டியனை யல் லவா நினைவு படுத்துகிறது. தித்திக் கும் தீந்தமிழால் எத்திக்கும் கழகக் கொள்கைகளை எடுத்துரைத்த ஏந் தல் அல்லவா நம் நாவலர்.

அன்றும் இன்றும் நாளையும் தமி ழால் அறிஞர் அண்ணாவை ஆடாமல் அசையாமல், கூட்டாமல், குறைக் காமல் நம் ஒவ்வொருவர் நெஞ்சி லும் கொலுவிருக்கச் செய்பவர் நம் நாவலர்தானே!

ஒவ்வொரு சமயமும் அண்ணா அவர்கள் என் தம்பி நெடுஞ்செழி யன் இருக்கின்றான் என நிறைவோ டும் நம்பிக்கையோடும் கூறி வந் தது இப்போதும் நம் அனைவர் காது களிலும் ரீங்காரம் செய்யவில்லையா?

ஒரு முறை மாநாட்டில், என் நினைவு சரியாக இருக்குமென்றால் பூவிருந்தவல்லி மாநாட்டில் என்று எண்ணுகிறேன், (திருமதி. விசா லாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் அமெரிக்காவில் இருந்தபோது) குறிப்பிட்டார்கள். "தம்பி நெடுஞ் செழியனுக்குக் கழகமே வீடு, வாசல்,

பெண்டு, பிள்ளை எல்லாம், இயக்கத்தில் இரண்டறக் கலந்து விட்டார். ஆனால் இது அவரது மனைவி திருமதி விசாலாட்சிக்குக் கொஞ்சம் வருத்தம்தான். கொஞ்சமென்ன, அவருக்குத் தம்பி நெடுஞ்செழியன் இப்படி இயக்கத்தில் முழுநேரப் பணியாற்றுவது சிறிதும் பிடிக்கவில்லை என்று கூடச் சொல்வேன்.

இப்போதுகூட அவருக்கு அவரது மனைவி அமெரிக்காவிலிருந்து எழுதுகின்ற ஒவ்வொரு கடிதமும், நீண்ட பெருமூச்சைத் தாங்கி வருகிற தென்பதையும் நானறிவேன்'' என்று உணர்ச்சிமேலிட குறிப்பிட்டார்கள். இதை இங்கு நினைவு படுத்துவதின் நோக்கமே நாவலர் அவர்கள் கழகத்தோடு எத்தகைய தொடர்பு கொண்டு இணைந்து வாழ்ந்து வருகிறார் என்பதை நாமறிய வேண்டுமென்பதற்காகத் தான்.

இப்படி அறிஞர் அண்ணா அவர்களே அவரின் தம்பி நெடுஞ்செழியனின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் பகிரங்கமாகவே பேசினார்கள் என்றால் அவருக்கு நாவலரிடம் எத்தகைய பற்றும் பாசமும் மதிப்பும் இருந்திருக்க வேண்டுமென்பதை நம்மால் உணர முடிகிறதல்லவா?

மேடைப் பேச்சிலே தமக்கெனத் தனி பாணியை வகுத்துக் கொண்டவர். மற்றவர்கள் பேசுவதைப் போல் பேசிக் காட்டி விடலாம். ஆனால் நாவலர் பேசுவது போல் பேசிக் காட்டுவது சற்று சிரமம் தான். ஏன் நானே கழகத் தலைவர்கள் ஒவ்வொருவர் பேசுவது போலவே பேசிக் காட்டுவதுண்டு. ஆனால் நாவலர் பேசுவது போல் பேசிக்காட்ட முற்படும்போது தவறி விடுவதும் உண்டு. எழுத்திலோ என்றால், எது எப்படிப் போனாலும் பொருளோடு தமிழ் மணம் வீசத் தவறாது. நாவலர் எழுத்தென்றால் தென்றல் நடையிலும், புயல் வேகத்திலும் தமிழ் தவழ்ந்து விளையாடத் தவறவே தவறாது.

மாற்றாரும் மதிக்கத்தக்க மாண்பு. கழகத்தவர் அருகிலிருப்பினும் சரியே, தூரத்தில் இருப்பினும் சரியே அவர்கள் நலனைக் குறித்துக் கேட்டறிந்து மகிழும் தனிச் சிறப்பு நாவலருக்கே உரித்தானது.

ஆக அவர் தம் சிறப்பியல்புகளைக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்தால் "நாவலர் வேறு, கழகம் வேறு" என்று நாம் பிரித்துணர முடியாது. ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டுமானால் "நாவலர்தான் கழகம். கழகம் தான் நாவலர்'' அவருக்கு இன்று பொன்விழா என்றால் அது நம் கழகத்தின் பொன் விழா தானே. நாடே பொன்விழாக் கோலம் பூண்டிருக்கும் இந்த நாளில் நாவலர் பணி சிறக்க, அவர் புகழ்! ஓங்க நான் போற்றுகிறேன். அக மகிழ்ந்து "வாழ்த்துகிறேன்'' என்று சொல்ல முடியாது என் வயது காரணமாக! என்றாலும் ஓங்குக அவர் புகழ் நீண்டு தழைத்துப் பல்லாண்டு வாழ்ந்து அவர் தலைமை சிறக்க விரும்புகிறேன். நெஞ்சார அவாவுறுகின்றேன். வாழ்க நாவல்ல நாவலர்!

காலம் தரும் பாடம்

(67க்கு முன்னும் பின்னும்)

காட்டூர் கோபால்

கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களது ஐம்பத்தி ஒன்றும் பிறந்த பொன்னளில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். ஜனநாயக ஆரோச்கியத் திற்குத் தக்க நல்ல பண்பாடுகளை-இயல்பு களைக் கொண்ட நாவலர் அவர்கள் கழகப் பொதுச் செயலாளர் என்பதில் நமக்கெல் லாம் அளவு கடந்த பூரிப்பு.

1967க்கு முன்பு, காங்கிரஸ் ஆளுங் கட்சியாக இருந்தது. நாம் பிரதானஎதிர்க் கட்சியாக இருந்தோம். அப்போதைய ஆளுங்கட்சிப் பெருந் தலைவர்கள், நம்மைப் பார்த்துப் பல வகைகளில் கேலியும் கிண் டலும், பேசி வசைமாரி பொழிவதை வாழ்க்கையாகக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நாவலர் அவர்கள் சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வந்தார்கள். காங்கிரஸ் தரப்பி னர். தங்களைத்தவிர ஆளுங்கட்சியாக வரு கிற அருகதை எந்தக் கட்சிக்கும் இல்லை என்றே கூறி வந்தனர். அதோடு மட்டும் நிற்கவில்லை. நாட்டில் நல்ல எதிர்க்கட்சி கூட இல்லைஎன்றார்கள். ஒருஜனநாயகநாட் டில் நல்ல எதிர்க்கட்சியாக இருந்து செயல் பட வேண்டிய பாங்கினைக் கூட; தமிழகத் தின் இப்போதைய எதிர்கட்சிகளில் பிர தானபாகத்தை வகித்துவந்த திராவிடமுன் னேற்றக் கழகம் பெறவில்லை என்றும் இடித்துக் கூறினார்கள். அப்போது எதிர்க் கட்டிசித் தலைவராக இருந்த நாவலர் அவர் கள் தனக்கே உரித்தான பாணியில்-ஏசுப வர்களைத் திருப்பி ஏசாத வகையில்-: நல்ல எதிர்க்கட்சி இல்லை என்று காங்கிரசுத் தலைவருக்கு மெத்தக் கவலை போலும் அவர் களது ஆசை நிறைவேற்றத் தக்கவகையில் அவர்களே 67க்குப் பின் நல்லஎதிர்க்கட்சி யாக இருந்து பணிபுரிந்து படிப்பினை காட் டட்டும் என்றார்கள். காலம் அந்தப் படிப்பி னையைக் கொடுத்தது.

நல்ல எதிர்கட்சி இல்லை என்று நம் மைப் பார்த்துக் குறை கூறிய காங்கிரஸ் காரர்களது நடை முறை காரியங்களை கவனித்தால் மக்களாட்சியில் ஆளுங்கட்சி யாக இருந்திடவும் தமிழக காங்கிரஸ் தகுதி யற்றது என்பது மட்டுமல்லாமல், பிரதான எதிர்கட்சியாகவும் இருந்திட அருகதை யற்றது என்பது வெளிப்பட்டு வருகிறது. அஹிம்சை -அறவழி -ஆகிய நன்னெறிகளைக் கூறிவந்த காந்தியார் கண்ட இயக்கமே கடந்த மூன்றாண்டு கா லமாக-கழக ஆட்சிக் காலத்தில் மறவழி யில் வெறித்தனமாகக் காரிய மாற்றுகின் றார்கள். உணர்ச்சிகளுக்கு மட்டுமே மதிப் பளிப்பது வருகிறதே தவிர உண்மைக்கு மதிப்பளிக்கவில்லை. காங்கிரஸ் மட்டுமா? சில தோழமைக் கட்சிகள்கூட நமது தோள் மீது கைபோட்டிருப்பதே; நாம்

ஏமாற மாட்டோமா என்கிற நினைவிலே தான் செயலாற்றுகின்றன. 1957 முதல் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக தாஞக முயற்சித்தும்; பிறரைத் தூண்டி விட்டும் எதிர்பார்த்த பலன் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அண்மையில் அமைதி யாக இருந்த கோவை விவசாயப் பெருங் குடி மக்களைக் கூட ஆர்பாட்டம்-ஊர்வலம் -போராட்டம்-மறியல் போன்ற காரியங்க ளில் ஈடுபடத்தக்க வகையில் தூபம் போட்டு வளர்த்தார்கள். சட்டவிரோத நில ஆக்கிரமிப்புக்குக் கூட பக்கபல மாக இருப்பதாகத் தெரிவிக்கிற செய்தியினை வெளியிட்டுக்கொள்வதில் ஆர்வங்காண்பிக் கின்றுர்கள். தான் ஆளுங்கட்சியாக இருந்த போது ஒருவிதமாகவும் எதிர்கட்சியாகி விட்ட தற்போது முற்றிலும் முரண்பட்ட ரீதியிலும் செயல் படுவதைக் காண்கிறோம் நாட்டில் அமைதி கெட்டால் தான் சேதம் விளைந்து- நிலைமைகள் கேடு கெட்டால் தான் தங்கள் கட்சிக்கு எதிர்காலம்இருக்க முடியுமென்று கருதிச் செயல் பட்டு வரு கிறுர்கள்.

கழகம் எதிர் கட்சியாக இருந்தபோது நாட்டின் அமைதி கெடத்தக்க-சேதம் விளை விக்கத் தக்க- காரியங்களில் ஈடுபட்டதே இல்லை. எதிர்த்தாக வேண்டியஜனநாயகக் கடமைகள் ஏற்பட்ட தருணத்தில் மட்டுமே அதுவும் பொதுப் பிரச்சனைகளாக, நாடு முழுவதும் தழுவிய பெரும்பிரச்சனைகள் எழுந்த போது மட்டுமே கழகம் நடவடிக் கையில் இறங்கியுள்ளது. கழகம் நடத்திய எந்தப் போராட்டமும் முறைப்படி முன் கூட்டி அறிவிக்கப் படாமலோ பலாத்கார மற்ற அறவழி வகுக்கப்படாமலோசெயல் பட்டதில்லை.

கழகம் எதிர்கட்சியாகஇருந்தபோது; நடைபெற்ற இந்திப்போராட்டத்தின் செயல்முறைகள் சமூக விரோதிகள் கைக்கு மாறுவதை கழகம் கண்டித்தது மட்டுமன்றி தனக்குத் துளிக்கூடச் சம்பந் தமில்லாத நிலமையை ஏற்படுத்தி நாட் டின் அமைதி காப்பதில் அக்கரை காட்டி யது. நல்ல எதிர்க்கட்சியாக எப்படி இயங்க வேண்டுமென்பதற்கும் இலக்கணமாக இருந்து வந்துள்ளது. இப்போது நல்ல ஆளுங் கட்சியாக எப்படி இருக்க வேண்டு மென்பதற்கும். கழகம் இலக்கணமாக அமைந்து செயல்பட்டு வருகிறது. காலம் தரும் பாடம்—கழகம் அன்றும்-இன்றும் ஜனநாயக ஆரோக்கியம் பாதுகாக்கப் படத்தக்க வகையில் பணியாற்றி வந்துள் ளது உறுதிப்படுகிறது.

பழைய அரசுக்கும்- நமது அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை ஒவ்வொரு பிரச்ச னைகளிலும் நன்கு பார்க்கலாம். உதார ணத்திற்கு ஒன்றைப் பரிசீலிப்போம். பத் தாண்டுகளுக்கு முன்னர் நீலகிரி மாவட்டம் குந்தா -மெரால்டு- பகுதியில் மின்அணைத் திட்ட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டி ருந்த தற்காலிக தினக்கூலி பெறுகிற தொழிலாளர்களது வேலைவாய்ப்புக்குத் தொடர்ந்து முயற்சிக்கப்பட்டது. பலன் கிடைக்கவில்லை. ஒவ்வொரு மின் திட்ட நிர்மாணப் பகுதியிலும் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு முறையான ஆஜர் பட்டியல் -பதிவு ஏடுகூட அப்போது கிடையாது. ஏனென்றுல் அவைகள் இருந் தால் இந்தத் தொழிலாளர்களது சர்வீஸ் தொடர்ச்சிக்கு உத்திரவாதம் ஏற்பட்டு விடுமென்கிற அச்சம். எந்தத் தொழிலா ளர்களுக்கும் எப்போதும் 240 நாள் வேலை காலத் தொடர்ச்சியே இருக்காது. பல வரு டங்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள். ஆனுலும் எவருக்கும் 240 நாள் சர்வீஸ் தொடர்ச்சி மட்டும், இல்லாதபடி பதிவு செய்து கொள்வது வாடிக்கையாக இருந் தது.

தொடர்ந்து தொழிலாளி வேலைபார்த் துவந்தாலும், 240 வது நாளன்று, அவர்

பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும்- அல்லது தகப்பனார் பெயரை மாற்றிப் பதிவு செய்து கொள்ள வேண்டும் இது தான் காங்கிரஸ் கால நடை முறைப் பழக்கமாக இருந்தது. நாவலர் அவர்கள் சிறிது காலம் தான் மின்சாரத்துறை அமைச்சராக இருந் தார்கள். அத்தருணம், முன்னேற்றச் சங்க சார்பில் முறையிட்டு, இந்தத் தற்காலிக தொழிலாளிகளின் திட்டவட்டமாக முறைப் படுத்தப்படாத - நிம்மதியற்ற நிலைகளைப் பற்றிக் கூறப்பட்டது.

இரண்டு தினங்கள் விவாதித்தார்கள். திட்ட நிர்மாணப் பகுதியால் வேலை செய்து வருகிற பல்லாயிரக்கணக்கான அனைவ ரும் நிரந்தரப்படுத்தப் படுவதென்பது சாத் தியமில்லா விட்டாலும்-தற்காலிக ஏற்பாடு களாக; ஏற்கெனவே பணியாற்றி வருகிற தொழிலாளர்களின் வாழ்க்கை முழுமை பெறாத முன்னர் புதியதாக வேலைக்கு அமர்த்தாமலும்- ஆங்காங்கு வேலை முடிந் விடுகிற நிலைமைகளில் உள்ள திட்டங்க ளில் பணியாற்றுகிற தொழிலாளர்களை புதிய நிர்மாண திட்டங்களிலாவது- அல்லது மின் வினியோகப் பகுதிகளிலா வது முடிந்த அளவு வேலை மாற்றம் செய்து வேலை வாய்ப்புக்கு உத்திர வாதமளிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஊருக்கு ஒளியூட்டுகிற மின் திட்ட நிர்மாணப் பகுதிகளில் பணியாற்று கிற பல்லாயிரக்கணக்கான பாட்டாளிகளும் அணைகட்டி முடிக்கப்பட்டதும், தனது கணக்கு முடிக்கப்பட்டு வேலை யற்றுவிடத் தக்க பழய நிலமையை மாற்றிபுதியமுறை களை அமுலாக்கி வழிகாண்பதற்கு நாவலர் அவர்கள் பெரிதும் ஒத்தாசையாக இருந் தார்கள.

நாவலர் ஆற்றுகிற ஓராயிரம் பணி களில் இது ஒரு துளியே! என்றாலும் எடுத் துக் காட்டுவதற்கு ஒன்று மட்டும் குறிப் பிட்டுள்ளேன். அனைத்தையும் தொடுத்திட ஏடு இடம் கொள்ளாதே!

நாட்டு நலம் பேணும் நல்ல பண்பு கள் கொண்டவரும்-நடமாடும் பல்கலைக் கழகம் என்று போற்றப்படும் நாவலரின் 51ம் பிறந்த பொன்னாளில் பொன்விழா வில் பாட்டாளிகள் சார்பில் வாழ்த்துக்கள் குவிக்கிறேன்.

மூன்று கடமைகள்

ஊருக்கு ஊர் அமைந்துள்ள கிளைக் கழகத்தினரும் சார்பு மன்றத்தினரும் ஆங்காங்குள்ள பொது மக்களின் குறை களைப் போக்கியும், கோரிக்கைகளை நிறை வேற்றி வைத்தும், அவர்களுக்கு ஆதர வாக இருந்தும், உறுதுணை புரிந்தும் பொதுத் தொண்டு ஆற்றிவர வேண்டி யது தலையாய கடமையாகும்.

கழகக் கிளைகளையும் சார்பு மன்றங் களையும் ஆங்காங்கு நிறுவி, கழகக் கொடிகளை ஏற்றுவித்து கழக உறுப் பினர்கள் எண்ணிக்கையும் பெருகிக் கொள்கை விளக்கங்கள் தந்து பொது மக்களின் நம்பிக்கையும், மதிப்பும் கழ கத்தினிடத்து வளரும்படி செய்து கழ கப்பணி ஆற்ற வேண்டியது இரண்டா வது கடமையாகும்.

தமிழக அரசு சாதித்திடும் சாதனை களைப் பொதுமக்களிடத்தில் விளக்கிக் காட்டுவதோடு, அரசு ஏற்று நடத்தும் முயற்சிகள் எல்லாவற்றிற்கும் உறு துணையாக நின்று உதவி புரிய வேண் டியது மூன்றாவது கடமையாகும்.

—நாவலர்

வீறெல்லாம் காட்டுசுடர் வேலன் கருணையினுல்

பேறெல்லாம் பெற்றுப் பெருகு!

—சௌந்தரா கைலாசம்

★

காலடியில் போயிருந்து காஞ்சித் தலைவனெனும்
ஆலடியில் பெற்றனையோ அன்புருகி-நாவலனே
வாஞெழுகி மண்ணிற்கே வந்துவிடு மாறினிக்கும்
தேஞெழுகப் பேசும் திறம்!

ஆஹா எனத்தலையை ஆட்டுவிக்கும், கேட்குமனம்
பாகாய் இளகவைத்துப் பார்த்திருக்கும்-போகாத
மூடத் தனத்தை முறித்துச் சிரித்திடுமுன்
மேடைத் தமிழின் மெருகு!

மூச்சாகச் செந்தமிழை முன்நிறுத்தி வந்துறுவ(து)
ஏச்சாகு மேனும் இடர்பொறுத்து-பேச்சுப்
படையெடுத்த அண்ணுவின் பாதையிலே நீயும்
நடைவளர்ப்ப தால்வளரும் நாடு!

வெறும்பேச்சுக் காரர்வாய் வீரரென முன்பு
குறும்பாகக் கூறியவர் கூனிக்—குறுகிமனம்
நாணவைத்தாய், கட்சியைநா டாளவைத்து
நாவலனே
பூணவைத்தாய் பொன்ருப் புகழ்!

நாடிக் கலக்குமொரு நாவலனுன் பண்பகத்தை
வாடி வதங்கா மனஉரத்தை-கூடிப்
புகழாமல் நீ பிறந்த பொன்னுளை எண்ணி
மகிழாமல் போமோ மனம்?

ஏடெல்லாம் மின்ன எழுதிப் படமுடியாப்
பாடெல்லாம் பட்டுப் பழகித் தெளிந்தவனே
வீறெல்லாம் காட்டுசுடர் வேலன் கருணையினுல்
பேறெல்லாம் பெற்றுப் பெருகு!

பொன்னேடு புரட்டி மகிழ்கிறேம்

நாவலர் அவர்களின் பொன்விழா வில், வெளியிடப்படும் மலரில், அவரது வாழ்க்கையில் ஆரம்பகாலப் பொன்னேடு ஒன்றை மட்டும் திருப்பி, அவர் நீடு வாழ்ந்து, இந்நாட்டுக்கும், நாட்டோருக் கும் புதுமைகள் பல செய்து வாழ்வித்து, வாழ்ந்து மகிழ்ந்திட விழைகிறேன்

திருப்பப்படும் பொன்னேடு, அவரது அடக்கத்தினை எடுத்து, உலகுக்கு இயம்பி அவர் புகழ்பாடும்.

அப்பொழுது பேரறிஞர் அண்ணா, கழகத்தின் பொதுச் செயலாளர். நாவலர், துணைப் பொதுச் செயலாளர்; நான் அண்ணாவின் அணுக்கத் தொண்டன்— நிழல்போல் கூடவே இருப்பேன்.

'அறிவகம்' வாங்கப்பட்ட ஆரம்ப காலம்—அப்பொழுதெல்லாம் எல்லாத் தோழர்களும் அங்குதான் ஒருவரையொரு வர் சந்திப்பர்.

ஒருநாள், நாவலர் எங்கோ சுற்றுப் பயணம் சென்றுவிட்டு அங்கு வந்திருந் தார். சிறிது நேரத்திற்குப் பிறகு வெளி யில் கிளம்பினர்.

கிளம்புவதற்கு முன்னால், வேட்டி யைப் பிரித்துக் கட்டிக்கொண்டார்.

தில்லை வில்லாளன், M.A., B.L., M.P.

நான் அருகில் நின்றுபேசிக் கொண்டிருந் தேன். அவரது வேட்டியில் கிழிந்து இருந்த பாகத்தை, மேற்புறத்தில் மறைத்து வைத்துக் கட்டினர்.

'என்னங்க, கிழிந்த வேட்டியைக் கட் டிக்கொண்டு?'...என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே கூறினர், 'வில்லாளன், உங்கள் துணைப் பொதுச் செயலாளர் பொருளாதார நிலை அவ்வளவு தான்' என்று. என் நெஞ்சு உருகிப்போய் விட்டது! அவரும் போய்விட்டார்.

பிறகு அண்ணா அவர்கள் வந்தார்கள். அவருடன், யாரைப் பற்றியும், உரிமை யுடன் பேசும் சுபாவம் கொண்டவன். அவர்கள், எவரைப்பற்றியும் ஒளிவு மறை வின்றி மனதில் உள்ளதைக் கூறிவிடு வார்கள், என்னிடம். அண்ணா, இதைப் பற்றி என்ன கருதுகிறர், இவரைப்பற்றி என்ன சொன்னர் என்று கேட்டுத் தெரிந்துகொண்ட பல அன்பர்கள், இன்று வெவ்வேறு நிலைகளில் இருக்கக் கண்டு மகிழ்கின்றேன்.

அண்ணா அவர்க ளிடம், நாவலர் கூறியதை அப்படி யே கூறினேன்,

அவர்கள் 'நானு, நெடுஞ்செழியன் செய்து கொள்ள நினைக்கும் எந்த நிதி முயற்சியையும் வேண்டாமென்று சொல்பவன். அவர் செய்யமாட்டேன் என்கிருர். அச்சகம் வாங்கவேண்டும் என்று சொன்ஞரே, வாங்கச் சொல்' என்ருர்கள்.

பிறகு ராயபுரத்தில், ஒரு அச்சகத்தை விலை பேசினேம். அவரிடம் இருக்கும் தொகைக்குமேல் ரூ. 500 கூட விலை இருந்தது. நாவலர் ஒப்பவில்லை. அப்பொழுதெல்லாம், அவருடன் இருக்கும் திரு. சத்தியவாணிமுத்துவின் கணவர் முத்து சொல்லியும் கேட்கவில்லை. நான் கட்டாயப் படுத்தி ஒப்புக்கொள்ளச் செய்தேன்.

பிறகு அண்ணுவிடம் தெரிவித்தேன். அவர்களுக்கு, தண்டபாணி தேசிகரிடமிருந்து இநதத் தொகைக்கு ஒரு 'செக' வநது, அது என்னிடமிருந்தது 'அதனை மாறறிக கொடுத்துவிடு' என்று கூறினுர்கள்.

அதன்படி, தொகை கொடுத்து, அந்த அச்சகத்து சாமான்களை வாங்கினேம். ராயபுரம் சம்பந்தம் அவர்களிடம் டிரக் வண்டி இருந்தது. அதனைக் கேட்பதற்கு கூசசம—அதைக் கேட்டு வாங்கி, அசசக சாமானகளை ஏற்றி, அப்பொழுது அவர்கள் இருந்த வைததியனுத முதலி தெரு அருகில ஒரு இடததில அச்சகம் துவங்கப்பட்டது.

அச்சக சாமான்கள் எடுக்கும் நாளில எனக்கு நலல சுரம்—அந்த சுரததுடன நான் உதவிவருவதை நாவலா தடுத்து செலலச் சொன்னது இன்னமும் நினைவிலிருக்கிறது.

'மன்றம்' அதில் அச்சேறிற்று. அதற்கு முன்பு, செயபுதாசு தெரு 'கார்னா எஸ்டேட்' கட்டிடத்தில், செழியன், வாணன் ஆகியோர் அரவணைப்பில், வெளியாகியது.

இந்த நிலையை வேறொரு சந்தர்ப்பத்தில் நாவலருக்கு நினைவூட்டி எழுதியிருந்தேன்.

அண்ணன் வளர்த்த அரசியல் குடும்பத்தில், அனைவரும் சகோதரர்களாக வாழ்ந்து வருகிருேம்.

உலகத்திலேயே இல்லாத ஒரு சகோதர பாசத்தை உண்டாக்கி, அதற்கு பெரிய உருவங் கொடுத்து விட்டு அந்த அண்ணன் போய்விட்டார்.

அவர் ஏன் போய் விட்டார்? எந்த நம்பிக்கையில் மறைந்து விட்டார்? இவருக்கு தமபியர், தன வழியில் நடந்து, தனது இலட்சியத்தை நிறைவேற்றுவர் என ற தளராத நம்பிக்கை இருந்ததாலே போய் விட்டார்!

அந்த நம்பிக்கையின் திருவுருவங்களில், முதல் வரிசையில் கலைஞர், நாவலர், மதி என்று அடுக்கடுக்காக நிறபதைக் காண்கிருேம்.

நாவலருக்குப் பொன் விழா—நம் வீட்டுத் திருவிழா; அதில் அந்த அண்ணன் நாவலரின் வாழ்க்கைப் பொன்னேட்டைத் திருப்பிப் பார்த்து மகிழ்ந்து, நாவலர் வாழ்க, வாழ்க, வாழ்க என முழங்குகிருேம்

ஒரு பெரும் சாதனை

நலிந்திருந்த ஒரு நாட்டில்—சிதைந்து கிடநத ஒரு சமுதாயததில்-பெரும் வியப்பை ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணு ஆவார என்பது மாற்றுக் கட்சியினரும் மனதார ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மையாகும். ஒரு அரசியல் கட்சயைத தோற்றுவித்து, அதை அங்குலம் அங்குலமாக வளரச்செய்து—ஒரு இருபதாண்டு காலத்தில் அதை ஆட்சியல் அமர வைத்த ஒரு மாபெரும் தலைவரை—இந்தத் துணைக்கண்ட மட்டுமல்ல, அகிலஉலகமும் காணுத ஒரு சாதனையாகும்!

— நாவலர்

நாவலர் நற்றமிழின் காவலர்!

பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு

இன்று தமிழகம் பல்வேறு துறைகளில் மறுமலர்ச்சியுற்றிருக்கிறது. இருபதாண்டுகளுக்கு முன்பு இம்மறுமலர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பணிபுரிந்தவர்கள் பலர். அவர்களுள் நம் நாவலருக்குச் சிறப்பு மிக்கதோர் இடம் உண்டு. தமிழகத்தினுடைய மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில் அவருடைய பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க சிறப்புடையது. நாட்டிற்கு மறுமலர்ச்சி தேவையா?' என்று பலர் ஐயுற்ற காலத்தில்,

> ''மறுமலர்ச்சி தேவை; மறுமலர்ச்சி அடைந்த நாடுகள் உலகில் முன்னணியில் நிற்கின்றன. நாமும் முன்னேற, முட்டுக் கட்டைகளை உதறித்தள்ள, மறுமலர்ச்சி தேவை? உள்ளத்திலே தேவை மறுமலர்ச்சி; உரையிலே தேவை மறுமலர்ச்சி! உடைமையிலே மறுமலர்ச்சி தேவை! உலகிலே மறுமலர்ச்சி தேவை!'
>
> —'மக்கள் மறுமலர்ச்சி, ப.5.

என்பதை அறிவுறுத்தியவர் நமது மாண்புமிகு கல்வி அமைச்சராவர்.

அம்மறுமலர்ச்சி எப்படி அமைய வேண்டும் என்பதையும் அவரே நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

> ''மக்களிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்தவேண்டும். இசையிலும் மறுமலர்ச்சி வேண்டும், நாடகத்திலும் மறுமலர்ச்சிவேண்டும்; பேச்சு, இசை, நாடகம் ஆகிய இவைகளின்மூலம் மக்களிடையே மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும்.''
>
> —மக்கள் மறுமலர்ச்சி, பக்-13.

மக்களிடையே மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்குப் பேரறிஞர் அண்ணாவின் தலைமையின் கீழ்க் கடந்த முட்பதாண்டுகளாகச் சொல்லாலும், செயலாலும் நாவலர் தொண்டுகள் பல புரிந்துள்ளார். அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னரும் அவர் அப்பணியில் அயராது உள்ள ஊற்றத்தோடு முனைந்து நிற்கின்றார்.

நாட்டிலே, நல்ல தமிழில் பேசத் தெரியாதவர்களும், பேசத் தயங்கியவர்களும் காளான்களாகவும் முட்புதர்களாகவும் முளைத்திருந்த காலம் முதற்கொண்டு, எங்கும் எதிலும் நல்ல தமிழ் முழங்கும் இக்காலம் வரையில் நல்ல தமிழில் பேசி வருபவர் மட்டுமன்று! எழுதி வருபவர் மட்டுமன்று!

> ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
> மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'

என்று வாழ்வின் பல்வேறு துறைகளிலும் சங்கொலி முழக்கி வருபவர் நாவலர் என்பதை இந்நாளிலும் நன்கு அறிவோம்.

மாணவராக இருந்த காலம் முதல் தனித் தமிழில் பேசவும், எழுதவும் முடியும் என்பதைச் செயல்படுத்திக் காட்டி வருகின்ற ஒப்பற்ற ஒரே அரசியல் தலைவர் மாணபுமிகு கல்வி அமைச்சர் என்றால், அது மிகையாகாது. அவர் இளந்தாடி வேந்தராக விளங்கிய காலம் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகும் நாளும் நற்றமிழால் நாட்டு மக்களுக்குச் சிக்கலான பல பொருள்களையும், கருத்துக்களையும் நல்ல தமிழில் எடுத்து விளக்கி வருவது அவருடைய இரத்தத்தோடு ஊறிவிட்ட அவருடைய தாய்மொழிப் பற்றைக் காட்டுகிறது.

தமிழக மறுமலர்ச்சியின் வரலாற்றில் முக்கிய இடம் பெறுவது இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும். இதை,

> ''இந்தி நுழைப்பு மொழிப் போராட்டமல்ல; கலைப் போராட்டம்; தமிழனின் வாழ்க்கைப் போராட்டம்; தமிழ்ப் பண்பாட்டின் உயிர்ப் போராட்டம்''. (மொழிப் போராட்டம், பக்-90)

என்று நாவலர் அன்று குறிப்பிட்டார். இன்றும் மறுக்கமுடியாத உண்மையாக இருந்து வருவது இங்கு கருதத்தக்கதாகும்.

தமிழ்ப் பயிரில் இந்தி எருமையை மேய்ப்பதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் முன்வந்தபொழுது, இந்தி தேசிய மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ, இணைப்பு மொழியாகவோ இருப்பதற்குத் தகுதியற்றது என்பதைப் பல்வேறு சான்றுகள் காட்டி நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளுமாறு "மொழிப் போராட்டம்" என்ற ஏடாக நாவலர் தீட்டித் தந்தார்.

தேசிய மொழியாக இந்தி வலியுறுத்தப்பட்டபொழுது, வடஇந்தியாவிலிருக்கும் அறிஞர்களிடத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பாமற போகவில்லை. மொழிப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வந்த சர் டேஜ் பகதூர் சாப்ரு கூறுகிறார்:—

"இந்த மொழியை, 'தேசிய மொழியென' வலிந்து அழைத்து நாம் ஏன் அல்லற்படவேண்டும் எனத் தெரியவில்லை. வடஇந்தியாவில் கடந்த இரு நூறு ஆண்டுகளாக அது (இந்தி) வகித்துவந்த இடத்தை அமைத்துக் கொள்ளுமானால் அது போதுமானது. தெலுங்கு, தமிழ், குஜராத்தி, வங்காளி முதலிய மொழிகளும் இந்தியைப் போலத் தேசிய மொழிகளே. இந்த மாகாணங்களில் தெலுங்கு, தமிழ் குஜராத்தி வங்காளி முதலிய மொழிகளில் என் குழந்தைகளைப் படிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினால், நான் பலமாக எதிர்க்க மாட்டேனா?"

இந்தக் குரல் தென்னாட்டிலிருந்து எழுந்ததல்ல!

(மொழிப் போராட்டம், பக்-23-24) என்னும் பகுதி இந்தி வெறியர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

" 'இந்தி' என்பது எது?" என்பதை நாவலர் விளக்கும் திறம் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

"இந்தி அல்லது இந்த்வி என்ற சொல் ஒரு தனிப்பட்ட மொழியின் பெயரல்ல என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். முகம்மதிய படையெடுப்புக்கள் வடஇந்தியாவிற்குள் புகுந்ததும், வெளிநாட்டு மொழிகள் வடஇந்தியாவில் நுழைந்தன. வெளிநாட்டு மொழிகளினின்றும் வடஇந்திய மொழிகளைப் பிரித்துக் காட்டுவதற்காக வடஇந்திய மொழிகளனைத்திற்கும் தரப்பட்ட பெயர் இந்தி அல்லது இந்த்வி என்பதாகும்."

(மொ. போ. பக். 34)

இந்தி பொதுமொழியாகத் தகுதி இல்லை என்பதைப் பல்வேறு காரணங்கள் காட்டி நிறுவிய நாவலர்.

"இன்றைய நிலையில் தமிழக மக்களுக்கு—திராவிடருக்குத் தேவைப்படும் மொழிகள் இரண்டுதாம்; ஒன்று அடிப்படை அறிவு பெற; அது தமிழ். மற்றொன்று உலகியல் அறிவு பெற அது ஆங்கிலம்." (மொ. போ. பக்-95)

என்று அழுத்தந்திருத்தமாக அறிவித்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணாவின் தலைமையின்கீழ், தமிழகத்தின் சட்டமன்றத்தில் "இரு மொழித் கொள்கைத்" தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டது. இருபதாண்டுகளுக்கு முன்பு தமிழைப் பேணிக் காக்க நாவலர் தீட்டிய தம் திட்டத்தைத் தாம் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் செயற்படுத்திக் காட்டிவிட்டார்.

புதிய கலைச் சொற்கள் பலவற்றைப் படைத்துத் தந்த பெருமை நாவலர்க்குரியதாகும். தேர்தலில் போட்டியிடுபவரை அபேட்சகர், காண்டிடேட் என்று மற்றவர்கள் எல்லாரும் எழுதியும் பேசியும் வந்த காலத்தில், 'வேட்பாளர்' என்ற சொல்லைப் படைத்து நாட்டிலே, பயில விட்டவர் நாவலர். யூனியன் (Union) என்பதை 'ஒன்றியம்' என்றும், 'சமஷ்டி' (Federal) என்றும் கூறிவந்ததைக் 'கூட்டாட்சி' என்றும் தமிழிலே படைத்துத் தந்தவர் நம்முடைய கல்வி அமைச்சர் என்பதை நாடறியும். மன்றத்தின் பழைய ஏடுகளைப் புரட்டுவோமானால், இவற்றைப் போன்ற கலைச் சொற்கள் பலவற்றை அவர் படைத்துள்ளதை நாம் காணலாம்.

மறுமலர்ச்சியுற்றிருக்கும் நற்றமிழின் காவலராக இன்றுபோல் என்றும் அவர் சிறப்புற்று வாழ்க! வாழ்க!!







இலக்கிய இதயப் பண்பாளர்

அகிலன்

நேரில் பார்த்து, பேசி, பழகிய பின்பு தான் பலரைப் பற்றி நம்மால் நன்கு தெரிந்து கொள்ள முடியும். சிலரைப் பற்றித்தெரிந்து கொள்ள இந்த நேர்முகப் பழக்கம் தேவையில்லை. எழுதும் பழக்க முள்ள எழுத்தாளராக இருந்து விட்டால், எழுத்தைக் கொண்டே நாம் பெரும் அளவுக்குத் தெரிந்து கொள்ளலாம்.

முதன் முதலாக இவவாறுதான் நான் 'மன்றம்' இதழ்களின் வாயிலாக நாவலர் அவர்களைக் கண்டு கொள்ள முடிந்தது. நாவில் வல்லவரான அவர் 'நாவலர்' என்று அழைக்கப்பெற்றாலும், அவர் எனக்குப் பேனாவில் வல்லவராகவே முதலில் தோன்றினார்.

இன்றைய இலக்கியத் துறையில் நான் உழைத்து வந்தாலும், நம் நாட்டு மரபு வழி இலக்கியங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருந்தது. அதனால் பல்வேறு ஆசிரியர்கள் எழுதிய உரைகளையும் துணையாகக் கொண்டு மரபுவழி இலக்கியச் செல்வங்களைத் துய்க்கத் தொடங்கினேன்.

பதினைந்து பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு கலித்தொகையின் அகத்துறைக் காட்சிகளைப்பற்றித் தொடராக மன்றத்தில் நாவலர் அவர்கள் எழுதி வந்தார்கள். அந்தக் கட்டுரைகளின் அழகும் இலக்கிய நயமும் உணர்ச்சி வெளிப்பாடும் என்னை அப்போதே ஆட்கொண்டுவிட்டன. வழக்கமாக அப்போதோ வெளிவந்து கொண்டிருந்த சில பொழிப்புரை பதவுரைக் கட்டுரைகளுக்கும் நாவலரின் விளக்கத்துக்கும் வேறுபாடு தெரிந்தது. 'மலரில் தேனிருக்கிறது' என்று பதவுரை - பொழிப்புரையாளர்கள் சிலர் கூறிக்கொண்டிருந்த காலத்தில், மலரைத்துய்க்கும் ஒருவர்தேன் வண்டாகவேமாறி மலரின் தேனை மாந்தி, அந்த மயக்கத்தில் ரீங்காரம் செய்து, நம்மையும் அந்தத் தேன் வண்டாகவே மாற்றினார் என்றால், அவர் ஆற்றலை என்னவென்று சொல்வது?

ஆழ்ந்த புலமையோடு நன்கு இலக்கியத்தைச் சுவைக்கத் தெரிந்த ஒருவரை - தாம் அந்தச்சுவையால் பெற்ற இன்பத்தை மற்றவரிடமும் சுவையோடு பகிர்ந்து கொள்ளத்தெரிந்த ஒருவரை - அப்போது நான் எழுத்தில் கண்டு பூரிப்படைந்தேன்.

'சங்ககால இலக்கியம்' என்றால் அதை எளிதில் புரிந்து கொள்ள முடியாததால் ஒதுங்கியவர்கள் கூட கனிச்சுவை மிகுந்த சிறுகதைகளாக நாவலர் அவர்களின் கட்டுரைகளைப் படித்து இன்புற முடிந்தது. அந்தக்காலத்து மனித உறவுகளையும் உணர்ச்சிகளையும் வாழ்க்கை முறைகளையும் நம்முடைய பழம் பெரும் புலவர்கள் எவ்வளவு அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார்கள் என்பதைக்

கவிதை நயம் தோய்ந்த எளிய நடையில் எழுதி வந்தார் நாவலர்.

சிறுகதைப் படைப்புக்களுக்கான சில அடிப்படைகள் நம்மிடையே சங்ககாலத்தில் இருந்திருக்கின்றன என்பதை நான் அறிந்து கொள்ளத் தூண்டுதலாக இருந்தவை இவர் எழுதி வந்த 'கலித்தொகைக் காட்சிகள்' என்ற கட்டுரைத்தொடராகும். பின்னர் நூலாக வந்தபின்பும் 15 ஆண்டுகளுக்கு முன்பே அதை என்னுடைய நூலகத்துக்காக வாங்கி வைத்தேன்.

அதை அடுத்துத்தான் நாவலர் அவர்களின் நாவன்மையையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமேற்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழாவில் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த வாய்ப்புக் கிடைத்தது. சொல்லுக்கும் பொருளுக்கும் சுவைதரும் சிந்தனைக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப குரலை ஏற்றியும் இறக்கியும் குழைத்தும் நெளித்தும் இழைத்தும் எப்படி இவரால் பேசமுடிகிறது! இசையரங்குகளில் இந்தக்கலையழகு நாம் எதிர்பார்க்கும் ஒன்று ஆனால் அங்குகூடச் சில இடங்களில் நம்மை இசைக் கலைஞர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். ஆனால் இவரோ வெறும் சொற்பொழி வாற்ற வந்தவர் சொற்பொழிவிலும் இலக்கிய நயத்தோடு கலைநயத்தையும் காட்ட முடியும் என எவ்வளவு அலட்சியமாக அறைகூவல் விடுகிறார் இவர்!

எதிலும் எளிதில் அவ்வளவாக மயங்கிவிடாதவன் நான். ஆனால் அவருடைய இலக்கியப்பேச்சில் அன்று நானே மெய் மறந்து மயங்கிப்போனேன் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இலக்கிய இதயம்

மனிதனுக்குத் தெரியாமலே மனிதனை மனிதனாக உயர்த்தி வருவது இலக்கியம். அந்தக் காலத்துக் காப்பியங்களிலிருந்து இந்தக் காலத்து நாவல்கள் வரை அந்தக் காலத்து சங்கச் செய்யுட்களிலிருந்து இந்தக் காலத்துச் சிறுகதைகள் வரை அதைத்தான் செய்து வருகின்றன. (குறிக்கோளில்லாமல் எழுதப்பெறும் மூன்றாந்தரக் குப்பைகளை நான் சொல்லவில்லை.) மூச்சுக்காற்று, கதிரொளி, தண்ணீர், உணவு இவையெல்லாம் எவ்வாறு மனிதனின் உடல் வளத்தைப் பேணுகின்றனவோ அவ்வாறே இலக்கியம் மனிதனின் மனவளத்தைப் பேணுகிறது. மனிதனுக்குள்ளே இயற்கையாக உள்ள மிருகத் தன்மையைக் கட்டுப்படுத்தி, அவனைப் பண்புள்ளவனாக வளர்க்கமுயல்கிறது இலக்கியம்.

இலக்கியப் பசியும், இலக்கியச் சுவை உணரும் திறனும், அதைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் ஆவலும் உள்ளவர்கள் மனிதப் பண்பாட்டைப் போற்றி வளர்ப்பவர்கள் ஆவார்கள். தம்முடைய பொறி புலன்களைப் பாதுகாத்து அழகாகப் பயன்படுத்தும் இரகசியத்தை இலக்கியம் தன்னை விரும்புவோருக்கு வழங்கி வருகிறது. அந்த முறையில் பார்க்கும்போது மனிதப் பண்பாட்டின் வளர்ச்சியில் தீராத பசி கொண்டிருப்பதால் தான் நாவலர் அவர்களுக்கு இலக்கிய இதயம் வளர்ந்திருக்கிறது என நான் நம்புகிறேன்.

பின்னர் நேரில் பழகும் வாய்ப்புக்களும் பல ஏற்பட்டிருக்கின்றன. என்னுடைய கணிப்பு, நான் பழகாதபோது ஏற்பட்ட மதிப்பீடு முற்றிலும் சரியாகவே இருந்திருக்கிறது. இன்சொல், அன்பு, பண்பாட்டோடு பழகும் முறை இவற்றிலெல்லாம் தம்முடைய இலக்கிய இதயத்தை இவர்கள் வெளிபிட்டியிருக்கிறார்கள். கல்வி - பண்பாட்டுத்துறைக்கு ஏற்ற அமைச்சர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனி, இக்காலப் புலவர்களில் ஒருவன் என்றமுறையில் இலக்கிய இதயம்படைத்த

புலவரான நாவலர் அவர்கள் கவனத்துக்குச் சில செய்திகளைக் கூற விரும்புகிறேன்.

அரசியலும் இலக்கியமும்

அந்தக் காலத்திலேயே மூவேந்தர்கள் புலவர்களை இலக்கிய வளர்ச்சிக்காக ஆதரித்திரிக்கிறார்கள் என்றால் வெறும் கருணையினால் மட்டும் ஆதரித்திருக்கிறார்கள் என நான் நம்பவில்லை. கடமை என்றும் அவர்கள் கருதியிருக்கவேண்டும். குடிமக்களை வெறும் காவலர்களை மட்டும் வைத்து ஆளமுடியாது என்பதால்தான் மனிதப் பண்பின் காவலர்களான புலவர்களை வளர்த்து மனிதப் பண்பாட்டையும் மக்களிடையே இலக்கியங்களால் பரவச் செய்திருக்கிறார்கள். அரசியலுக்கு வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டும் அடிப்படையாகாது. செல்வச் செழிப்பின் உச்சக்கட்டத்தில உயர்ந்த போதுதான ரோமசாம்ராஜ்யம் சரிந்தது. அடிப்படை ஒழுக்கம், கட்டுப்பாடு, மனித உறவு, மரியாதை அஞ்ச வேண்டியதற்கஞ்சுதல் முதலிய பண்புகள் குடிமக்களுக்குத் தேவையானவை. அவற்றை வழங்கும் ஆற்றல் உள்ள இக்காலப் புலவர்களான எழுத்தாளர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். அவர்களிடம் அரசு கருணை காட்டவேண்டும் என்பதில்லை. அவர்களுக்குத் தனிச்சலுகை காட்ட வேண்டுவதில்லை. அவர்கள் வளர்ச்சிக்கு அதன்மூலம் இந்த நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு தடையாக நிற்கும் சில தீமைகளை முடிந்த வரையில் அகற்றினால் போதும். எழுத்தாளர்களாலான அரசிடம் எழுத்தாளர் கோரும் நியாயமான அடிப்படை உரிமை இது. அவர்களுக்கு அரசு செய்யவேண்டிய கடமை இது.

எழுத்தாளர்கள் தங்கள் கலைப் படைப்புக்களை மக்களிடம் பரப்ப முடியாத ஒருநிலை இந்தப் பத்தைந்து ஆண்டுகளில் வளர்ந்துள்ளது. ஒன்று, அவர்கள் பத்திரிகைகளின் வாயிலாக மக்களை அணுகவேண்டும். அல்லது புத்தகங்கள் வாயிலாக மக்களைப் பண்படுத்த வேண்டும். பண்பாட்டுத் துறையைவிடப் பணத் துறையே பெரிதென மதிக்கும் சில பத்திரிகைகள், பண்பாட்டுக்கு விரோதமான கலப்பட எழுத்துக்களால் மக்களை மயக்க முன்வந்து விட்டன. புத்தகத்துறையிலும் ஒரு சில பண்பட்ட பதிப்பாளர்களைத்தவிர, மற்றவர்கள் எப்படியாவது 'பணம் பண்ணுவது' என்று துணிந்து விட்டார்கள். பதிப்பகத்துறையில் கலப்படமும் வியாபாரத்துறை வித்தைகளும் தரமான இலக்கிய வளர்ச்சிக்கும் எழுத்தாளர் வளர்ச்சிக்கும் நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் அறைகூவல் விடுகின்றன.

கல்வி அமைச்சர் - இலக்கிய பண்பாட்டுத்துறைக் கலாச்சார அமைச்சர் என்ற வகையில் நாவலர் அவர்களை இதில உடனடியாகக் கவனம் செலுத்தக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு சில எழுத்தாளர்களின் வாழ்க்கைப் பிரச்சனை அல்ல இது. சொல்லால் நிலைத்து வளரும் தன்மையுடையது குடியாட்சி. சொல்ல ஆள்பவர்கள் ஒரு சில வியாபாரிகளுடைய பணப் போட்டிக்கு இரையாகி விடாமல் பார்த்துக் கொள்வது குடியாட்சிக்கு அடிப்படைப் பாதுகாப்பாகும். பண்பாட்டைப் பற்றிக் கவலைப்படாத பதிப்பாளர்களுக்கு ஆதை விட்டால் வேறு பல இலாபகரமான தொழில்கள் இருக்கின்றன. ஆனால் எழுத்தாளர்களுக்கு இலக்கியமே உயிர்மூச்சு!

பொன் விழாக் காணும் கல்வி அமைச்சர் அவர்கள் நல்ல உடல் உறுதியோடும் உள உறுதியோடும் நூறாண்டு வாழ்ந்து நாட்டு நற்பணிகள் பல தொடர்ந்து செய்ய என உளம் நிறைந்த வாழ்த்துக்கள். நான் இறை அருளில் நம்பிக்கை உள்ளவன். இறைவனின் திருவருளும் அவர்களுக்குத் துணை நிற்க வேண்டுகிறேன்.

பொன்னூர்ந்த பழந்தமிழ் மரபின் புதுத் தமிழ் குரிசில்

இளங்குருளைதானே என்று வளைத் தடக்கவந்த யானை புலி கரடிகளின் கூட்டம்போல, இளம் பாண்டியர் குலத் தோன்றலான ஒரு நெடுஞ்செழியனை அன்றொருநாள் தமிழக வேந்தரும் வேளிர்களுமாக ஒன்பதின்மர் வந்து வளைத்த போது, செந்தமிழ்மீது ஆணையிட்டுச் சீறியெழுந்து சிங்கம்போல் அக் கூட்டத்தை யெலலாம் சிதறடித்து வாகைசூடினான் அந் நெடுஞ்செழியன் என்று கேள்விப் படுகிறோம்.

தலையாலங் கானத்துப் போர்வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று இரண்டாயிர ஆண்டுகளுக்குமுன் தமிழ்ப் புகழ் நாட்டியவன் அவன்.

இளமாணவன்தானே என்று இருபத்தைந்து முப்பது ஆண்டுகட்குமுன் ஓர் இளைஞனைப் பேராசிரியர்களும் பெருந்தலைகளும் சேர்ந்து நெருக்கிட முனைந்தனர். அன்று அவன் வயதேபோல், அவன் சுற்றமாகிய திராவிட இயக்கமும் அவன் இனமாகிய தமிழினமும் சிறுமைப்பட்டுத்தான் கிடந்தன. ஏளனம் செய்தவர்களை எதிர்த்து அந்த மாணவன் எழுப்பிய வெற்றி முரசும், அவனையும் இன்று ஒரு தலையாலங் கானத்து நெடுஞ்செழியன் ஆக்கியுள்ளது- சிறுமை தவிர்த்து அவன் சுற்றத்தையும் கொடி கட்டியாளச் செய்துள்ளது—அவன் இனத்தையும் சிங்க இனமாக உலகில் கிளர்ந்தெழச் செய்துள்ளது!

ஆம்! அந்த வெற்றி இளஞ்சிங்கக் குருளையே இன்று நம் மேடைகளதிர தமிழ் எதிரிகள் தெறித்தோட, அமைச்சவையின் நவமணிகளில் ஒரு குலமணியாய் ஒளிவிட்டுவரும் மாணபுமிகு நல்லமைச்சர், சொல்லின் செல்வர், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்!

நீதிக்கட்சியின் புகழ் மாண்பின் மறுபிறவி அவர். ஆசிரியர் மறைமலையடிகளின் வீறுதமிழ் மரபின் வெற்றிக்கொடி அவர் அறிஞர் அண்ணாவின் ஆசைத்தம்பியர் திலகம். அவர் அருந்தமிழியின் உயர அகல ஆழங்களை நீட்டி அளவிட்டறிதற்குரிய நெட்டளவைக் கோலாக அவர் விளங்குகிறார். தமிழக முதல்வர், திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதியின் நாட்டாட்சியிலும் வீட்டாட்சியிலும் ஒருங்கே பங்குகொண்டு அமைச்சராகவும் கழகப் பொதுச்செயலாளராகவும் இருதலைப் பணியாற்றி வருபவர். அவர்.

நடமாடும் பல்கலைக் கழகம்!
கட்டவிழ்த்துலவும் புத்தகசாலை!
கருத்துக் கருவூலம்!

பேராசிரியப் பதவி துணைவேந்தர் பதவி ஆகியவற்றின் உடை மாற்றிக் கொண்டு மக்களிடையே அப்பதவிகளை ஏற்கவந்த பேராசிரியத் திருவுறு, துணை வேந்தர் திருவுரு!

அண்ணாவின் தம்பியர் படையின் முன்னணிக்கொடி, படையின் காவலன், நாவலன், தமிழ் காக்கவந்த முடிசூடாத் தமிழ் மன்னன்!

தமிழர் தெய்வமாகிய அறிஞர் அண்ணாவின் திருவாயால் இவ்வாறு அருச்சிக்கப்பட்ட அருந்தமிழ்க் குரிசில், அண்ணாவின் நெடிய தம்பியாகிய நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்.

புத்தகத்தில் முழங்கும் பாரதிதாசன் கவிதைகளை அவரது உரைநடைத் திரு

வுருவாக நின்று மேடையதிர முழங்க வைத்த நாவலர் நெடுஞ்செழியனைத் தமிழர் என்றும் மறக்கவும் முடியாது—அறிஞர் அண்ணா தமிழரின் மலைமகள் கேள்வனாகிய தனிப்பெருந் சிவபிரானென்றால் கலைஞர் தமிழரின் இந்திரை கேள்வனாகிய தனியொரு கலைவேல் முருகன் என்றால், நாவலர் நாயகத்தை நாம் தமிழரின் திருமகன் கேள்வனாகிய நெடிய திருமால் என்று நிமிர்ந்துநின்று கூறலாகும்.

தந்தை பெரியார் ஈ. வே. ராவினால் காணாறாகப் பாயவிடப்பட்ட பகுத்தறிவியக்கத்தை அழகிய தமிழ்க் காவிரியாக ஓடவிட்டவர் அறிஞர் அண்ணா. அதனை கலைக்கா வளங்கள் விரிக்கும் அகண்ட காவிரியாக்கி வருபவர் மாண்புமிகு முதலர் கலைஞர் கருணாநிதி, அதனைத் தனித்தமிழ் அறிவோடையாக, கனித்தமிழாம் உயிரோடைகளாகத் தமிழர் வாழ்வில் உலவ விடும் தமிழ் வேளாண்குரிசிலாக் அமைபவர் சொல்லின் கோமானாகிய நாவலர் நெடுஞ்செழியனே யாவர்.

பன்மொழிப்புலவர்

கா. அப்பாத்துரை.

தமிழன்னையின்பொன்னான செல்வனுக்குப் பொன் விழா! தமிழர் பொற்காலம் தொடங்கி விட்டது. பொன்னாட்சிக்காலம் இனிக் கொடி கட்டியாளப் புறப்பட்டு விட்டது என்பதற்கு இது ஒரு விழாக் கொடியாகும் என்னல் தகும்.

தூய உள்ளம் படைத்தவர்; தூய தமிழிலே திளைப்பவர்; அண்ணா புகழ் மரபுக் கன்றி வேறெதற்கும் வணங்கா முடி படைத்தவர்; பகுத்தறிவுப் பாறை; நேர்மையின் நிமிர்ந்த வடிவம்; மலையதிர்ந்தாலும் அதிரா மனஉறுதி படைத்தவர்; மக்கள் உரிமைக்குப் போராடுபவர், தம் கடமை ஒன்றிலேயே கட்டுண்டவர்—தமிழில் வீறுநாடகம் எழுதும் கலைஞர் எவரும் அவரைவிடச் சிறந்த பண்போவியமாக ஒரு நாடகத் தலைவனைப் படைத்து விட முடியாது!

திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு அறிஞர் அண்ணா தந்த மூவெழுத்து மந்திரம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றுமே! ஆம்! முத்திறங்களும் அறிஞர் அண்ணாவின் அறிவுப்படை எங்கும் நீக்கமற நிறைந்து பரவிய திறங்களையாலும், கழகத்தின் மும்மணி அம்மூவெழுத்து மந்திரங்களில் ஒவ்வொன்றன் சிறப்புருவாகத் திகழ்ந்து வந்துள்ளனர்.

மாண்புமிகு அண்ணா கடமையின் சீரார்ந்த திருவுரு!

மாண்புமிகும் கலைஞர் முதல்வர் கருணாநிதி கண்ணியத்தின் எழிலார்ந்த இனிய உரு.

மாண்புமிகு பொதுச் செயலாளர் அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் கட்டுப்பாட்டின் வீறுசால் பேருரு.

அறிஞர் அண்ணாவின் பேரியக்கம் தமிழர் வாழ்வின் தலைமையேற்க முன் வருவதற்கு முன்னெல்லாம் தமிழ்ப் பண்புக்கொரு தாயகமாக ஆசிரியர் மறைமலையாரும், சொல்லுக்கொரு நாயகமாகச் சொல்லின் செல்வர் ஆர். பி. சேதுப்பிள்ளையும், மேடைக்கொரு வீறுகுரலாக நாவலர் சோமசுந்தர பாரதி யாருமே ஆரொளி துளக்கினர்.

அம்மூவரின் ஒரு தனித் தோன்றலாக, ஒரு பண்பாளராக, ஒருசொல்லின் செல்வராக, ஒரு நாவலராக நம் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் விளங்குகிறார். மூவர் குடைநிழலும் ஒருங்குவந்தமைய ஒரு முக்குடை நிழற் பொற்புறு செல்வராக, மூவர் முடிக்கும் உரிய ஒரு மும்முடிக்குரிசிலாக அவர் இன்று நம்மிடையே புகழாட்சி செய்து வருகிறார்.

அவர் பொன்விழா திராவிட இயக்கத்துக்கும் ஒரு பொன்விழா; தமிழ் மறுமலர்ச்சிக்கும் ஒரு பொன்விழா; தமிழகப் புலவர் உலகின் ஆர்வங்களுக்கும் அது ஒரு பொன்விழாவாக அமையுமாக!

பொன்விழா, மணிவிழா, முத்துவிழா, மரகத மாணிக்க, நீல கோமேதக விழாக்களாக நீடுக நாவலர் நாயகத்தின் பீடுறு பெருவாழ்வு! கலைஞர் பெருமான் கையில நெடிய செங்கோலாக மன்னுக அவரது திருத்தமுறு தமிழ்ப் பெரும்பணி!

அறிஞர் அண்ணாவின் அடிச்சுவடு

பேராசிரியர்: ஔவை. சு. துரைசாமி

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியனார்க்குப் பொன்விழா என்ற செய்தியை அறிந்ததும் என் முதுமையுள்ளம் பெருவியப்பில் ஆழ்ந்தது. அவரை நினைக்கும்போதெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைவகுப்பில் "கடாவுருவும் கண்ணஞ்சா" நெஞ்சமும், தெள்ளிய செந்தமிழ் வழங்கும் செந்நாவும், சிவந்து தோன்றும் செம்மல் மேனியும் பீடு நடையும் கொண்டவுருவமே என் மனக்கண்ணில் தோன்றுவது வழக்கம். தமிழ் நாட்டரசியல் மன்றத்தில் எதிர் கட்சித் தலைவராய்ப் பணிபுரிந்த நாளிலும், அவரைக் காணும்போது தோற்றத்திலோ வழங்கும் மாற்றத்திலோ மாணவர் நிலையிலிருந்த கடமை கட்டுப்பாடு பெருந்தகைமை என்ற மூவகைப்பண்பாடும் உருக்குலையாமல இருக்கக் கண்டு இறும்பூது எய்தினேன். இன்றும் இளமைக் கோலத்தோடு என் கண் முன் காட்சி தரும் இளஞ்செம்மலுக்கு ஐம்பது ஆண்டு நிரம்புகிறது என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

இன்றைய நமது தமிழ்நாட்டரசுப் பேரவையில் இருந்து மாண்புமிகு தலைமைப் பணியும் அமைச்சுப் பணியும் மேற்கொண்டு,

"மருள்நெறிசேர் சுயநலமாம் மாயவிருள்
இரிந்தோட மதிக்க வொண்ணாக்
கருணையெனும் அளிக்கதிர்கள்
தமைவீசிப் புகழ்பரப்பும்"

இன்ப இளஞாயிறுகளான புலவர் கோவிந்தனார், நாவலர் நெடுஞ்செழியனார், மதியழகனார், மாதவனார் ஆகிய இவர்களை இதனை எழுதுங்கால் என் மனக்கண் தன்முன் கொணர்ந்து நிறுத்துகிறது. இவர்களுடைய கூர்த்த நோக்கமும் சீர்த்த முகமும் அன்று பார்த்த இளமை வளமே கொண்டு என் முன் தோன்றி இன்பம் செய்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியவர்கள் அன்று கோவை மாநாட்டில் "மணிப்பயல்" என்று மனமகிழ்ந்து பாராட்டிய என் "சிறுசெந்நா" இப்போதும் அதனையே கூறி மகிழச் செய்கிறது. அன்று என் உடன் இருந்து என் கருத்திற் பங்குகொண்டு உவகை மீதூர்ந்து "நீங்கள் பல மாணவரை அறியும் ஆசிரியர்" என்றார்க்கு, "இந்த மணிப்பயலால் நம் தமிழகம் சிறந்து ஒளிபெறும்; இவனைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்க்க வேண்டும்" என்று தமிழ்த்தாய் எனக்குள் உணர்த்த யான் அறிஞர் அண்ணாவின் துடையை நன்கு தட்டி வற்புறுத்தினேன். மணிப்பயலின் தமிழ் நாட்டரசு மாட்சியை (நெஞ்சு கலங்கிக் கண்ணீர் கண்களை மறைக்கினும் துடைத்துக் கொண்டு சொல்லுகிறேன்) அறிஞர் அண்ணா இன்று இருந்து காண்டல் வேண்டும்; அவரது கருத்துரையைக் கேட்கும் தவப்பேறு யான இல்லாதவனாயினேன். ஏனெனில தமிழக முதலமைச்சரான பின் நான்

கண்டபோது "உங்கள் 'மணிப்பயல்' அமைச்சரில் ஒருவன்; உங்களுக்குத் திருப்திதானே" என்று விடை தந்தார்.

இங்ஙனம் உள்ளத்தில் ஊற்றெழுந்து வரும் நினைவுகள் பல; ஒரு சில கூறுவது இக்கட்டுரை.

நெடுஞ்செழியன் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை மாணவராய்ப் பயின்றபோது, தமிழாராய்ச்சித் துறையிற் பணிபுரிந்த என்னைச் சிவப்பிரகாசம் என்ற மெய்கண்ட சாத்திரத்தை முதுகலை வகுப்பிற் குரைக்குமாறு தமிழ்த் துறைத் தலைவர் தாகூர் சட்டக்கலைப் பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் பணித்தார்கள். அந்நிலையில் ஒருநாள் மன்னார்குடி அரங்கசாமி முதலியார் அறக்கட்டளையில் நடைபெறும் புலவரவைக்கு என்னை அழைக்க வேண்டி என் வீட்டிற்கு நெடுஞ்செழியன் வந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது. மிடுக்கான தோற்றமும் கள்ளமில்லாத உள்ளப் பொலிவும், தெளிந்த நாநலமும் உடையவராய் பொன்போன்ற மேனியராய், "அறக்கட்டளையின் மாண்புகளை முன் மொழிந்து பின்னை அதன்சார்பில் அழைத்தது அவர் ஒரு சிறந்த நாவலராவர் என்பதை வற்புறுத்திற்று. பலகலைக் கழகத்தின் நீங்கிய சில்லாண்டுகளில் அவர் இயற்பெயர் முன்னர் நாவலர் என்ற சிறப்புப் பெயர் சேர்ந்து கொண்டது; இன்று "நாவலர்" என மொழியின் தமிழ் நாடு முழுவதும் அச்சொல் இரா. நெடுஞ்செழியனைக் குறிப்பது தொடக்கப் பள்ளிச் சிறுவர் சிறுமியரிடத்தும் நன்கு தெரிந்திருக்கிறது.

பின்பு, அவர் புது மணவாளராய்த் தமது துணைவி திருமதி [விசாலாட்சியம்மையாருடன் "சோழவந்தான் புகை வண்டி நிலையத்தில் நான் இருந்த பெட்டியில் வந்து அமர்ந்தார். அவரவர் நலங்களை அளவளாவி மகிழ்ந்திருக்கையில் எதிரில் இருந்தவர் பேச்சுக் கொடுத்தார். அவர் வேலூர் மாவட்டக் கூட்டுறவுத் தலைமை யலுவலகத்தவர் என்று அறிமுகம் செய்து கொண்டு சமயச் சார்பாகச் சில கருத்துக்களை வினவத்தலைப்பட்டார். நெடுஞ்செழியனார் அவர்க்கு விடை கூறித் தாம் வேறு வினவத் தொடங்கியதும் அக்கூட்டுறவுத் தலைமையலுவலர்க்கு விடையிறுக்கும் திறம் குறையலுற்றது. அதனால் அவர் "அண்ணமலைப் பல்கலைக் கழகம் நாத்திகம்தானே வளர்க்கிறது; வேறு என்ன செய்கிறது?" என வெகுண்டார். அப்போது நன்கு சிரித்த நெடுஞ்செழியனார், மிக்க பரிவுடன் உங்கட்கு நாத்திகம் ஆத்திகம் என்ற இரண்டும் நன்கு விளங்க வேண்டும்; என்று சொன்னதும் அவர் அயர்ந்து விட்டார். முடிவில் அவர் நாவலர் சொல்வதை அமைவுறக் கேட்பவராகி, "இன்றைய சமயம் மக்களின் அறியாமை மேல் நிற்கிறது; அறிவாராய்ச்சி தோன்றிப் பரவும் வரை உங்கள் ஆத்திகம் நிற்கும்; பின்னர்ப் பறந்துபோம்" என்றது அவரது நாநலத்தை நான் கண்டு மனம் மகிழ்ந்து வியக்கச் செய்தது.

சில ஆண்டுகட்குப்பின் நமது நாவலர் சென்னைச் சட்டமன்றத்து எதிர்கட்சித் தலைவராய் ஏற்றம் பெற்றார். அவருடைய வினாக்களும் விளக்கங்களும் மக்கள் மனதில் அவரிடத்தே நன் மதிப்புத் தோற்றுவித்தன. ஆளுங்கட்சி யுறுப்பினர்களின் பொருளாசையும் பதவிமயக்கமும், நினைப்பவர் நினைவில் தோன்றி நிற்கும் வகையில் எதிர்கட்சித் தலைவராய்த் பெருந்தகவும் கடமையுணர்வும் இனிது விளங்கத் தக்கவகையில் நெடுஞ்செழியனார் பல சமயங்களில் அரசவையில் உரை நிகழ்த்தினர். அறிஞர் உரையாடல்களில் அவருடைய உரைகள் ஆழ்ந்து சிந்திக்கப்படுவதுண்டு. அன்றைய ஆளுங்கட்சியின் கல்வியமைச்சர், "தமிழ்நாடு" பெயர் பற்றி எழுந்த வாதத்துக்கும் மொழிபற்றி நாட்டில் தோன்

றிய கிளர்ச்சி பொருளாகவும் தெளிவில்லாத கருத்துக்களை வழங்குமாறு எதிர்கட்சித் தலைவர் மடக்கியது கண்ட தமிழறிஞர் 'எதிர் கட்சித் தலைவர் ஆளுங்கட்சி படுபள்ளத்திற் புதையுமாறு குழிதோன்டிவிட்டார்'' என வியந்து உரையாடினர். நேர்முகமாகச் சொல்லம்பு தொடுத்தலும், சுடுசொல் வழங்கலும் இன்றி, மெல்லிய இனிய அமைதி சான்ற சொற்களால் நாவலர் நிகழ்த்திய உரைகள் ஆளுங்கட்சியை அலைத்த திறம் அறிவுடையோர் கூட்டத்தில் அவர்பால் பெருமதிப்பு உண்டு பண்ணியதை நாட்டவர் நன்கு அறிவர்.

சிலகாலங்களில் கட்சித் தொண்டர்களின் புல்லிய வேண்டுதல்கள் அவரது கட்சியின் தகைமைக்கு இழுக்குத் தருவன போல் தோன்றும்; உடனே அவற்றைக் கண்ணறக் கடிந்துரைத்துக் கட்சியின் பெருந் தன்மையை நிலைநாட்டியதைத் தொண்டர் போந்து தனிமுறையில் உரைப்பர்; தம்முள் பேசுவர்; அவற்றைக் கேட்குந்தோறும் அறிஞர் குழுவில் தக்கார் தலைமையின் நாவலரது தகவுடையின் சிறப்பு இனிது வெளிப்படும்.

நாவலரது கட்சி அடுத்து வந்த தேர்தலில் ஆளுங்கட்சி யாயிற்று; அறிஞர் அண்ணாவின் அருமந்த அமைச்சரவையில் நாவலர் நல்ல கல்வியமைச்சரானர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில அவர் உரை நிகழ்த்திய போது அரசியல் எந்திரத்தை ஒரு குதிரைவண்டியாகவும் அமைச்சரவையை அதனை ஓட்டுவோனாகவும் உருவகம் செய்தது இன்றைய அரசியலமைப்பை மக்கள் நன்கு உணர்ந்து மகிழச் செய்ததுடன் அவருடைய நா நலம் கிளர்ந்து நின்று இன்பம் செய்தது.

இவர் தம்மை நெடுஞ்செழியன் என்று பெயர் புனைந்து கொண்டதுபற்றி மதுரைத் தியாகராசர் கல்லூரி முதுகலை வகுப்பு மாணவர் என்னெடு கலந்து உரையாடினர். அப்போது, சொற்பொழிவு ஒன்றில் தம்மை எனக்கு மாணவர் என அவர் குறித்தது இளையர் உள்ளத்தில் வியப்பை உண்டுபண்ணிற்று. அவர் பல்கலைக் கழக மாணவராயிருந்தபோது, "பதிவுப்புத்தகங்கள் நாராயணசாமி என்றனவாயினும் நெடுஞ்செழியன் என்ற புனை பெயரே இயற்பெயர்போல யாவரும் அறிய விளங்கிற்று'' என்றேன். பொருந்துமா என்பது பற்றிச் சொல்லாடல் பிறந்தது.

தொடக்கத்தில் நாவலர், பாண்டி நாட்டவர், அவர் உறவினர் சோழவந்தானில் உளர் என்பது தெளிவானது அவ் விளைஞர்க்கு மகிழ்ச்சி மலர்ந்தது.

பின்னர் சங்க காலப் பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் தமிழ் பயிலும் மாணவர் பலர்க்கும் தெரிந்தவன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன் எனப் பலர் உளரெனினும் தலையாலங்கானத்து வென்ற நெடுஞ்செழியனே வீறுகொண்டவன். வெற்றிப் புகழேயன்றி உயர்நிலைப் புலவர் பெருமக்களின் பால் நலம் துய்த்துப் பரவும் பண்பு மேம்பட்டவன்; புலவராற் பாடப்படுவது நாட்டுக்கும் நாட்டின் நல்லரசுக்கும் ஆக்கமும் அரணுமாம் என்று கருதுபவன்.

இளங்கோவடிகள் புகழும் நெடுஞ்செழியன் கோன்முறை தவறிய மானம் பொருது உயிர் கொடுத்த உரவோன்.

இவ்வேந்தரது கடமையுணர்வும் பெருந்தகை மானமும் நாவலர் நெடுஞ்செழியன்பாலும் நன்கு நிலை பெறுகின்றன. நெடுஞ்செழியன் என்ற பழங்கால நெடுந்தகைகளின் இனிய பெயரை நாவலர் தமக்குப் பெயராகக் கொண்டது சாலவும் பொருந்துவதே எனத் தெளிந்தனர்.

இங்ஙனம் நல்லமைச்சால், நல்லியல்பால், நண்ணுநம் வேட்ப விளங்கிய அறிஞர் அண்ணாவின் அடிச்சுவடு பற்றி அறம் நின்று நிலவ விளங்கிவரும் நாவலர் நெடுஞ்செழியன் பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வு நிரம்பி இப்பொன் விழாப்போல மணிவிழாக்களும் நூற்றுண்டு விழாக்களும் பொலிந்து வாழ்க எனத் தமிழ்க் கடவுளின் தாமரையடிகளைப் பரவி வாழ்த்துகிறேன்.

தேன்தந்த நாவலர்!

ஆர். சி. தமிழன்பன்

1951-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் —தேனியிலே, நாவலர் அவர்கள் சொற்பொழிவாற்றுகின்றார். அவரை நோக்கி வாதம் புரிய சரமாரியாக வருகின்றன கற்கள். வாதம் புரியவா......? ஆம்......... உயிர்ச்சேதம் விளைவிக்கவே. சொல்லுக்குச் சொல் வீசத் தெரியாத வீணர்கள், கற்களையும்—கத்தி, கம்புகளையும் நம்பி நாவலருடன் எதிர்வாதம் புரிய அனுப்பினர்.

அஞ்சினாரில்லை நாவலர்—அயர்ந்து தளர்ந்தாரில்லை. நெஞ்சு நிமிர்த்தி உறுதியோடு பேச முயன்றார், வீணர்கள் விட்டெறிந்த ‘பாறாங்கல், ஒன்று நாவலரை நோக்கி அவர் தம் உயிரைக் குடிக்கப் பாய்ந்து வருகின்றது. நாவலர் அவர்கள் தம் உள்ளத்திண்மையையே கேடயமாக உருவகப் படுத்திக் கொண்டு அஞ்சா நெஞ்சினராக – ஆற்றல் மறவராக நிமிர்ந்து நிற்கின்றார்.

அக்கணமே அருகிலிருந்த தேனித் தோழர் ஒருவர் கேடயமாக மாறி நாவலர் அவர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கினார்.

அதைத் தொடர்ந்து சரமாரியாகக் கற்கள் நாவலரின் உயிரை எப்படியும் பறித்து விட வேண்டுமென திட்டமிட்டவர்கள், தங்கள் கொட்டத்தை முடுக்கிவிட்டார்கள்—அட்டகாசத்தை அவிழ்த்து விட்டார்கள்—வெறித்தனம் தேனித்தெருவெங்கும் விளையாடியது. அந்த தியாகப் பரம்பரை (?)களின் திருவிளையாடலுக்குக் காரணம், பாதுகாப்பாக விளங்கும் காவலர்கள், தங்களுக்குச் சாதகமாக இருப்பார்கள் என்று மனப்பால் குடித்ததே ஆனால் நிகழ்ந்ததோ முற்றிலும் மாறுபட்ட நிலை-காவலர்கள் முறைப்படி நெறிப்படி செயல் புரிந்தார்கள்,— நியாயம் நிலைத்து வென்றது- நேர்மை தழைத்து நின்றது!

நெஞ்சுரத்தோடு நேர்மை காத்து நின்ற நாவலர் மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்களால் தேனி மட்டுமல்ல— தேனியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் கழகத் கோட்டைகளாக விளங்கின. அதற்குமுன் அப்பகுதிகள் வானம் பார்த்த பூமியாக — வளமை சுரக்காத களர் நிலமாக—பயிர் விளைச்சலுக்குப் பயனே தராத பாறைப்படிவங்களாக விளங்கின. இத்தகைய இடத்தில் கழகப் பயிர் எங்ஙனம் முளை விட்டு இலை விட்டு கிளை விடடுத் தழைக்க முடியும்?

தேனி நிகழ்ச்சிக்குப் பின்-அந்தத் திருநகரில் நாவலரின் தியாக சீலத்திற்குப் பின் மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளின் மூலை முடுக்கெங்கணும்-பட்டி தொட்டிகளெங்கணும் திராவிட முன்னேற்றக் கழகம் தழைக்கத் தொடங்கியது-வளர்ந்தோங்கியது.

தேனி நிகழ்ச்சிக்குப் பின் மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து சொற்பொழிவாற்ற அடிக்கடி ஆர்வத்துடன் வருகை தந்தார் நாவலர் அவர்கள். கலைவர வழக்கு நிதிக்காக கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடாயின. மதுரை மாவட்டச் செயலாளர் திரு. முத்து அண்ணன் அவர்கள், மறைந்த திரு. W. P. A. சௌந்திர பாண்டியனார் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் சிறப்புமிக்க கவனத்தைச் செலுத்தக்கூடிய அரிய வாய்ப்பை வழங்கியது—தேனியிலே நாவலர் அவர்களின் தியாக வரலாற்றால் மதுரை மாவட்டம் புதிய எழுச்சியையும் ஏற்றத்தையும் பெற்றது. தேனி நிகழ்சி

தான், "கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்" என்ற அரிய நூலை வழங்க உறு துணையாக விளங்கியது.

நாவலர் அவர்களின் இடை விடாத வருகையால் —கழகக் கருத்துக்களெனும் உரம் பாய்ந்ததால வானம பார்த்த பூமி, தானம் வழங்கக் கூடிய அளவுக்கு விளைவு தரும் பூமியாகத் திருத்தம் பெற்றது. களர் நிலம் வளம் கொழிக்கும நிலமாக மாற்றம் பெற்றது. பாறைப் படிவங்கள் இளகி பயிர் விளைவுக்கேற்ற வண்டல் படிந்த வயல்களாக வடிவம் பெற்றது.

அருமை நாவலர் அவர்களின் செந் தமிழ்ச சொற்பொழிவிலே நகைச்சுவை யும வீரச்சுவையும் இழைந்து கலை கட் டும விதமே ஒரு தனிச சிறப்பு மிக்கது, நாவண்மை மட்டுமல்ல ந நயமும் படைதத நற்பண்பாளர்தான நாவலர் அவர்கள். அன்றைய ஆட்சியாளரின் கேடுபாடு களைப் புள்ளி வவரங்களுடன எடுத்துக் கூறி —படித்தவர்கள மட்டுமல்ல பாமர மககளும தெளிவாகப புரிநது கொள்ளும் படி சொறபொழிவாறறும் தறன் படைத தவர் —ஆம் கேட்டாரைப பிணிதது கேளாதாரை விருமபிக கேட்கச் செய்யும் சொல்லாற்றல படைத்தவர்.

நாடு போற்றும் நாவலர்!

நற்றமிழ்க் காவலர்!

வீறு கொண்ட சொல்லாளர்!

விறல் மிக்க செயலாளர்.

இத்தகைய சொல்லாளர் மீது தான் கல்லாளர் தாக்கின--இத்தகைய செயலா ளர் மீது தான் புயலாளா பாய்ந்தனர். விளைவு? கல்லாளர் கலகலத்து வீழ்ந்தனர் புயலாளர் பிசுபிசுத்துப் போயினர்.

ஏலக்காய் பறிக்கும்போது நம் இரத் தத்தை உறிஞ்சத்தான் செய்கின்றன அட்டைகள். என்றாலும் இறுதியாக ஏலக் காயின் நறுமணமும் சிறப்பும் நாவிற்குச் சுவை கூட்டி மகிழ்ச்சியைக் தருகிறது— தாழம்பூவைப் பறிக்கும் போது அதன் கூரிய முட்கள் நம் கரங்களைப் 'பதம்' பார்க்கத்தான் செய்கின்றன. என்றாலும் தாழம்பூவின் நறுமணம் எல்லாவற்றையும் மறக்கச செய்து மகிழ்ச்சியைத் தருகிறது— தேன் கூட்டிலிருந்து தேனை எடுக்கும் போது தேனீக்கள் சூழ்ந்து கொண்டு கொட்டத்தான் செய்கின்றன. என்றாலும் அவ்வலியை மறந்து செந்தேனின் சுவை யிலே சிந்தை மகிழ்ந்தவர்களாய்த் திளைக் கிறோம்.

அன்றைய ஆட்சிக் கட்சிக் காரர்கள் நடத்திய குறும்புக் கொலுதான் தேனி நிகழ்ச்சி. தேனி நிகழ்ச்சி மூலம் நமக்குத் தேன் வழங்கிய நாவலர் அவர்களை, நாம் மட்டுமல்ல-நாடே போற்றுகிறது- இன்று அரியணையில ஏற்றி அவர்தம் தியாகப் பண்புக்கு-தொண்டு நெறிக்கு வாழ்த்துக் கூறி பூரிப்படைகிறது.

வாழ்க நாவலர்! வளர்க கலைஞர் அரசு

வெல்க அண்ணா நெறி

கழகப் பிரசாரம்

தம்பி! அரசு சார்பான பொது நிகழ்ச்சி ஏதும் நடைபெறக் கூடாது என்று கூறவில்லை. அரசு சாரபான நமது சாதனைகளை எடுததுக் காட்டும் நிகழ்ச்சிகள ஏராளமாக எங்கு பார்த் தாலும் நடந்துகொணடு இருககத்தான் வேண்டும். அதே நேரததில் கழக நிகழ்ச்சிகள் முன்பு போன்று பரவலாக எண்ணிக்கையில் அதிகமாக நடைபெற வேண்டும். அரசு சார்பான நிகழ்ச்சி களில் அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டிய இன்றியமையாத நிலை இருப் பதால், கழக நிகழ்ச்சிகளை மற்றக கழக முன்னணியினர், நாடாளுமன்ற—சட்ட மன்ற—பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களைக்கொண்டு நடத்த முற் பட வேண்டும்.

—நாவலர்.

தானைமன்னரும் தன்னேரி நின்றார்

டாக்டர் மெ. சுந்தரம்

இருள் கிழித்து வெளிக் கிளம்பும் முளையிள ஞாயிற்றைப் போல், இருண்டு கிடந்த தமிழர் வாழ்வில் ஒளி பாய்ச்ச எழுந்தவர் பேரறிஞர் அண்ணா. ஒவ்வொரு அண்ணாவுக்கும் ஓரிரு தம்பியரே இருப்பர். பேரறிஞர் அண்ணாவுக்கோ ஆயிரமாயிரம் தம்பியர்கள். தானையைப்போல் திரண்டு நிற்கும் தம்பியர் கூட்டத்தில் முன்னணியில் நிற்பவர் நாவலர் நெடுஞ்செழியன் ஆவர். நாடு செய்த நல்ல தவத்தால் நமக்கு நெடுஞ்செழியன் கிடைத்துள்ளார். நாவலரின் பெருமை விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

இளமைப் பருவத்திலே:

தண்ணீர்க் காவிரி தவழும் தஞ்சை மாவட்டம் நிலவளமும், கலைவளமும் படைத்தது. அறிஞர்களின் விளை நிலமாயும், கருத்து வெள்ளத்தின் தலையூற்றாகவும் இருக்கும் பேறு அதற்கு உண்டு. அந்த விஞ்சு புகழ் தஞ்சைத் தரணியில் - வடக்காளத்தூரில் பிறந்தவர் நாவலர். அஞ்சாநெஞ்சன் அழகிரி சாமி வாழ்ந்த பட்டுக்கோட்டையில் நாவலரின் பள்ளிப் பருவம் கழிந்தது. பட்டுக்கோட்டையில் பயின்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வளர்ந்து, ஈரோட்டுப் பாசறையில் உருவாகிய நாவலர் காஞ்சித் தலைவனின் பேரணியில், முன் நின்று தொண்டு செய்து, நாடு போற்றும் பெருநிலை எய்தினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் செய்த அரிய செயல்கள் பல. செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனாரின் அன்பிற்குரிய தலைமாணாக்கராகத் திகழ்ந்த அவர், பகுத்தறிவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு அயராது தொண்டு புரிந்தார். அவரது மாணவப் பருவத்தில் அவருக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்புக்களையெல்லாம் – எதையும் தாங்கும் இதயத்தோடு – சமாளித்து வெற்றி கண்டார். முதன் முதலில் தனித் தமிழ் இயக்கத்தின் தந்தையாம் மறைமலையடிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வரவழைத்துப் பேச வைத்த பெருமை அவர்க்குண்டு. நாவலரின் இளமை வாழ்வு தமிழ் வாழ்வாக – பகுத்தறிவு வாழ்வாகவே இருந்தது.

பதினாறாவது நாவலர்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'நாவலர்' என்ற பெருமை பெற்ற சான்றோர்கள் மிகச் சிலரே. அம்பலவாண நாவலர், அரபத்த நாவலர், அருளப்ப நாவலர், ஆதியப்ப நாவலர், ஆறுமுக நாவலர், கரடிபரவி இராமானுச நாவலர், புதுவை இராமானுச நாவலர், சைவ எல்லப்ப நாவலர், சதாசிவ நாவலர், சபாபதி நாவலர், சிவயோக நாவலர், குன்றத்தூர் சொக்கப்ப நாவலர், பொள்ளாச்சி சொக்கப்ப நாவலர் எனப் பதின்மூன்று நாவலர்கள், சென்ற நூற்றாண்டு வரை இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். நம் காலத்தில் நாம் அறிந்த நாவலர்கள் மூவர். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும், நாவலர் நெடுஞ்செழியனுமே ஆவர். எனவே, கணக்கிட்டு நோக்கினால் தமிழுலகம் கண்ட 'நாவலர்கள்' வரிசையில் நெடுஞ்செழியன் பதினாறாவது இடத்தைப் பெறுகிறார். பதினாறு என்ற எண்ணுக்கு ஒரு பெருமை உண்டு. 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று வாழ்த்துவது தமிழ் மரபு. நெடுஞ்செழியனே பதினாறாவது இடத்தைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கிறார்.

நாநலன் என்னும் நலனுடைமை நாவல ருக்குக் கருவிலே வாய்த்த திருவாக அமைந்துள் ளது. கேட்பார் பிணிக்கும் தகையதாய், கேளா ரும் வேட்ப மொழியும் அவரது பேச்சாற்றல் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. சிசரோ, எட் மண்ட்பர்க், லார்டுகிளாட்ஸ்டன், லாய்டு ஜார்ஜ் போன்ற உலகத்துப் பெரும் பேச்சாளர் வரிசை யில் தலையாய இடம் பெறும் பெருமை அவருக்கு உண்டு. வி.கே. கிருஷ்ணமேனன் ஐ.நா. அவை யில் ஐந்து மணி நேரம் தொடர்ந்து உரையாற் றியதாகச் சொல்வார்கள். நம் நாவலரோ தமி ழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் எத்த னையோ மணி நேரம் தொடர்ந்து உரையாற்றி, ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களை, விடியும் வரை தன் எதிரே நிறுத்தி வைத்துக் கொண்டிருந்ததை நாம் அறிவோம்; நாடும் அறியும்.

மேரு மலையே இடம் பெயர்ந்து வந்து எதிரே நிற்கிறதோ என்று நினைக்கும்படியான கம்பீரத் தோற்றத்தோடு மேடையிலே ஏறி, ஒன்பான் சுவைகளும் உடன் கலந்து வர, ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய அழுத்தம் கொடுத்து, முக மெய்ப்பாடுகள் புறத்தே புலனாக அவர் முழக்கம் செய்யும் காட்சி கண்டு மகிழத்தக்க ஒன்றாகும்.

இணையற்ற எழுத்தாளர் :

பொன் மலர் மணமும் பெற்றாற்போல, பேச் சாளராகிய நம் நாவலர் மிகச் சிறந்த எழுத்தாள ராகவும் திகழ்கிறார். நாவலரின் 'எழுதும் திறமை' யை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பலமுறை பாராட்டியதுண்டு. 1948-ம் ஆண்டு நம் நாவ லர் 'மன்றம்' என்ற ஒரு தாளிகையைத் தொடங் கியபோது அதற்குப் பாவேந்தர் ஒரு வாழ்த்து வழங்கினார். அதுதான் இது:

" மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில் நெடுஞ்
செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப்
போற்றுதும்!
எழுதும் புலமை முழுதுளார் ஆதலின்
அன்னார் கருத்தை அமுதாக் கொள்ளுதும்!
பன்மொழிப் புலமை படைத்தா ராதலின்
மன்றம் நன்று வாழ்க
என்றும் நெடுஞ்செழியனார் இனிது
வாழியவே!

மேற்கண்ட பாட்டில் நாவலரின் 'எழுதும் புல மை'யைப் பாவேந்தர் பாராட்டியிருப்பதைக் காண்க.

நாவலர் இனிய தமிழில்—எளிய தமிழில்— எழுத வல்லவர். இயன்றவரை தூய தமிழில் எழுத வேண்டும் என்ற நோக்குடையவர். அவ ரது சொற்களில் கருத்துக்கள் சூல் கொண்டு விளங்குவதைக் காணலாம். வெற்றுரவாரச் சொற்பிணைப்புகளோ, உள்ளீடு இல்லாத வார்த் தைக் கோவைகளோ அவரது எழுத்தில் காண் டல் அரிது.

சங்க காலத்துச் செஞ்சொற் பனுவல்கள், எல்லோர்க்கும் பயன்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் 'மன்றம்' இதழில் அவர் தொடர்ந்து எழுதிய இலக்கியக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. சங்கப் பாடல் களுக்கு அவர் எழுதிய அரிய விளக்கங்கள் அவர் தம் நுண்மாண் நுழை புலனையும், அஃகியகன்ற அறிவினையும் காட்ட வல்லன. பாடல்களின் சிறப்பால் அவரது விளக்கங்கள் அழகு பெற்ற னவா, அல்லது இவரது விளக்கத்தினால்தான் பாடல்கள் அழகு பெறுகின்றனவா என்ற ஒரு மயக்கத்தை ஊட்டக் கூடியனவாய் அவை அமைந்துள்ளன. கலித்தொகையில் காதற் காட்சிகள்' என்ற நூல் தமிழ் இலக்கிய மாணாக் கர்க்கு சுவையூட்டும் ஒரு சிந்தனைப் பெட்டக மாய்த் திகழ்கிறது.

இரண்டாவது நெடுஞ்செழியர் :

சங்க காலத்தில் நெடுஞ்செழியன் என்றொரு மன்னன் இருந்ததாக அறிகிறோம்; சங்க காலத்து நெடுஞ்செழியன் மாங்குடி மருதனார் போன்ற பெருமக்களால் பாராட்டப் பட்டவர். இற்றை நாளில் தமிழகத்துப் புலவர்களால் ஏற் றிப் போற்றப்படும் இந்த நெடுஞ்செழியரோ நாமறிந்த இரண்டாவது நெடுஞ்செழியர். மது ரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவராய் பாண் டிய நெடுஞ்செழியர் இருந்தாற்போல, எதிர் காலத்தில் தோன்றப் போகும் ஆயிரமாயிரம் தமிழ்க் காவியங்கட்கு நம் நெடுஞ்செழியர் பாட் டுடைத் தலைவர் ஆவார் என்பது உறுதி.

மதிநுட்பம் நூலோடுடையார் :

நம் நாவலர் கூரிய சிந்தனைத் திறம் உடை யவர். பல சொல்லால் பாரித்துரைக்காமல் சில சொல்லால் சிறக்கக் கூறும் சிந்தனை வன்மை கொண்டவர். ஒரு சொல்லின் திட்ப நுட்பத்தை அதன் அடிவேரோடு கொண்டு வந்து காட்டும் ஆற்றல் இவருக்கு இயல்பாக உண்டு. முதலாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு மலேசியா சென்ற நாவலர் ஆங்கு வானொலியில் உரை நிகழ்த்த

நேர்ந்தது. அது போழ்து நாகரிகம், பண்பாடு முதலியனபற்றி விளக்கும் போது நாகரிகத்தைப் புறவளர்ச்சி என்றும், பண்பாட்டினை அகவளர்ச்சி என்றும் எடுத்துக் கூறி, சிறப்பாகப் பேசி முடித்தார்.

'மன்றம்' இதழில் இவர் எழுதி வரும் வினா-விடைப் பகுதி இவர்தம் மதிநுட்பத்திற்குச் சான்று பகர வல்லது. தருக்கத் திறன்கொண்ட அவரது வாதங்கள் வெல்லும் சொல் பொதுளும் வீறு கொண்டன.

நயத்தக்க நாகரிகம்:

எழுத்திலும், பேச்சிலும் பண்பாட்டைக் கடைப் பிடிப்பவர் நம் நாவலர், அரசியலில் நயத்தக்க நாகரிகத்தைப் புகுத்திய பெருமை அண்ணாவுக்கு இருந்தது போலவே நாவலருக்கும் உண்டு. மாற்றுக் கட்சியினருடைய மனம் நோகாமல், கருத்துக்களையே மூலதனமாக வைத்து விவாதிக்கும் போக்கை இவரிடம் காணலாம். வசை பாடுவதும், வார்த்தைகளைச் சாக்கடையில் தோய்த்தெடுத்து வாரி இறைப்பதும் இவரிடத்தில் ஒரு போதும் இருந்ததில்லை. பருவ மொட்டுக்கள் மெல்ல மெல்ல வாய் விரிந்து நறுமணம் வீசுவதுபோல—அத்துணை நளினமும்; இனிமையும் நாவலர் பேச்சில் அமைந்திருக்கும். பூக்கள் உதிர்ந்து கொட்டுவது போன்ற மென்மையை அவரது ஒவ்வொரு சொற்களிலும் காணலாம்.

சொந்த வாழ்விலும் சரி – அரசியல் வாழ்விலும் சரி—நாவலருக்கு எதிரிகள் யாருமே இல்லாமல் இருப்பதற்கு இந்த நயத்தக்க நாகரிகப் பாங்குதான் காரணம்.

குணமென்னும் குன்றேறி நின்றார்:

நாவலர் நின்ற சொல்லர்; நீடு தோன்றினியர், தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும் நீங்காத தன்மை கொண்ட நல்லார். பழகுதற்கு நல்லவர்; நச்சினார்க்கு இனியவர். கருத்து வேறுபாடு கொண்டு தாக்க வரும் முரடர்களையும் கூடத் தன் அமைதியாலும், அன்பாலும் அடிபணிய வைக்கின்ற காந்தக் கவர்ச்சி உடையவர். நாட்டுக்கும் மொழிக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதைத் தவிர வேறு எந்த ஆக்கத்தையும் அரசியலில் எதிர்பார்க்காதவர். ஆசைகட்கு அடிமையாகாமல், கொள்கைக்கே தலைவணங்கும் இவரது பண்பு பாடல்பெறும் சிறப்புடையது. **குணம் என்னும் குன்றேறி நிற்கும் நாவலர் தணலில்** இட்ட தங்கம் போல் அப்பழுக்கில்லா நெஞ்சினர்.

பாவேந்தர் பெருமையைப் பாடியவர்:

நாவலர் பேசுகிறார் என்றால் அப் பேச்சில் பாரதிதாசன் பாடல்கள் இடம் பெறாமல் இருக்காது. ''எங்கள் வளமும் எங்கள் வாழ்வும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு'' என்ற பாடலை அவர் பேச்சின் முடிவில் இடியென முழங்கும் போது ஆயிரக் கணக்கான மக்கள் மெய் சிலிர்த்து நிற்கும் காட்சியைக் காணலாம். யாருக்கும் தெரியாமல் எங்கேயோ பூத்துக் கிடக்கும் காட்டுப் பூவைப்போல் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் அவரை மக்கள் மன்றத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை நாவலருக்கு உண்டு. 'பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மாக்கவிஞர்; உலக மகா கவிஞர்களின் வரிசையில் இடம் பெறக் கூடியவர்' என்ற உண்மையைத் தமிழ் நாட்டு மக்கள் புரிந்துக்கொள்ளக் காரணமாக இருந்ததே நாவலரின் பேச்சுத்தான்.

அரசுக் கட்டிலில் நெடுஞ்செழியர்:

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய நம் நாவலர் அரசுக் கட்டிலில் ஏறிய நாளிலிருந்து ஆற்றிய தொண்டுகள் பலப்பல. குறிப்பாகப் பயிற்று மொழிப் பிரச்சினையில் அவர் உறுதியாக நிற்பது மிகவும் பாராட்டுதற்குரியது. 'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' என்ற கொள்கையில் இன்று வரை அவர் பின்வாங்க வில்லை. நாவலரால் கல்வித் துறை நலம்பல அடையும் என்பது உறுதி. கலைஞரின் தோளோடு தோள் இணைந்து இந்த நாட்டைக் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர் அரசுக் கட்டிலில் இடம் பெற்றிருக்கும் இந்தக் காலத்தை தமிழக வரலாற்றில் ஒரு புதிய ஊழியின் தொடக்கம் என்றே கூறவேண்டும்.

பல்லாண்டு வாழ்க!

நாடு போற்றும் நாவலராய்—நடமாடும் பல்கலைக் கழகமாய்த் திகழும் நம் நெடுஞ்செழியன் பொன் விழா அவையை எட்டியுள்ள இந்த நேரத்தில் ''பல்லாண்டு பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பல்கோடி நூறாயிரம்'' என்று வாழ்த்துகிறேன். நாவலர் வாழ்க! அவர்தம் புகழ் வாழ்க! என்று கூறி அமைகிறேன்.

கழகக் கண்மணி

எம். எஸ். வெங்கடாசலம்
M.A., B.L.,

நாராயணசாமி 'நெடுஞ்செழிய'னாகி, 'நாவலர், என்ற பட்டப்பெயர் பெற்று, 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களாலே அழைத்திடப்பெற்று, நாட்டுக்கு ஆற்றியிருக்கிற பணிகள் பலப் பல!

தந்தை பெரியார் அவர்களாலே 'கெடுக்கப்பட்ட' ஒரு சில பட்டதாரிகளில் நாவலரும் ஒருவர்— முன்னணியில் நிற்பவர்.

பல்கலைக் கழகம் தந்திட்ட M. A. பட்டம் கரத்தில்— கல்லூரி விரிவுரையாளராக வாழ்க்கையைத் துவக்கியிருந்தால், பேராசிரியாக ஆகி, துணைவேந்தர் நிலைக்குக் கூட உயர்ந்திடும் வாய்ப்பு இருந்திட்டது அவரிடம் —என்றாலும் வேலை தேடிப் போகாமல், வீழ்ந்திட்ட தமிழ்ச் சமுதாயத்தைக் கைதூக்கிவிடுகின்ற பணியில் ஈடுபட்டிருந்த தந்தை பெரியார் அவர்களுடைய தலைமையின் கீழ், பொதுப்பணியில் தன்னலமற்று ஈடுபடுத்திக் கொண்ட பெருந்தகை நமது நாவலர் அவர்கள்.

'வெண்தாடி வேந்தரின்' தலைமையின் கீழ், இந்த 'இளந்தாடி வேந்தர்! ஆற்றிட்ட புயல் நிகர் பிரசாரங்கள், எழுப்பிட்ட வீர முழக்கங்கள். எவரும் மறந்திட இயலாது!

சுயமரியாதைப் பிரசாரமானாலும் தமிழை அழிக்க வந்த இந்திக்கு எதிரே போர்க்கொடி உயர்த்துகின்ற கூட்டமானாலும், குலக்கல்வித் திட்டத்தினை எதிர்க்கின்ற மேடையானாலும் நாவலர். தனக்கே அமைந்திட்ட பாணியில் 'ஏற்ற இறக்கத்தோடு' நகைச் சுவையினைக் கூட்டி, அங்க அசைவுகள் அத்தனையிலும் பொருள் பொதித்து, அவர் முழங்கி வந்த முழக்கங்கள் இன்னும் மனக்கண் முன்னாலே நிற்கின்றன கூட்டங்கள் முடிந்து செல்லுகின்ற வழி நெடுகிலும் மக்கள் திரள் "நாவலர் நாவலர் தான்" என்று மனதாரப் புகழ்ந்து சென்றிட்ட வாசகங்களும் நினைவுக்கு வருகின்றன! அத்தனையும் எண்ணுகின்ற நேரத்தில் கழகக் கண்மணி "நமது நாவலர்" என்று பாசத்தோடும், பற்றுதலோடும் பார்க்கின்றோம், அவரை!

இதோ, மற்றொரு காட்சி! 1956—திருச்சியிலே நடைபெற்ற கழகமாநில மாநாடு—பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவலர் அவர்களை அண்ணா அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிட அழைக்கின்றார் அவருக்கே உரித்தான பாணியில், "தம்பீ, வா, தலைமை ஏற்று நடத்திட வா!!" என்று!

பேரறிஞர் அண்ணா அவர்களே, நாவலரின் தலைமையினை ஏற்றிடக் காத்திருந்தார்—அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சில ,தம்பி' மார்களில் அவர் ஒருவர், முக்கியமானவர், என்பதால்!

அடுத்தொரு சூழ்நிலை — அனைவரும் அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்த நிலை!— இதோடு சரி இந்த 'நெடுஞ்செழியன்!—இனி கழகத்திலேயிருந்திட மாட்டார் என்று நமது எதிரிகள் ஆரூடம் கணித்துக் கொண்டிருந்த நேரம்'

அப்போதும் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த மூல மந்திரமாம் "கடமை, கண்ணியம்' கட்டுப்பாடு" இவற்றினை நழுவ விடாமல், பாதை வழுவாமல், தன்னைக் காப்பாற்றிக் கொண்டதோடு தானும் சேர்ந்து வளர்த்திட்ட கழகத்தினையும் காப்பாற்றினர், அந்த இக்கட்டான கட்டத்திலே யிருந்து!

அது மட்டுமல்ல! அரசியலிலே ஏற்படுகின்ற மன வேறுபாடுகள் மன மாச்சரியங்களாக மாறிடவோ, அரசியல் 'சடுகுடு'' ஆட்டங்களுக்கு இடம் தந்திடவோ கூடாதென்று உயர்ந்தோர் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்துவிட்டார். அந்த சூழலில்!

எனவே அரசியல் உலகமே அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறது. வாழ்க நாவலர்! வாழிய அவர்தம் பணி! வாழிய அவர் தம் புகழ்!!

★ ★

ஒப்பனை மிகுந்த மாடிப் பந்தல்கள்

கழகக் கூட்டங்களை மிக ஆடம்பரமான முறையில், அதிகமான செலவோடு நடத்தவேண்டும் என்ற ஆவல் உனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இருபது முப்பது ரூபாய் செலவில் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தோம். கூடும் மக்கள் கூட்டத்தின் அளவு பெருகிய காரணத்தினால் இருநூறு, முந்நூறு ரூபாய் செலவில் கூட்டம் நடத்த வேண்டிய கட்டத்திற்கு வந்தோம். இது தான் தேவையான நியாயமான அளவில் நடைபெற வேண்டிய செலவாகும். இப்பொழுது நீ ஆடம்பரமான முறையில் கூட்டம் நடத்தவேண்டும் என்று எண்ணிக்கொண்டு வண்ணச் சுவரொட்டிகள்—விதவிதமான விளக்குகள்—சாலை நெடுகக் குழாய் விளக்குகள்—ஒப்பனை மிகுந்த மாடிப் பந்தல்கள்-அழகு வளைவுகள் ஆகியவற்றிற்கு இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் செலவழிக்கத் திட்டம் போடுகிறாய். இப்படிப் பட்ட கூட்டங்களை ஆண்டு ஒன்றில் ஒரு சிலவற்றைத்தான் ஒருசில இடங்களில் மட்டுந்தான் கூட்டமுடியும். இதனால் பரவலாகவும், ஏராளமாகவும், கூட்டம் போடும் முயற்சி தடைபடுகிறது. தம்பி! ஆடம்பரமிலலாமல் ஆனால் அழகாக, ஆரவாரமில்லாமல் ஆனல் அமைதியாக, ஆத்திரப்படாமல் ஆனல் அடக்கமாக அறிஞர் அண்ணா அவர்களைப்போல் செயல்பட முற்பட்டால், பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் என்றென்றும் கிடைத்துக் கொண்டே இருக்கும். -நாவலர்.

நாவலர் வாழ்க

நெ. து. சுந்தரவடிவேலு

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், தமிழ் மக்களின் நெஞ்சை அள்ளிக் கொண்டவர். இவரை, நடமாடும் பல்கலைக்கழகம் என்று மக்கள் போற்றுகின்றனர்.

மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதியைப் போன்று இவரும் மாணவப் பருவத்திலேயே தன்மான இயக்கத்தால் கவரப்பட்டவர். இளமை தொட்டு, தமிழ்ப் பற்றும் தமிழர் பால் மற்றும் சீர்திருத்தக் கருத்துக்களும் கொண்டவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்ற காலம் முதல்–கால் நூற்றாண்டாக – தமிழ்த் தொண்டும் தமிழர் நலப்பணியும் ஆற்றி வருபவர் நாவலர். தன் சொல்வன்மையாலும் எழுத்தாற்றலாலும் தமிழர்களைத் தட்டியெழுப்பியவர். மூடக் கொள்கைகளை ஒரு உலுக்கு உலுக்கியவர். எங்கோ இருந்து கொண்டு, வந்தவர்களோடு மட்டும் உரையாடித் திருத்தியவர் அல்லர். தமிழ் நாட்டின் நாலு பக்கங்களிலும் பம்பரம்போல் சுழன்று, சொற்பொழி வாற்றி, மறுமலர்ச்சி கண்டவர்.

சைவசமயத்தின் நால்வரை நாடறியும். அதேபோல், தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்தின் நால்வரை நாடறியும். அறிஞர், கலைஞர், நாவலர், 'மதி' ஆகிய நால்வரும் தமிழ் மறு மலர்ச்சிக்குப் பெரிதும் உரிமையாளர்கள்.

இருபத்தைந்தாண்டு பொதுத் தொண்டின் கனியாக விளங்குகிறார் நாவலர். நாவன்மை உடைய அவர் நாகாப்பதிலும் சிறந்து விளங்குகிறார். வன்மை, அடக்கம், கனிவு ஆகியவற்றை ஒருங்கே பெற்றுள்ள கல்வி அமைச்சர் பல்லாண்டு வாழ வாழ்த்தும் கோடி கோடி உள்ளங்களோடு யானும் சேருகிறேன். பூரிப்போடு சேருகிறேன். வாழ்க நாவலர் !





தமிழ்மொழி வளம்பெற முடியுமா?

கலைமகள் :- பாணன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்கள் எல்லோருமே சிறந்த பேச்சாளர்கள்; பேச்சுத் திறமையால் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள் என்பதற்குக் கழகத்தின் படிப்படியான வளர்ச்சியும்—இன்றைத் தமிழக அரசுமே சான்றுகளாகும். குரலை உயர்த்தாமலேயே கருத்தினை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறி மக்கள் மனதிலே பதிய வைக்கும் நாவன்மை படைத்த மாண்புமிகு கல்வி–தொழிலமைச்சர் திரு. நெடுஞ்செழியனுக்கு 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டம் சாலப் பொருந்தும். அடுக்கு மொழியினல் தமிழுக்கு வள மூட்டிய தலைவருக்கு, அடுக்கு மொழி என்ற அடிப்படையிலும் 'நாவலர்' என்ற விருது சிறப்பூட்டுகிறதல்லவா?

முன்னாள் தமிழகத் தொழிலமைச்சர்—திரு. ஆர். வெங்கட்ராமனுக்கும்—திரு. இரா. நெடுஞ்செழியனுக்கும் பதவி அடிப்படையிலே தான் எவ்வளவு பொருத்தம்! இருவரும் பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியில் (அப்போது ஜில்லா போர்டு ஹைஸ்கூல்) படித்தவர்கள். இருவரும் அண்ணாமலைக் கழக மாணவர்கள். தமிழகத்தின் தொழில் அமைச்சராகும் வாய்ப்பும் இருவருக்குமே கிட்டியது. திரு. ஆர். வி. பயின் தவிக் காலத்தில் தமிழ்நாடு தொழில் துறையில் வியக்கத்தகு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறித்து இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்தி வெற்றி காணும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் திரு. நெடுஞ்செழியன். திரு. ஆர். வெங்கட்ராமன் திட்டக் கமிஷனில் பொறுப்பேற்றுள்ளதன் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் தமிழகத் தொழில்துறை முன்னேற்றத்துக்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது என்றே நம்பலாம்.

நாவலரின் பள்ளிப் பருவத்துப் பசுமையான நினைவுகளைக் குறித்து நான் வினவியதும் அவர் உற்சாகத்துடன் கூறினர். ''அப்போது என் பள்ளி ஆசிரியராக இருந்தவர் திரு. ஆராவமுது ஐயங்கார். என் அண்ணு திரு. சௌரிராஜனும் அதே பள்ளியில் தான் படித்தார். அப்போது நான் 'திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகம்' நிறுவித் தமிழ்ப் பணி செய்து வந்தேன். 1938-ல் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றேன். வாலிபால் கால்பந்து (அல்லது உதைப்பந்து) என்றல் எனக்கு உயிர். இப்போது கூட அந்த இரண்டு விளையாட்டுக்களையும் ரசிக்கிறேன். பார்க்க அழகான விளையாட்டு, ஒரு மணி நேரத்துக்குள் ஆட்டம் முடிந்து விடுகிறது. நல்ல உடற்பயிற்சி அளிக்கின்றன இரண்டுமே.''

''உங்களுக்கு நீந்தத் தெரியுமா?''

அமைச்சர் சிரித்தவாறு, ''**தஞ்சை மாவட்டக்காரருக்கு நீந்தத் தெரியாமலிருக்குமா?** நன்றாக நீந்துவேன். நன்னிலம் தாலூக திருக்கண்ணபுரத்தில் தான் நான் பிறந்தேன். (11-7-1920)'' என்றார். விளையாட வேண்டும் என்று ஆசை இருந்தாலும் நேரம் கிடைப்பதில்லையே?'' என்று குறைப்பட்டுக் கொள்கிறார்.

''கோலாலம்பூரில் 1966-இல் நடைபெற்ற முதல் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டீர்கள் அல்லவா? சென்னையில் நிகழ்ந்த இரண்டாவது உலகத் தமிழ் விழாவினல் என்ன நலம் விளைந்துள்ளது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?''

''பல தமிழ் அறிஞர்கள் சென்னையில் ஒன்று கூடித் தமிழ் மொழி பற்றி ஆற்றிய உரைகளைப் பிறநாட்டு அறிஞர்கள் கேட்கும் வாய்ப்பினை அளித்ததன் மூலம் தமிழ்மொழியின் தொன்மையும் ஆழமும் சிறப்பும் பிறமொழி அறிஞர்களுக்கும் தெரிய வந்தன. மேலை நாடுகளில் லட்சக் கணக்கிலே விற்பனையாகும் நாளிதழ்களிலும், திங்கள், வார ஏடுகளிலும் சென்னைத் தமிழ் விழாவைப் பற்றி செய்திகள் பிரசுரமாயின. உலக மக்கள் அனைவரும் தமிழ் மொழி பற்றி அறிந்து கொள்ள இவ்விழாவில் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவுகளும் ஊர்வல நிகழ்ச்சிகளும் வெகுவாகப் பயன்பட்டன.

''மெய்தான் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ இவ்விழா உதவியுள்ளது. பிறமொழி, பிறமொழி அறிஞர்கள் பற்றித் தாங்கள் குறிப்பிட்டதும் ஓர் ஐயப்பாடு எழுகிறது. பிரெஞ்சு, லத்தீன், கிரேக்க மொழிச் சொற்களைச் சேர்த்துக் கொண்டதனல் ஆங்கில மொழி

வளம் பெற்று உலகச் செல்வாக்குப் பெற்று விளங்குகிறதே? தமிழ் வளர்ச்சிக்கும் இந்த பின்பற்றலாமா? தனித்தமிழ் நடை முறையைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?''

''பிற மொழிச் சொற்களைக் கலப்பதன் மூலந்தான் தமிழ்மொழி வளம் பெறமுடியுமா? எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய சொற்களைக் கையாண்டு நல்ல தமிழில் எழுத வேண்டும் என்பதே என் கருத்து. அத்தகைய தமிழ்ச் சொற்கள் இருக்கும் போது அவற்றை விடுத்து பிறமொழிச் சொற்களைக் கையாள வேண்டிய அவசியமில்லை. புதிய சொற்களை உருவாக்கு வதன் மூலம் மொழிக்கு வளமூட்டலாம். ஒலி பெருக்கிக் கருவி கண்டு பிடிக்கு முன் 'ஒலி பெருக்கி' என்ற சொல் கையாளப்பட்டதா? தேவைக் கேற்ப இது போன்ற புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம். 'பெனிசிலின்' என்ற மருந்தின் பெயரைப் பலரும் கூறுகின்றனர். இதற்குப் பொருத்தமான, மக்களால் விளங்கிக் கொள்ளக் கூடிய தமிழ்ச் சொல் இல்லாததனால் 'பெனிசிலின்' என்றே கூறலாம். அதில் தவறில்லை. பொதுவாகக் கூறுமிடத்து, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் கையாளப்பட்ட தமிழ்நடை வேறு. இன்று பழக்கத்தில் உள்ள நடைவேறு. முயன்று நல்ல தமிழை எழுத வேண்டும் என்பதே மக்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.''

''தமிழ் நூல்களில் உங்களுக்கு விருப்ப மானது எது?'' என்று கேட்டதற்கு, சங்க நூல் கள் எல்லாமே எனக்கு பிடித்தமானவை.

திருக்குறள் மிகவும் பிடிக்கும். அன்றாட வாழ்க் கையில் குறளை நன்கு பயன்படுத்தலாம். ஒரு கருத்தினை எடுத்துரைக்கும் பொது அதற்கு ஆதாரமாக வள்ளுவரின் மறையை மேற்கோள் காட்டித் திட்டவட்டமாகப் பேசலாம்'' என்பது நாவலரின் கருத்து.

'எழுச்சி', 'சமுதாய விடுதலை', 'மூட நம்பிக்கை', 'களஞ்சியம்', 'புதிய பாதை', 'கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்' முதலிய பல நூல்களை எழுதியுள்ளார் கல்வி அமைச்சர்.

''நூலகங்களின் வளர்ச்சி இப்போது தடை பட்டிருக்கிறதா? தமிழார்வம் மிக்க அமைச்சர் களின் ஆட்சியில் தமிழகத்தில் நூலகங்களின் எண்ணிக்கை பெருகி, மக்களின் கல்வித்தரமும், படிப்பதில் உள்ள ஆர்வமும் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுவது நியாயந்தானே?'' என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் கூறுவார். ''நூலகங்களின் வளர்ச்சிக்கு என ஒரு ''கமிட்டி'' நியமனம் செய்ய முடிவு செய்திருக் கிறோம். அது உருப்பெற்றதும் உரிய நடவடிக் கைகள் எடுக்கலாம். என்று இருக்கிறோம். ஆனால் ஒன்று உறுதியாகக் கூறுவேன். நூலகங் களுக்கென ஏற்கனவே ஒதுக்கிய தொகையைக் குறைக்கவில்லை'' என்றார்.

கல்லூரிகளில் எல்லாப் பாடங்களையும் மாண வர்கள் தமிழிலேயே பயின்றால், தமிழ் நாட்டிலே யே அவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கள் செய்து தர முடியுமா என்று பொது மக்கள் கவலைப்படுகிறார்கள். ஆங்கிலத்தை மொழியள வில் கற்றால் அதில் பேசவும் எழுதவும் இப்போ துள்ளது போன்ற திறமை இருக்குமா என்று ஐயப்பாடு எழுவதும் இயல்பு. இது பற்றித் திரு. நெடுஞ்செழியன் கூறும் விளக்கம். ''பாடங்களைத் தமிழிலே பயின்றாலும் ஆங்கிலமே ஒரு பாடமாக இருந்து வரும். எனவே ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் மறைந்து விடாது. ஜப்பானில் பாடங் கள் ஜப்பானிய மொழியிலேதான் பயிலப் படு கின்றன. ஆங்கிலத்தை மொழியளவில் பயிலும் ஜப்பானியர் இருமொழிகளிலும் கருத்துக்களை வெளியிடுவதில்லையா? ஜப்பானிய மொழியில் பாடங்களைப் பயில்வதால் அந்நாட்டு மக்களின் கல்வி அறிவு குன்றி விடவில்லையே? மேலை நாடு களுடன் போட்டியிடும் அளவுக்கு ஜப்பான் எல்லாத் துறைகளிலுமே முன்னேறி விளங்கு கிறதே! ஆங்கிலத்திலேயே எல்லாம் பயில்பவர் கள் கூட, ராஜாஜி மாதிரியோ, அண்ணா மாதிரி யோ புலமையோடு ஆங்கில மொழியில் பேசிவிட முடிகிறதா? அந்த ஆற்றல் தனி; அது சிலருக்கு மட்டுந்தான் கைவரும்!''

''கடவுளுணர்ச்சியை வளர்ப்பதற்கு நீங்கள் என்ன வழிவகைகளை வகுப்பீர்கள்?'' என்றேன்.

கோயில்கள் அறநிலையங்கள் பராமரிப்பும் கல்வி அமைச்சரின் பொறுப்பாக உள்ளதல்லவா?

அவர் சிரித்தவாறு, "திரு. கி. வா. ஜ. போன்ற சமயப் பற்றுள்ள பெரியோர்கள் ஏற்று நடத்த வேண்டிய பணி இது. அவர்கள் போன்றவர்கள் திட்டம் வகுத்துத் தர வேண்டும். நான் நிறைவேற்றி வைப்பேன். கோயிலில் மூன்று வேளை பூசை நிகழ வேண்டும் என்று நியமம் இருந்தால் அப்பணி செவ்வனே நடைபெறுதற்கு ஆவன செய்ய வேண்டியது என் கடமை. நாள்ஒன்றுக்கு ஆறுபடி அரிசி கொடுக்க வேண்டுமென்றால், அது ஒன்றரைப் படியாகக் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு. கடமையிலிருந்து தவற மாட்டேன்." என்றார்.

"வழிபாட்டுக்கென கோயில்களுக்குச் செல்லமாட்டீர்கள். ஆனால் கோயில்களுக்குப் போக வேண்டிய கடமையைச் செய்யும் போது உங்களுக்கு மனப் போராட்டம் ஏதும் ஏற்படுவதில்லையா?"

அமைச்சர் மீண்டும் சிரித்தவாறே, "'இல்லை' எங்களைப் போன்றவர்கள் கோயிலுக்கே வரக் கூடாது என்று தடுக்கப்பட்டதால் தானே போராட்டமே எழுந்தது! கோயில்களிடம் எனக்குப் பகைமை ஏதும் இல்லை. 'கோயிலுக்கு வர வேண்டாம்!' என்று சொன்ன நிலை இன்று மாறி விட்டது. சமயத் துறையின் வளர்ச்சிக்கு அதில் ஈடுபாடு கொண்டு உழைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அமைச்சர் என்ற வகையில் என் கடமை என்ன என்பதைத் தான் கூறிவிட்டேனே? அதைக் கருத்தில் கொண்டுதான் பணியாற்றி வருகின்றேன்" என்றார்.

"தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் பயில பள்ளிகளில் தொடர்ந்து வாய்ப்பு நீடிக்குமா?"

"சிறுபான்மையோருக்குத் தேவையான வாய்ப்பும் பாதுகாப்பும் என்றும் இருக்கும். தெலுங்கு மொழி பயில விருக்கும் பள்ளிகள் பல உள்ளனவே?"

பின்தங்கிய வகுப்பினருக்குக் கல்வித் துறையில் பல சலுகைகள் உள்ளன. வேலை வாய்ப்புக்கள் அளிப்பதிலும் இவர்களுக்குச் சில சலுகைகள் உள்ளன. பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்துக்கு இந்தச் சலுகைகள் இன்றியமையாதவையே. ஆனால் சாதி அடிப்படையில் இந்தப் பிரசினைக்கு விடை காண முற்படுவதை விட, பொருளாதார அடிப்படையில் இதற்குத் தீர்வு காண முயல்வது நலம் எனக் கருதுவோர் பலர். 'பின் தங்கிய வகுப்பினர்' என்ற எல்லைக் கோட்டுக்கு வெளியேயும் பொருளாதார அடிப்படையில் பின் தங்கியவர்கள் பலர் உள்ளனர். சான்றாக, கோயில் அர்ச்சர்கள், புரோகிதர்கள், சமையல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்படி பலர் சாதி அடிப்படையில் பின் தங்கிய வகுப்பினர் அல்லர் என்றாலும், பொருளாதார அடிப்படையில் பார்த்தால் இவர்கள் பின் தங்கியவர்களாகவே உள்ளனர். குறைந்த வருவாய் உள்ள இவர்களின் நிலையும் உயர வேண்டுமல்லவா? இந்தப் பிரச்னை குறித்து கல்வி அமைச்சர் கூறுவது; பின்தங்கிய வகுப்பினர் என்று குறிப்பிடப் பெறுவோரில் கணிசமான பகுதியினர் இன்னமும் முன்னேறி விடவில்லை. இவர்களுக்கென மொத்தமாக 41 சதவிகிதம் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ள 59 சதவிகிதம் மற்றவர்களுக்கு அளிக்கப் பெறுகிறது. இந்த சலுகையை எடுத்து விடக் கூடிய நிலை இன்னமும் ஏற்படவில்லை. ஆனால், பொருளாதார அடிப்படையிலும் ஏழை மக்களுக்கு அரசு கல்விச் சலுகையை வழங்கித்தான் வருகிறது. சென்ற கல்வி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ஆண்டுக்கு ரூ 1500-க்குக் குறை

வான் வருவாயுள்ளவர்களின் பிள்ளைகளுக்கு இலவசப் புகுமுக வகுப்புக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பினைப் பலர் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.''

குறிப்பிட்ட சில கல்லூரிகளுக்கு மனுக்கள் மிகுதியாக வந்து குவிவதும், சில கல்லூரிகள் இடங்கள் காலியாக இருப்பதும் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் நிலைமை. அந்த அந்தப் பகுதிகளில் அல்லது பேட்டைகளில் இருக்கும் உயர்நிலைப்பள்ளிகளில் பயின்றுதேர்வு பெற்ற மாணவ மாணவியர்க்கு அண்மையிலுள்ள கல்லூரிகளில் கணிசமான பகுதி இடம் ஒதுக்குவதன் மூலம் போட்டியையும் இட நெருக்கடியையும் தவிர்க்கலாம். உதாரணமாக, மயிலாப்பூரில் உள்ள கல்லூரியில் மயிலையில் உள்ள பள்ளிகளில் பயின்று தேர்வு பெற்ற மாணவர்களுக்கு இடமளித்த பிறகே பிற இடங்களிலிருந்து வருவோர்க்கு இடமளிக்கப்படும் என்ற விதியைக் கையாண்டால் தேவையற்ற இட நெருக்கடிக்கு எளிதில் தீர்வு காண இயலும் என்பது மக்கள், கல்வித்துறை அறிஞர்களின் கருத்து. இதனை அமைச்சரிடம் கூறிய போது அவரும் வரவேற்றார்.

''இது நேர்மையான யோசனைதான். சில கல்லூரிகளில் கூடுதலான தேர்வு எண்கள் பெற்ற மாணவர்களே பெருமளவில் சேர்த்துக் கொள்ளப்படுவதனால், அங்கே தேர்வு பெறும் மாணவர்களின் சதவிகிதம் மற்ற கல்லூரிகளோடு ஒப்பிடும் போது கூடுதலாகவே உள்ளது. எஸ். எஸ். எல். சி. யில் 400 க்கு குறைவான தேர்வு எண்கள் பெற்ற மாணவர்களே பயிலும் கல்லூரியில், புகுமுக வகுப்பில் தேர்வு பெறுவோரின் சதவிகிதம் குறைவாகவே இருக்கும். பல்கலைக் கழகமும், கூடுமானவரை அருகிலுள்ள பள்ளிகலிருந்து வரும் மாணவர்களுக்கு இடமளிக்கும்படி யோசனை கூறி வருகிறது; வற்புறுத்தியும் வருகிறது. ஆனால் இது பற்றிச் சட்டங்கள் இயற்றுவது இயலாது. அரசு சட்டமியற்றிக் கல்லூரிகளை வற்புறுத்த முடியாத நிலையில், கல்லூரிகளின் ஒத்துழைப்பினால் தீர்வு காண வேண்டிய பிரச்னை இது'' என்று கூறுகிறார் கல்வி அமைச்சர்.

''சேலம் உருக்காலை விஷயமாக ஏதாவது புதிய செய்தி உண்டா? அறிஞர் அண்ணாவின் அமெரிக்கா, ஜப்பான் பயணத்தின் பயனாக இத் திட்டம் உருப்பெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளதா?'' என்ற கேள்விக்கு தொழிலமைச்சர் கூறினார். ஏற்கனவே பேசிய கம்பெனிகளுடன் இது குறித்து முதலமைச்சர் பேசியிருக்கிறார். நாலாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் இது உருப்பெறும் என்று நம்ப இடமிருக்கிறது.

தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிபற்றி திரு. நெடுஞ்செழியன் கூறுகிறார்: ''இப்போதுள்ள மந்தநிலை அகில இந்தியாவுக்கும் பொதுவானதே. தொழில் வளர்ச்சி அதனோடு தொடர்பு கொண்ட பிற தொழில்களின் வளர்ச்சியைப் பொறுத்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பட்ட தேக்கம், வேலை நிறுத்தங்கள் எல்லாமே இந்த மந்த நிலைக்குக் காரணம். ஆனால், தொழில் துறையில் சென்ற ஆண்டினை விட இவ்வாண்டில் வேலை நிறுத்தங்கள் குறைவு தான். இந்த மந்த நிலையிலும் கேரளம், மைசூர் ஆந்திரம் முதலிய பிற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கினால் தமிழ் நாட்டில் தொழில் வளர்ந்து தான் உள்ளது'' என்று புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

இவ்வாண்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதியவர்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் புதிய முறை அமல் செய்யப்பட்டுள்ளதல்லவா? அது எந்த அளவுக்கு வெற்றியளித்திருக்கிறது என்பது குறித்துக் கல்வி அமைச்சரின் கருத்தினைப் பார்க்கலாம்:

ஆசிரியர்கள் இதுவரை விடைத்தாள்களைத் தங்கள் வீட்டிலிருந்தவாறே மதிப்பீடு செய்து வந்தார்கள். இந்த முறையில் காலதாமதம் ஆகிறது. தவிர, எந்த ஆசிரியரிடமும் எந்த விடைத்தாள் போய்ச் சேருகிறது என்று விசாரித்தறிந்து பெற்றோர்களும், மாணவர்களும் அவர்களை அணுகித் தவறான முறையில் தகாத கோரிக்கைகள் விடுக்கவும் சந்தர்ப்பம் இருந்து வந்தது. மிகக் குறைந்த சிலரே இத்தவறான நடவடிக்கைளில் ஈடுபட்டிருப்பார்கள் என்றாலும் தவறு தவறுதானே? ஆசிரியர்களை ஒரே இடத்தில் கூட்டி விடைத்தாள்களைக் கொடுத்து மதிப்பீடு செய்யும் இப்புதிய முறையினால் வேலை சீக்கிரமாக முடிகிறது. மதிப்பீடு செய்வதில் தகராறுகளுக்கே இடமில்லை. ஓர் ஆசிரியர் காலையில் 15, மாலையில் 15, என்று ஒரு நாளைக்கு 30 விடைத்தாள்களுக்கு மதிப்பெண்கள் வழங்கு

கிறார். பத்து நாட்களில் (60 மணி நேரத்தில்) 300 விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த வேலையை ஆசிரியர்கள் தங்கள் வீட்டிலேயே செய்வதாக இருந்தால் பத்து நாள் அவகாசம் போதாது. இம்முறையைப் புகுத்தியதின் விளைவாக ஜூன் மாதம் முதல் தேதி எஸ். எஸ். எல். சி. தேர்வு முடிவுகள் வெளியாகி விடும். இதனால் இன்னொரு நற்பலனும் விளைகிறது. சென்னை நகரையே பார்த்திராத ஆசிரியர்கள், ஆசிரியைகளுக்குத் தமிழகத்தின் தலைநகரைச் சுற்றி பார்க்க ஓர் வாய்ப்பு இலவசமாகக் கிட்டுகின்றது; இல்லையா? கோடை விடுறையில் ஆசிரியர்களுக்கு இது ஓர் இலவச உல்லாசப் பயணமாக அமைகின்றதல்லவா? வெளியூர்களிலிருந்து வந்து இங்கே தங்குவதில் ஆசிரியர்களுக்குச் சில வசதிக் குறைவுகள் ஏற்படலாம். இது முதலாண்டுதானே? போகப் போக அடுத்து வரும் ஆண்டுகளில் குறைகளைக் கவனித்து நீக்கி விடலாம்.

"கல்லூரியில் சேரவிரும்புவோர் எல்லோருக்குமே இடம் கிடைக்குமா?"

"இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் பேர் இவ்வாண்டு எஸ். எஸ். எல். சி தேர்வு எழுதியிருக்கிறார்கள். புதுமுக வகுப்புகளில் இப்போதுள்ளபடி 56,000 இடங்கள் (Seats) உள்ளன. வரும் கல்வி ஆண்டில் பத்துப் புதிய கல்லூரிகள் தோன்றலாம். சுமார் 2000 இடங்கள் கூடுதலாகும்".

"மந்திரிகளின் வாழ்க்கையைப் பற்றிப் பொதுவான ஒரு கேள்வியைக் கேட்கலாமா? ரூ 500 சம்பளத்தில் அமைச்சர்களால் வாழ்க்கை நடத்த முடிகிறதா? குமாஸ்தாக்கள் கூட அதற்கு மேல் இக்காலத்தில் சம்பளம் வாங்குகிறார்களே?" என்று கேட்டதற்கு நாவலர் கூறுகிறார்; நாங்கள் ஏற்கனவே எளிய வாழ்க்கைக்குப் பழகினவர்கள். வீட்டு வாடகை இல்லை. போக வர கார் வசதி உள்ளது. விருந்தினர்களைத் தடபுடலாக உபசரிக்க முடியாது! அது ஒன்றுதானே தவிர, சம்பளம் போதாது என்று குறை கூறுவதற்கில்லை. சிக்கனத்தைப் பிறருக்கு உபதேசிப்பவர்கள், தாங்கள் சிக்கனமாக வாழ்க்கை நடத்த வேண்டியதுதானே?"

தங்கள் திருமணம் சம்பிரதாயமுறைப்படி நிகழ்ந்ததா? அல்லது?"

> ### கழகம் எங்குப்பார்த்தாலும் வெற்றிக் கொடி நாட்டியது
>
> தம்பி! நாம் எதிர்க்கட்சி வரிசையில் வீற்றிருந்த போது உண்மையான முறையிலும், நேர்மையான வழியிலும், தூய்மையானபோக்கிலும் பிரச்சாரப் பொதுகூட்டங்களையும், மாநாடுகளையும் எங்கு பார்த்தாலும் நடத்தி வந்தோம். அதன் விளைவாகத்தான் காங்கிரசு ஆட்சி 1967 ஆம் ஆண்டுப் பொது தேர்தலில் கவிழ்ந்தது; கழகம் எங்குப் பார்த்தாலும் வெற்றிக்கொடி நாட்டியது.
>
> நாம் பிரச்சார வலிவோடு இருந்த நேரத்தில் காங்கிரசுக் கட்சி பிரச்சார வலிவையிழந்திருந்தது. இப்பொழுது நிலைமை நேர்மாறாக மாறியிருக்கிறது. காங்கிரசுக்கட்சி நாளுக்கு நாள் பிரச்சார வலிவை மேன்மேலும் பெற்று வருகிறது; கழகம் அந்த வலிவை இழந்து கொண்டு வருகிறது.
>
> நாவலர

"பதிவுத் திருமணம்தான்".

தங்கள் வாழ்க்கைத் துணைவியாருடன் சேர்த்துப் படம் எடுக்க விரும்புகிறார் நம் புகைப் படைக்காரர் முடியுமா? என்றதும், அமைச்சர் அருகிலுள்ள தம் மகன் மதிவாணனிடம், அம்மாவை அழைத்து வா" என்றார். சில நிமிடங்களுள் டாக்டர் திமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் இன் முகத்துடன் வந்து, "ஆபீஸ் அறைக்குள் நான் வரலாமா?" என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தார் 'வரக்கூடாது' என்று அவர் தமக்கென ஒரு விதி வகுத்துக் கொண்டிருந்தால், அந்த விதி 'கலைமகள்' நேயர்களின் விருப்பத்தினை யொட்டித் தளர்த்தப்பட்டது என எண்ணி மகிழ்கிறோம். கல்வி அமைச்சரின் மனைவி மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவர். தாய் சேய் மருத்துவத் துறையில் விசேஷ அதிகாரியாகப் பணியாற்றுகிறார். அமைச்சர் நெடுஞ்செழியனுடன் பிறந்தவர்கள் ஆறு சகோதரிகளும் மூன்று சகோதரர்களும். அமைச்சரின் குடும்பம் மிகச் சிறியது. செல்வன் மதிவாணன் அவரது ஒரே மகன் இப்போதைக்கு!

நாவலர் மாணவம்

டாக்டர். வ. சுப. மாணிக்கம்

ஓராசிரியர்க்குப் பல மாணவர், ஒரு மாணவர்க்குப் பல ஆசிரியர் என்பது இக் காலப் படிப்பியல் ஆதலின் ஆசிரியரை மாணவர் மறப்பதும் மாணவரை ஆசிரியர் மறப்பதும் மரபாகிவிட்டது. இம் மரபில் சில மாணவர்களின் நினைவு ஆசிரியன் நெஞ்சத்தில் உண்டென்றால், படித்த காலத்து இருந்த தனியுறவும் படித்தபின் மாணவர் பெற்ற உயர்வுமே காரணங்களாம். ஓராசானிடம் கற்ற எல்லா மாணவர்களுமே உயர்ந்து விடுவதில்லை. உயர்வார் சிலரே. அச்சிலருள் ஆசிரியரை மறவாத மாணவர் மிகச் சிலரே. அச் சிலருள்ளும் வாய்த்த போதெல்லாம் ஆசிரியனைக் குறிப்பிடும் பெருமையுடைய மாணவர் தவச்சிலர்காண். இவ்வனைத்து மாணவத்துக்கும் உறைவிடம் அமைச்சர் நெடுஞ்செழியர்.

நாவலர் நெடுஞ்செழியன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ பயின்றார். அப்போது அவர்பெயர் நாராயணசாமி. தமிழர் பெயரெல்லாம் தமிழாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், நெடுஞ்செழியன் என்ற சங்கத் தமிழ்ப் பெயரைத் தலைக் கொண்டார். வடமொழிப் பெயரைத் தமிழ் செய்யும் போது, வேதாசலம் மறைமலை ஆனதுபோல, சூரிய நாராயணசாத்திரி பரிதிமாற் கலைஞன் ஆனதுபோல பொருள் தழுவி அமைத்துக் கொள்வது ஒரு வழக்கு. நாராயணசாமிக்கும் நெடுஞ்செழியனுக்கும் என்ன பொருள் தொடர்பு உண்டு? பொருள் தழுவாத் தமிழ்ப் பெயராக நாவலர் வைத்துக் கொண்டதன் நோக்கம் என்ன?

மாணவப் பருவத்தில் நாவலர் பெரியார் தம் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர். அதன் கொள்கைகளில் ஒன்று வட நாட்டு ஆதிக்கத்தையும் ஆரிய ஆதிக்கத்தையும் ஒழித்தல். ஆதலின் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற பெயர் நாவலர் தம் உணர்ச்சிக்கு ஏற்றதாயிற்று. இந்நெடுஞ்செழியன் ஆரியப் படை கடந்த ஆற்றலுடையவன் மட்டுமல்லன், எல்லா மக்கட்கும் கல்வி வேண்டும் என்ற அரசுக் குறிக்கோளும் உடையவன். "உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாடியவன். ஆதலால் அன்று பாண்டியன் நெடுஞ்செழியன் சொல்லியதை இன்று நாவலர் நெடுஞ்செழியன் கல்வியமைச்சராக இருந்து செயற்படுத்துகின்றார். பெயர்ப் பொருத்தத்தில் எவ்வளவு செயற்பொருத்தம்!

கல்வியமைச்சரின் பணிவுக்கும் ஆசிரியனிடத்து நன்மதிப்புக்கும் ஒரு நாள் நிகழ்ச்சி. பொதுவாக எழுதாமல் நிகழ்ச்சி சுட்டிக்காட்டுவது சான்று. மூன்றாண்டுகட்கு முன் 1961 சூலைத்திங்களில நடந்த ஓர் உரையாடல்.

எங்கள் அழகப்பா கல்லூரிப் பேரவை பற்றிச் சில திருத்தங்களை நான் கொண்டு

வந்தேன் மாணவர்களிடை வண்பூசல்களை தவிர்ப்பது. சொற்பொழிவாளர்களை மதிப்பது, செலவுக் கூறுகளைக் குறைப்பது. விடுதிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவது கல்லூரியிலும் விடுதியிலும் படிக்கும் சூழ்நிலையைப் பெருக்குவது இத்திருத்தங்களின் உட்கிடக்கை. தலையான மாணவர்கள் சீர்மைகளுக்கு உடன்படுவார்களா? கிளர்ச்சி நடத்தினர். படிப்பு நிறுத்தம் தொடர்ந்து கல்விக் கதவைத் திறந்தாக வேண்டுமே கல்வியமைச்சர் நெடுஞ்செழியனாரைக்காண அறநிலையச் செயலர் திரு க. வெ. சித. வெ. வேங்கடாசலஞ்செட்டியார் அவர்களும் நானும் தலைமைச் செயலகத்தில் அமைச்சறைக்குச் சென்றோம். மாணவர் வேண்டுகைகளையும் அவற்றின் விளைவுத் துன்பங்களையும் விளக்கினேன். சில வற்றை விட்டுக் கொடுக்க வேண்டாம் எனவும் சிலவற்றை ஓரளவு மாற்றிச் செய்யலாம் எனவும் அமைச்சர் கருதினர். எங்கள் கல்லூரிச் சூழ்நிலையையும் சில மாணவர் தம் வழிவழிப் பிடிப்பினையும் அறிந்திருந்த பட்டறிவால், சிலவற்றை விட்டுக்கொடுப்பதுகூட எனக்கு நல்லதாகப் படவில்லை. "முன் சிலவற்றை இப்படியே இணங்கி விட்டுக் கொடுத்துப் பார்த்தோம் படியாக் கிளர்ச்சி கூடுதலாயிற்றேயன்றிக் குறையவில்லை. பலமுறை அவதிப் பட்டாயிற்று. மீண்டும் மீண்டும் அவதிப்படவேண்டுமா? முழுதும் தமிழ்த் துறையில் இருந்து ஆராய்ச்சி செய்யலாம். நூல்வெளியிடலாம், தமிழ்த்தொண்டாற்றலாம். முதல்வர் பதவியிலிருந்து விடுபட விரும்புகிறேன்" என்று மறுமொழிந்தேன். அதுகேட்ட நல்லமைச்சர், 'தமிழ்த் தொண்டுக்கு என்றும் இடமுண்டு. இப்போது முதல்வர் பதவியிலிருந்து கல்வித் தொண்டு செய்யுங்கள் பதவியில் இருப்பவர்க்கு எத்தனையோ தொல்லைகள் உண்டு. இந்த அமைச்சுப்பதவியை விட்டுவிடலாமா? என்ற எண்ணம் எனக்குக்கூட அடிக்கடி தோன்றுகின்றது." என்று கூறினர். இச்சொற்கள் எனக்கு ஆறுதல் தராததைக் குறிப்பால் உணர்ந்த அமைச்சர் 'நீங்கள் எண்ணுவது சரியே. இப்போது ஒருமுறை சிலவற்றை விட்டுக்கொடுத்துப் பாருங்கள். மாணவர்கள் இணங்கி நன்முறையில் நடந்துகொள்ளவில்லை என்றால் முதல்வர் வகுத்த விதிகளே கல்லூரியின் விதிகள் என்று நான் ஆணை பிறப்பிக்கிறேன்" என்று எனக்குத் துணிவுபட மொழிந்தனர்.

'தாங்கள் இன்று அமைச்சராக வீற்றிருந்து சொல்லும்போது அதனைக் கேட்கக் கடமைப்பட்டவன்" என்று நான் சொல்லி முடிப்பதற்குள், அமைச்சரணையில் அமர்ந்திருக்கும் நெடுஞ்செழியனார் இடைமறித்து அமைச்சன் என்ற முறையில் சொல்லவில்லை. தங்களிடம் பயின்ற மாணவன் என்ற உறவில்தான் சொல்லுகிறேன்" என்று முடித்தார். நாவலரின் வெல்லுஞ்சொற் கேட்டு, ஆம் என இசைந்தேன்.

இப்படி ஒரு பணியை அமைச்சறையில், அதிகாரிகள் சூழ்நிலையில் அமைச்சரிடம் காண முடியுமா? கண்டேன் நாவலரிடம். "அதூஉஞ் சாலும் தமிழ் முழுதறிதல்" என்பது இன்று வரை பொய்யா மொழி. இந்நாவலர் மாணவம் மாணவ உலகிற்கு எடுத்துக் காட்டாகுக.

தமிழகத்தில் குடும்பக்கட்டுப்பாடு பணி

1956-ல் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையான காலத்தில் தமிழகத்தில் 9·02 லட்சத்துக்கும் அதிகமான பேர்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. சுமார் 82,000 பேர்களுக்கு "லூப்" பொருத்தப்பட்டிருக்கிறது. 1969-70ல் மட்டும் தமிழ்நாட்டில் 1·08 லட்சத்துக்கும் அதிகமான பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. 39,543 பேர்களுக்கு "லூப்" பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் 1·88 லட்சத்துக்கும் அதிகமான பிறப்புகள் தடுக்கப்பட்டன என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. —நாவலர்

தகுதியான நற்செயலாகும்

மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பொன்விழாக் கொண்டாடுவது தகுதியான நற்செயலாகும். திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இளமையிலிருந்தே சீர்திருத்தக் கொள்கைகளும் முன்னேற்றக் கருத்துக்களும் கொண்டவர். தம்முடைய கொள்கைகளைச் செயற்படுத்தி வருகிறவர். சொற்பொழிவு நிகழ்த்துவதில் நாவன்மை பெற்று நாவலர் என்னும் நற்பெயர் கொண்டு விளங்குகிறார். சிறந்த பேச்சாளர் என்பது மட்டுமல்லாமல் நூல்களை எழுதும் எழுத்தாளர்களில் அறிஞராகவும் விளங்குகிறார். தம்முடைய எழுத்துக்கள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் அயராமல் நற்றொண்டாற்றி வருகிறார். நாட்டு மக்களுடன் நல்லுறவு கொண்டு சமூகத் தொண்டாற்றி வருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவராகவும் நாவலர் அவர்கள் இருந்து வருகிறார். சிறந்த பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், அறிஞர்களாகவும் அமைந்துள்ள இன்றையத் தமிழக அமைச்சர் குழுவில் ஒருவராக மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இருப்பது பொருத்தமேயாகும். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நெடுங்காலம் இனிது வாழ்ந்து நாட்டு மக்களுக்கும் தாய் மொழிக்கும் மேன்மேலும் தொண்டாற்றிச் சிறப்படைவாராக!

வாழ்க நாவலர்! வாழ்க நெடுஞ்செழியன்!

மயிலை சீனி. வேங்கடசாமி

நமது நாவலர்!

இன்று தமிழ் மாநிலம் வியக்க மாண்புமிகு அமைச்சராக மாபெரும் பணிபுரிந்து, மக்கள் மனங்களிக்க, மாற்றாரும் போற்றும் நற்றமிழ்த் தலைவராக இலங்கும் திரு. 'நெடுஞ்செழியன்' அவர்கள் ஐம்பதாண்டுகள் வளமுடன் வாழ்ந்து, வளர்ந்து நிறைவெய்துவதறிந்து எல்லையிலா மகிழ்ச்சியடைகின்றேன். ஆன்ற விந்தடங்கிய சான்றோராகும் வேளை உளமாற வாழ்த்து கூறிப் போற்றும் வேளை, ஒரு சில பழைய எண்ணங்கள் நினைவில் வர அவற்றை எடுத்துச் சொல்ல விழைகின்றேன்.

முப்பதாண்டுகள் முன்னேற்றப் பாதையில் முனைந்துழைத்து, ஆட்சிப்பீடத்தில் அமைச்சராக அமர்ந்து, அழகு பொலிய முத்து விளங்கும் நண்பர் நாவலரின் வாழ்க்கைக் குறிப்புகளும், மேலோர் போற்றும் பாராட்டுரைகளும், நல்லோர் நவிலும் நல்லாசிகளும் நலமுற விளங்க "பொன் விழா மலர்" பூத்துப் புகழ் மணம் பரப்பிப் பொலிவுடன் சிறக்க வெளிவரல் குறித்து பெருமையடைகிறேன்.

இன்று ஆளப்பிறந்த மன்னராக மாண்புற்று விளங்கும் நாவலர் அன்று, ஆழக்கிடந்த கடல் முத்து போல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், சிறப்புத் தமிழ் பயிலவந்த எழுவர் மாணவருள் ஒருவராக, என் வகுப்புத் தோழராக, திரு. நாராயணசாமியாக இருந்து வந்தார். இன்று பாராளுமன்ற உறுப்பினர்த் தலைவராக விளங்கும் திரு. க. அன்பழகன் அன்று திரு. இராமையாவாக உடன் பயின்ற தோழராக, இவர்களிருவரையும் மாணவர் சமுதாயம் இணைத்துக் காட்டி இரட்டையர் என்றே அழைத்து வந்த காலம் அது. 1941ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை.

பேராசிரியை
டி. கே. நாகாம்பாள்

மதிப்புக்குரிய மாபெரும் புலவர் பெருமக்கள் அறிவு நுட்பக் கருத்துக்களை ஆராய்ந்து புகட்டி, எங்களைத் தமிழ்க் கல்வியைத் தரமுடன் பயிலும் மாணவர்க் குழுவாக்கி, ஆசிரியர் போற்றும் அருமந்த மாணவர்களாக ஆதரவுடன் நடத்தி வந்தனர். பல்கலைக்கழக வரலாற்றிலே பொற்காலமென போற்றப்பட்டதும், புரட்சி மாணவர் புத்துயிர் பெற்று, பகுத்தறிவுக் கூட்டத்தை பண்புடன் வளர்த்தக் காலம் அது. அக்காலத்தே அமைதியே உருவாக, அடக்கமே பண்பாக தோழரிடம் அன்பு, பெரியோரிடம் பணிவு, ஒழுக்கத்தில் உயர்வு, நடையில் கம்பீரம், நாவில் பகுத்தறிவு, சொல்லில் சுதந்திரம், உள்ளத்தில் ஒற்றுமை இவற்றோடு அறிவுப்பசி தீர்க்கும் ஆர்வத்துடன் உழைத்து வந்தவர் நண்பர் நாவலர்.

சீர்திருத்தக் கொள்கை, கொள்கை வழி நிற்கும் உறுதி, பொறுப்பேற்று பணியாற்றும் செம்மை இவற்றை விளக்கும் இவரைச் 'சொல்லின் செல்வர்' எனப் போற்றிய மாணவர் சமுதாயம் தமிழ்ச்சங்க செயலாளராக தேர்ந்தெடுத்தனர். தமிழக கூட்டங்களில் அரும்பெரும் பொருட்களை ஆராய்ந்தெடுத்து, தனிப் பெரும் பாணியில், தனக்கேயுரிய கொள்கையில், பழைய இலக்கியப் பூங்காவில் பூத்துக் குலுங்கிய மணமிக்க மலர்களைச் செம்மையாக சேகரித்து, தொடுத்து, எத்தகைய பாலைவனமும், தன் சொல்லாற்றலால சோலைவனமாக தளிர்க்க, பேராற்றல் பெற்ற பெரும் புலவரும் போற்றிப் புகழும் வண்ணம் சொற்பெருக்காற்றும் சொற்கொண்டலாகத் திகழ்ந்தார் திரு. நெடுஞ்செழியன். தான் பெற்ற இன்பம் இவ்வையமும்

†

பெறட்டும் என்றுணர்ந்து பிறர் பொருட்டு வாழும் சுவையறிந்து, பெரியார் வகுத்தப் பெருவழி கண்டு, அண்ணாவுக்குப்பின் அறிவுத் தம்பியாகி, பொறுமை குடிகொண்ட பொற் கோயிலாகி, கழகப் பணியைச் சிறக்கச் செய்யலானார். 'அரசியல் வாதி மக்களின் மூளை' என்பதற்கிணங்க, அன்றே மாணவர் சார்பில், அறிவைப் பரப்பி, அறங்காட்டி ஆணையாளரையும் வியக்கவைத்து வெற்றிப் பாதையில் விரைந்து உழைத்து வரலானார்.

அப்போது, எத்தனையோ எதிர்ப்புகள் இவர் எதிர்வர, பலவீனர் பாதையில் தடையாக நிற்கும் கருங்கல் பாறைகள் பலசாலியின் பாதையில் படிக்கட்டுகளாக அமையும் என்ற உண்மையை விளக்குவார் போல, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை மேற்கொண்டு, மாபெரும் சாதனையாக புரட்சித் தலைவர் பெரியார், பகுத்தறிவுப் படையின் தளபதி அறிஞர் அண்ணா, புலமை வீரர் மறைமலையடிகள், மூவரையும், அண்ணாமலை அரங்கத்துள் ஆரவாரத்துடன் அழைத்து வந்து அவர் தம் புதுமைக் கருத்துக்களை மாணவர் மனதில் பதியவிட்டு, எழுச்சியுற்ற, எதிர்த்துவந்த இரு தரப்பினரிடையேயும் அவர் தம்மை உடனிருந்து காத்து வழியனுப்பி ஆன பெருஞ் செலவையும் அழகுடன் ஏற்று ஆளுநரும் வியக்க அருஞ் செயலாற்றி, வெற்றிச் செம்மலாக விளங்கிய காட்சி இன்னும் என் மனதில் சிறந்து நிற்கிறது.

மாணவர் வாழ்க்கையை மாண்புற முடித்து, கழகப் பணியைக் கண்ணியமாக செய்து, சட்டப் பேரவையில் எழிலுடன் அமர்ந்து, குற்றம் புரிந்திடல் இயற்கை, செய் குற்றம் ஒப்புதல் நீதி, குற்றம் பார்க்கில் சுற்றமில்லை, என்ற உண்மைகளை நிலைநாட்டி, எதிராளியும் ஏற்றிப் பாராட்டும் வகையில் செயலாற்றி வந்தமையை எல்லாரும் எண்ணி இன்றும் போற்றுவர்.

"நடமாடும் பல்கலைக்கழகம்" என்று நாவன்மையில் தனிசிறந்த அண்ணா அவர்கள் பலமுறை பாராட்ட ஏடும், நாடும், போற்றிப் புகழ, அயல் நாட்டினரும் அன்புடன் வரவேற்க, அரசியல் வாழ்விலும், அணிபெற விளங்கி, ஆற்றல் படைத்த ஆணையாளராக, விட்டுக் கொடுக்கும் விசேடப் பண்புடையவராக, குணமென்னும் குன்றேறி நின்று, சமயம் வாய்த்தபோது குடத்திலிட்ட விளக்கொளியாக நின்று நிலவும் பெருமையை நான் பெரிதும் எண்ணிப் பாராட்டுகிறேன்.

சிறுதுளி பெருவெள்ளமாக, சிலகாலம் தாடிவைத்த தம்பியாகி, சிறைவாசத்தைச் சிந்திக்கும் வாயிலாக்கி, செயலாற்றும் வீரம் பெற்று, மக்கள் போற்றும் மாபெருந் தலைமையேற்று, தமிழ்நாட்டின் தவப் புதல்வரென, கல்வி - தொழில் - பொதுநலங் காத்து, உயர் பெருஞ் சாதனைகளை உலகறிய புரியும் நாவலர் அவர்களை, அயலே இருந்து (கன்னட நாட்டிலிருந்து) காணும் பெருமையும் பெருமிதமும் என்னைச் சாரும்.

சென்னையில் உலகத்தமிழ் மாநாடு சிறப்புற நடந்தபோது, பலவாண்டுகள் காணாது திடீரென, மாண்புமிகு மந்திரியாக மாநில அமைச்சராக நேரிற்காணும், பேசும் வாய்ப்பை நான் பெற்றபோது, பழைய மாணவத் தோழராகவே நின்று, எளிமையான எழிலுடன், என்பால் அன்பும் பண்பும் காட்டி வரவேற்று, உடனுண்டு வழியனுப்பிய சிறப்பை என்னால் என்றுமே மறக்கவியலாது.

அன்பும், பண்பும் பழுத்து நிற்கும் முதிர்ச்சியின் ஆரம்ப ஆண்டில் முதிர்ச்சிக் குரிய சாயலும், உயர்வும், நரையும் தோன்றினும், இளமைத் தன்மையின் இனிய நலன் குன்றாது, இன்பம் ததும்ப நகைத்துப் பேசும், நண்பர் நாவலர் அவர்கள் சீலம் நிறைந்த நல்மனைவியாருடன் அகவாழ்வு சிறக்க, புறவாழ்வு பொலிவுற வெற்றிமேல் வெற்றிபெற அரிய சாதனைகள் அநேகம் புரிந்து, பல்லாண்டு பல்லாண்டு பயனுற வாழ்ந்து, பொன் விழா பொலிவுற, மணிவிழா மலர, மாண்புற்று விளங்க மங்கல வாழ்த்துக்களைப் பலமுறை மனமார வழங்கி, மீண்டும் மீண்டும் நல் வாழ்த்து கூறுவேன்.

மைக்கு கிடையாது! போஸ்டர் கிடையாது!

கோவை. செழியன் பி.ஏ.

1944ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். ஒருநாள் தோழர்கள் கோவை இராசமாணிக்கமும் பாலசுந்தரமும் என்னிடம் திரு. இரா. நெடுஞ்செழியன் G. D. நாயுடுவின் U. M. S. உணவு விடுதியின் வார்டனாக வந்து சேர்ந்துள்ளார்; நாம் போய்ப் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அப்போது நான் கோவை உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தேன். கோவையிலேயே நாங்கள் நாலு ஐந்து பேர்தாம் கட்சியிலே பணியாற்றுகின்றவர்கள். குறிப்பாகத் தோழர்கள் இராசமாணிக்கம்–பாலசுந்தரம், நான், காலம்சென்ற தோழர்கள் தண்டபாணி – நாராயணசாமி - இராசகோபால் ஆகியோரும் வயது எங்களை விட முதிர்ந்தவர்களில் ஒரு சிலரும்தாம். மாணவர்களில் பாலு, நாகமாணிக்கம் மறைந்த தோழர்கள் தண்டபாணி நாராயணசாமி ஆகியோர்தாம். திரு. நெடுஞ்செழியனை அதற்கு முன் அவர் படித்துக்கொண்டு இருந்தபோது கேள்விப்பட்டு இருந்தேனே தவிரப் பழகியது இல்லை.

ஆகவே, நாங்கள் திரு. நெடுஞ்செழியன் அவர்களைக் காண U. M. S. விடுதிக்குச் சென்றோம். அவருக்கென்று முன் பாகத்தில் ஒதுக்கப்பட்ட அறையில் சென்று பார்த்தோம். கை வைத்த பனியனும் வேட்டியும் மட்டும் அணிந்துள்ள உயரமான ஒரு வாலிபர் கிராப்பும் தாடியுமாக உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டு இருந்தார். எங்களை அன்புடன் வரவேற்று நீண்ட நேரம் பேசிக் கொண்டு இருந்தார். அந்த நாட்களில் நாம் மிக மிகச் சிலராக இருந்த காரணத்தால் எங்காவது ஓர் இடத்தில் நமக்குத் தெரியாத இடத்தில் தெரியாத ஒருவர் நம் இயக்கத்தவர் என்று தெரிந்தால் சந்திக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு பாசம்! உபசாரங்கள் எல்லாம் நடக்கும். அந்த உண்மையான அன்பும் பற்றுதலும் இயக்கம் வளர வளரக் குறைந்து விடுவது இயற்கை நியதி போலும்.

கோவையிலேயே அவருக்குக் கிடைத்த முதல் நண்பர்கள் நாங்கள்தாம். அன்று முதல் தினம் மாலை அவரது இடத்திற்கு நாங்கள் சென்றுவிடுவோம். அப்போது கட்சிக்கென்று ஓர் இடம் கிடையாது. தோழர்கள் பட்டி லிங்கம் சிதம்பரம் போன்றவர்கள் வீடுகளில் தான் கட்சிக்காரர்கள் கூடுவது பழக்கம். அப்போது அங்கத்தினர்களே பத்துப் பதினைந்து பேர்தாமே.

அதன் பின், தோழர் பஞ்சு பால சுந்தரம் வீட்டில் தங்குவது பழக்கம். தோழர் நெடுஞ்செழியன் வந்தபின் அவர் அறையில் கூடுவோம் (அப்போது வெறும் தோழர் நெடுஞ்செழியன்-அதன்பின் இளந்தாடி வேந்தன் நெடுஞ்செழியன்–அதன் பின்தான் நாவலர் நெடுஞ்செழியன்)

தினசரி கட்சியின் கொள்கைகளை விவாதிப்போம். அதுபோகப் பொருளாதாரம்- இலக்கியம் மத இயல் பற்றி விளக்கமாக எங்களுக்கெல்லாம் சொல்வார். M. N. ராய், ரஸ்ஸல் போன்றவர்களின் கட்டுரைகளை எடுத்து வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டு போவார்.

தோழர் தவமணி இராசன் கும்பகோணத்தில் மாணவர் கழகத்தை ஆரம்பித்தார். அதன் பின் கோவையில் நாங்கள் மாணவர் கழகம் ஆரம்பித்தோம். திரு. நெடுஞ்செழியன் அவர்கள் தலைவர். தோழர் இராசமாணிக்கம் துணைத் தலைவர். (ஆனால் அவர் மாணவர் அல்லர்) நான் செயலாளன். பாலசுந்தரம் பொருளாளர். எங்கள் கமிட்டிக் கூட்டங்கள் அனேகமாகச் சிதம்பரம்பிள்ளை பூங்கா (அப்போது கார்னேஷன் பார்க்) செடி மறைவில்தான் நடக்கும். அதன் பிறகு பொதுக் கூட்டங்கள் கோவையில் போட ஆரம்பித்தோம். கோவை டவுன் ஹால் மைதானத்தில் தான் கூட்டங்கள் நடைபெறும். இடத்திற்கு வாடகை 12 அணா. டேபிள் சேர் வாடகை

இரண்டு அணா. சோடா ஓர் அணா. இரவில் நாங்களே ரோடு பூராவும் சுண்ணாம்பில் எழுதுவோம். பகலில் மெக்கபோனில் எங்கள் பெயரை நாங்களே சொல்லி விளம்பரம் செய்வோம். பல நேரங்களில் இந்தச் செலவுகளை அவரிடமேதான் வாங்குவோம் மைக்குக் கிடையாது. போஸ்டர் கிடையாது. ஹாஸ்டலில் இருந்து நடந்தே கூட்டி வருவோம்; நடந்தே கொண்டு போய் விட்டு வருவோம். அப்போது பஸ், ஆட்டோ ரிக்ஷாக்கள் கோவையில் கிடையாது குதிரை வண்டி வைக்கக் காசு கிடையா. (கோவையில் கலைஞர் இருந்தபோது அவரையும் இப்படித்தான் செய்வோம்)

கோவை கடை வீதியின் மத்தியில் டவுன் ஹால் இருக்கும் என்றாலும் கூட்டத்திற்கு யாரும் வரமாட்டார்கள் வந்தால் பாபம் என்று நினைத்த நேரம்.

தராசுக் கொடி வெளியே கட்டியிருப்போம். அப்போது அதுதான் கொடி. கூட்டத்தில் உயரமான சிவந்த உருவம். அழகான பொலிவோடு தாடியும் கிராப்பும் ஜிப்பாவுமாகப் பேசிக்கொண்டு இருப்பதை ஏதோ கிறிஸ்தவப் பாதிரிதாம் பேசிக் கொண்டு இருக்கின்றார் என்று ஏமாந்து சிலர் வந்து உடனே போய் விடுவார்கள். ஆனால், அவரது அழகான தமிழ் நடையாலும், தடையில்லாத காட்டாறு போல் வரும் சொற் கோவையாலும் கேட்கின்றவர்கள் மகுடி வாசிக்கின்றவனிடம் மயங்கும் பாம்பு போல் மயங்கிவிடுவர். புயல் வீசும் அதே நேரத்தில் தென்றலின் குளிர்ச்சியும் இருக்கும். ஆணித்தரமான வாதங்கள் - அடுக்கடுக்கான ஆதாரங்கள் – கணக்கில்லாக் கவிதைகள் இத்தனையும் கலந்த சொல் அமுத மழை பொழியும். ஒருமுறை கேட்டவன் மறுமுறையும் அவர் பேச்சைக் கேட்க ஓடி வருவான். அதன்பின் அவர் பேச்சென்றால் நிற்க இடமில்லாத அளவு கூட்டம் கூடும். ஒவ்வொரு ஞாயிறும் வெளியூர் கூட்டங்களுக்குச் சென்று விடுவார். பல நேரங்களில் உடன் நாங்களும் சென்று விடுவோம். அவருடன் இருந்ததால்தான் பேச வேண்டும் என்ற ஆசையே எனக்கு வந்தது. பள்ளியில் ஒருமுறை பேச்சுப் போட்டி. பேச வேண்டிய பேச்சை அவரே எழுதி எனக்குக் கொடுத்து என்னை உற்சாகப்படுத்திவிட உடன் தோழர் இராசமாணிக்கம் பாலு மற்றும் சிலரையும் அனுப்பி வைத்தார். அன்று நான் முதல்பரிசுபெற்றேன். அதைப் பாராட்ட அவரே நேரில் வந்து விட்டார். அவர் மேல் உள்ள அன்பால்தான் அன்றே நான் என் பெயரைச் செழியன் என்று வைத்துக் கொண்டேன். இருகூரில் ஒருமுறை ஒரு திருமணத்திற்கு அவருடன் சென்று இருந்தேன். திடீர் என்று அடுத்தபடியாக நான் பேசுவேன் என்று என் பெயரை அறிவித்துவிட்டார். ஒரு வழியாகப் பேசி முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. ஏன் முன்னால் என்னிடம் சொல்லாமல் இப்படி அறிவித்தீர்கள் என்றேன். முன்னால் சொன்னால் நீ என்னுடன் வந்திருக்க மாட்டாய் என்றார். அது உண்மைதான். திருச்சி நீடாமங்கலம்மா நாடுகளுக்கு அவரோடு நாங்களும் சென்று இருக்கின்றோம். அந்தப் பேச்சுக்களை இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை; வரிக்கு வரி நினைவிருக்கின்றது.

கோவைக்கும் அவர் வாழ்க்கைக்கும் நிறையத் தொடர்பு உண்டு. அய்யா அவர்களினின்று ஒதுங்கி அண்ணாவுடன் கலந்தது கோவையில்தான். தனித்திருந்து இயக்க வேலை செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் மன்றம் என்ற ஏட்டை ஆரம்பிக்கச் சொன்னோம். அதற்காக நாடகம் நடத்த வேண்டும் என்று கூறியபோது மிகவும் கூச்சப்பட்டார். நாங்களே அண்ணாவே நடித்த நீதிதேவன் மயக்கம் என்ற நாடகத்தை ஏற்பாடு செய்து நாங்களே வசூல் செய்து கொடுத்தோம். அந்தத் தொகையை அண்ணாவிடம் பெற்றுக் கொண்டபின் அவர் சொன்னார்: “இது வரையிலும் நான் சுதந்திரமாக இருந்தேன்; வேண்டாம் என்றால் பொது வாழ்வில் இருந்துகூட ஒதுங்கி இருக்கலாம். ஆனால் இந்தத் தொகையை என்னிடம் கொடுத்து விட்டதால் நான் சாகும்வரை அரசியலில் இருந்தும் அண்ணாவை விட்டும் விலக முடியாது” என்றார். ஆனால் அந்த அண்ணன் தாம் அவரையும் நம்மையும் விட்டுவிட்டு அழுது கொண்டே இருங்கள் என்று சொல்லி விட்டுச் சென்றுவிட்டார். ஆனால் அந்த அண்ணன் பாதையை–கொள்கையைவிடாமல் பற்றி வருகின்றார் நாவலர்.

ஒருமுறை கோவைக்குத் திடீர் என்று வந்தார் தாடியைக் காணோம். எங்கே தாடியைக் காணோம் என்றேன். ஏன் என்றுமே நான் இப்படியே இருக்கவேண்டுமா? எனக்கும் வாழ்க்கையில் வாழ வேண்டும் என்ற ஆசை இருக்காதா என்றார். எனக்குப் புரியவில்லை.

சிரித்துக்கொண்டே பின்பு சொன்னார்: “எனக்குத் திருமணம் ஆகப் போகின்றது - பெண் சேலம் டாக்டராக இருக்கின்றார்கள்” என்றார். சரிசரி இனிமேல் பழைய மாதிரி ஊர் ஊராகக் கூட்டத்திற்குச் செல்ல மாட்டார் என்று இருந்தோம். ஆனால், அவர் துணைவியாரே “வாழ்க்கையில் பாதி நாளை ஜெயிலிலும் பாதி நாளை இரயிலிலுமே கழித்து விடுகின்றீர்களே” என்று கூறியதாக அண்ணா அவர்கள் எழுதி இருந்தார்கள். இருந்தாலும் இந்த உயர்ந்த இலட்சியக் கணவனை அடைந்ததற்கு அவர்கள் பெருமைப்பட வேண்டும். திருமணம் முடிந்தவுடன் கோவையில் நாங்கள்தாம் முதல் விருந்து கொடுத்தோம். ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு மேலாக அவருடன் பழகியுள்ளேன். அதிலே எனக்கொரு பெருமை உண்டு. அன்றுபோல் இன்றும் குணக்குன்றாக-தானைத்தலைவனாக இருந்து நமக்கெல்லாம் வழி காட்டி வருகின்றார். வாழ்க நாவலர்!





பேரறிஞர் அண்ணா
தோற்றம் 15-9-1909
மறைவு 3-2-1969



நாவலர்-நந்தமிழ்க் காவலர் வாழ்க!

தூயதமிழ்க் காவலர் கு.மு. அண்ணல் தங்கோ...

ஆம் நாவலர் நந்தமிழ்க்காவலர் வாழ்க! ஞாலம் புகழ் "மன்ற" நம்பி! வாழ்க! நேர்மைத் தமிழர் நெடுஞ்செழியனுர்! வெல்க! தமிழர் முன்னேற்றத் தண்டமிழ் நம்பி! நாவலர் நெடுஞ்செழியனுரது பொன்விழா மலர் நாளும் பூத்துப்பொலிக! என, எமது உளமார தூய தமிழ் உரையார நற்றமிழ் நாவார நனிசால வாழ்த்தி, நல்ல தமிழ்நம்பி! நாவலர் நெடுஞ்செழியனுரது பொன்விழா மலர்ப் புதுமணக் கட்டுரையைப் பொலிவுறத் தொடங்கிப் புரிவம்.

நாவலர்-நந்தமிழ்க் காவலர்! வாழ்க!
ஞாலம் புகழ் "மன்ற" நம்பி! வாழ்க!
நேர்மைத்தமிழர் நெடுஞ்செழியனுர் வெல்க!

ஆம், நாவலர் நெடுஞ்செழியன்! என்னும் நல்லாண்மை சான்ற நந்தமிழ் நற்பெயரைக் கேட்டதுமே, நற்றமிழ்ப்பெருமக்களது உள்ளமும் எண்ணமும் நம்மரும் பழம்பெரும் பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றுப் புறநானூற்றுப் புகழ்சான்ற குறிப்புப் பொன்னேட்டை நாடிச் செல்லும்! இவ்வுண்மையை, நற்றமிழ் கற்ற நல்லோர் நல்லார் நல்லாண்மை உள்ளோர் எல்லாரும் ஏற்பர்! ஏனெனில், நமக்கு தமிழ்ப் பெருமக்களுக்கு நாவலர் நெடுஞ்செழியனுரது நற்றமிழ்ப் பெயர் நினைவுறுத்துவதும், பண்டைப்பழங் காலத் தமிழ்வேந்தரது குறிப்பாகத் தூயதமிழ்வளர்த்தபழம்பாண்டித் தமிழ்மாவேந்தரது அரும்பெரும் வரலாற்றை அறிவுறுத்துவதும் தமிழ்மக்கள் உலகில் தலை நிமிர்ந்து வாழத் தகுதியும்பெருமையும்அளிப்பதும் என்னவென்று உன்னி நோக்குங்கால், தோன்றுவன இரு பெரும் பழந்தமிழ் பாண்டிமா வேந்தர்களது அரும்பெரும்தூயதமிழ்ப்பெயர்களாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்! ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்! என்னும் நன்மணிப்பெயர்களேதாம்!

இவ்விரு அரும்பெருந் தமிழ் மறவர் தங்கோக்கள் ஆகிய பாண்டிமா வேந்தர்களிலே, எந்தப் புகழ் சான்ற நெடுஞ்செழியன் பெயரை நமது நாவலர் நெடுஞ்செழியனுர், தமதாக்கி வைத்துக் கொண்டாரோ! நாம் அறியோம். பிற நம்பியருந் தம்பியரும் அறியார்! அல்லமா? அறியோ மாயினும்; நாவலரது நாவன்மை சான்ற நற்றமிழ்ப் பகுத்தறிவுப் பாசறைச் சொல்லமுதத்தையும் அவர்தரும் அரிய விளக்கத்தையும் கேட்டவரும் கேட்கின்ற எல்லாரும், மோனைமொழிமன்னன் !அண்ணுத்துரையயும்வியக்க வைக்கும் அளவுக்குப் பொதுமக்களை தமிழ்மக்களைப் பகுத்தறிவுக் கடலில் ஆடிக்களிக்க வைக்கும் அடுக்குமொழி அண்ணல் அறிவு சான்ற நம்பி நெடுஞ்செழியன் பேச்சின்தமிழ்ச்சுவையே ஒரு தனிச்சுவை! கன்னித்தமிழின்; கனிச்சுவை எனத் தாம் எக்குழுவினர், என்பதனையும்மறந்து -மகிழ்ந்து .வியந்து-புகழ்ந்து கூறக்கேட்கலாம்!

பைந்தமிழின் சுவையறியாப் பலகோடி மக்களுக்கு - உலகவரலாற்றுக்கு முதல்வரலாருகிய பண்டை பழந் தமிழ்நாட்டு வரலாறறியாத உலக மக்களுக்கு ஒப்பற்ற -உலகம் விலக்கத் தக்க தமிழர் மறப்போர் முறைகளையும் அவர் தம் அறவழிபாட்டு -அறநெறிமுறைகளையும் அழகிய உயரிய எளிய நனிசால இனிய-அரிய நற்றமிழ்ச் சொற்றெடர்கள் எனும் தூய நறுந்தேன்மொழிகளிலே -தண்டமிழ்ச் சான்றோர்களால், உலகம் உய்ய குறிப்பாக நமக்கு உரிய இவ்விந்தியத் துணைக்கண்டம் எனும் பெரு நாவலர் பெரு நாடு உய்ய சிறப்பாக நம்மருந்தமிழ் நாடும் தமிழ்மக்களும் உய்ய இனிதாக ஆக்கிஅளிக்கப்பெற்றுள்ள புறநானூறு என்னும் பொன்னூலை இன்னும் படித்துணராத -கேட்டறியாத எளிய மக்களும் பன்னூருயிரம் நம்பியரும் தம்பியரும், நெடுஞ்செழியன்! என்றல் யாரது? அப்பெயர் யாரைக் குறிக்கும்? அஃதோர் புதுப்பெயரா? அன்பழகன் அறிவழகன்! மதியழகன்! கலையழகன்! காரழகன்! பேரழகன்! மன்னர்மன்னன்! அண்ணல்தங்கோ! மன்னர்தங்கோ! மறவர்தங்கோ! வளவர்தங்கோ! அண்ணல் தமிழர்தங்கோ! கோவேந்தன்! பாவேந்தன்! நாவேந்தன் வேழவேந்தன்! என்பனபோன்ற புத்தம் புதுப் பகுத்தறிவுத் தன்னுணர்வுத் தன்னுண்மைத் தூயதமிழ்ப்பெயர்களைச் சார்ந்த பெயரா? எனக்கேட்டும் ஐயுற்றும் இருக்கின்றனமேயன்றி, அப்பெயர், நம் பண்டைப் பழம்பெரும் பாண்டியமா வேந்தர் இருவர் தம் இரும்புகழ்ப் பெரும் பெயராகும் என்றறிந்திலம்; பெரும்பாலோர் என எளிதாக இயம்பலாம அல்லவா?

ஆயினும், நம் நன்றிக்குரிய நாவலர்நெடுஞ்செழியன் அவர்கள், தம் பெயரை, மேற்சொன்ன-இருபெரும்பூழியர் கோமான்களும் பெற்றிருந்த நற்றமிழ் நெடுஞ்செழியன் எனும்பெயரில்

பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்! அரும்பெரும் சிறப்பினைத் தம் உள்ளத்திறுத்தித் தமக்கு வைத்துக் கொண்டாரோ நெடுஞ்செழியன்! என்று; அல்லது, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்! நிலைநிறுத்திய 'தமிழன் அறம் பிறழான்; அறம்பிறழ்ந்தானேல். உயிர்இழந்தானே! எனும் உண்மையைக் கண்டும், அப்பாண்டித்தமிழ் மாவேந்தன், மக்கள் கண்ணயனை - உயிர் அனைய கல்வியின் ஒப்பற்ற மாண்பைக் குறித்து உலக மக்கள் இந்தியத்துணைக்கண்ட மக்கள் -சிறப்பாகத் தமிழ் மக்கள் உய்ந்துயர வேண்டி அரிதாகவே ஆக்கியளித்துள்ள கல்வியின் கடமைப்பாலைச்செல்வத் தமிழப்பாவின் அருமை பெருமை அறிந்துணர்ந்து பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனை உள்ளத்திருத்தி, அவனை உலகுக்குணர்த்த தமிழ்மக்களுக்கு அறிவுறுத்தத் தம் பெயரை நெடுஞ்செழியன், என வைத்துக் கொண்டாரோ யாதோ அறியோம்! ஆனாலும், எமது நெடுங்கால நண்பர்—அன்பர் நெடுஞ்செழியன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைத் தமதுள்ளத் திருத்தியே தான் அவன் பெயரை உலகுக்குணர்த்த வேண்டித் தமது பெயரை நெடுஞ்செழியன் என வைத்துக் கொண்டார் எனத் துணிகின்றனம்.

இவ்வெறும் உறுதியை உறுதிப்படுத்த வேண்டி. பைந்தமிழ்ப் புலமை சான்ற, இளந் தமிழர் தங்கோ பால்மணம் மாருப்பாண்டிமறவர் தங்கோ பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் இளமைத் தன்மை முற்றுத ஏழாம் ஆட்டைக் காலத்திலேயே, இவனை எளிதில் தாக்கி வெற்றி எய்திடலாம் எனத் தவருகக் கணக்குப் போட்டுச் சேர சோழ மாவேந்தர்களும், இவர்கள் பேச்சைக் கேட்டாடிய எல்லாச் சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் முதுபாண்டிப் பெருநாட்டை முற்றுகையிட்டு முரசுகொட்டித் தமிழ்க் கூடல் மாநகரைச் சூழ்ந்து முன்னேறி வர முயலுங்கால் மறஞ்சான்ற மறவர் படைக்குத் தலைமை தாங்கி என்னரும் பாண்டி பழந் தமிழ் நாட்டை முற்றுகை இட்டுள்ள தகைப்புக்குரிய பகைவர்களைப் போரில் முறியடித்து அறுத்து ஒழிக்காவிடில் 'எம்மன்னன் கொடுங்கோலன்' என்றுகுடிமக்களால் தூற்றப்படுவேன் ஆக! என்று சூளுரைத்துப் பெரும்போர் புரிந்து பகைவர்களை வெற்றிகொண்டபாண்டியன் தலையலங்கானத்து செரு வென்ற நெடுஞ்செழியன், அப்பெரும் போருக்குப் புறப்படு முன், தண்டமிழ்முழங்கப் பாடிய ஓர் அரியப் மறப்போர்ப் பாட்டையும், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மக்களது மாண்புள்ள நல்வாழ்வுக்கு மிக மிக இன்றியமையாத உறுதுணைப் பெரும் பொருளான கல்விச்செல்வம் குறித்து நனிசாலத் தெள்ளத்தெளிவாக இனிய தூயதமிழில் பாடியுள்ள நறுந்தமிழ்ப் பாவையும் இங்கே குறித்கின்றனம். இவ்விரு பெரும் அருந்தமிழ்ப் பாக்களையும் படித்து ஒப்பு நோக்கித் தெளிந்த பின்னர், நீங்களே புரிந்து கொள்ளலாம், நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், எந்த நெடுஞ்செழியன் பெயரை உலகுக்கு நமக்கு தமிழ்ப் பெருமக்களுக்கு நினைவுறுத்தி அறிவுறுத்தத் தம்பெயரை நெடுஞ்செழியன் எனத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டார் என்னும் உண்மையை.

(க) பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முருகுவாய் மொழிந்த -பாடிய மறத்தமிழ்ப்பா வருமாறு:-

''நகுதக்கனரே! நாடுமீக் கூறுநர்,
'இளைஞன் இவன்!', என உளைக் கூறிப்,
'படுமணி இரட்டும் பா அடிப் பணைத்தாள்
நெடு நல் யானையும், தேரும், மாவும்,
படை அமை மறவரும் உடையயம்! யாம்!
என்று,
உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கிச்,
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அருஞ் சமம் சிதையத் தாக்கி, முரசொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின்-பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணது,
'கொடியன்' எம் இறை!' 'எனக் கண்ணீர் பரப்பிக்,
குடி பழி தூற்றும்கோலேன்! ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலையிய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக! என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர.
இரப்போருக்கு ஈயா இன்மை யான்உறவே!

புறநானூறு. பாடல் 72

இவ்வெற்றித் தமிழ்ப்பாவின் பெற்றிப்பொருள் வருமாறு:-

''இப் பாண்டிமகன்- இளம்பையலது நாட்டை மிகவும் சிறப்பித்துச் செப்புவோர் எமது நகைப்புக் குரியவரே! என உள்ளம் வருந்தக் கூறி; இரட்டித்த மணி ஓசைகள் தரும் பரவிய பெரிய தாள்களும் கால்களும் உடைய தக்க நல்ல யானைப்படைகளையும், தேர்ப்படைகளையும், குதிரைப்படைகளையும், படைத்திறன் பயின்ற மறவர்படைகளையும் நாம் பெற்றிருக்கிறோம்! என்று கூறிக் கொண்டு; எனது வண்மையைச் கண்டு அஞ்சாமல், தம் உடல் சினத்தைப் பெருக்கிக் கொண்டு மேற்கூறிய சிற்றுரைகளைச் செப்பியசினஞ்சார்ந்தமாவேந்தர்களைப் பொறுத்தற்கரிய போரின் கண்ணே போர்க்களத்தில் சிதறி ஒழிந்து போகுமாறு போர் புரிந்து அவர்களது முரசுகளுடன் அவர்களை ஒருங்கேசிறைப்படுத்தி வெற்றி பெறேனாயின், எனது குடைநிழலில் எனது நாட்டில் வாழும் எனது குடிமக்களால், 'எமது அரசன் கொடியவன், 'எனக் கொடுங்கோல் மன்னன் ஆவேன் ஆகுக!

உலகமெலாம் பரவிய பெருஞ் சிறப்புக்கு உரிய உயர்ந்ததாகிய கேள்விச் செல்வதைப் பெற்றுள்ள தண்டமிழ்ப் பெரும்புலவராகிய மாங்குடி மருதனர் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள தமிழ்ச் சான்றோர்களாலே எனது நாடு போற்றிப் புகழ்ந்து பாடும் பெருமையே அடையப் பெறுதிருக்குமாக!

என்னால் தாக்கப்படுவோர்காக்கப்பெறுமாறு வாய்க்கப்பெறுது, என்றுங் கண்ணீர்விட்டுக் கலங்கு மாறு செய்தேனாகுக! இல்லை! என்று வந்து என்பால் இரப்போருக்கு, இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுப்பதற்குரியபொருள் இல்லை! என்று கூறும் 'இன்மை' தரும் வறுமை யாளனுவேனாகுக!'' (என்பதாம்!)

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய கல்விச்செல்வக் கலைத்தமிழ்ப்பா வருமாறு:-

உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்!
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக!' என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும்! செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே!

புறநானூறு-பாடல் 183

இந் நற்பா தரும் நற்பொருள் வருமாறு:-

''தான் கல்விப் பேற்றைப் பெறுவதற்குப் பயிற்சியளிக்கும் அறிவண்ணலாருக்கு, 'ஆசிரியருக்கு ஊறு (துன்பம் வந்த காலத்தில் முன் சென்று பரிந்து துணைபுரிந்தும், அவருக்கு வேண்டுமளவு மிகுந்த பொருளைக் கொடுத்துப் புரந்தும், அவர் பின் நின்று, கல்விப்பொருளைக் கற்பதற்கு வெறுப்படையாது- வெட்கப்படாது கற்றுக் கொள்வது சால நல்ல தாகும். தாய் வயிற்றில், பிறப்பு ஓர் அளவில்அமைந்தாயுள்ள மக்கள் பிறப்பிலும் ஒரு மகன் -மகள் கல்வியால் சிறப்படைந்திருக்கவும் பிற மகன்-மகள் கல்விச் சிறப்படையாதிருக்கவும் காணும் அன்னையும் தனது கல்வி கல்லா மக்களைக் காணும் தோறும் உள்ளம் உடைவாள்!

ஒரே குடியிலே பிறந்த பல மக்களிலேயும் கூட மூத்தவனை வருக! என்றழையார் யாரும்; ஆனல் அவர்களில் அறிவும் கல்வியும் உடைய ஒருவனது நல்ல வழியிலே அவனது நாட்டின் அரசும் நடந்து மகிழ்வான்!

ஒரினமாக இருந்த பழந்தமிழ்ப் பெருமக்களிடையில் பிழைக்க வந்த ஆரியர்களால் பிரிக்கப்பட்டு வேற்றுமைப் படுத்தப்பட்டுப் வேறுபட்ட மக்கட் பிரிவுகள்' என வேற்றுமை நாட்டப்பட்டுள்ள நான்கு பிரிவினர்களிலே கூட கீழ்ப்பகுதிப் பிரிவினன் ஒருவன், கல்வி அறிவு உடையவனாக இருப்பானாயின் மேற் பகுதிப் பிரிவினன்! என்று தன்னைக் கூடச் செருக்கடையும் ஒருவனும் கல்வி கற்ற கீழ்ப்பகுதியினனை வழிபட்டு நிற்பான்!' இஃது கல்வி கற்றுப் பயன் பெற்றோர்கள் பா லுள்ள நெறிமுறை நடைமுறை யாகும்.

ஆகவே, இப்பொழுது, நன்னடை சான்ற நம் பொன்விழா மலர் மாறன், நண்பர், நெடுஞ்செழியன் அவர்கள், பாண்டியன் தனியாலங் கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனைநமக்கு நினைவுறுத்துவதை விட, பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனை நம் உள்ளத்திலும் கருத்திலும் நிறுத்தி நினைவுறுத்திக், கல்விக் கண்ணிழந்து கிடந்து, இங்குப் பிழைக்க வந்த கயவர்கள் தம் கயமைப் பொய்க்கதைக் குப்பைமேட்டில் புரண்டு கிடந்த நமக்குக் கல்வியறிவு ஊட்டி நல்லாண்மை - இல்லாண்மை- சொல்லாண்மை-நாட்டாண்மை உள்ள நன்மக்களாய் நற்றமிழ்ப் பெருமக்களாய் உலகில் தமிழ் நிமிர்ந்து வாழவேண்டும் என்னும் பேரெண்ணங் கொண்டே தான், தாம் அண்ணாமலைப் பல்கலை மன்றத்தில் படிக்கும் பொழுதே, தமது பெயரைத் தூயதமிழ்ப் பெயராக தமிழ் வளர்த்த பாண்டி மாவேந்தன்-பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பெயரைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டார் என்பது, தெள்ளத் தெளிவாகிறது எனச் சொல்லத் துணிவேற் படுகின்றது அல்லவா? அவரது நல்ல உள்ளக் கருத்துக்கு ஏற்பவே, அவர் கொண்ட கல்விப் பரப்பு நற்பணித்துறைத் தொண்டுக் கொப்பவே அவர் தொடங்கி நடத்திய தூய தமிழ் ''மன்றம்,'' நந்தமிழ் நாடெங்கும்-தமிழர் விடெங்கும், தமிழர் வாழும் ஊர் எங்கும், தமிழ் உலகெங்கும் நம்மருந் தூய தமிழ் ஒளியைப் பரப்பிப் பல நல்ல தமிழ் நம்பியர்களைத் தோற்றுவித்தது என்றால், அது மிகையாகுமாறில்லை.

மற்றுங் கல்வளர் நெஞ்சத் தூய தமிழ் மகன் நெடுஞ்செழியனாரவர்கள், தமிழ்வளர் தம்முள்ளத்தில், தமிழுக்கும், தமிழை வளர்த்த பாண்டிப் பழம்பெருந் தமிழ்மாவேந்தர்களுக்கும், இக்காலத் தமிழ் மக்கள்-குறிப்பாக இளந்தமிழர் உலகம் என்றும் குன்றாத நன்றி செய்யக் கடமைப்பட்டுள்ளனர் என்னும் கருத்தினை ஆழப்பதித்து வைத்துள்ளார் என்பதனை, அவரது வேறோர் அரிய தமிழாக்கப் பணியைக் கொண்டு தனிசால உறுதியுடன் உரைக்கலாம். சில தமிழ்ப் பகைவர்களுக்கு எடுத்துக் காட்டி அறிவுறுத்தலாம். உணர்த்தலாம்! எங்ஙனம் எனின், இயம்புவம்.

அறிவு சான்ற அன்பர். நெடுஞ்செழியன் அவர்கள், தமது பெயரை மட்டும் நெடுஞ்செழியன் என்று வைத்துக் கொண்டு, பண்டு தொட்

டுத் தமிழ் வளர்த்த பழம் பாண்டித் தமிழ்ப் பெருமக்களுக்கும்-பாண்டிமா வேந்தருக்கும் உரிய தமது நன்றியை வையமறியச் செய்திருக்கலாம்! தமதரும் உடன்பிறந்த தம்பியினது பெயரைத், தாம் பிறந்த சோழ வளப் பெருநாட்டின் மறம் திறம் சான்ற-அறம் நலம் சான்ற பழம் பெரும் புகழ் சான்ற சோழத்தமிழர்தங்கோ - கரிகால் வளவர்பிரான் அவர்களது அழகிய நல்லாண்மைத் தூய தமிழ்ப்பெயராக வைத்திருக்கலாம். அல்லவா? அஃது, நமது நாவலர் நெடுஞ்செழியனுரது உரிமையும் பெருமையும் கடமையும் அல்லவா? அப்பெருமை சான்ற (கரிகால்வளவன்) வளவர்தங்கோவின் தூயதமிழ்ப் பெயர், சோழ நாட்டுத் தமிழ்ப் பெருமக்களுக்கே உடைய-உரிய-உடைமைப் பெயரல்லவா?

ஆனல், நமது நன்றியுணர்வு சான்ற நாவலர் நெடுஞ்செழியனுர் அவர்கள், தமதருமைத் தம்பியாரது பெயரையும் இளஞ்செழியன்! என வைத்துப் பண்டைப் பழம்பாண்டிச் செழியர்மா வேந்தர்களது மறம் திறம் சான்ற-தமிழ்ப்பற்று-தமிழ்த்தொண்டு ஆய அனைத்தும் உலகுணர-தமிழ்ப் பெருமக்கள் நினைவிற் கொள்ள உன்னியது, முடிவு செய்தது அவரது நன்றியுணர்வை உலகறியச் செய்ததாகும்.

தாம் பிறந்த சோழவள நாட்டுப் பெருநாட்டை - அந்நன்னுட்டின் மாவேந்தர்களை விட்டு விட்டுப் பாண்டிய நாட்டுப் பாண்டி மா வேந்தரது பெயரை வைப்பது வியப்புக்குரியது அல்ல! நகைப்புக்குரியதுமல்ல! தமிழரது நன்றிக்குரியதே ஆகும். இஃது மற்ற முத்தமிழ்ப் பெருநாட்டின் தமிழ்ப் பெருமக்கள் - குறிப்பாகத் தமிழ் மறவர் - தமிழ் இளைஞர் எல்லாரும் பின் பற்ற வேண்டிய கடனல்லவா?

நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நனிசாலத் தமிழ் இளைஞராய்த் தமிழ்த் துறை மாணவராய் அண்ணுமலைப் பல்கலை மன்றத்தில், நண்பர்கள், அன்பழகன், மதியழகன் போன்ற தமிழ்ப்பற்றும் பெற்றியும் சான்ற தன்னுணர்வுத் தமிழ் மாணவர்களுடன் படித்துக் கொண்டிருக்கும் காலத்திலிருந்தே நனி நன்ருக அவர்களை அறிவம். கொள்கைப் பிடிப்பிலும், நல்லாண்மைத் தமிழ்க்குடிக் காப்பிலும், தூயதமிழ் உணர்விலும், உலகப்புலவர் தங்கோ வள்ளுவப் பெருமான் உலகுய்யத் தந்தருளிய முருகுக்குறளறம் கூறும் நல்லாண்மைத் திறத்திலும் நாவலருக்கு (நெடுஞ்செழியனுருக்கு) நேர், நம் நாவலரே தாம்! நல்லொழுக்கச் சிறப்பிலும் நெடுஞ்செழியனுருக்குநேர் நெடுஞ்செழியனுர்தாம்அறிவு சான்ற நெடுஞ்செழியனுரவர்களை யாம், முதலிற் காணும் நல்வாய்ப்பைப் பெற்ற இடம் தண்டமிழ் நாட்டுத் தஞ்சை மாவட்டக்குடந்தை நகரந்தான்! (ஆரியக் "கும்பகோணம்" தான்). கண்ட ஆண்டு கி. பி. '42 தான் என எண்ணுகின்றனம் அங்குத்தான் முதன்முதல் ஆக "முதலாவது தமிழ்நாட்டுத் தமிழ் ("திராவிட"!) மாணவர் மாநாடு" நடந்தது.

அம்மாநாட்டின் சிறப்புப்பேச்சாளர்களிலே' பன்னூருயிரம் தண்டமிழ்த் தம்பிமார்களையும், கோடிக்கணக்கான தமிழ்நாட்டுப் பெருமக்களையும் எண்ணுங்கால் எல்லாம் இன்றுங் கண்ணீர் விட்டுக் கலங்க வைத்து விட்டுத் தமிழக மாநகர்க் (சென்னைக்) கடற்கரை மணலடியில் அமைதி நோன்பாற்றிக்கிடக்கும் அறிவு சான்ற நண்பர் அண்ணுத்துரை, பா. தாவுத் சா, யாம், தனனுணர்வு அரிமா குருசாமி, குஞ்சிதம் குருசாமி, நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன் போன்றவர்கள் ஆகும்.

யாம் இரண்டா நாளிற் பேசினம். எமக்கு முன்னர் அண்ணுத்துரை பேசிவிட்டுச் சென்ருர். யாம் பேசிய பின்னர் நண்பர் அன்பழகன் பேசினுர். அவர், (அன்பழகன்) எமது தன்னுணர்வு-நல்லாண்மைத் தமிழ் மக்கள் தம் புத்துணர்வுப் புதிய வணக்கமுறை பற்றி வியந்து பேசினுர்.

இரு கையுங் குவித்துக் கும்பிடாமல், வலக் கையை முழுக்க விரித்து வலக்கைப் பெருவிரல் வலத்தோளைக் குறித்துக் காட்டுவது போன்ற நிமிர்ந்த நன்னடைத் தமிழர் வணக்க முறை. இம்முறை படத்துடன எமது "தமிழ் நிலம்" தூயதமிழ்க் கிழமை இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அத் "தமிழ் நிலம்" 1942-இல் வேலூரிலும் (வ.ஆ.மா.) 1947-48 இல் தமிழக மாநகரிலும் (சென்னையிலும்-மண்ணடியிலும்) வெளி வந்தது. அத்தூய "தமிழ் நிலம்" கிழமை இதழைப் படித்துத்தான் பற்பல தமிழ் நாட்டுத் தன்னுணர்வுத் தமிழ் இளைஞர்களும், அண்ணுமலைப் பல்கலை மன்றத்து நெடுஞ்செழியன் அன்பழகன்-மதியழகன் போன்ற நல்லாண்மை மாணவர்களும், மற்றும் பலரும் தம் தம் ஆரியக் கயமைப் பெயர்களைத் தூக்கி எறிந்து விட்டுத் தூய தமிழ்ப் பெயர்களாக வைத்துக்கொண்டு ஆரிய அடிமைத்தனத்தைச் சுட்டெரித்து, விட்டனர் எனப் பெற்றியுடன்-வெற்றியுடன் கூறிக்கொள்ளலாம் யாம். இதனை மற்ருருண்மை காட்டியும் நிலை நிறுத்தலாம். அன்பர், சி. பி. சிற்றரசு (எம். எல். சி. தமிழ் நாட்டு மூத்தோர் சட்ட மன்றத் தலைவர்) அவர்களது பெயர், "சின்னராசு" என்பது தான். யாம் தாம் அவரை வேலூர்க்கோட்டை வெளியில் பகுத்தறிவு மேடையிலேற்றிப் பேச வைத்து, அவரது பெயரைச் சிற்றரசு! எனத் தூய தமிழில் மாற்றி வைத்துப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தனம். மற்றும், இன்று, ஈ. வெ. இரா. அவர்களது இரண்டாவது வாழ்க்கைத் துணை நலமாக-நனி இனிதாக வாய்த்துள்ள அரசியல் மணி அம்மையாரது பெயர், அவர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டுள்ள பொழுதும், அதன் முன்னரும் வழங்கிய பெயர், காந்திமதி என்பது தான். அவருக்கும், அழகிய தூய நறுந்தமிழ் மொழியில், அரசியல் மணி! என யாம் தூயதமிழ்ப் பெயராக வைத்தனம். இன்று அவ்வம்மை நன்மணியம்மை

யாகத் திகழுகின்ருர்! இங்ஙனமே, தமிழ் நாட்டிற் பன்னூற்றுக் கணக்கான தமிழ் மக்களுக்குத் தூய தமிழ்ப்பெயர்களாக வைத்துப் பல மணிக்கொடிகள்-மலர்க்கொடிகள் தமிழ் மணிகள் தமிழரசிகள், கலையரசிகள், தமிழ்ச்செல்விகள், இளங்கோ, மறவர்தங்கோ, மன்னர்தங்கோ, வளவர்தங்கோ, செழியர்தங்கோ, சேரர் தங்கோ, தமிழர்தங்கோ, அறிவுடைநம்பி, அறிவழகன், தமிழழகன், கலையழகன் பேரழகன் போன்ற நூற்றுக்கணக்கான புத்துணர்வுப் பகுத்தறிவுப் புதிய தூய தமிழ்ப்பெயர்களை வைத்துத் தமிழ் நாட்டிலும், தமிழர் உள்ள பிற நாட்டிலும் வெற்றித்தமிழ் முரசு கொட்டி வரச் செய்தது எமது தூய ''தமிழ் நிலம்'' தான்.

அம் மாணவர் மாநாட்டில் கடைசியாகப் பேசிய நண்பர் நெடுஞ்செழியனுர் அவர்கள், எமது தன்னுணர்வுத் தமிழ் மக்களது புத்துணர்வுப் புதிய தமிழர் வணக்க முறையைப் பாராட்டிப் பேசினர். மாநாடு முடிந்த பின்னர் குடந்தையை விட்டு மறுநாட் காலையில் யாம் அனைவரும் குஞ்சிதம் குருசாமி, அம்மை, நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், முதலிய அண்ணுமலைப் பல்கலை மன்றத்து மாணவர்கள் பலருமாகப் புறப்பட்டு இருப்புச்சாலை வண்டியில் வேலூர் நோக்கி வருங்கால், தில்லை நிலையம் வரும்வரை நண்பர் நெடுஞ்செழியன் அவர்களுடனும் மற்ற மாணவர்களுடனும் பல பொருள் பற்றி அளவளாவப் பேசி வருங்கால், தமிழ் மக்களுக்கும்; தமிழ் மொழிக்கும், தமிழர் விடுதலைக்கும், தமிழ்ச் சான்ருேர் அரிதாகத் தேடி வைத்துள்ள தமிழ்க் கலைச்செல்வச் செப்பேடுகளுக்கும் எதிர்காலமும்-நல்ல காலமும் உண்டு என்னும் நம்பிக்கைக் கதிர்ச்செல்வன் எம் முளத்தே அடிக்கடி தோன்றித் துலங்கி மகிழ்வித்தான்.

என்ருலும், மாணவர்களாகிய நெடுஞ்செழியனும், அன்பழகனும், மதியழகனும் தன்னுணர்வுக்கொள்கை துள்ளும் இள ஞாயிறுகளாகக் காலைச் செஞ்ஞாயிருகத் தோன்றி நம்பிக்கை அளிப்பினும், பொழுதேற ஏற-மாணவர் நிலை மாற-மாற; வயிறும் வாழ்வும் தொழிலும் ஈர்க்க-ஈர்க்க-இம்மூவரும் எங்ஙனம் மாறுவரோ? மாலைக் கதிரவனுகி மஞ்சள் நிறக்கடலில் வீழ்ந்து மறைந்து விடுவரோ? வாழ்க்கைச் சூழல். குடும்ப வாழ்க்கை எனும் குளமுற்றத்துத் துஞ்சிடுவரோ? ஆரியக்கயவர்தம் சக்கரத்தாழ்வார். சங்காழ்வார்கட்கு அடிமைகளாகித் தன்னுணர்வுத் தன்னுண்மையை இழந்து விடுவரோ? என்று அலைமோதிய கேள்விகளால் அஞ்சிக்கிடந்த எமது ஐயத்துக்கு ஒரு திணைமுனையளவும் இடங்கொடாமல்; பகுத்தறிவு 'இளஞாயிறு எனத் திகழ்ந்து; பன்னூருயிரக்கணக்கான தன்னுணர்வுத் தமிழ் இளைஞர்கள் தம் உள்ளத்தில் வளர்ந்தோங்கி இருந்து, இன்றும், தமதாருயிர்-ஆவியால் அவர்களை ஊக்கப்படுத்தி முன்னேற்றி வரும் அறிவாற்றல் சான்ற நண்பர்-அண்ணுத்துரை அவர்களது உடன்பிறப்புணர்வுரிமை சான்ற தலைமையை ஏற்று, நம்பிக்கை இல்லா ஓர்ப்பேராளை விட்டு விலகி, மிகக் குறுகிய காலத்திலேயே, ''உழைப்பின் வாரா உறுதியும் உளவோ?'' என்னும் போன்னுரையைத் தலைமை தாங்கித் தமிழ்நாடு எங்கும் சுற்றிச் சுழன்று-பகுத்தறிவுத் தமிழ் மழை பொழிந்து - நல்லாண்மை - தன்னுண்மை நெற்பயிரைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் வளரச்செய்து; வெற்றி நெல் அறுவடை கண்டு தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் கொள்கை உரம் சான்ற செந்தமிழ்க் கோமகன்களாக நாவலர் நெடுஞ்செழியன் மதியழகன், அன்பழகன் போன்ருேர் உறுதியாக முன்னணிப்படையில் தலைமை தாங்கி வருவதறிந்து கேட்டுச் சால மகிழ்வுற்றனம்.

சேலம் மாநாடு

சேலத்தில், (1944) நண்பர் அண்ணு அவர்கள், ஈ. வெ. இரா.வின் ஆக்க வேலை அற்ற அழிவு வேலை வலையில்-தம்மாக்கத் தனிப்பணியாக்கக் கேணியில், வீழ்ந்து, இழப்பே (Sacrifice) உருவான வெள்ளாடை வள்ளல் சர். பி. தியாகராய செட்டியார், மருத்துவர் மாதவன் நாயர் மருத்துவர் (Dr.) நடேச முதலியார் போன்ற பேரிழப்பாளர்களான தமிழ் மக்கள் காவலர்களால் தென் இந்தியத் தமிழ் மக்களது நன்னடைக்கும் நல்வாழ்வுக்கும் அரசியலாக்கத் துக்குமாகத் தோற்றுவித்தும் வளர்த்துத் தென் மாநில ஆட்சியையும் கைப்பற்றித் தமிழ் மக்களுக்கு மிகக் குறுகிய காலத்திலேயே எண்ணரும் நலங்களும் சட்டங்களும் கட்டளைகளும் செய்து நலம்புரிந்து வந்த 'தென் இந்திய மக்கள் நலஉரிமைப் பேரவை''யை(Muragalar E.V.R. Naicker and Murugalar Aringar C. N. Annadurai both of them joined together at Salem and destroyed the famous South Indian Liberal Federation, which was started and ruled over the South India by the Noble Sacrifiers and well wishers of Thamighmakkal the Sri P. Thiyagaraja Chettiar B A., Dr. T. Madhavhn Nair and Dr. E. Natesa Mudaliar) அழித்தொழித்து விட்டனர். அ∴ தெம் உள்ளத்தைச் சாலப் புண்படுத்தி விட்டது.

திருவாரூர்த் தெ. இ. ம. ந. உ. பேரவை.
(S. I. L. F. Conference at Triuvarur-1940).

திருவாரூரில் 1940-இல், தென் இந்திய மக்கள் நல உரிமைப் பேரவை மாநாடு. (S. I. L. F. Confereuce) முருகாளர் ஈ. வெ. இரா. அவர்கள் தலைமையில் நடந்தது. அப்பொழுது அந்நகராட்சி மன்றத்தலைவராக விருந்த முருகாளர் இராமானுச முதலியார் மலை நாட்டின் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்தார்.

எமது கட்டளை

அம்மா நாட்டில் யாம் ஓர் கட்டளை செலுத்தி இருந்தனம். அக்கட்டளை வருமாறு:—இத் தெ. இ. ம. க. உ. பே. மாநாடு, வருகின்ற 1941.

குடிமதிப்புக் கணக்கெடுப்பில் (During the Census of 1941.) தென்னாட்டு மக்கள் அனை வரும், 'தமிழர்' என்றும், தமிழின மக்கள் என் றும் தம்மைக் குறித்துக்கொள்ள வேண்டுமென் றும் தீர்மானிக்கிறது!''

ஆனால், இதனைப் பற்றிப் பொருளாய்வுக் குழுவிலும் (in the subjects committee) வைத் துப் பேசாமலும், எம்முடனும் கலக்காமலும், ''திராவிடர்'' என்று குறிக்க வேண்டுமென்று தென் இந்திய மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது! என்று ஈ. வெ. இராவும் அண்ணாத்துரையும் எம் கட்டளையைத் திரித்து விட்டனர். அங்ஙனமே அக்கட்டளையை மாநாட் டில் பேசுமாறு எம்மை அழைத்தனர்.

யாம், எம் கட்டளையை எடுத்துக் கூறி, எம் மைக் கேளாமலே அதனைத் திருத்திவிட்ட முறையற்ற நிலையையும் செப்பி, இங்ஙனமானா லும், தமிழ் மக்கள் மட்டும் தம்மைத் தமிழர் என்று குறிக்க வேண்டுமென்றும், பிற தெலுங் கர், கன்னடர், மலையாளர் தம்மைத் 'திரா விடர்' என்று குறித்துக்கொள்ள விழைந்தால் குறித்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் திருத் தத்துக்கொரு திருத்தம் போலத் திருத்தி மாநாட் டிற் பேசினம். ஈ. வெ. இரா. மறுக்கவில்லை. எனவே, நண்பர் அண்ணாத்துரை அவர்கள் எமது திருத்தப் பேச்சை ஏற்றுக்கொண்டனர். இதன் பிறகுதான், நான்காண்டுகளுக்குப் பிறகு சேலத்தில், இவ்வரலாற்றுப் புகழ்சான்ற கட்சி யின் பெயரை அடியோடு ''திராவிடர்'' கழகம் என மாற்றி விட்டனர். எனவே, ஈ. வெ. இரா- அண்ணாதுரை திராவிடர் கழகத்தில் யாம் சேர வில்லை.

கோவை முத்தமிழ் மாநாடு!

என்றாலும், நண்பர் அண்ணாத்துரை அவர் கள்பால் யாம் கொண்டு இருந்த அன்பும் பற்றும் அணுவளவும் குறையவில்லை. எம்மை விட்டு அகலவில்லை! அதன் பின்னர் நடந்த பற்பல ''சீர்திருத்தத் திருமணங்களிலே யானும் அவ ரும் கலக்கும் பொழுதெல்லாம் பல இயக்கச் செய்திகளைப் பற்றிப் பேசுவம். அவர் ஒருவரது உண்மையுருவத்தையும் உள்ளப்போக்கையும் ஐயமறப் புரிந்துகொண்ட பின்னர், தி. மு. க. அமைப்பை (1949-ல்) ஏற்படுத்திய உடனே, முதன்முதற் பொதுக் கூட்டமாக வேலூர்க் கோட்டை வெளியில் அவர் நடத்திய கூட்டத் தில் யாம் கலக்கவில்லை—பங்கும் கொள்ளவில்லை. என்றாலும், அன்று வந்த எல்லாத் தி. மு. க. தலைவர்களுக்கும் எம் இல்லத்தில்தான் விருந்து நடந்தது. அவ்விருந்தில் அன்பர்-நாவலர் நெடுஞ்செழியனும் அண்ணாத்துரையுடன் அமர்ந்து விருந்துண்டு எம்மை மகிழ்வித்தது வரலாற்றுப் புகழுடையதாக இன்றெமக்குத் தோன்றுகிறது. நெடுஞ்செழியன், அண்ணாத் துரை உட்பட அன்று எம்மில்லில் விருந்துண்ட தி. மு. க. தலைவர்கள் அனைவரும், எம்மைத் தி. மு. க.வில் சேருமாறு மகிழ்ந்தும், பரிந்தும் கூறினார்கள்! நண்பர், அண்ணாத்துரை அவர் கள், மட்டும், மிகமிக நகைச்சுவையுடன் அப் பொழுது மொழிந்த நகைச்சுவைச் சொற் றொடரை நினைக்குந்தோறும், இன்றும் இறும்பூ தெய்துகின்றனம். அதனைக் கேட்ட அனைவரும் குறிப்பாக நண்பர், நெடுஞ்செழியன் அவர்களும் ஆமாம், ஆமாம் அவருக்குள்ள தடை அது தான் என்றனர். இல்லையேல், அண்ணல்தங்கோ நமது முன்னணியிலேதான் நிற்பார் என்றார்.

அன்பர், அண்ணாத்துரை சொன்ன சுவை மொழி இது. அண்ணல்தங்கோ உள்ளமெல்லாம் நம்மிடந்தான். அவர் உணர்ச்சி எல்லாம் நம் இயக்கத்தின் மீதுதான்! அவரது முயற்சியும், உழைப்பும், திட்டமும் நமக்கு ஆக்கமும் ஊக்க மும் தருவனவேதாம்! மற்றொன்று, அவருக்குப் பெருந்தடையாம் மலைபோல், குறுக்கே நின்றது. அதுவும் ஒழிந்தது! நாம் அப்பெருந் தடையைத் தகர்த்தெறிந்து விட்டோம். (அண்ணாத்துரை குறித்த அப்பெருந்தடைப் பெருங்கல்-வடபெருங் கல்-பனிமலை எதுவாக யிருக்கும் என்பதனை உன்னித் தெளியுமாறு நந்தமிழ்ப் பெருமக் களுக்கே-தமிழ் இளைஞர்களுக்கே விட்டுவிடு கிறேம்.) ஆனாலும், இப்பொழுது குறுக்கே நிற் பது ஒன்றே ஒன்றுதான்! ''திராவிடர்'' என் னுங் குன்றுதான்! என்றார். அப்பொழுதெழுந்த நகையொலியும் கை ஒலியும் அடங்கச் சில மணி நொடி ஆயிற்று! (அண்ணாதுரையும்) தம்மை மீறியே பெருநகை புரிந்து மகிழ்ந்தார்! எனவே, அவரை (அண்ணாத்துரையைக்) காணும் பொழு தெல்லாம், 'எமக்காகவே, ''திராவிடர்—'' ''திராவிடநாடு'' என்பனவற்றை மாற்றித் தமிழ்நாடு-தமிழ் மக்கள் எனத் தன்னுணர்வுத் தம்பிமாரை முழக்கச் செய்யுங்கள். எம்மையும் (என்னையும்) உங்களுடன் தோளுடன் தோள் நின்று தமிழ் மக்களது ஆக்கம் நாடி உழைக்கச் செய்யுங்கள்!' என்று கேட்டுக்கொள்வோம். இவ்உண்மையை நண்பர், நாவலர் நெடுஞ் செழியனார் நன்கறிவார்.

எமக்கும் இவர்களுக்கும்—(தி. மு. க.வுக் கும்) பல கொள்கைகளில் அப்பொழுது உடன் பாடிருந்தும், இவ்விரு-சிறு சொற்களுக்காகவே இவர்களுடன் யாம் பிரிந்திருந்தாலும் பல சீர் திருத்தத் திருமணங்களிலும், பொது மாநாடு களிலும் இவர்களுடன் யாமும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றும் வாய்ப்புக்கள் பல ஏற்படும். அங்ஙனம், ஏற்பட்ட நல்ல வாய்ப்புகளிலே ஒன்று சென்னைக் கல்விச் சங்கத்தின் சார்பில் நண்பர் புலவர் முருகேசன் அவர்கள்முன்னின்று தமிழக மாநகரில்-சூளையில் (அல்லது பெரம் பூரில்) நடத்திய ஆண்டு விழாவில் 1947-48-இல் யாமும், நண்பர் நாவலர் நெடுஞ்செழியனாரும் தூய தமிழ் மொழி ஆக்கம் குறித்துப் பேசினோம். அப்பொழுது யாம், சென்னை மண்ணடி நயினி யப்பன் தெரு. 77-ஆம் எண் இல்லத்தில் எமது தூய ''தமிழ் நிலம்'' கிழமை இதழை நடத்தி

னம். நாவலரும், அவரது அருமைத் தம்பி இளஞ்செழியனுருடன் மண்ணடிப் பகுதியில் தங்கி இருந்தார்.

எனவே, யாங்கள் இருவரும் ஆண்டுவிழாக் கூட்டம் முடிந்ததும் எம் ''தமிழ் நிலம்'' பணிமனைக்கு நேரே வந்து உணவு கொண்டு உரையாடினம். அப்பொழுது நண்பர் நாவலர் தம் உயிரினும் மேலாகக் கொண்டுடன் சுற்றித் திரிந்திருந்த ஒருவரைப் பிரிந்து வரநேர்ந்த நிலையைக் கூறி வருந்தியபொழுது விளக்கிய சில உண்மை நிகழ்ச்சிகள் எமது முடிவையும் உறுதியையும் உறுதிப்படுத்தின.

வேலூரில் ஆண்டுதோறும் நடத்திய தமிழர் திருநாட் பொங்கல் விழாச் சொற்பொழிவுக் கூட்டத்திலும் நண்பர், நாவலர் நெடுஞ்செழியனும் ஒரு விழாவிற் கலந்து கொண்டு அறிவுரை ஆற்றினர். இப்பெருவிழாவிலே, ஒவ்வோராண்டிலும் அன்பர் அண்ணுத்துரை, அன்பழகன், அப்பாத்துரை (கா) புதுவைப் பொன்மணி, (பாரதிதாசன்) நாவலர் ச. சோ. பாரதியார், புலவர் க. வெள்ளைவாரணனர், அறிஞர் (Do.) செந்தமிழ்க் காவலர் அ. சிதம்பரநாதன் (செட்டியார்) தண்டமிழ்க் காவலர் பன்மொழிப் புலவர். ஞா. தேவநேயப் பாவாணனர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன், ''குறள்நெறி'' எழுத்தாளர் புலவர் சி. இலக்குவனர், புலவர் மாசிற்கரனேசு, புலவர் சிவலிங்கம் மயிலம் கல்லூரித் தலைவர் முதலிய அறிஞர் பெருமக்கள் தமிழ், தமிழர், தமிழ்க்கலை, குறளறம் பற்றிப் பேசியுள்ளனர். மற்றும் மாணவர் மன்றத் தலைவர், தமிழ்நெறிக் காவலர், புலவர் மயிலை சிவமுத்து, குறள்நெறிக் குருகுலம் மாம்பாக்கம் இளவழகனர், தமிழ்ப் பெரும்புலவர் புரிசைப்பாக்கம் மே. வீ. குழற் கோமான் (வேணுகோபாற்பிள்ளை), செந்தமிழ்க் கொண்டல் முருகாளர். ம. அருளின்பக்கடலார் (கிருபானந்தவாரியார்) போன்ற நல்ல தமிழ்ச் சான்றோர்களும் எம் தமிழ் விழாப் பேரவையில் கலந்து அருந்தமிழுரை ஆற்றியுள்ளனர். என்ருலும், அண்ணுத்துரையும், நெடுஞ்செழியனும், வெள்ளைவாரணனும், இளவழகனும், குழற் கோமானும், அருட்கடலாரும் பாவாணனும், சிதம்பரனும் ஆற்றிய அரும்பெரும் சொற்பொழிவுகள் இன்றும் வேலூர்ப் பொதுமக்கள் உள்ளத்தில் எம்முள்ளத்தில் இனிய தமிழ்த் தேனைப் பொழிந்து களிப்பூட்டுவதாயுள்ளன வெனச் சொல்லலாம். இங்ஙனம், அண்ணுத்துரை அவர்கள் தொடர்பும், நாவலர் தொடர்பும் அன்பும் தமிழின உறவும் தமிழ்ப்பற்றும் அணுவளவும் இற்றுப் போகாதிருந்தது.

இந்நிலையிலே, 1950-51-இல் கோவைத் திருநகரிலே இரத்தினசபாபதி (முதலியார்) புரத்திலே (R. S Puram, Coimbatore.) முத்தமிழ் மாநாடு என ஒரு பெரும் மாநாட்டை அன்பர், அண்ணுத்துரை அவர்களது ஆணையினுல் தி. மு. க. தோழர்களால் கூட்டப்பெற்றது. அம்மாநாடு இரு நாட்கள் வரை சாலச் சிறப்பாக நடந்தது. இரு நாட்களிலும் காலையிலும்-மாலையிலும் தமிழ் முழக்கம் பெருமுழக்கமாக இருந்தது! தன்னுணர்வுத் தமிழ் மக்களாக்கப் பேருரைகள், பற்பல நற்பெரும் புலவர்களாலே ஆற்றப்பெற்றன!

அம்முத்தமிழ்ப் பேரவையிலே இருநாட்களும் பேசிய அரும்பெரும் புலவர்கள், இரு நாவலர்கள், அறிஞர்கள், தலைமை தாங்கிய பாவேந்தர் முதலியவர்களது அரியபெயர்களைச் சொன்னலே அம்மாநாட்டின் பெரும்புகழ் உங்கள் முன்னலே தோன்றித் துலங்கும் என நம்புகின்றனம்.

அவ்வரும் பெரும் பெயர்கள் வருமாறு: தலைவர் புதுவைப் பொன்மணி, பாவேந்தர் (பாரதிதாசன்) அவர்கள், பிற தமிழ் முருகாளர்கள், நாவலர் ச. சோ. பாரதியார், கா. அப்பாத்துரையார், புலவர் வெள்ளைவாரணனர், ஒளவை துரைசாமிப்பிள்ளை, அறிஞர் அண்ணுத்துரையார், நாவலர் நெடுஞ்செழியனர், அன்பழகன், யாம், (அண்ணல்தங்கோ) நண்பர் சி. பி. சிற்றரசு மற்றும் பலராவர்.

நாவலர் நற்றமிழ்த் தொண்டு ! அண்ணுத்துரையின் அரிய தமிழ்த் தொண்டு இதனிடையில், 1952-இல் யாம் தமிழக மாநகர் (சென்னை) சட்ட மன்றத் தேர்தலில், குடியேற்றம் தொகுதியில் தனித்தே போட்டியிட்ட பொழுதும், 1957ல் தில்லிப் பாராளும் மன்றத் தேர்தலில் தனித்தே போட்டி யிட்டபொழுதும், வேலூர்த் தொகுதியில்) யாம், தி.மு.க. வில் தொடக்க நிலை உறுப்பினராக இல்லாதிருந்தும் நண்பர் அண்ணுத்துரை அவர்கள், எமக்காக இத்தொகுதிகளில் இரவு பகலாக வந்து தேர்தல் சொற்பொழி வாற்றித் துணை புரிந்த தமிழ்ப் பெரும் பண்பாட்டை யாம் மறப்போமா ! நண்பர், அண்ணுத்துரை அவர்களுக்கும் எமக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றல்லவே ! சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட தொடர்பும் நட்பும் ஆகும். அவர் (அண்ணுத்துரை) தமது கல்லூரிப் படிப்பை விட்டு விலகிப் பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு முதற்படியாகத் தமிழக மாநகர் (சென்னை மாநகராட்சி மன்றத்துத் தேர்தலில் 1935இல் கொண்டித்தோப்புப் பகுதியில் ஒரு காங்கிரசுத் தேவருடன் போட்டி யிட்ட பொழுது அவருக்காக அத்தொகுதியில் யாம் எமது செலவிலேயே சென்று பல நாள் பல தேர்தல் கூட்டங்களில் அண்ணுத்துரைக்கு வாக்களிக்குமாறு பேசினேம். அத் தேர்தல் கூட்டங்களில் சிவஞானம் பூங்காவில் பேசிய திரு. வி.க. என்பவரது பேச்சுக்கு அண்ணுதுரை அளித்த விடையினுல் மறுபடியும் அவர் (திரு.வி.க.) அத் தொகுதிக்கு வரவே இல்லை. ஆனல், அத்தொகுதியில் காங்கிரசின் சார்பில் தப்பித்தவறிப் பேசிய நண்பர் என். வி. நடராசனரது, கடுஞ்சொல்

அண்ணாத்துரையைத் தாக்கிய சிறு சொல் ஒரு புன் சொல்லாகும். அதனை இன்று நினைத்தாலும் நெஞ்சம் அஞ்சும். எனவே அண்ணாத்துரையவர்களது தொடர்புஅவர் தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஏற்பட்டதன்று. பின்னர் யாங்களிருவரும், நாவலரும் சேர்ந்தாற்றிய தன்னுணர்வாளர் ஆக்கப் பணிகள் (our services to the self. Respect Movement) பற்பல வாகும்.

சென்ற 1967இல், தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியதும், நண்பர்கள் அண்ணாத்துரையும், நாவலரும் ஆற்றிய முதல் தொண்டு எமக்களித்த பரிசுத் தொண்டே எனலாம். சென்னை மாநிலத்தின் பெயரைத் தமிழ்நாடு என மாற்றிவிட வேண்டுமென்று "தமிழ் வளர்க்கும்" "காங்கிரசுக்காரர்" என்போர் தமிழ்நாட்டின் ஆட்சிக் கட்டிலில் ஆடிக் கொண்டிருந்த பொழுது, தமிழ்நாடு எனத் தமிழ்ப் பெயராக வைக்கவேண்டுமென்று அண்ணாத்துரையவர்கள் முயற்சித்தபொழுது, 'சென்னை' என்றால் தான் உலகறியும்; மற்றும் தமிழ்நாடு என்று தமிழ் நூல்களில் இல்லை! என்று கூறிய தமிழ் நிலக் கைக் கூலிகள் தலை குனியுமாறு, தமிழ் நாடு என்ற பண்டைப் பழம் பெயரைத் தமிழ் நாட்டுக்கு மீண்டும் சூட்டித் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் அண்ணாத்துரை எழுந்து நின்று அவர் உள்ளம் களிப்பில் துள்ள முழுவுணர்ச்சியுடன் தமிழ்நாடு! என்று மும்முறை முழக்க, மற்ற எல்லா 230 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் வாழ்க! என்று மும்முறையும் வாழ்த்த நிறைவேறிய தமிழ்நாடு எமது நீண்ட நாள் அண்ணாத்துரையின் பால் வேண்டிய வேண்டுதலின் வெற்றியாகும்.

நாவலரது உறுதி சான்ற நற்றமிழ்த்தொண்டு

நண்பர் நாவலர் நெடுஞ்செழியனாரவர்கள், நமது நற்றமிழ் நாட்டுக் கல்வி அமைச்சராக அமர்ந்த நாள் தொட்டுத் தமிழ் மொழிக்குப் பல வழிகளிலும் ஆக்கந்தரும் வழியில் அரும்பெரும் பனிகள் ஆற்றி வருகின்றார்கள். தமிழ்மொழிக்கும், தமிழ்க்கலைக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ்ப் பேரறத்துக்கும்—சிறப்பாக முருகுக் குறளறத்துக்கும் தி.மு.க. அரசும், குறிப்பாகக் கல்வி அமைச்சர் நாவலரும் ஆற்றி வரும் அரும் பணிகளைக் கண்டு அழுக்காறு கொண்டுள்ள ஒரு குறும்புக் கும்பல்--தமிழ் என்றால் உள்ளம் புழுங்கும் நிலையான ஓர் ஐந்தாம் படைக் கூட்டம்! 'ஆ! ஆங்கிலம் அடியோடு போய்விட்டதே! ஆங்கில அறிவில்லார் அறிவில்லாரே! ஆங்கில மறியார் யாதும் அறியார்! அறியாரே! உலகம் அறியார் அறியாரே! அறிவியற்கலை (Scince) அறியார் அறியாரே. உலகில் ஆங்கிலம் அறியார் வாழ் வழி அறியாரே! பிறநாடு சென்று பிழைக்கும் வாய்ப்பை எய்தாரே! "தமிழ்ப் பற்று இருக்கலாம்! தமிழ்வெறி கூடாது! கூடாதே! என்று செங்காட்டுக் செந்நாய்ஒலம் கூவி உறுமுகின்றது! தமக்கே உள்ள ஓரிரண்டு ஆங்கில நாளிதழ்களிலே பத்தி பத்தியாய் எழுதி எழுதி ஒரே பல்லவியைப் பாடிப் பாடி அழுது தொலைக்கின்றது!

ஆனால், 'ஆங்கிலத்தை யாரும் படிக்கக் கூடாது' என்று தமிழ் நாட்டு அரசு கட்டளை போட்டு விட்டதுபோல் உலகுக் காட்டித் தமிழ் நாட்டரசைக் காட்டிக் கொடுக்கிறது! எனவே இந்தத் தமிழ் மொழிப் பகை இனத்துக்கு ஒரு சிறிதும் அஞ்சாமல், உலகக் கலைகள் எல்லாவற்றையும் தமிழ்மொழியிலேயே கற்பிக்க வழிசெய்யுமாறு நிலையான கட்டளை அல்லது சட்டம் நிறைவேற்றிவைத்தல் நாவலரதுகடமையாகும்: தமிழ் நாடு அரசினது இன்றியாத முதற்பணியாகும். எனினும், ஆங்கிலத்தை உலகப்பொது மொழி அறிவு அளவுக்கு எல்லா மக்களுக்கும் (The general knowledge of English to all people of Thamizhnadu will enough to go over to any place or any country in the world) கொடுத்தலே சாலும்.

ஆகவே, பனங்காட்டு நரிகளின்சலசலப்புக் கஞ்சாது நண்பர். நாவலர் நெடுஞ்செழியனாரவர்கள், நமது தூயதமிழ் வளர்ச்சி தமிழாக்கப் பணிகளைக் கல்வி அமைச்சர் என்ற அவருக்குள்ள பொறுப்பில் நின்று, தமிழ் நாட்டில் நிலையாக வளர்ந்தோங்கச் செய்ய வேண்டுகின்றோம். நமது நன்றிக்குரிய உலகப் புலவர் தங்கோ, வள்ளுவப் பெருமான்.

> "செய்தக்க வல்ல செயக்கெடும்! செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்!"

என்று அறிவுறுத்தியுள்ள அறிவுரையைத் தலைமேற் கொண்டு—தம் அரசியலாக்கப் பெரு வாழ்விலே வாய்த்துள்ள நல் வாய்ப்பைப் பயன்படுத்தித் தாய்த் தமிழ் மொழிக்குச் "செல்லும் வாய் எல்லாம் செயல்! "எனுங் கடமை யாற்றல் வழியைப் புரிந்து கொண்டு நற்றமிழ்ப் பணிகள் ஆற்றிப் பன்னூறு ஆண்டுகள். நீடுழியாக வாழல்வேண்டும் என்று அவரது அருமை பெருமை சான்ற பொன்விழா நாளிலே அவரது புகழ் பரப்பும் இப் பொன் விழா மலர் வாயிலாக எம் உளமார உரையார தூய தமிழ் நாவார வாழ்த்துகின்றனம். நாவலர் நம்பியை !

வாழ்க நாவலர் நெடுஞ்செழியனர்!

வளர்க நெடுஞ்செழியனர்!

வெல்க நாவலர் தமிழாக்கப் பணிகள்!

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், 202, ஜானி ஜான்கான் தெரு, சென்னை-14.

With best compliments of:

TRICHY DISTILLERIES & CHEMICALS LIMITED

55 A/1, Peters Road,
MADRAS-6.

Factory:
SENTHANNIPURAM
GOLDEN ROCK, TIRUCHIRAPALLI-4.

Manufacturers of:
RECTIFIED SPIRIT & Carbon-di-Oxide Gas.

With the best compliments from:

RAJALAKSHMI ELECTRICALS

Engineers & Contractors

14, Tanjore Road, T. Nagar,

MADRAS-17.

*

Specialists in

POWER AND LIGHTING ISTALLATIONS.

With the best compliments

from

SETHURAM THIAGARAJAN & COMPANY

Electrical Engineers and Contractors

175/1, Mount Road,

MADRAS-2.

Phone: 83871/3 **Gram: LIVELINE**

Many Happy Returns to NAVALAR.

Pray for Long Life and Continued Prosperity.

Shri Rams

Engineering Contractors

13, Habibullah Road, Madras-17.

Phone 442019.

With the best compliments from!

G. VISVANATHAN, B.A.,

ENGINEERING CONTRACTOR,

43, Chamiers Road,

MADRAS-28.

சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

அம்மாப்பேட்டை, சேலம் – 3.

தந்தி: SALCOMILLS

தொலைபேசி - நிர்வாக இயக்குனர் : 2040
அலுவலகம் : 2080

அதிகாரமளிக்கப்பட்டுள்ள பங்கு மூலதனம்	— ரூ. 60.00 லட்சம்
செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம்	— ரூ. 29.16 ,,
தமிழ்நாடு அரசினரால் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம்	— ரூ. 14.74 ,,
கதிர்களின் எண்ணிக்கை	— 14080 கதிர்கள்.
ஆண்டு 1 க்கு நூல் விற்பனை	— ரூ. 7 லட்சத்துக்கு மேல்.

60, 80, 100, 2/60 நெ. நூல்களும் 60 நெ. கோன் ரகமும் நேர்த்தியான பஞ்சிலிருந்து சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன. கோன் நூல் பம்பாய் மார்க்கெட்டில் விற்பனையாகிறது. இதர விபரங்களுக்கு ஆலையின் நிர்வாக இயக்குனருக்கு விண்ணப்பிக்கவும்.

T. K. A. திவான் முகமது, B.A. (Hons.),
நிர்வாக இயக்குனர்.

K. ஜெயராமன், B.A., M.L.A.,
தலைவர்.

வடாற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்.,

வடபுதுப்பட்டு (அஞ்சல்) (வழி) ஜோலார்பேட்டை.
தமிழ் நாடு.

விவசாய பெருமக்களுக்கோர் நற் செய்தி

எங்கள் நிறுவனம் விரைவில் கால்நடைகளுக்கென்று மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்யவிருக்கிறது.

* இது விஞ்ஞான முறையில் தயாரிப்பது!
* நல்ல சத்துள்ளது!
* சிக்கனமானது!

உங்கள் கால்நடைகளுக்கு எங்கள் மாட்டுத்தீவனத்தை அளித்து நல்ல பயனை அடையுங்கள்.

விவரங்களுக்கு நேரடியாகவோ அஞ்சல் மூலமாகவோ அணுகுங்கள்.

பி. சி. சிரியாக், ஐ. ஏ. எஸ்.
பொது மேலாளர்.

தோப்பூர் திருவேங்கடம் எம். ஏ.
தலைவர்.

குடும்ப நலத்திட்டம் கூறுவது என்ன?
குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது மட்டுந்தானா!

அரும்பெருந்திட்டம் வழங்கும் அரிய வாய்ப்பு

1. தாய்-சேய் நலம் பெற தந்தையர் மனம் நிறைவுற பிள்ளைப்பேற்றில் இடைவெளி வேண்டும்!
2. அறுவை சிகிச்சைக்கு வருவோர்க்கு இலவச உடல் பரிசோதனை!
3. பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் தாய்மார்களுக்கு தக்க கவனிப்பு!
4. பச்சிளஞ் சிறுருக்கு பாதுகாப்பளிக்க தொத்து நோய்த்தடுப்பு வசதிகள்!
5. இப்பணிகளை இனிதே நிறைவேற்ற ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும் ஒரு பெண் டாக்டர்!
6. பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமத்தொகுதியில் தாய்-சேய் நலத்தை நேரில் கண்காணிக்க ஒரு துணைச் செவிலியர்!

நல்வாய்ப்பு இதனை நழுவ விடலாமா?

வாசெக்டமி

1. குடும்பத்தின் அளவைக் குறைக்க வாசக்டமி பாதுகாப்பான எளிய வழி முறையாகும்.
2. இது நிரந்தரமானதொரு குடும்பக்கட்டுப்பாடு முறை. இரண்டு குழந்தைகளையுடைய தம்பதிகளில் கணவன் வாசக்டமி (அறுவை முறை) செய்துகொள்ளலாம்.
3. இந்த அறுவை முறை ஒரு சில நிமிஷங்களில் செய்யக்கூடிய மிகச் சாதாரணமான ஒன்று.
4. வாசக்டமி செய்துகொண்டவர் மருத்துவ மனையில் தங்கி இருக்க வேண்டியது இல்லை. உடனடியாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்கலாம்.
5. எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு அங்கீகாரம் பெற்ற அறுவை சிகிச்சை நிலையங்களிலும் வாசக்டமி இலவசமாக செய்யப்படும்.

டூபக்டமி

சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றாவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்துகொள்ளும் பெண் 24 வயது உடையவளாகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கவேண்டும்.

இந்த முறை உடல்நலத்தைப் பாதிக்காது. அன்றாட வேலைக்குத் தடையாக இராது.

இது ஆண் - பெண் உறவுக்குக் குந்தகமாக இராது.

'லூப்' (கருத்தடை) வளையம்

1. லிப்பியின் லூப் கர்ப்பத்தடை செய்யவும் குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் பயன்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு, குடும்பக்கட்டுப்பாட்டுக்கு லூப் பொருத்தலாம்.
3. தேவையானபோது இதை நீக்கிவிடலாம். பின்னர் மீண்டும் கருத்தரிக்கலாம். இதனால், இந்த முறையைக் கையாள கணவன் மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவை இல்லை.
4. மீண்டும் குழந்தைபெற விரும்பினால், டாக்டரிடம் போய் லூப்பை எடுத்துக் கொள்ளலாம். பின்னர், ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத்தரிக்கலாம். அதனால் கர்ப்பம் தரிப்பதற்கோ, பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
5. லூப் செலவில்லாத ஒன்று. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தகுதியான பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.

தமிழ்நாடு சுகாதார - குடும்ப நலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை - 6.

விவசாயிகளுக்கு நமது கடமை என்ன?

நாட்டின் பொருளாதாரம் முழுவதையுமே தாங்கி இருப்பதுடன், மக்கள் அனைவருக்குமே—பிறரால் செய்ய முடியாத உதவியை — செய்வதுகூடத் தெரியாமலே செய்து வருபவர்கள் யார்? விவசாயப் பெருங்குடி மக்கள்தான்.

அவர்களுக்கு உதவி தேவைப்படும்பொழுது,
தாராள மனப்பான்மையுள்ள எவரும்
கைகொடுக்கத் தவறுவார்களா?

இந்த ஒரே பணிக்காகத்தான் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி 40 ஆண்டுகளுக்குமுன் உருவாகியது. வேளாண்மையை மேம்படுத்த, உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு கடனுதவி புரிந்து வருகிறது — கடன் பத்திரங்களின் வாயிலாக (Debentures) பொது மக்களிட மிருந்து திரட்டும் நிதி வசதிகளின் மூலம்.

முதலீடுகளில் தக்கது ....
பாதுகாப்பு மிக்கது ....
எங்கள் கடன் பத்திரங்கள்தான்!
அதுவும் கிராமீய கடன் பத்திரங்கள்
(Rural Debentures) விசேஷ சலுகைகள் நிறைந்தது.

கடன் பத்திரங்களில் (Debentures) முதலீடு செய்யும் பணம் உங்கள் நலத்துக்கும் நாட்டின் வளத்துக்கும் போடும் அடித்தளமாகும்.

வெளியிடுவோர் :

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி லிட்.,
"நெடும்பலம் சாமியப்பா இராமலிங்க நிலயம்"
32, லஸ் சர்ச் சாலை, மயிலை.
சென்னை - 4.